
www.padippakam.com

# நனவிடை தோய்தல்



எஸ். பொன்னுத்துரை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## எஸ். பொ. வின்

# நனவிடை தோய்தல்

**மித்ர வெளியீடு**
375-10 ஆற்காடு சாலை
சென்னை-600 024 இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : நவம்பர் 1992
மித்ர : 2
உரிமைப் பதிவு
விலை ரூ. 32-00

# NANAVIDAI THOITHAL

By
S. PONNUTHURAI

First Edition :
November 1992

Publisher :
© MITHRA Publications
375-10, Arcot Road,
Madras-600024. INDIA

Printer :
Kokila Sree Printers
Madras-600 094.

Price :
Thirty Two Rupees

Pages :
16 + 272 = 288

Published by :
Dr. Pon. Anura

அமைப்பு : இளம்பிறை எம். ஏ. ரஹ்மான்

படிப்பகம்

www.padippakam.com

விடுதலை
வெறியின்
ஆகுதியாகி
என்னுள்
தீபமாக
வாழும்
என்
இனியன்
மித்தி க்கு



இந்நூல்
படைப்பு

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்கிற பாரதியின் இலட்சியக் கனவினைக் காரிய சாதனையாக்கும் முயற்சியே நமது பணி.

தமிழுக்கு எல்லையில்லை. கலைகளுக்கு எல்லையில்லை. இன்று உலகளாவி வாழும் தமிழர் மத்தியிலே முகிழ்ந்திடும் கலை - இலக்கிய நேசிப்புகளும், உணர்வுகளும், ஆக்க முனைப்புகளும் கௌரவிக்கப் படுதல் வேண்டும். அத்தகைய சிரத்தையுடனும் நிறுவப்பட்டது தான் மித்ர பப்ளிகேஷன்ஸ்.

இந்தப் பதிப்பகம் இளம் எழுத்தாளர்களுடைய படைப்புகளை ஊக்குவிக்கும். பழம்பெரும் எழுத்தாளர்களுடைய படைப்புகளைக் கௌரவிக்கும் உலகளாவிய முறையில் தரமான நூல்களைப் பரம்பச் செய்தல் நமது எத்தனம். இந்தப் பணியிலே தமிழ்ச் சுவைஞர்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் உபாசகர்கள் ஆகிய அனைவரினதும் ஒத்துழைப்பையும் நாடுகிறேன்.

மறைவாகப் பழங்கதைகள் பேசுகிறோம். இந்தப் பழைமைக் கதைகள் எல்லாம், நாளைய தலைமுறையினருக்கு அர்த்தமில்லாத பிதற்றல்களாகவும் தோன்றலாம். ஆனால், அந்தப் பழங்கதைகளையே புதிய இலக்கியமாக்கி, நாளைய சந்ததியினரும் அதனைச் சுவைக்கும் வண்ணம் செய்தல் சாத்தியமா? சாத்தியம் எனச் சாதிக்க விழைகிறது எஸ். பொ. வின் 'நனவிடை தோய்தல்'. அப்பாவின் புதிய படைப்பான இதனை நமது மித்ரவின் இரண்டாவது வெளியீடாகத் தருவதில் மகிழ்கின்றேன்.

அன்புடன்
**டாக்டர் பொன். அநுர**

சிட்னி - அவுஸ்ரேலியா
6-11-92.

www.padippakam.com

# எஸ். பொ. : ஒரு சுவைஞனின் கவிதை

பஃறுளியும் பேராறும்
பண்டுசில ஆறுகளும்
எஃறு கடலுக் கிரையாம்
அஃதினைப்போல்
காலநதி ஓட்டங்
கனவாய் மறைந்துவிடும்
ஞாலத் தழியா நனவு

நனவிடை தோய்கின்றான்
நம்மவனாம் எஸ்பொ
கனவாய்ப் பழங்கதையாய் காலத்து
-இனமான
யாழ்ப்பாணச் செய்தியெல்லாம்
யாமறியப் பேசுகிறான்
வாழ்த்தும் வருங்கால வாய்.

**நா. மகேசன்**

நியூ சவுத் வேல்ஸ்,
அவுஸ்ரேலியா
14-09-92

www.padippakam.com

# நனவிடை தோய்தல்

## ஒரு கவிஞனின் சுவைப்பு

அலைகிற ஊசல்
ஓயாது அலைவது ஓர் ஈர்ப்பின் கோலம்
விலகி நாம் செல்லச் செல்ல
விடாது எமை இழுக்கும் காலம்
உலகை நாம் சுற்றும் போதும்
உள்ளுணர்வு ஊரைச் சுற்றும்
நிலைகொள்ளா மனதில்
ஓடி நின்று
ஒரு வாஞ்சை பற்றும்
இனி
அது வருமோ என்று
எம் இதயம் ஓர் உணர்வில் ஒன்றி
மனஞ்சுழல் மத்தாய் நிற்க
மறைந்தவை திரளும்
நெஞ்சில்
கனவென வந்து வந்து
கால நுண் சரிதம் பொங்கி
நனவிடை தோய்தல்
என்ற நற்றமிழ்
பிறந்த தன்றோ.

-அம்பி

09-10-92 பப்புவா நியு கினி

படிப்பகம்

www.padippakam.com



# ஒரு சஞ்சிகையின் நயப்பு

நிகழ்கால சோகங்களினாலும் துன்பங்களினாலும் நிரம்பி வழியும்போது, இடையிடையே கடந்த காலத்தின் மகிழ்ச்சிகரமான நாட்களை நினைவுக் கிடங்குகளிலிருந்து தேடியெடுத்து மீட்டி, சொற்ப நேரம் மனதை வேறு திசைப்படுத்தி மகிழ்ந்திருப்பது மனித வழமை **மரபில்- எஸ் பொ** - என்று நாமறிந்த எஸ். பொன்னுத்துரை **நனவிடை தோய்தல்** என்னும் தலைப்பில் யாழ்ப்பாணத்தாரின் அந்தக் கால வாழ்வு பற்றி எழுதி வருகிறார். அன்றைய யாழ்ப்பாணத்தின் வாழ்க்கை முறையை அக்காலத்தில் நிலவிய பேச்சு வழக்கிலேயே அவர் எழுதி வருவது வாசிப்பவர்களுக்கு நிறையவே கற்றுத் தருகிறது. ''தீ'' எழுதிய எஸ். பொ. வின் எழுத்து நடைக்கு எப்பொழுதும் துணிச்சல் அதிகம். சொல்லும்போது, சொல்ல வேண்டியவற்றை 'சொல்லுவமா? விடுவமா?' என்ற தயக்கத்திற்கு இடமளிக்காமல் சொல்லுதல் எல்லோர்க்கும் சாத்தியமாவதில்லை. எஸ்.பொ. வினால் அது முடிகிறது. அவருடைய வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிற பாணியிலேதான் அது தொடர்கிறது. ஆனால் அவரது சுய சரிதையோ சுயபுராணமோ அல்ல. ஒரு சமூகத்தின் கதை. தனது வாழ்வினூடாக, தான் வாழ்ந்த சமூகத்தில் பார்த்ததை, மனதில் பதிந்ததை மீட்டி வருகிறார்.

0619 OSLO 6
NORWAY
September 1991

**சக்தி**

www.padippakam.com



# முன்னுரை

வாழ்க்கை ஒரு பயணம் ஆண்டுகள் நகருகின்றன. ஓர் ஆண்டில் எத்தனை நாள்கள்? ஒரு நாளில் எத்தனை மணித்தியாலங்கள்; எத்தனை விநாடிகள்? ஒரு விநாடியிலேகூட ஒரு புதிய அநுபவம் சாத்தியம். இவற்றிலே எத்தனை நினைவில் நிற்கின்றன? பலருக்கு நேற்றைய நிகழ்வுகள்கூட மறைந்து போன நீர்க் குமிழிகள்.

எஸ். பொ. அவர்களுக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சிறிய சம்பவங்கள் கூட கல்மேல் எழுத்துக்களைப் போல நிலைத்து நிற்கின்ற மாயந்தான் என்ன? அவற்றை நுட்பமாக, நமது சொந்த அநுபவம் போலச் சுவைக்கக் கூடிய முறையிலே, சொல்லக்கூடிய வல்லமை எங்கிருந்து வந்தது? அநுபவங்களை இலக்கியமாக உயர்த்தும் திறன் எத்தகையது? எஸ், பொ., அவர் வார்த்தையில் சொல்வதானால், 'உசுக்குட்டி'யனாக இருக்கும் பொழுதே சமுதாயப் பிரக்ஞையுடன் வாழப் பழகிக் கொண்டார். சமுதாயத்திலே அவருக்கு இருக்கும் மேலான நேசிப்பு. இந்தப் படைப்பிலே தொட்ட இடமெல்லாம் சுவைக்கிறது.

'நனவிடை தோய்த'லை வாசிக்கும் பொழுது ஒரு கனவுலகிலே சஞ்சரிப்பது போலவுந் தோன்றுகின்றது. பற்பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண மக்கள் நடந்த தெருக்கள், சஞ்சாரஞ் செய்த இடங்கள், கோயில்கள், குளங்கள், போற்றிய நம்பிக்கைகள்...வாழ்ந்த சூழல், வளைய வந்த சமூகக் குழுக்கள்...இவற்றைப் பார்ப்பதிலே எத்தனை கோணங்கள், கோலங்கள். வர்ணங்கள்...பெரிய படுதாவிலே தீட்டப்பட்ட சிறந்த ஓவியங்களைப் பார்ப்பது போன்ற மலைப்பு. மறுகணம் நிதர்சனத்திலும் புரளுகின்றோம். மண்ணின் வாசனையும், இன்றும் நமது

www.padippakam.com



பேச்சிலே தவழும் சொற்களும், வழங்கும் ஒலிமுறைகளும் நனவுலகச் சொத்து. இத்தகைய வித்தைகளை எழுத்திலே சாதிக்க வல்ல திறமை எஸ்.பொ. வுக்கே உரிய தனித்துவம்.

□ □

எஸ்.பொ. வை முதன் முறையாகச் சந்திக்கும் வாய்ப்பு 1990-ம் ஆண்டு நடுப் பகுதியில் கிட்டியது. அவுஸ்ரேலியாவில் ஒரு தமிழ்ச் சஞ்சிகையின் அவசியத்தை உணர்ந்து அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்ட காலம். மூத்த எழுத்தாளர்; பல சஞ்சிகைகளின் வளர்ச்சியிலே பங்கெடுத்துக் கொண்டவர் என்ற முறையிலே எஸ்பொவின் ஆலோசனைகளைப் பெற பெரிதும் ஆசைப் பட்டேன். இதனால், அவர் சிட்னியில் தங்கியிருந்த அவருடைய மூத்த மகன் டாக்டர் அநுராவின் வீட்டில் அவரைச் சந்தித்தேன். அந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அவருடைய மகனும் இலக்கிய நேசிப்பு மிகுந்தவர். நமது பேச்சில் அவரும் இயல்பாகக் கலந்து கொண்டார். நான் இலக்கிய ஆர்வம் மிக்கவன். இலக்கிய அநுபவம் குறைந்தவன். சஞ்சிகை நடத்துவதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் பலவற்றை இனங் கண்டு பேசினோம்.

நேரம் செல்லச் செல்ல, நமது பேச்சுகள் மிகவும் RELAX ஆக அமைந்தது. எஸ்பொ வின் இளமைக் கால இலக்கிய அநுபவங்களைப் பற்றிப் பேச்சு திசை திரும்பியது. அவரது உள்ளத்தில் நிலைத்திருந்த அந்தக்கால நினைவுகள் பலவற்றை நகைச்சுவையுடன் நயமாக எடுத்துரைத்தார். சிலவற்றுக்கு அவருடைய மகன் சாட்சியுமானார். பல அவர் பிறப்பதற்கும் முற்பட்ட சம்பவங்கள். இவர் சொன்ன சம்பவங்களையே, இவர் என் புதிய சஞ்சிகையிலே தொடர்ந்து எழுதினால் என்ன என்கிற எண்ணம் என் மனத்திலே துளிர்விட்டது. இந்த ஆசையை அவரிடம் தெரிவித்தேன்.

www.padippakam.com



'இலக்கியத்திலே எனக்கு வரையறுத்த கொள்கைகள் உண்டு. இதனால் என்னைக் கட்சிக்காரன் என்று நினைப்பவர்களும் உண்டு. புதிய சஞ்சிகை ஒன்றுக்கு, என் இலக்கிய அநுபவங்களை வெளியிடுவதன் மூலம், வாசகர் பரப்பினை எல்லைப்படுத்திக் கொள்வது நல்லது அல்ல. இலக்கியக் கொள்கை எதுவாயினும், சார்ந்த இயக்கங்கள் எதுவாயினும், மண்ணின் நேசிப்புப் பொதுவானது, மறைந்து கொண்டிருக்கும் பழைய யாழ்ப்பாணம் பற்றிய, என் பசுமையான நினைவுகளை, உங்கள் சஞ்சிகையில் அசை போடலாம். அவ்வாறு நனவிடை தோய்வதற்கு எனக்கும் ஆசையே.'

என்று சொன்னார். அவருடைய அசைக்கும் ஆசைக்கும் 'மரபு'வில் களம் அமைத்துக் கொடுத்தேன்.

□ □

எஸ்பொ வின் 'நனவிடை தோய்தல்', என் வயதினர் அறியாத, யாழ்ப்பாணத்தின் பண்டைய கோலத்தை, கலா நேர்த்தியுடன் வெளிக் கொண்டு வரும் என்று நான் நிச்சயமாக நம்பினேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை தந்த வாக்கினை அவர் செப்பமாகவே நிறைவு செய்தார். 'நனவிடை தோய்தல்' என்னும் இலக்கிய விருந்து 'மரபு' வில் வெளிவந்து கொண்டிருந்த பொழுது, இலக்கிய விழாக்களிலே கலந்து கொள்ளும் முகமாக, இரண்டு மூன்று தடவைகள் மெல்பேன் நகர் வந்திருந்தார். என் வீட்டுக்கு வந்து, அன்பு பாராட்டி, மகிழ்ந்து செல்வதையும் அவர் வழக்கமாக்கிக் கொண்டார். 'நனவிடை தோய்தல்' என்பதை அவர் திட்டமிட்டு ஒரு நூலாகவே எழுதிக் கொண்டிருக்கிறார் என்கிற உண்மையை அந்தச் சந்திப்புகளின்போது தெளிந்து கொண்டேன். தமது எழுத்துக்குக் கிடைக்கும் RESPONSE பற்றி அக்கறையுடன் விசாரிப்பார். கடை

www.padippakam.com



சியாகச் சந்தித்த பொழுது, ''விமல், 'நனவிடை தோய்த'லை ஒன்பது அத்தியாயங்களுடன் 'மரபு'வில் நிறுத்திக் கொள்வோம். நூல் முழுமை பெற்றுள்ளது. விரைவில் வெளியிட ஏற்பாடு செய்வேன். தக்க சந்தர்ப்பத்தில் நீங்கள்தான் ஒரு முன்னுரை எழுத நேரலாம்,'' என்றார்.

இந்த நூலுக்கு என்னிடம் முன்னுரை தரும்படி கேட்டது எதனால்? 'மரபு' வில் இதன் கணிசமான பகுதி வெளிவந்தது என்கிற உரிமை பாராட்டுதலா? அவர் புதுமையை விழையும் பழைமைவாதி என்ப தாலா? அவர் இளைய தலைமுறையினரின் எழுத்து முயற்சிகளைக் கௌரவிப்பவர்; அதனாலா? காரணம் எதுவாக இருந்தாலும், இதற்கு இந்த முன்னுரையை எழுதுவது எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

'நனவிடை தோய்தல்' மூலம் 'மரபு' வின் இலக் கியப் பணிக்கு எஸ்பொ அளித்துள்ள அங்கீகாரத்தை நினைத்து மகிழ்கின்றேன்.

'நனவிடை தோய்தல்' புதிய இலக்கிய முயற்சி. நடை புதிது. அமைப்புப் புதிது. நோக்கம் புதிது. அநுபவம் புதிது. ஆக்கம் புதிது. இதனால், ஈழத்து இலக்கியம் மேலும் வளம் பெறுகின்றது.

எஸ்பொவின் நினைவாற்றல் நம்மைப் பிரமிக்க வைக்கின்றது. அவர் தமிழ் எழுத்துலகில் ஒரு தேர்ந்த CRAFTSMAN; அற்புதமான CREATIVE ARTIST. சொற்களின் சுருதிகளை அறிந்த எழுத்தாளர். ஈழத் தின் ஏனைய பகுதிகளின் மண் வாசனைகளையும் அநுபவங்களையும் இலக்கியமாக்கித் தரக்கூடிய வல்லவர். எஸ்பொவின் அநுபவங்கள் அனைத்தும் இலக்கியமாக நிலைத்தல் வேண்டும் என்பதே என் ஆவல்.

**விமல் அரவிந்தன்**
அபிராமி வெளியீடுகள்
03-09-92

199 DANDELION DRIVE
ROWVILLE 3178
AUSTRALIA

படிப்பகம்

www.padippakam.com

# முன்னீடு

நற்செய்தி பரப்பும் ஊழியம் ஆக்கினை நிறைந்தது. யேசுபிரான் அத்தகைய ஆக்கினைக்கு உள்ளானார். அவருடைய உபதேசங்கள் பன்றிகள் முன்பும் விழுந்தன, யூதாஸ் பன்றியுமல்லன். அதனாலும் ஆக்கினை,

ஞானத்தின் சடைப்பும் ஆக்கினை நிறைந்தது. கீதாசிரியன் கண்ணன், தன் அற்புத போதனைக்குக் குரு நிலத்தைத் தேர்ந்தெடுத்தான். கீதா சாரத்தினை உணராத அபக்குவர்கள் இன்றும், தேர்ந்த சைவப் பழங்களாக வலம் வருதல், கிருஷ்ணாவதாரத்துக்கு மட்டுமல்ல; நமக்கும் ஆக்கினையே.

இலக்கியத்தைப் படைப்பு ஊழியமாகச் சம்பாவனை செய்பவனுக்கும் ஆக்கினையே. அவன் படைப்பிலே சத்தியம் -தர்மம் ஆகிய இரண்டு முகங்களும் செப்பமாக அமைதல் வேண்டும் என்று அடம் பிடிப்பான். இந்த முரண்டு, விடுதலை வெறியின் மூர்க்கத்தினை உட்கொள்ளும். அத்தகைய வெறியனுக்கு சர்வபரித்தியாகஞ் செய்யும் அருள் வந்து பொருந்திவிடும். அருளும் வெறியும் பிணைந்த ஆக்கினை!

இவை, அனைத்தும், 'எழுத்தாளன்' என்ற புகழை யாசித்து, எழுத்து யாவாரத்தில் இறங்கியுள்ள சாமான்யனின் பிடிமானத்திற்குள் சிக்காது. அபக்குவன் அஞ்ஞானத்தை அங்காடியில் விலை பேசுபவன், 'அவுஸ்ரேலியாவில் வெளிவரும் **மரபு** இதழ்களில் நனவிடை தோய்ந்து அவர் (எஸ்.பொ.) எழுதிய எழுத்துக்களும் அன்றைய கால் நூற்றாண்டுக்கு முந்திய யாழ் குடா நாட்டின் மண்ணின் வாசனையை நுகரச் செய்ததேயன்றி ஆபிரிக்க, ஐரோப்பிய, அவுஸ்ரேலிய மண்ணின் மணத்தைக் கமழச் செய்யவில்லை' என்று அஞ்ஞானி ஒருவன் ஓலமிடுவான்.

www.padippakam.com



உண்மையில் நான் பிறந்த மண்ணிலிருந்து, சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளாக, தூரந் தூரமாக ஓடிக் கொண்டிருக்கிறேன். நான்கு கண்டங்களில், பல நாடுகளில், நான் சஞ்சரித்தும், என் அநுபவங் களையும் ஞானத்தையும் அகலித்துக் கொண்டது உண்மை.

ஆனால், உண்மை அறிந்தவனின் சுகம். பிறந்த மண்ணிலிருந்து விலகிய தூரங்களும் காலங்களும் அதிகம் அதிகமாக ஆகிக் கொண்டிருக்கும் பொழுது, மண்ணின் பற்றும் வாசனையும் நெருக்கம் நெருக்க மாக அப்பிக் கொள்ளுகிறது. அது மண்பற்று; நாட்டுப் பற்றின் கருமையம். அதுவின்றி நானில்லை, அந்த மண்ணின் இயல்பும் கலந்ததே என் அனைத்து ஆற் றல்களும் தனித்துவங்களும்! அந்த மண்ணின் மகா சிறுமைகள் கூட என் முழுத்துவத்தின் பிரிக்க இய லாத மேன்மைகளெனச் சம்பாவனை செய்கிறேன். தத்தெடுத்த மண்ணின் பெருமை பேச எத்தனை கூலிக்கு மாரடியர்? என் பிறந்த மண்ணின் நேசிப்பு என் தவம். இந்தத் தவ வலிமையுஞ் சேர்ந்ததுதான் என் எழுத்து ஊழியம்.

'நனவிடை தோய்தல்' புதிய இலக்கியம். இது கட்டுரைக் கோவையா? இளமை நினைவுகள் மட் டுமா? நடைச்சித்திரங்களா? கதைகளா? வரலாற்று நூலா? இல்லை, இல்லை... பின்? நிச்சயமாகப் புதிய இலக்கியம். இலக்கணத்திற்கு இசைந்த இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. புதிய இலக்கணம் தோன்றவும் இலக்கியம் எழும். அந்த ஓர்மம் விடுதலை வெறிய னுக்கு உண்டு. புதிய நாடு படைக்க எழுச்சி பெறும் வெறியனுக்கு, அந்த மண்ணுக்குரிய தனித்துவ இலக் கியம் படைக்கும் ஓர்மமும் உண்டு. எடுத்துக்காட்டு? அமெரிக்க விடுதலை வெறியர்கள் இதனைச் சாதித் தார்கள்.

www.padippakam.com

XV

பிறிதொரு கோணத்திலே பார்த்தால், நான் வாழ்ந்த யாழ்ப்பாணத்தினதும் மக்களினதும் வரலாறு போன்றும் தோன்றலாம். அரசர்களின் வாழ்க்கை வரலாற்றை நாடுகளின் வரலாறாகக் கற்பிக்கும் கொச்சைத் தனம் நீண்ட காலமாகப் பயிற்சியில் உண்டு.

**நனவிடை தோய்தல்** சாமான்ய மக்களுடைய சங்கதிகளைச் சொல்லுகிறது. நானும் ஒரு பாத்திரம். அவ்வளவுதான். என்னைச் சூழ நிகழ்ந்த சம்பவங்களுக்கு ஓர் அதிகார அழுத்தம் உண்டு' இதனால் 'நான்' அடிக்கடி புகுந்துவிட்டான். மற்றும் எத்தனையோ பாத்திரங்கள். சிலர் பற்றி JUST A PASSING REMARK. சிலரை நக்கியுமிருக்கிறேன். ஆனால், அனைவரும் என்னவர்கள். எனவே, இனியவர்களும். இது கற்றலுக்கான வரலாறு எழுதும் எத்தனமல்ல. இலக்கியச் சுவை இதன் பயனும். புறநானூறும் அகநானூறும் நான் அதிகம் சுவைக்கும் சங்க இலக்கியம். அதிலே சாமான்ய மக்களுடைய செம்மையை உணர்கின்றேன். நாளைய ஈழவர், நேற்றைய ஈழத்தவரின் வாழ்க்கையின் கோலங்களையும், செப்பங்களையும் அறிவதற்கு இலக்கியம் வேண்டாமா? அவர்கள் முட்டுப்பட்டு நிற்றல் ஆகாது என்கிற கருணையும் இந்த எழுத்துப் பணியிலே சுவறியுள்ளது.

**மித்ர, மரபு, சக்தி**, ஆகிய அமைப்புகளுக்கும். 'அம்பி', நா. மகேசன், விமல் அரவிந்தன், இளம்பிறை எம். ஏ. ரஹ்மான் ஆகிய இனியவர்களுக்கும் என் இந்த எழுத்துப் பணியிலே நன்றிகள்.

இனி, நனவிடை தோய்வோம். வாருங்கள்.

EAST WOOD
9-10-92

**எஸ். பொ.**

www.padippakam.com

கனவுகள் 14


1. போர் - 1
2. ட்ணம் - 17
3. பஞ்ஞீலம் - 34
4. ரதம் - 5
5. புதிசு - 69
6. வெளி - 87
7. கல்வி - 103
8. பேர் - 121
9. கோலம் - 140
10. பாடு - 165
11. சுவை - 185
12. குளம் - 207
13. கோயில் - 226
14. கரை - 248


படிப்பகம்

www.padippakam.com

தேங்காய் [illegible]ருவி
உணவில் பலவுண்ணம்
பாங்காய் அளித்தல்
பலரறிவர்
போங்காணும்
போராடத் தேங்காய்
புதுவருட ஆயுதமாய்
சீராகும்
யாழ்ப்பாணப் பண்பு

# 1. போர்

காலக் கரையிலே, நினைவு அலைகளின் குதியன் குத்து! நுரைப் பூக்கள் பல நூறு பூத்தும் மடிந்தும்... வடிவான கோலங்கள். ஒரு நுரையில் நான் நுழையும் வேளையில்...



படிப்பகம்

www.padippakam.com



அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப்பாணம். பூவரசம் கதிகால்களிலே படர்ந்த கிடுகு வேலிகள் யாழ்ப்பாணத்து மானத்தையும், சிக்கனத்தையும், பண்பாட்டினையும் தாங்கி நிற்கின்றன. கஸ்தூரியார் வீதி[illegible], செம்மாதெரு என்ற பெயருடன் சில செருப்புக் கடை[illegible] [illegible]றுத்து, '[illegible]' கடைகள் என்ற பெயரிலே யாவாரம் நடத்தும் 'கிஸ்ற்' போடும் கடைகளையும் தாண்டி, மக்கி றோட்டாக நீண்டு, அஞ்சணத்தாழ்விலே தீட்டுப் பட்டு, நொந்து கிடக்கின்றது. வண்ணாங் குளத்தை மருவி வயல்கள்; தென்னஞ் சோலைகள்! சீமந்துக் காடுகள் இல்லை. பனங்காடுகள், மாஞ் சோலைகள், வாழைத்தோட்டங்கள் எனப்பலவும் யாழ் நகர எல்லைக்குள் செழித்துக் கிடக்கின்றன...மணல் ஒழுங்கைகளிலே சில 'றலி' சைக்கிள்கள் சோக்குக் காட்டும் மக்கி றோட்டுகளிலே திருக்கல் வண்டிகள் கமக்காரனின் நாட்டாமையைப் பறைசாற்றும். மனித மாடுகள் இழுக்கும் ரிக்ஷாக்களும் வாகனங்களாகப் பவனி வருகின்றன. கார் ஓடும் தார் வீதிகள் ஒறுப்பிலும் ஒறுப்பு!

மாசிப்பனி மூசிப்பெய்யும் என்பது பொய்க்கவில்லை. புல்நுனிகளிலே பனித் துளிகள் முத்துக்களின் ஜாலங் காட்டிய போதிலும், வடக்குத் தெற்காகப் படுத்துக் கிடக்கும் ரெயில் பாதையிலே காலை வெயில் சுள் ளென்று எறிக்கத் துவங்கிட்டுது. வெண்தாடிச் சின்னத் தம்பிக் கிழவர்-என் தாத்தா-கைத் தடியுடன் குளிர்காய் வதற்காக வெயிலில் குளித்துக் கொண்டிருக்கிறார், பளைக்குப் போகும் காலை 'லோக்கல்' இன்னும் கொஞ்ச நேரத்தில் புகையும் நெருப்புப் பொறிகளும் கக்கிக் கொண்டு வரும். எட்டு மணிக்குப் பிறகுதான் அது வருவது வழக்கம். தாத்தாவின் 'பிடிசாப'ப் பேச்சு களினால் சிலையாகச் சமையாமல், பாதை ஓரத்தில் படர்ந்திருக்கும் தொட்டாச் சுருங்கிகளிலே கல்லெறிந்து

www.padippakam.com



அவை சுருங்கி விரியும் ஜாலத்திலே மனம் புதைத்து நிற்கின்றேன். சோம்பலையும் விளையாட்டையும் இணைக்கும் பிஞ்சுப் பருவத்து வித்தைகள்.

''என்ன அப்பு? இந்தக் கோசு நல்ல பனிதான்...'' என்று உசாராகச் சிரித்துக் கொண்டு 'ஓட்டை' நாகேசர் அங்கு வந்து சேருகின்றார். அந்தக் காலத்தில் எங்களுக்கெல்லாம்அவர்தான்பெரிய 'கீரோ'.நாலைந்து நெப்போலியன்களையும்,ஆறேழு அர்ஜுனன்களையும், கனக்கக் காத்தவராயன்களையும், பல பி.யூ. சின்னப் பாக்களையும், சில எஸ். எஸ். கொக்கோக்களையும் ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்ட அதிசய வீரராக அவர் எங்களுக்குத் தோன்றுவார். ''உவன் சொல்லுற புழுகுகள் கந்தப் புராணத்துக் கடைசி ஒற்றையிலும் கிடைக்காது' என்று தாத்தா தனது வெண்தாடியை உருவி, புறு புறுப்பது உண்டு. ஆனாலும், மூத்திரத்திலே மண் உருண்டை குழைத்தெடுத்து, உசரிப் பனையிலே 'கருப்பணி' ஒழுகிக் கொண்டிருந்த முட்டியின் ஓட்டையை அடைத்து நிறுத்திய சாதனையை அவர் புரிந்திருப்பார் என்பதை நாங்கள் மெய்யாகவே நம்பினோம். 'என்னடா வாய் பாத்துக் கொண்டு நிக்கின்றாய் ?' என்று ஏச்சுப் பேச்சுகளை மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டாலும்,தமது வீரபிரதாபக் கதைகளைச் சொல்லி, ஓட்டைப் பற்களுக்கிடையில் துப்பற் தூவானம் பெய்யும் அவருடைய சிரிப்பிலே கட்டுண்டு விடுதல் என் சுபாவம். அவருடைய ஓட்டைப் பற்களை விழுப்புண்ணாகவே கண்டு களித்தேன் என்பதை இப்பொழுதும் நிதானிக்க முடிகிறது. அவர் தொழில் அலங்கிருத்தியனாகக் காணப்பட்டார். நாலு மரம் உரஞ்சித் தொழில் நடத்துவதாகப் போக்குக் காட்டினாலும், ஊர்த் 'துளவாரங்'களிலே திளைத்தல் தான் அவருடைய பிரதான ஊழியம்.

www.padippakam.com



''உன்ரை பாடுகள் எப்பிடி நாகேசு?... புதுவருஷமும் புங்கை வருவது போலை...''என்று தாத்தா அநுங்கினார். 'முதுகில் இன்னும் வெய்யில் ஏறவில்லை; நீ கொஞ்ச நேரம் முசுப்பாத்தியாய்க் கதையன்' என்று தாத்தா கை காட்டி விழுத்தியிருப்பதாக நாகேசர் விளங்கிக் கொண்டிருக்க வேண்டும். பெரியவர்கள் பேசும் பொழுது உள்ளர்த்தங்களும் உண்டு என்பதை நான் வெகு காலங் கழித்தே உணர்ந்து கொண்டேன்.

''இடையிலை பங்குனிதானே அப்பு ? அது கிடக்க உவன்மக்கிக் கிடங்கடிச் செல்லையன் பெரிய கெப்பர் பேசித் துள்ளித் திரியிறானாம்...''

''என்னவாம்?''

''போன வருஷப் புறப்புக்கு செல்லையன் ஆக்கள் ஆரியகுளம் பள்ளத்தாரைப் போர்த்தேங்கா யடியிலை வெண்டவையல்லே... இப்ப போர்த் தேங்காயடியிலை தங்களை வெண்டவை எங்கடை சனத்திலை இல்லை எண்டு அவன் குளறித் திரியிறான்.''

''அவன்...அவன்தான் 'குட்செட்டு' சைஸ் வல்லி கறித்தேங்காய் எல்லாத்தையும் போர்த்தேங்காயெண்டு தள்ளிவிட்டதாலையல்லோ பள்ளத்தார் தோத்தவை. உது உங்கினை ஆருக்குத் தெரியாது?''

''அதுதானப்பு சொல்ல வந்தனான்...வறாத்துப் பளையிலை உமல் கொட்டை அடிச்சவை உப்ப ரவுண் சனமாகியல்லோ நாட்டாமை பேசுகினம்? அவங்கடை வாயை அடைக்க உண்ரை பொடியன்கள்காணாதே...''

''சின்னவன்- இவன் துரையன்-நான் சொன்னாக் கேழ்ப்பான்...மூத்தவன் மார்க்கண்டு சுடுதண்ணிப் புரக் கிராசியல்லே?... அவன் என்ன சொல்லுவானோ?''

www.padippakam.com



''அதுதாணெணை சொல்லுறன். வீம்புக்கே வேட்டையாடப் போறம்?... மார்க்கண்டுவுக்கு இல்லாத மதிப்போ, செல்வாக்கோ?...மார்க்கண்டு போய் அடிச்ச படியால் அல்லோ போன கோசு முடமாவடியார் வெண்டவை? வீமன்காமத்தாரின்ரை மானத்தைக் காப் பாத்துற விஷயம் எண்டால் அவன் கேழ்ப்பான். கோட் டடிச் செல்லையா அவன்ரை கையுக்குள்ளை. அவன் ஏர்வைப்பட்டால் எத்தினைபேர் பின்னாலை நிப்பினம்? சேனை சனம் குறைவோ? எங்கடை ராங்கியையும் ஒருக்காக் காட்டினால்தான், இங்கினை நாங்களும் தலை நிமிர்ந்து தொழில் செய்யலாம்...ஒருக்காப் பக்குவமாகச் சொல்லிப் பாருங்கோவன் அப்பு...சாதி சனம் எண்டு வந்தால் அவன் பின்னிற்க மாட்டான். இந்த வருஷமெண்டாலும் எங்கடை கெட்டித்தனத்தை எல்லாரும் வடிவா அறியவேணும்...''

இப்படியாகத்தானே அந்தப் போருக்கு 'ஓட்டை' நாகேசர் பிள்ளையார் சுழி போட்டார் என்பது இன்றும் நன்றாக ஞாபகம் இருக்கின்றது.

□ □

'கோஷ்டிகள்' பிரிந்து விளையாடாமலும் ஒரு வீர விளையாட்டா? வீரத்தைப் பேணவேண்டுமென்றுதானே தமிழர்கள் சேர-சோழ-பாண்டியர் என்று வில்-புலி-கயல் ஆகிய கொடிகளைத் தாங்கிப் பண்டைக் காலத்திலே தங்களுக்குள் போராடிக் கொண்டார்கள்? பழக்கம் பெரிசோ? பரவணி பெரிசோ? போர்த் தேங்காயடி யிலேகூட இந்த வீர மரபினை யாழ்ப்பாணம் விட்டு வைக்கவில்லை என்பது பரமார்த்த உண்மை.

நூறு குருவிகளை ஒரே தோட்டாவினால் சிலாவிச் சுட்டு வீழ்த்திய சாதனையாளரான நாகேசரா?

www.padippakam.com



கொக்கா? வெண்தாடிச் சின்னத்தம்பிக் கிழவரின் இரண்டு மகன்களும்—என் மாமாக்கள்—போர்த் தேங் கயடிப் பந்தயத்துக்குச் சம்மதித்து விட்டார்கள். சேணியநெரு மார்க்கண்டு சுந்தியாருக்கும், மங்கிக் கிடங்கடி செல்லையா பகுதியாருக்கும் நடக்கவிருக்கும் 'போர்' பற்றிய புதினம் பண்டாரக்குளம் தொடக்கம் புல்லுக்குளம் வரை, வில்லூண்டி தொடக்கம் செம்மணி வரை என்று றவுண் ஏரியாக்களில் மட்டுமல்லாமல், யாழ்ப்பாணக் குடா நாட்டிலும், அப்பாலுக்கு அப்பாலும் வியாபிக்கலாயிற்று.

இரண்டு பகுதியாரும் வெற்றியை நத்தி, திறமான ஆயுதங்களைத் திரட்டத் துவங்கினார்கள். திறம் போர்த் தேங்காய்களே அவர்கள் நாடிய ஆயுதங்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? தூரம், பிரயாசை, பணம் என்பன ஒரு பெரிய இதே? பெரிய மாமா ஹண்டர் அன்டுகொம்பனியிலிருந்து ஒரிசினல் டயருடன் பெற்று, பொத்திப் பொத்திப் பாவித்த றலி சைக்கிள் மணல் ஒழுங்கை, மக்கிறோட்டு, இக்கிரிப் பற்றைகள் மருவிய ஒற்றையடிப் பாதை என்று ரேஸ் ஓடத் துவங்கியது. அப்பையா (என் தந்தையார்) மண்டைக் கயிறு இழுக்கும் மச்சான். அவர் பேரர்த் தேங்காய்கள் பற்றிய ஞானவான் என்று கணிக்கப்பட்டவர். தெல்லிப் பழை, காங்கேசன்துறை, சங்கானை, சித்தங்கேணி, தொல்புரம், கடுக்காயடி, களபூமி, பருத்தியடைப்பு, தோலைகட்டி, பண்டியன்தாழ்வு, கொய்யாத் தோட்டம், சங்கத்தானை, இயக்கச்சி என்று பல ஊர்ப் பெயர்கள் அவர்களுடைய கதைகளிலே அடிபட்டன. அங்கெல்லாம் சென்று போர்த்தேங்காய்களை வாங்கி வந்தார்களென விளங்கிக் கொண்டேன். சில தேங்காய் கள் வெள்ளோட்டமாக அடித்து உடைக்கப்பட்டு அவற்றின் சிரட்டை அமைப்புகள் ஆராயப்பட்டன.

www.padippakam.com



தேங்காய் சேகரிப்பில் பெரிய மாமாவுக்குப் பெரிதும் உதவியவர் 'பொரிச்ச மீன்' செல்லையா. அவர் யாழ்ப் பாணக் கோட்டடியில் பெரிய கிளாக்கர். அவருடைய மகனொருத்தன் மாத்தறையிலே போலீஸ் உத்தி யோகத்தராக இருந்தான். அவனுக்குக் கடித மூலம் அறிவித்து, இவர்கள் இருவரும் பெரிய ஏற்பாடுகளுடன் அங்கு சென்று வந்தார்கள். போய் வரும் பயணத்திற்கு மட்டும்' நாலு நாள்' பிடித்ததாகப்பேசிக்கொண்டார்கள். நிறைய காலி-மாத்தறைத் தேங்காய்கள் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் 300 தேங்காய்கள் என்று தீர்மானிக்கப் பட்டிருந்தபோதிலும், அதற்கு மேலாகவும் உம்பாரமாகத் தேங்காய்கள் குவிக்கப் பட்டன. ஓடு கழராமல் இருப்பதற்காக தேங்காய்கள் பெரிய தொட்டிகளிலும், கிடாரங்களிலும் ஊறவிடப் பட்டன. பல தேங்காய்கள், கிணற்றடியில், வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதிகளில் புதைத்தும் வைக்கப் பட்டன, நாளாக நாளாக வீட்டிலே போர்த் தேங் காய்கள் தவிர்ந்த பேச்சுகள் மிகவும் ஒறுப்பாகின. அடிக்கடி ஒட்டை நாகேசர் வந்து, செல்லையா பகுதி யாரின் ஏற்பாடுகள் பற்றி, தனது இயல்புக்கு ஏற்பக் கைகால்கள் வைத்துச் சொல்லி முடுக்கிக் கொண்டிருந் தார்.

அந்தப் புது வருஷப் பிறப்புக்கு எங்கடை வீட்டுக்கு அதிகமான விருந்தினர் வந்து போனார்கள் என்று ஞாபகம். தங்களுடைய கையிருப்பின் வலிமையைக் காட்டுவதற்கு மாமாக்கள் 'டெமோன்ஸ்ரேஷன்' அடிகளைச் செய்துகாட்டி அவர்களை மகிழ்வித்தார்கள். 'ஐந்தாம்படை' யாகச் செயலாற்றிய மக்கிக்கிடங்கடி 'சாக்கர்' தம்பையா, செல்லையா பகுதியின் ஆயுதங் களின் குண விசேஷங்கள் பற்றிய இரகசியத்தகவல் சொல்லிச் செல்வார். 'ஐந்தாம் படை'யின் உபயோகத்

www.padippakam.com



தினை அன்றைய யாழ்ப்பாணம் அறிந்திருந்தது என்பது குறிப்பு.

நல்ல நேரம் பார்த்து, இரண்டு பகுதியாரின் பெரிய வர்களும் பொதுவான இடம் ஒன்றில்கூடி, போருக்கான களத்தையும் காலத்தையும் உறுதி செய்தார்கள்.

சேணிய தெருவைப் பலாலி றோட்டுடன் இணைப் பது சாயக்கார ஒழுங்கை. அந்த ஒழுங்கையின் சங்கிலி 'ல' வளைவு ஒன்றிலே, யூ. டி. சி. யின் ஆசீர்வாதத் தினால், இரவு நேரங்களில் மண்ணெண்ணை உண்டு மினுக்கம் காட்டும் தெரு விளக்கினை வந்தனை செய்து, ஒதுங்கிச் சடைத்திருப்பது கோணல் வேப்ப மரம். அந்த வேம்பின் திரண்ட வேர்களிலே குடியேறி, சேணிய ஆச்சி கரிசனையாக ஏற்றி வைக்கும் நெய் விளக்கினாலும், கிரமமாகச் செய்யும் பூஜைகளினாலும் பொலிவு பெற்றாள் காளி ஆச்சி! காலப்போக்கில் அந்த வேப்பமரம் காளிகோயிலென்றே அழைக்கப் பட்டது. அதன் பின்னாலிருந்த பொதுவளவு காளி கோயில் வளவு என்று அழைக்கப்பட்டது. அந்த வளவிலே, சில காலங்களிலே, கரப்பந்தாட்ட வினை யாட்டு நடைபெறுவதுமுண்டு. இரண்டு பகுதியாருக்கும் மத்திமமான இடமாக இருந்ததினால் அதுவே களமாகக் குறிக்கப்பட்டது. புது வருஷப் பிறப்பின் நான்காம் நாளான ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்குப் போர் துவங்கும் என்று காலம் குறிக்கப்பட்டது.

சனிக்கிழமை பின்னேரம் வீடு திமிலோகப்பட்டது. தாத்தா, பெரிய மாமா, சின்ன மாமா, அப்பையா, ஐயம்பிள்ளைமாமா. வேலாண்டி மாமா, சங்கரக் குஞ் சியப்பு, பொரிச்சமீன்செல்லையா, நன்னிமாமா, நடராசா அத்தான் என்று பெரிய கூட்டம் கூடியிருந்தது. தேங்காய்கள் அனைத்தும் குவிக்கப் பட்டு, ஆறு பெரிய

www.padippakam.com



கூறுகளாக வகைப்படுத்தப்பட்டன. சில கூறுகள் சிறிதாகவும், ஏனையன பெரிதாகவும் இருந்தன. வகைப்படுத்துவதிலே அப்பையா-வேலாண்டி மாமா ஆகிய இருவருடைய கருத்துகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டன. அபூர்வமாகவே கிடைக்கும் திறம் போர்த் தேங்காய்கள் இடம் பெற்ற கூறுகள் சிறியன. நல்ல காலிக் கையான்கள் இன்னொரு சிறிய கூறு. ஒரு கூறிலே இருந்த தேங்காய்களுக்கு இலேசாக தேங்காய் நெய் பூசப்பட்டது. ஒவ்வொரு கூறுக்கும் கொசுறாக இவ்விரண்டு தேங்காய்கள் சேர்க்கப்பட்டன. ஒவ்வொரு தேங்காயும் குலுக்கிப் பார்க்கப்பட்டு, சுண்டிப் பார்க்கப்பட்டு, செப்ப நிர்ணயம் பெற்றன. இந்தச் சடங்குகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, பல கொட்டாவிகளை விட்டு, வெண்தாடியிடம் ஏச்சுக்கள் பல வாங்கி அலுத்துத் தூங்கி விட்டேன் போலும்...

காலையில் எழுந்து பார்த்தபொழுது, பெரிதும் சிறிதுமாக எட்டுச் சாக்குகளிலே தேங்காய்கள் கட்டப்பட்டு, கிணற்றடியில் குளிக்க வார்க்கப்பட்டிருந்தன, ஒவ்வொரு சாக்கிலும் வெவ்வேறு சுண்ணாம்பு அடையாளங்கள் இருந்தன. அவை சங்கேதக் குறியீடுகள் என்று பின்னர் அறிந்து கொண்டேன். எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்பொழுது போர் துவங்கும் என்கிற தியானத்தில், என் மனம் களத்துக்குத் தாவியது...

களம். வளவின் நடுப் பகுதியில் கம்புகள் நாட்டி, அவற்றை இணைத்து, சதுர வடிவில் இரண்டு பட்டுக் கயிறுகள் கட்டப்பட்டிருந்தன. கயிற்றுக்கு உட்பட்ட பகுதிதான் கோதா. அங்கீகரிக்கப்பட்டவர்கள் தவிர வேறு யாரும் அதற்குள் போகமுடியாது. அதனைச் சுற்றி எழுந்திருந்த வேலிகள் தென்னோலைக் குருத்துகளினால் வடிவாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. எதிரும்

www.padippakam.com



புதிருமாக இரண்டு கப்புகள் நாட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு கப்பிலும் மூன்று நான்கு நன்கு பழுத்த வாழைக் குலைகள். இதர வாழைக் குலையைப் பழம் உதிராது கட்டி வைத்தது புதினம். கப்புகளைச்சுற்றிலும் பல் வகைத்தான இளநீர்க்குலைகள். ஒரு கப்பின் பிராந் தியத்தில் ஐயம்பிள்ளை மாமாவும், வேலாண்டி மாமாவும் ஆட்சி செலுத்தியதினால், அது மார்க்கண்டு மாமா பகுதியார் நாட்டிய கம்பம் என்பதைச் சுலபமாக இனங்காண முடிந்தது. எனவே, எதிர்க்கம்பம் எதிர்க் கோஷ்டியாருடையது. ஒவ்வொரு தத்தியாரும் தத்தமது ஆதரவாளர்களை ஆதரித்து உபசரிப்பதற்கு இந்த முன்னேற்பாடுகள் என்பதைப் பின்னர் தெளிந்து கொண்டேன். ஆதரவாளர்கள் உட்படச் சுமார் நானூறு ஆர்வலர்கள் குழுமியிருந்தார்கள். கறிக்குக் கடுகு தாளிப்பது போல அங்கொன்றும் இங்கொன்று மாகக் கிழவிகள் சிலரே தாய்க்குலத்தின் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். சேணிய ஆச்சி அவர்களுள் நாயகி யாகத் திகழ்ந்தார்.

போர் துவங்குவதற்கு முன்னர், இன்றைய தலை முறையினரின் விளக்கத்திற்காகச் சில தொழில்நுட்ப விஷயங்களை இங்கு சொல்ல வேண்டியிருக்கின்றது. கைப்பிடிக்கு அடக்கமான, தடிப்பும் வலுவும் மிக்கச் சிரட்டையுள்ள தேங்காய்களே போர்த் தேங்காய் களாகத் தேர்ந்தெடுக்கப்படும். போர் ஒன்றிலே ஒரு தேங்காய் பதினெட்டுத் தேங்காய்களை உடைத்ததாம். அந்தத் தேங்காய் காய்த்த மரம் 'பதினெட்டடியான்' என்று விருதுபெற்றது. முடமாவடியிலே 'நாற்பதடி யான்' மரம் ஒன்றினை மிகவும் வியப்புடனும் பக்தி யுடனும் பார்த்தது இன்றும் ஞாபகமிருக்கின்றது. அந்த மரத்தில் ஆண்டொன்றுக்கு நான்கு பாளைகள் மட்டும் வருமாம். ஒரு குலையிலே இரண்டு மூன்று காய்

படிப்பகம்

www.padippakam.com



களுக்கு மேலே காய்ப்பதும் பஞ்சியாம். இந்த விபரங்களை 'தேங்காய் ஞானவான்கள்' மிகவும் கரிசனையுடன் அறிந்து வைத்திருந்தார்கள். உற்பத்தியும் கேள்வியும் விலையை நிர்ணயிக்கும் என்கிற சூத்திரத்தின் படி, திறம் போர்த் தேங்காய்கள் உச்ச விலைகள் பெற்றன. 'விட்டான்' என்பது விடப்படும் அல்லது வைக்கப்படும் தேங்காயாகும். அந்தத் தேங்காயை எந்தக் கோணத்திலேனும் வைத்துக்கொடுக்கும் உரிமை அந்தத் தேங்காய்க்குப் பாத்தியதையுடைய கோஷ்டிக்கு உண்டு. விடப்படும் தேங்காயின் மென்மையான பகுதியை அடிக்க முடியாத பாங்கிலே வைத்துக் கொடுப்பது இதிலுள்ள சூக்குமமாம். அடிக்க உதவும் தேங்காய் 'கையான்' என அழைக்கப்படும். அடிப்பவர், 'விட்டா'னின் உடைபடக்கூடிய மென்பகுதியை இனங் கண்டு, தன் உடலின் வலிமையையும், தேங்காயடி நுணுக்கத்தையும் இணைத்து, 'கையா'னைக் கருவியாகக் கொண்டு அடிப்பார். ஒரே அடியில் விட்டானை 'சுக்கு'நூறாகச் சிதறும் வண்ணம் அடித்தல் உத்தமமான அடி. சில சமயங்களிலே விட்டானும் கையானுமாக இரண்டும் ஏக காலத்தில் உடைவதும் உண்டு. விட்டான் திறம் காயாக இருந்தாலும், கையான் 'சோத்திய'னாக இருந்தாலும், கையான் மட்டுமே உடையும். இவை மத்திமமான அடிகள். ஓர் அடியில் இரண்டு காய்களுமே உடையாமல் இருக்குமானால், அடிப்பவர் மிகவும் சக்கட்டையனாய் மதிக்கப்படுவார். அத்தகைய 'சக்கட்டை'யர்கள் தேங்காயடிக் கோஷ்டியிலே சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். 'ஊர்க் காய்கள்' (வட மாநிலத்தில் பெறப்படுபவை) முடியுடன் இருக்கும். அவற்றின் கண் பகுதியைப் பார்க்கிலும், அடிப் பகுதியே, நரம்புகள் மூன்றும் சந்திக்கும் மூரிப் பகுதியேவலிமையானவை.முடிமென்மையான பகுதிக்கு ஒரு கவசமாக அமைவதுடன், கையானாய் உபயோகிக்

www.padippakam.com



கும் பொழுது மேலதிக grip கொடுக்கவும் உதவும். காலி - மாத்தறை தேங்காய்கள் இன்னொரு வகைத்து. அவற்றின் கண்பக்கமே வலிமை மிக்கன. மூன்று கண்களும் ஒரே சமதளத்திற் பொருத்தப்பட்டன போன்று கண்பகுதி பரந்து தட்டையாகத் தோன்றும். கண்கள் அமைந்துள்ள பகுதியே அடிக்கும் பகுதியாகப் பயன்படும். இந்தக் காய்களை விட்டானாகப் பயன் படுத்தும் பொழுது, மணல் குவித்து, மூரிப்பகுதி புதைந்தது போல போக்குக் காட்டி, தெந்தட்டிலே வைத்துக் கொடுத்தல் ஒரு வகை நுட்பமாகும். இந்த நுணுக்கங்கள் அனைத்தையும் அறிந்து, உத்தமமான அடி கைவரப்பெற்றவர்களே போர்த் தேங்காயடி வீரர் களாகச் சமுதாயத்திலே அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

கோதாவுக்குள் முதலில் ஐவர் நுழைந்தார்கள். ஒவ்வொரு கோஷ்டிக்கும் இவ்விரண்டு நடுவர்களை நியமிக்கும் உரிமை இருந்தது. ஐயம்பிள்ளை மாமாவும், சங்கரக் குஞ்சியப்பும் எங்களுடைய கோஷ்டியின் நடுவர் களாக நியமிக்கப் பட்டிருந்தார்கள். ஓட்டை நாகேசர் இரண்டு பகுதிக்கும் பொதுவான ஐந்தாவது நடுவராக இடம் பெற்றார். இந்தப் போரின் சூத்திரதாரி- கண்ண பரமாத்மா- தாமே என்கிற பெருமிதத்துடனும் ஏமாப் புடனும் அவர் தோன்றியிருத்தல் சாலும் என்று இப் பொழுது நியாயப்படுத்திப் பார்க்க முடிகின்றது. முடிச்சுப் போட்டதை அவன் வசத்தில் சேர்த்தல் நியாயம். முதலில் ஒவ்வொரு கோஷ்டியினருடைய மொத்தத் தேங்காய்கள் சரியாக முந்நூறு என்பது சரிபார்க்கப்பட்டு கோதாவுக்குள் எடுத்து வைக்கப் பட்டன, கொசுறுகளாகவும், மிகுதியாகவும் இருந்த தேங்காய்கள் தனிச்சாக்கிலே கட்டித் திருப்பி அனுப்பப் பட்டன.

www.padippakam.com



சாக்குகளிலிருந்து தேங்காய்கள் எடுத்துக் கொடுக்கும் உதவியாளராக ஒவ்வொரு கோஷ்டிக்கும் மூன்று மூன்று பேர் நியமிக்கப்பட்டார்கள். எங்கள் கோஷ்டிக்கு தாத்தா, அப்பையா, வேலாண்டி மாமா ஆகிய மூவரும் உதவியாளர்களாகப் பொறுப்பேற்றார்கள். வெண்தாடி காற்றில் அசைய, கையிலே கம்பீரமான கைத்தடியுடன், கழுத்திலே கதிர்காமத்து ருத்ராக்ஷ மாலைகள் வழிய, நெற்றியிலே விபூதிப் பட்டையும் சந்தனப் பொட்டும் துலங்க, இடுப்பிலே புதுவருடத்துக் 'கீரியும் பாம்பும்' புது வேட்டி அலங்கரிக்க, தோளிலே குண்டஞ்சிச் சால்வை ஏகாவடமிட, அறுபதாம் கல்யாணத்திற்கு மாப்பிள்ளையாக வந்தவர் போன்று தாத்தா திவ்விய மாகக் காட்சி அளித்தார். அவருடைய இரண்டு புதல்வர்களும் தலைமை தாங்கும் போர் என்பதிலே அவருக்குப் பெருமை தாங்கவில்லை. (எங்கள் கோஷ்டிக்கு மூன்றாவது அடிகாரனாக இறுதி நேரத்தில் நன்னி மாமா தேர்ந்தெடுக்கப் பட்டார்.)

'செல்லையாவுக்குத் தலை; மார்க்கண்டுவுக்கு பூ' என்று பகிரங்கமாக அறிவித்த பின்னர், ஓட்டை நாகேசர் ஒரு ரூபாய் வெள்ளி நாணயத்தைச் சுண்டினார். தலையே விழுந்தது. எங்களுடைய கோஷ்டி நாள் தேங்காயை விடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. மூந்நூறிலே கணக்கெடுக்கப்படாத உபரியான ஒற்றைத் தேங்காயே நாள் காயாகும். அது முட்டுக்காய்ப் பருவத்துத் தேங்காய். அன்றுகாலையிலேதான் உரித்து மஞ்சள் நீரிலே குளிப்பாட்டி, குங்குமத் திலகத்துடன் அலங்கரிக்கப்பட்டிருக்கும். உண்மையில் மணமகளை அலங்கரித்து மணவறைக்குக் கொண்டு வந்து அமர்த்தியதைப் போன்று அது பொலிவுடன் தோன்றும். நாள்த் தேங்காய் விஷயத்திலே தாத்தாயாருடைய ஆலோசனையையும் கேட்கவில்லை. அவரே நட்டு உண்டாக்கிய இளங்கன்றின் தேங்காயையே

www.padippakam.com



அவர் நாள்க் காயாக அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தார். அதனைப் படினம் பார்த்துத் தாத்தா வைத்துக் கொடுத்தார்.

செல்லையா தனது நாள்தேங்காயால் அதனை அடித்தார். விட்டான் சிதறியது. அது எதிர்பார்த்தது தான். விட்டலும் அடித்தலும் மாறிமாறிக் கிரம முறையிலே நடைபெறும். எனவே, அடுத்து செல்லையாவின் தேங்காயை பெரிய மாமா கொடுக்கப்பட்ட கையானால் அடித்தார். கையான் சிதறியது! அடுத்து வைக்கப்பட்ட போர்த்தேங்காயையும் செல்லையாவின் நாள்க்காய் கையானாகப் பலி வாங்கியது. வேலாண்டி மாமா சிறிய சாக்கிலிருந்த ஒரு போர்த்தேங்காயை எடுத்துப் பெரிய மாமாவிடம் கொடுத்தார். அந்த அடியில் செல்லையாவின் நாள்க்காய் சுக்குநூறாக உடைந்து மாண்டது, அத்துடன் போர்த்தேங்காயடிகளை கட்டத் துவங்கிவிட்டது!

ஒரே தேங்காய் கோதாவிலே நின்று நான்கைந்து தேங்காய்களுக்கு மேலாக வதஞ் செய்தால், அந்தத் தேங்காய் எங்கிருந்து பெறப்பட்டது என்பது பற்றி ஆர்வலர்கள் மத்தியிலே பரபரப்புத் தோன்றும். களைப்புத் தோன்றாத வண்ணம், கோஷ்டியிலே இடம் பெற்ற மூவரும் மாறி மாறி அடிப்பார்கள். ஆனால், ஒரு தேங்காயை எடுத்து ஒருவர் அடிக்கத் துவங்கி விட்டால், அந்த தேங்காய் உடையும் வரை அவரே விளையாடவேண்டும். உடைந்த தேங்காய்கள் நடுவர்களினால் ஒரு மூலையிலே குவிக்கப்பட்டன. நேரம் போய்க் கொண்டிருந்தது. தேங்காய்கள் உடைந்து கொண்டிருந்தன. வெற்றி முள் இரண்டு பக்கங்களுக்கிடையிலும் ஊசலாடியது, பெரிய மாமா விளையாடிய ஒரு தேங்காய் பத்துத் தேங்காய்களை வதஞ் செய்தது. இன்னொரு கட்டத்திலே அப்பையா எடுத்துக் கொடுத்து சின்ன மாமா விளையாடிய தேங்காய் பதினைந்து தேங்காய்களை வதம் செய்தது. இந்த

www.padippakam.com



இரண்டு கட்டங்களுக்குப் பிறகு, எங்களுடைய கோஷ்டிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்று பரவலாகப் பேசப்பட்டது.

போர்த்தேங்காயடி நடந்து கொண்டிருக்கும் பொழுதே, பார்வையாளருக்கு வாழைப்பழங்கள் வழங்கப்பட்டன. பிரமுகர்களுக்கு இளநீர் வெட்டி வழங்கப்பட்டது. சிலர் அவசரமாகக் கழன்று சென்று 'சுதி' ஏற்றிக் கொண்டு வந்தார்கள். மொத்தத்திலே திவ்வியமான திருவிழாவின் கோலத்தைத் தரிசிக்க முடிந்தது. மேற்படி போர் மூன்று மணி நேரத்திற்கு மேல் நீண்டது. சிதறிய தேங்காய்ச் சிரட்டை சின்னி விரலை வெட்டியதால் சின்ன மாமாவுக்கு இலேசான காயம். இரத்தந் தோய்ந்த விரலைச் சுற்றி ஈரத்துணி கட்டிக் கொண்டு அவர் தொடர்ந்தும் விளையாடினார். அது தாத்தாவுக்கு மகா பெருமை.

அப்பாடா! 'மக்கிக்கிடங்கடி செல்லையா கோஷ்டியின் அனைத்துத் தேங்காய்களும் உடைக்கப்பட்டு விட்டன' என நடுவர்கள் அறிவித்தார்கள். எங்களுடைய பகுதியில் எஞ்சியிருந்த தேங்காய்கள் எண்ணப்பட்டன. 'சேணிய தெரு மார்க்கண்டு பகுதி பதினைந்து தேங்காய்களால் இந்தப் போரிலே வெற்றி பெற்றது' என்று எல்லார் சார்பிலும் பொரிச்சமீன் செல்லையா அறிவித்தார். 'கதிர்காமக் கந்தனே!' என்று சந்நதக் குரல் எழுப்பியவாறு, தாத்தா தனது வெண்தாடியை உருவியவாறு கோதாவை விட்டு வெளியேறி, ஒழுங்கையால் நடக்கத் துவங்கினார். இனி அவரை யாராலும் பிடிக்க முடியாது. அவருடைய கைத்தடி வீரவாள் போன்று காற்றிலே சுழன்று வின் கூவியது. 'இனி என்ரை வாலை பிடியுங்கோ' என்பது போன்ற கோலம்!

உடைந்து குவிக்கப்பட்ட தேங்காய்கள் அனைத்தும் சேணிய ஆச்சி வசம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றுள் நல்ல தேங்காய்கள் காளிகோயில் பெயரால் வழங்கப்

www.padippakam.com



படும். சித்திரைக் கஞ்சிக்குப் பயன்படுத்தப் படும். ஏனைய தேங்காய்கள் தேங்காய்நெய் வடிப்பதற்குப் பயன்படும். அந்த நெய்யுண்ணும் விளக்கிலே சில காலங்களுக்கேனும் காளிஆச்சி மகிழ்வாள் என்பது ஐதீகம். உப பயன்கள் கருதியும் இத்தகைய தேங்காய்ப் போர்கள் கோயிலைச் சார்ந்தே நடத்தப்படுமாம். சில கிராமங்களிலே பணப்பந்தயம் நிர்ணயிக்கப்பட்டு போர்த்தேங்காயடி நிகழ்வும் உண்டாம். பெரியவர்களின் தலையீட்டால் இதிலுள்ள சூதாட்ட அம்ஸம் காலப்போக்கிலே களையப்பட்டதாக அறிந்தேன்.

அன்றிரவும் அடுத்து வந்த நாள்களும், இந்தப் போரைப் பற்றியும், வெற்றி பற்றியும், விமர்சனஞ் செய்வதிலேயே காலம் கழிந்தது. நான் கெஞ்சிக் கூத்தாடியும், நாண்டுகொண்டுநின்றும், அப்பையாவை வளைத்து மூன்று போர்த் தேங்காய்கள் பெற்றுக் கொண்டேன். அவற்றை உருட்டி திரிந்து என்னுடைய வீரத்தையும் புழுகித் திரிந்ததாக ஒரு இலேசான ஞாபகம்.

யாழ்ப்பாணக் கலாசாரம் பனைமரக் கலாசாரம் மட்டுமே என்று பலர் பிழையாக விளங்கிக் கொள்வதுண்டு. ‘கொட்டைக் கிழங்கு வேணுமா?' என்று தென்னிலங்கைச் சித்திரகாரர் இன்றளவும் கேலிச் சித்திரங்கள் வரைதல் நீடிக்கின்றது. ஆனால், தென்னை மரக் கலாசாரமுஞ் சேர்ந்ததுதான் யாழ்ப்பாணக் கலாசாரம் என்பதைச் சித்திரை போர்த்தேங்காய் விளையாட்டு காலங்காலமாக எண்பித்து வந்துள்ளது. பூஜைக்கும், சுவையான உணவு சமையலுக்கும் ஏற்ற பொருளாகவும், சமையல் எண்ணெய் உற்பத்திக்கு ஏற்ற கனிப் பொருளாகவுமே ஏனையோர் தேங்காயைத் தரிசிக்கின்றார்கள். ஆனால், அந்தத் தேங்காயை வீரவிளையாட்டின் வெளிபாட்டுச் சாதனமாகவும் வழிபட்ட யாழ்ப்பாணக் கலாசாரமே, உன்னை மனசார ஆராதிக்கின்றேன்! □

www.padippakam.com

**சேர்ந்துப் பழகிச்**
**சிரித்து விளையாடி**
**ஓர்ந்துகண் ணோடா**
**உறவுடையேன்**
**ஊர்ந்துன்**
**கையில் சுழன்றால்**
**கனவான்நீ அஃதின்றேல்**
**பொய்யல்ல**
**நீயோர் பிணம்**

# 2. பணம்

**காலக் கரையிலே நினைவு அலைகள் எறியப் படுகின்றன. பாற்குடம் சரிந்து, சிந்திச் சிதறுவது போல... ஒரு துளியிலே நான் புகுந்துள்ளது போன்ற விநோத ஸ்திதி.**



படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணம் ஸ்டேஷனைத் தாண்டியதும், ஆரிய குளத்தடிக்கும் சிறாம்பியடிக்கும் இடையில் கால் சுற்றுச் சுற்றித் திசை திரும்பும் ரயில் பாதை, இப்பொழுதும் தண்டவாளங்களை வடக்குத் தெற்கான சமாந்திர யோடுகளாக்கிப் படுத்துக் கிடக்கின்றது. அதன் ஓரங் களிலே படர்ந்து கிடக்கும் தொட்டாச் சிணுங்கிக்கு மேலாகக் குப்பைக் காடாய் வளர்ந்திருக்கும் செடி களிலே உம்பாரமான வெள்ளைப்பூக்கள் மென்காற் றிலே அசைந்து கொள்ளை வடிவு சிந்துகின்றன. அவற்றிலே கண்ணாமூஞ்சி விளையாடிப் பறந்து சுகிக் கும் வண்ணாத்திப் பூச்சிகள். அவற்றுள் ஒன்றினையா வது பிடித்து விடவேண்டும் என்கிற கரிசனை எனக்கு!

என் அம்மாவின் கரிசனை வேறொன்றிலே நிலை குத்தியிருக்க, வீட்டின் சங்கடப் படலையிலே தவம் கிடக்கிறா.

'இண்டைய கறிப்பாட்டினை உங்கினை பார்த்துச் சரிக்கட்டுமப்பா...' என்கிற உபதேசத்துடன், என் அப்பையா 'பிறாசல்' கொண்டாடப் பண்டாரக்குளம் போய்விட்டார். அங்கு போய் கணபதி மாமா வீட்டிலே தாயம் அல்லது கடுதாசி விளையாட்டிலே ஈடுபடுவ தென்றால், அவர் எதையும் மறக்கவும் துறக்கவும் தயார். 'பாவம், அவரும் தன்ரை சனங்களிட்டைப் போயிட்டு வரத்தானே வேணும்' என்கிற சமாதானம் அம்மாவுக்கு.

ஆனாலும், மற்ற மற்றப் பெண்டுகளைப் போல அம்மா தெருவுக்கும் கடைக்கும் போகமாட்டா. யாரா வது தெரிந்தவை வரமாட்டினமா என்று தவித்த பொழுது, கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல, அந்தப் பக்கமாக பூரணம் அக்கா வந்தவ. அவ என் இளமைக் காலத்து நினைவுகளிலே அழியாத

www.padippakam.com



கோலமாக நிலைத்துள்ள 'கரெக்டர்'. முட்டுப்பட்ட சனங்கள். எப்பொழுதும் தலையிலே ஒரு கடகத்துடன் காணப்படும் முத்து மனுஷியின் மகள். கோயில் வள விலே குடிசை கட்டி வாழ்ந்தவை. பனை கொடியேறும் காலங்களிலே, அதே கோயில் வளவிலே குடியிருந்த, மேட்டுக் குடியைச் சேர்ந்த, ஐம்பது வயதிலும் ஒண்டிக் கட்டையாக வாழ்ந்த மயில்வாகனம், குடிச்ச வாய்க்கு முத்து மனுஷியின் குடும்பத்தைத்தான் கருவாடாகப் பயன்படுத்துவார். ஏழை-பாளைகள் அநுசரித்து வாழ்ந்த ஒரு விநோத சமதர்ம உலகம் கோயில் வளவு. பூரணம் அக்காவை 'செத்த ராமன் பெண்டில்' எண்டாத்தான் ஊரிலை விளப்பமாத் தெரியும். ராமன் ஒரு கிழங்கன்; மொக்கன். படு எவிச்சோல், வீடாறு மாதம் காடாறு மாதம் என்று கூடுவிட்டுக் கூடு பாய்வானாம். ஒரு தடவை ராமன் வீட்டை விட்டு ஓடிப் போய் ஒரு வாரம் கழிஞ்ச பிறகு, 'ராமன் செத்துப் போனான்' என்று இவர்களுக்கு ஒரு தந்தி வந்ததாம். இவையளும் குய்யோ முறையோ எண்டு 'இழவு' கொண்டாடி முடிச்சினம். ஆனால், ஆறு மாதங் களுக்குப் பிறகு சுக பலத்துடன் அவன் திரும்பி வந்து, இவவைப் பிள்ளைத்தாச்சி ஆக்கிவிட்டுமறைந்தவனாம்! 'செத்த' ராமனின் திருகுதாளங்கள் இப்படிப்பல... கோயில் குளம் என்று போனாத்தான் பூரணம் அக்கா ரவுக்கை போடுவா. இல்லாட்டில் குறுக்குக் கட்டுத் தான். வடிவான குறுக்குக் கட்டு. (பிற்காலத்தில், எஸ். பொ. வாகப் பெண் பாத்திரங்கள் படைக்கும் எத்தனத்தில் ஈடுபட்ட பொழுது, ஏனோ தெரியாது இந்தப் பூரணத்தின் உருவமும் ஆதர்சமாக எழுந்த துண்டு. ஓவெண்ட சிவப்பி எண்டாத்தான் வடிவே? அவிச்ச இறாலிலும் வடிவுஇருக்கே? கறுப்பு எண்டாலும் அந்தக் காலத்துக் கனவுக் கன்னிகளான டி. ஆர். ராஜகுமாரி, அஞ்சலிதேவி ஆகியோரிலும் பார்க்க

www.padippakam.com



வடிவாகவும் எடுப்பாகவும் இவ தோன்றினா என்கிற நினைவு என் மனத்தின் எங்கோ ஒரு மூலையிலே இன்றளவும் ஒட்டிக் கிடக்கின்றது. அந்தக் குறுக்குக் கட்டுக்குள் பாச்சிகளுக்குப் பதிலாக, உயிருள்ள கொழுத்த முயற்குட்டிகள் இரண்டினைக்கட்டித்திரிந்தது போல ஒரு கற்பனை மயல். அந்த உருவத்தை இலக்கியமாக்கும் தாகத்தின் பங்கமே இந்த diversion!)

'நான் உங்காலை நேசமணித் தங்கச்சி வீட்டை மாவிடிக்கப் போறனெணை...' என்று ராகம் இழுத்த பூரணத்தை மடக்கிப் பிடித்து, நாலு பணத்துக்கு பிட்டுச் சந்தி மதவடியிலை மீன் வாங்கித் தரும்படி அனுப்பி விட்டு, அவ வரும் வழியைப் பார்த்து, அம்மா சங்கடப் படலையிலே தவம் கிடக்கிறா.

என் பிடிப்பு எத்தனத்திலே, சிறகு ஒன்றை ஊனப் படுத்திக் கொண்ட வண்ணாத்திப் பூச்சி ஒன்று எனக்குப் 'பேப்பே...' காட்டிப் பறக்கிறது.

அந்தத் தோல்வியின் சோகத்திலிருந்து என்னைத் திசை திருப்புவதுபோல, 'உந்த அநியாயம் புடிச்ச அறுவான்களிட்டை ஒண்டும் வாங்கேலாதெணை... அதுதானே எங்கடை ஆம்புளையள் கறி உமலும் தூக்கிக் கொண்டு மீன்கடைக்கு ஓடிப்போறவை...' என்று பூரணமக்கா புறுபுறுத்தபடி, வாழைத் தடலிலே சுற்றியெடுத்த மீன்களுடன் வந்து சேர்ந்தா.

'ஓமெணை. இவரும் சொல்லுறவர்...மணி யோடரிலை சீவிக்கிற மனுஷியளுக்குத்தான் உவங்கள் கறிவிக்க வாறவங்களெண்டு...'

'நாலைஞ்சு விளைப்பொடியளையும் அஞ்சாறு நகர மீன் குஞ்சுகளையும் ஒரு கூறிலை வைச்சிட்டு, எட்டுப்

www.padippakam.com



பணமெண்டல்லே கடிய விலை சொல்லுறான். உந்த நாவான்துறையானுக்குச் சரியான கெப்பர். எனக்கு வந்த விசரிலை, 'என்னையும் சேணியச்சனம் எண்டு நினைச்சு விலை சொல்லுறியோ' எண்டு துடைப் பெருப்பத்திலை நாலு கேள்வி கேட்டுப்போட்டுத்தான் வாறன்...' என்று கூறிய அவ, குரலைக் கீழ்ச் சுருதிக்கு இறக்கி, '...இப்பமீன் கொஞ்சம் அருந்தல்தானெணை... உது புழையில்லை... காசு குடுக்கலாம்...' என்று முத்தாய்ப்பு வைத்தா.

'கோப்பித் தண்ணி ஊத்தித் தரவோ?' என்கிற அம்மாவின் கேள்விக்கு வேண்டாமென்று கூறி, வெற்றிலைத் தட்டைப் பெற்றுக் கொண்டா. பேசிக் கொண்டே தாம்பூலந்தரித்தல் யாழ்ப்பாணப் பெண்கள் வளர்த்துள்ள அரிய கலையாகும். இறுதியிலே ஒரு பிளவு நுங்குப் பாக்கும், ஒரு துண்டு நாறப்பாக்கும் போட்டு அந்தச் சம்பிரதாயத்தைப் பூரணப் படுத்தினா. அப்ப பூரணமக்காவின் வாய் என்ன சோக் காச் சிவந்தது தெரியுமே?

**நாங்கள்** அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப் பாணத்துக்குள் நுழைந்து விட்டோம் என்பது சேதநை யில் இருத்துதல் தக்கது. ஒரே ஃபோர்முலாவில் சரக்குத் தூள் இடித்து வைத்து (பெரும்பாலும் பக்கற்றுகளிலே வாங்கி வைத்து), மரக்கறி- மீன்- இறைச்சி என்று எல்லாக் குழம்புக் கறிகளுக்கும் அதையே தூவி, வெக்கையிலே அவித்து இறக்கி வித்தை பண்ணும் உடல் நோகாச் சமையற் கலை வளராத காலம் அது! அந்தக் காலத்தில், கறியைப் பார்த்துத்தான், உரலில் தூள் இடிப்பதா, அல்லது அம்மியில் கூட்டு அரைப்பதா என்கிற அடிப்படை முடிவே எடுக்கப்படும். தூள் இடிப்பது என்றாலும் இறைச்சிக்கு, கணவாய்க்கு, நண்டுக்கு, கலவாய் மீனுக்கு, இறால் வெந்தயக்

www.padippakam.com



குழம்புக்கு என்று ஒவ்வொன்றுக்கும் பல சரக்குகளின் வகைகளும், கலவை விகிதாசாரமும் வேறுபடும். கூட்டு அரைப்பதாக இருந்தாலும், பழப்புளி-மாங்காய்-கொறுக்காய்-தேசிக்காய் விளிம்பிலி எனக் கறிக்குச் சேர்க்கப்படும் புளிப்பு வகைக்கு ஏற்பவும் சரக்குகளின் விகிதாசாரம் வேறுபடும். சரக்குகள் அனைத்தும் ஐஞ்சறைப் பெட்டியாகப் பயன்படும் அடுக்குப் பெட்டிகளிலே அடுக்கப் பட்டிருக்கும். (இந்த நுட்பங்களை நான் வெகு காலங் கழித்தே அறிந்து கொண்டேன். 'பாயிலே ஒட்டாத' குறையாக, குஷினிப் பக்கம் தலை வைத்தும் படுக்காத, மட்டக்களப்பு 'டீச்சர்' பொம்புளை ஒன்றைக் கொழுவிக்கொண்டு, அவளுக்கு யாழ்ப்பாண வாகடத்துச் சமையல் பாகங்களைப் பழக்கி எடுப்பதற்காக, விடுமுறை தோறும் யாழ்ப்பாண திக்விஜயங்களை மேற்கொண்ட காலத்திலே பெற்றுக் கொண்ட ஞானப் பிரகாசந் தொற்றியன இவை!)

இன்னொரு நுரைப் பூவும், என் நுழைவும்...

வண்ணாத்திப் பூச்சி ஒன்றைக் கொலை செய்து, உயிருடன் ஒன்றைப் பிடிக்க முடியவில்லையே என்கிற ஆதங்கத்துடன் என் பணி தொடர...'உந்த வெய்யில் எல்லாம் குடிச்சு வேர்த்துக் கொட்டுது...பேந்து நீர் கோர்த்தால் எக்கணம் ஆர் உத்தரிக்கிற?...இஞ்சை வா மோனை...' என்று அம்மா அழைத்து, என் முகத்தில் பொக்களமிட்டிருந்த வேர்வைக் காட்டைத் துடைத்து விடுறா. 'இந்தப் பொடிமீனை மாங்காய் போட்டு அரைச்ச குழம்பு வைச்சாத்தான் ருசியாய் இருக்கும்... இல்லாட்டில் உன்ரை கொப்பரின்ரை மூஞ்சை கொக்கு வில் பறக்க நீண்டு போயிடும்' என்று அவ புறுபுறுக் கிறதும் கேட்கிறது. அம்மா பாவம். கோவிக்க மாட்டா. என்னை நெடுகக் கொஞ்சுவா. எது கேட்டாலும்

www.padippakam.com



தருவா. குழப்படி செய்தாலும் அடிக்க மாட்டா. சோக்கான அம்மா.

'அப்பு, நான் இதிலை பாத்துக் கொண்டு நிக்கிறன்...நீ செட்டியார் கடைவரைக்கும் போயிட்டு வருவியே...'

'ஓ எனக்குத் தெரியுமே...அண்டைக்குப் போய் இஞ்சிக் கிழங்கு வாங்கியந்தனானல்லே...பேந்து... பேந்து ஒரு நாள்...'

'ஓம்...என்ரை அப்பு கெட்டிக்காரன்...இந்தா ஒரு சேம்...பக்குவமாய் கைக்குள்ளை பொத்திப் பிடிச்சுக் கொள். உதைச் செட்டியாரிட்டைக் குடுத்து, கால் சேத்துக் கொச்சிக்காய், கால் சேத்துக்குக் கொத்த மல்லி... கால்சேத்துக்கு அரைச்ச கூட்டுச் சரக்கு...கால் சேத்துக்கு உனக்குப் பல்லி முட்டாசு...எங்கை சொல்லு பார்ப்பம்...'

சேணியச் செட்டியாரின் கடை ஒரு ஒழுங்கையும், நாலு படலைகளையும் தாண்டி அங்காலை இருந்தது. வீட்டின் ஒரு விலாவை வேலி ஓரமாகப் பத்தி இறக்கி, கடையாக மாற்றியிருந்தார். ஓலைத் தட்டிதான் கதவு. தட்டியை இரண்டு கம்புகளிலே தூக்கி வைச்சால் கடை திறந்தாச்சு. இங்கிருந்து பார்க்கக் கடை திறந்திருப்பது தெரிகிறது. செட்டியார் ஒல்லியான, உயரமான கிழவர். நெசவுத் தறியிலே குந்திக் களைத்து, ஏலச் சீட்டுகள் பிடிப்பதிலே ஈடுபட்டவர். 'சும்மா இருப்பதே சுகம்' என்பதை அறியாது, இந்தக் கடையையும் நடத்துகிறார். தலையின் முன்பக்கம் வழித்து, 'போட்டிகோ' வைத்து, பின்பக்கம் அள்ளிச் சொருகிய சிறிய குடுமி. நெற்றியை இரண்டாக வகிர்ந்தது போல, மெல்லிய ஒற்றைச் சிவப்பு நாமம் 'போட்டிக்கோ' வையும் ஊடறுத்து உச்சிவரை நீளும்.

www.padippakam.com



'அக்கட' 'ஒச்தாரு' 'லேது' 'செப்புண்டீ', 'பூவாக்கு' என்று பல தெலுங்குச் சொற்களையும் கலந்த 'மணிபிரவாள'த் தமிழ். அவர் ஒரு மர்ம மனிதரும். இந்த மனைவி அவருக்கு இரண்டாந் தாரமாம். அவ வந்து வியாபாரம் செய்வது செட்டியாருக்குப் பிடிக்காதாம். செட்டியாருக்குப் பயப்படாமல் அவ நடப்பாவாம். இன்னும் என்னென்னவோ கதைகள். அப்பொழுது புரியாததும் இப்பொழுது புரிகிறதுமான கதைகள். நான் போனபொழுதுசெட்டியார் தான் இருந்தார். அவரிடம்ஒரு சதத்தைக் கொடுத்துப் பாடத்தை ஒப்புவிக்கத் துவங்கினேன். 'பல்லி முட்டாசு...கொச்சிக்காய்...மல்லி... கொத்தமல்லி...வந்து... வந்து... வந்து...' என்று நாலாவது பொருளை நினைவு படுத்தும் பணியிலே என் மூளையைக் கசக்கச் செட்டியார் இடந்தரவில்லை.

'அரைச்ச கூட்டுக்கு...பூரணம் வாங்கிவந்த மீன்லேது...?''

இசைவுக்கு நான் தலையாட்டுவதற்கிடையில், செட்டியார் மிளகாய்-மல்லி - மிளகு-நற்சீரகம்...என்று எல்லாவற்றையும் பக்குவமாக கடதாசியிலே மடித்துத் தந்தார். மற்றைக் கையிலே கனக்கப் பல்லி முட்டாசு. இரண்டு முட்டாசை வாயிலே போட்டுச் சூப்பியபடியே, வீடு வந்து சேர்ந்தேன். அம்மாவுக்கு என் சாதனையை நினைத்து இருப்புக் கொள்ளாத புளுகம்!

**இன்றைய** தலைமுறையினருக்கு, இந்த ஒரு சத மான்மியத்தை வாசிக்கும் பொழுது, நான் சிற்றெறும்பு முட்டை எடுத்து ஆகாசத்து ஓட்டை அடைக்கும் அண்டப் புளுகனோ என்கிற எண்ணம் எழுந்தாலும் புதினம் இல்லை. இன்றைய இலங்கையில் ஒரு ரூபாய் நாணயங் கூடகலவான் ஓடாக மதிப்பிழந்து கிடக்கும் அவலத்தைக் கண்கூடாகப் பார்ப்பவர்களுக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு

www.padippakam.com



முற்பட்ட நாணயப் புழக்கம் பற்றிய செய்தி புதினமே; எந்த வித ஐமிச்சமும் இல்லை.

அந்தக் காலத்தில், புழக்கத்திலிருந்த நாணயங்களின் அடக்க மதிப்பே செலாவணி மதிப்பாகவும் இருந்தது. அதாவது, முத்திரை கலைய உருக்கப் பட்டாலும் அதன் மதிப்பு மாறாது. விக்டோரியா ராணி ஏழாவது எட்வேர்ட், அல்லது ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் தலை பொறிக்கப்பட்ட ஒரு சதநாணயம், இன்றைய ஒரு ரூபாய் நாணயத்திலும் எடை கூடியது. வீச்சாக எறிந்தால் மண்டையில் ரத்தக் காயம் ஏற்படும். ஒரு சதம், அரைச் சதம், காற்சதம் ஆகிய மூன்றும் வட்டவடிவான செப்பு நாணயங்கள், ஐந்து சத நாணயம் சதுர வடிவில், ஆனால் முனைகள் மழுங்கியவையாக இருக்கும். பிற்கால ஐந்துசதநாணயத்தின் அதே வடிவு. ஆனால் முந்தியவை அசல் நிக்கல் நாணயங்கள்.

பத்துச் சதம், இருபத்தைந்து சதம், ஐம்பது சதம், ஒரு ரூபாய் ஆகிய நான்கும்அசல் வெள்ளிநாணயங்கள். கொடுவா மீன் செதிள் கணியம் பத்துச் சதம். எடைக்கு எடை வெள்ளி மதிப்பு. அக்காலத்தில், பத்துச் சதச் சில்லறைகூட மதிப்பிலே பெரிய காசு. சனிக்கிழமை தோறும் செழிக்க நல்லெண்ணெய் வைத்து ஊறி, சீயக்காய்-அரப்புப் பிரட்டி, நூறுபட்டை தண்ணீர் வார்த்து,கண்கள் கொவ்வைப் பழமாகச் சிவக்க முழுகிய பின்னர், சாப்பாட்டுக்கு முன்னர், அயலிலே சாராயம் விற்கும் சின்னாச்சி மனுஷி வீட்டுக்கு அப்பையா அசுப்பிடாமல் போவதுண்டு.'சுதி' சரிவர ஏறாவிட்டால் கடைசியாக ஒரு பத்துச் சதத்திற்கு சாராயம் வாங்கி குடித்து 'சுபம்' பாடுவார், சாராயம் வாங்கும் அளவுக்கு அந்தப் பத்துச் சதத்திற்கு மதிப்பு!

www.padippakam.com



அடுத்தடுத்த ஆண்டுகளிலே, ஆங்கிலக் கல்வி நாடி சம்பத்திரிசியார் கல்லூரியிலே சேர்க்கப்பட்டேன். அப்பொழுதுதான், நான் முதன் முதலாக 'ஹோட்டல்' என்றழைக்கப்படும் சாப்பாட்டுக் கடைக்குப் போனதாக நினைவு. கண்டி வீதியில், புனித யோசப்பர் கத்தோலிக்க அச்சகத்திற்கு முன்னால். சுவர்களாகவும் கூரையாகவும் தகரங்களைப் போர்த்திக் கொண்ட கடை. தூரத்திலிருந்து வரும் 'டே ஸ்கொலேர்ஸ்' பலர் அங்குதான் மதிய உணவுக்குச் செல்வார்கள். முதலாளி-கோக்கி- பரிசாரகன் எல்லாமே மோஸஸ் அண்ணர்தான். அவருடைய ஹிட்லர் மீசையும், சுவாமியார் சுவாம்பிள்ளைத் தலையும் கியாதி பெற்றவை. அவர் கடையில், ஒரு தளிசை (கோவில் பிரசாதமாகக் கிடைக்கும் புக்கை போன்ற அமைப்பிலே உள்ள அளவுச் சோறு). ஒரு துண்டு மீன், குழம்பு, ஒரு மரக்கறி, பச்சைத் தண்ணிப் 'பால் சொதி'—இவ்வளவும் மூன்று சதம். இரண்டு தளிசை சாப்பிட்டால் வயிறு நிரம்பிவிடும். அந்தக் கால யாழ்ப்பாணத்துப் பெரிய கடையில் சாப்பாட்டுக் கடைகள் மிகவும் குறைவு. புகழ் விலாசம் பெற்று விளங்கியது சிவசம்பு சாப்பாட்டுக் கடைதான். ஒரு முழு மீன் சாப்பாடு பத்துச் சதம். கடையிலே சாப்பிடுபவர்களுக்கு கோடாப் போட்ட திறம் வை.சி.கு. சுருட்டும் இனாமாக வழங்கப்பட்டது. பொரிச்ச மீன். மிளகாய், அப்பளம் ஆகிய சகல கொசுறுகளும் விலையில் அடங்கும். பார்ஸலாக எடுத்து வந்தால் இரண்டு முழு இளந்தாரிகள் சாப்பிட்டும் சோறு மிஞ்சும் என்று சொல்வார்கள். அந்த எடுப்புச் சாப்பாட்டில், குழையலாக ஒரு திரணை சாப்பிட்டது நல்ல நினைவு. ஆனால், எதற்காக அந்த 'பார்ஸல்' எடுத்து வரப்பட்டது என்பது மட்டும் நினைவின் பிடிக்குள் மாட்டுப்படமாட்டேன் என்கிறது.

www.padippakam.com



இலங்கையில் சதக் கணக்கு வெள்ளைக்காரன் காலத்திலேயே இருந்தது. ஆனால் இந்தியாவில், சுதந்திரத்திற்குப் பிறகு, ஜவஹர்லால் நேருவின் முயற்சியினாலேதான் நூறு பைசா சமன் ஒரு ரூபாய் என்கிற புதிய பழக்கம் புகுத்தப்பட்டது. பழைய வழக்கு பதினாறு அணா சமன் ஒரு ரூபாய். அந்தக் காலத்தில், யாழ்ப்பாண நாணயப் புழக்கத்திலே இந்தியச் செல் வாக்கும் ஊடுருவி நின்றது. அணா பணமென மருவி வழங்கிற்று. சந்தையில் பேரம் பேசும் பொழுது, 'கடைசி விலை... நாலு பணமெண்டால் தா...' என்று முடிப்பார்கள். நாலு பணம் சமன் இருபத்தைந்து சதம் சமன் கால் ரூபாய், நாலு பணம், எட்டுப் பணம் என்கிற வழக்குச் சர்வ சாதாரணம். 'துட்டு' என்கிற வழக்கும் இருந்தது. 'வட்டுக்கோட்டைக்குப் போற வழி எது என்றுகேட்டால், துட்டுக்கு ரெண்டுகொட்டைப் பாக்கு என்றானாம்' என்பது பழமொழி போலும். நாலு துட்டு ஒரு பணம். எனவே, துட்டு சமன் ஒன்றரைச் சதம். சுதந்திரத்திற்குப் பின்னரும், நடுவிலே சின்னி விரலை நுழைக்கக் கூடிய நட்ட நடுவில் வட்ட வடிவ ஓட்டை உள்ள துட்டு நாணயங்கள் இந்தியாவில் புழக் கத்தில் இருந்தன. இந்தியாக்காரர் வலு விண்ணரல்லே? 'நட்டு'களை இறுக்கமாக பூட்டுவதற்கு 'வோஷர்கள்' வாங்குவதற்குப் பதிலாக இந்தத் துட்டு நாயணங்களை மலிவாகவும் வசதியாகவும் பயன்படுத்தினார்கள். அதிலிருந்து இந்தத் துட்டு நாணயங்களுக்குக் கோவிந்தா! 'பணம்' என்கிற முறையிலே கணக்குப் பண்ணுவதில் நட்டம் வருவதை உணர்ந்த யாழ்ப்பாண மக்கள் அதனைக் காலப்போக்கிலே கைகழுவியிருத்த லும் சாத்தியம். மூன்று பணம் என்றால் பதினெட்டுச் சதமா அல்லது பத்தொன்பது சதமா என்ற பெரிய வாக்குவாதம் ஒன்று நடந்ததை நான் அறிவேன்.

ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் ஆகிய பெறுமானங்களிலேதான் காசுகள் புழக்கத்

www.padippakam.com



திலிருந்தன. ஐம்பது ரூபாய், நூறு ரூபாய்களுக்கான 'பெரிய' தாள்கள் பெரும் பணக்காரர் மத்தியில் மட்டுமே வலம் வந்தன. பத்து ரூபாவை ஒரு பவுண் என்றுதான் சொல்வார்கள். 'முகத்தார் ஒரு பத்துப் பவுண் கை மாத்தாக வாங்கலாம் என்று வந்தனான்... தாங்கத் தரிக்கேலாப் பொறுப்பு... மூண்டு மாசத்திலை சீட்டுக் காசெடுத்துத் தந்திடுவன்' என்று வேலாண்டி மாமா இரண்டு மூன்று முறை நடையாய் நடந்ததைப் பொறுக்க முடியாமல், அம்மா 'பழஞ்சீலை கிழித்த'தை யும் பொருட்படுத்தாது, 'நகை நட்டை' அடைவு வைத்து, அப்பையா முல்லங்கிப்பத்தை போல பத்து ரூபாய் நோட்டுகள் பத்தினை எண்ணிக் கொடுத்தது இன்றும் நினைவில் இருக்கின்றது.

முதலாவது உலக மகா யுத்தம் இலங்கையின் பணப் பெறுமானத்திலே பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியதாக வீமன்காமத்திலே குரக்கன் கமமும், புகையிலைத் தோட்டமும் செய்து பிழைத்த வெண்தாடிக் கிழவரான என் தாத்தா கதை கதையாகப் புலம்புவார். அவற்றை நான் அவ்வளவாகக் கிரகித்துக் கொள்ளவில்லை. ஆனால், இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது நடந்த மாற்றங்களுக்கு நான் ஒரு சாட்சி, இதற்கு முன்னர், பிறிதொரு குறிப்பினையும் இங்கு தருதல் பொருந்தும். யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும், மட்டக்களப்பின் பெரும்பாலான பகுதிகளிலும், ஆங்கில நாணய முறைகளின் செல்வாக்கும் நிலை கொண்டிருந் தது. சம்பத்திரிசியார் கல்லூரியில் மத்தாய் சேரிடம் கணக்குப் பாடம் கற்றதை மறப்பேனா? பன்னிரண்டு பென்ஸ் சமன் ஒரு சிலிங்; இருபது சிலிங் சமன் ஒரு பவுண் என்று, இங்கிலாந்தில் அச்சிடப்பட்ட ஹோல் அண்டு ஸ்டீவன் கணக்குப் புத்தகத்திலே காணப்படும் கணக்குகளைச் செய்து முடிப்போம். ஆங்கில நாணயப் புழக்கத்திற்கும், நமது நாணயப் புழக்கத்திற்கும்

www.padippakam.com



இடையிலே நம் முன்னோர்கள் யதார்த்தமான இணக்கங்களை ஏற்படுத்திப் பயின்றார்கள். இந்த இணக்கத்தில் சதத்தின் செல்வாக்குப் புகுந்து விளையாடியது. நம்மவர் வழக்கு வருமாறு: ஐந்து சதம் சமன் ஒரு காசு (பென்ஸ்); பத்துக் காசு சமன் ஒரு சிலின்; இருபது சிலின் சமம் ஒரு பவுண். என்னுடைய இவவின்ரை அம்மையான தங்கப்பாக்கிய ஆச்சி 1983 ஆம் ஆண்டிற் காலமானார். அவர் கடைசி வரையிலும் அரிசிக்கார புகாரி உம்மாவுடனும் மீன்காரச் செம்பருடனும் காசு-சிலின் என்கிற சில்லறைகளிலேயே பேரம் பேசி வாழ்ந்தார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் பணப் புழுக்கத்திலே பாரிய மாற்றங்களைப் புகுத்தியது. சப்பான்காரன் மின்னல் வேகத்தில் சிங்கப்பூரையும் மலேயாவையும் பிடித்து பர்மாவுக்குள் நுழைந்தது மட்டுமல்லாமல், கொழும்பிலும் திருக்கோணமலையிலும் குண்டுகளையும் வீசிப்போட்டான்! சப்பானை எதிர்க்கும் பிரிட்டிஷ் எத்தனங்கள் இலங்கையையுந் தளமாகக் கொண்டு முடுக்கி விடப்பட்டன நாணயங்களின் அடக்க மதிப்பு அவற்றின் வாங்கும் சக்தியிலும் பார்க்கப் பல மடங்கு அதிகரித்தது. சில்லறைகள் மாயமாக மறைந்தன. ஆனாலும் ஆங்கில அரசு உடன் நடவடிக்கை எடுத்தது. பத்துச் சதம், இருபத்தைந்து சதம், ஐம்பது சதம் ஆகிய பெறுமானங்களில் முதன் முதலாகத்தான் 'காசுகளை' அச்சடித்து விநியோகித்தது. இந்தப் புதுப்புது நோட்டுகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. எல்லா நோட்டுகளிலும் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் முறுவலுடன் காட்சி அளித்தார். பின்னர், ஐந்து சத நோட்டுகளும் பாவனைக்கு வந்தன. இது புதினமான 'நோட்'! ஒரே தாளில் இடப் பக்கம் இரண்டு சத முத்திரை போலவும், வலப் பக்கம் மூன்று சத முத்திரை போலவும் நீல நிறத்தில் அச்சிடப்பட்டிருந்தன. தேவை கருதி

படிப்பகம்

www.padippakam.com



அந்தத்தாளை இரண்டு முத்திரைகளாக் கிழித்து, இரண்டு சதமாகவும் மூன்று சதமாகவும் பயன் படுத்திக் கொள்ளலாம். மூன்றுசயஇரண்டு சமன் ஒன்று என்கிற வாய்பாட்டில் ஒரு சதக் கணக்கும் சரி செய்யப் பட்டது. சில்லறைகளை சிம்பைகளிலே வைத்துச் செலவு செய்த கிழவிகளுக்கு இந்தப் புதிய நோட்டுகள் மிகுந்த தொல்லைகள் தந்தன. இந்தத் தொல்லைகளுக் கெல்லாம் சப்பான்காரன் செய்கிற அநியாயந்தான் காரணம் என்று புறுபுறுத்து, சீமையிலிருக்கும் எங்கள் ஆறாம் ஜோர்ஜ் ராசாவுக்கு வெகு விசுவாசமாக நடந்து கொண்டார்கள். இந்த யுத்தத்தின் காரணமாக 'கூப்பன்' காலம் பிறந்தது. உணவுப் பொருள் விநியோ கத்தில் புகுத்தப்பட்ட ரேஷன் முறையை நாங்கள் 'கூப்பன்' என அழைத்தோம், சாமான்களின் விலை விஷம் போல ஏறுவதாகப் பலரும் அங்கலாய்த்துக் கொண்டார்கள் தட்டுப்பாட்டுப்படி (dearnessallowance) என்கிறவிசேட வாழ்க்கைப்படி அரசாங்கஊழியர்களுக்கு வழங்கும் முறை புகுத்தப்பட்டது. இஃது ஓர் இடைக்கால ஏற்பாடு என விளங்கிக் கொள்ளப்பட்டாலும், இது தொடர்கதையாக நீண்டது! இந்தக் கிளைச் சங்கதிகள் ஒரு புறமிருக்க, விண்ணனான அமேரிக்கன் சப்பான் மீது இரண்டு அணுக்குண்டுகளை வீசியதினால், சப்பான் காரன் திடுதிப்பென்று சரணாகதி யடைந்தான். சிறிது காலத்திலேயே சில்லறைகளுக்குப் பதிலாக வழங்கப் பட்ட நோட்டுகள் வாபஸாகி, மலிவான உலோகக் கலவைகளினாற் செய்யப்பட்ட நாணயங்கள் புழக்கத் திற்கு வந்தன. அப்பொழுதுதான் வட்ட நெளி நாணயப் புதிய வடிவங்களில் இரண்டு சதம், பத்துசதம் ஆகிய பெறுமானங்களில் நாணயங்கள் வெளிவந்தன. அரைச்சதம், கால் சதம் ஆகிய காசுகள் மிகவும் அரிதாக அக்காலக் கொட்டைப் பெட்டிகளும், மடிசஞ்சு களும் 'திட்டாமற்' கிடப்பதற்கும் பயன்படலாயின. அவற்றுக்கு வாங்கும் சக்தி இல்லாமற் போயிற்று!

www.padippakam.com



இப்பொழுது அசை போடும் பொழுது, இன்றைக்கு இரண்டு ரூபாய்க்கு வாங்கக் கூடிய சாமான்களை அன்றைக்கு ஒரு சதத்திற்குச் சேணியச் செட்டியார் கடையில் வாங்கியிருக்கலாம் என்று தோன்றுகின்றது. ஏன் இந்தச் சீத்துவக்கேடு?

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்று இலங்கையிலிருந்துவெள்ளையன்ஆட்சிவெளியேறியதற்கும் தனிச் சிங்கள விஷர் உச்சந்தலைவரை ஏறுவதற்கும் இடைப் பட்ட காலத்தில் வாழ்க்கைச் செலவில் பாரிய மாற்றம் ஏற்பட்டதாக எனக்கு ஞாபகமில்லை. ஐம்பதுகளின் ஆரம்பத்தில், பல்கலைக்கழக மாணவனாக சென்னைக் கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையில் ஐம்பத்தைந்து ரூபாய்க்கு 'ரிற்றேன் டிக்கற்' வாங்கி விமானப் பயணஞ் செய்தேன். என் மனுஷிக்கு ஏழு ரூபாய்க்கு ஒறிசினல் சப்பான் ஜோர்ஜட் ஸாரி வாங்கியிருக் கின்றேன். நாற்பத்தைந்து சதத்திற்குக் கோழி இறைச்சி டின்னும், அறுபத்தைந்து சதத்திற்கு ஆட்டி றைச்சி டின்னும் வாங்கி அம்பாளித்திருக்கிறேன். அவ் வளவு ஏன்? இரசிகமணி கனக செந்திநாதன், இ. நாக ராஜன், சு. வே, குறமகள், நான் ஆகிய ஐவரும் கூட்டாக எழுதிய 'மத்தாப்பு' என்னும் நாவலிலே நான் எழுதிய கடைசி அத்தியாயத்திற்கு வீரகேசரி லோகநாதன் வழங்கிய சன்மானத் தொகையில் என்னுடைய பெண்டாட்டியை 'பெரிய' தோடுடைய செவியளாக்கி மகிழ்ந்தேன். கடந்த முப்பது ஆண்டுகளாக அவள் அத்தோடுகளில் மின்னுவதுடன், அவற்றை மத்தாப்புத் தோடு என்றே செல்லமாகக் குறிப்பிடுவாள். அடிப் படைச் சம்பளமாக ரூ225 -பெற்ற பட்டதாரி ஆசிரியர் கள் சொந்தத்தில் கார் வாங்கி ஓட்டக்கூடிய வசதி படைத்தவர்களாகவும் வாழ்ந்தார்கள். வாழ்க்கைச் செலவு பற்றி நீங்கள் மதிப்பீடு செய்வதற்கான சாம் பிள்கள் சில மட்டுமே தந்தேன். ஒரு காலத்தில் இந்திய

www.padippakam.com



ரூபாயிலும் பார்க்க இலங்கை ரூபாய் மதிப்பு உயர்ந்ததாகச் சர்வதேச நாணயச் சந்தையிலே மதிக்கப்பட்டமை நமக்குக் கௌரவம் சேர்த்தது. கொரிய யுத்தத்திலே இலங்கை ரப்பருக்கு ஏற்பட்ட மதிப்புத் தொற்றித்தான் இந்தக் கௌரவம் முளைத்தது.

பிறகு...தேசிய நலனும் அரசியல் யாப்பும் அரசியல் வாதிகள் உதைக்கும் காற்பந்துகளாக மாற்றப்பட்ட பின், நாணயத்தின் மதிப்பைப் பற்றித் தலையை மோதிக் கொள்ளுதல் பேத்தனமல்லே? எண்பதுகளின் ஆரம்பத்தில் ஒரு நன்மை ஏற்பட்டது. இருபது ரூபாய்க்கு மட்டுமல்லாது, ஐநூறு ரூபாய்க்கும் ஆயிரம் ரூபாய்க்கும் ஓணான் பல்லிப் படங்களுடன் புதிய நோட்டுகள் வந்தன. பண வீக்கம் ஏற்பட்டாலும், பணத்தைக் காவித் திரிவதிலுள்ள சுமைச் சிரமம் இவ்வாறு தவிர்க்கப்பட்டது, என்பதை யாரால் மறுக்க முடியும்? இந்தச் சேவைக்காக என்றாலும் ஜே. ஆரின் பெயரை நமது வரலாற்றில் பொன்னெழுத்துக்களிலே பொறிக்க வேண்டாமா?

இனி, அவுஸ்ரேலியாவில் ஒன்று சக இரண்டு சதத்திற்கு மதிப்பில்லாது போகும். மதிப்பிழக்கும் மூன்று சதத்திற்கு இலங்கையில் ஒரு ரூபாய் மதிப்பு! நான் பொருளியல் நிபுணனல்லன். கற்பனையிலே ஒரு வகைச் சூதிகாணும் கிறுக்கன்...கலவான் ஓடாக மதிப்பிழக்கும் சில்லறைகள் பற்றி ஏன் வீண் அங்கலாய்ப்பு? பூஜ்யத்துக்கு மதிப்பில்லைத்தானே ? ஒரு பூஜ்யத்தை ஜோனி பட்டாஸால் அழித்துவிட்டால் என்ன ? புரியவில்லை? பத்துச் சதம் சமன் புதிய ஒரு சதம்; எனவே, பத்து ரூபாய் சமன் புதிய ஒரு ரூபாய் என்கிற நாணய முறையைப் புகுத்தினால்...(யென் நாணயத்திற்குப் பின்னால் ஒட்டியுள்ள இரண்டு பூஜ்யங்களையாவது

www.padippakam.com



மதிப்பிழக்கச் செய்யலாமா என்று சப்பான்காரன் யோசிக்கிறானாம்.)...ரூபாயின் மதிப்பு அப்பொழுது தான் கொஞ்சம் கலாதியாகத் தோன்றும்...

பழைய காலத்திலே 'நனவிடை தோய்தல்' செய்ய அழைப்பதாகக் கூறி, இப்படிப் பாரிய பொருளாதாரச் சிக்கல்களுக்குள் உங்களை மாட்டி வைக்கக் கூடாது தான். மன்னிப்பை வேண்டுகிறேன். நொடி போடுவதும் அவிழ்ப்பதும் அந்தக் காலத்தில் மிக முக்கியமான பொழுது போக்கு, 'வட்ட வட்டக் குருவி; வாலில்லாத குருவி ! அது என்ன ?' என்ற நொடியைச் சொல்லி வெண்தாடிக் கிழவர் எங்களைத் திகைப்பில் ஆழ்த்தியதுண்டு. காசு பற்றி யாழ்ப்பாணத்தில் புழக்கத்திலிருந்த நொடி இது. சில்லறைக் காசுகள் பற்றிய நினைவிலே தோய்ந்து, 'ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட சில்லறைகளும் நாணயங்களும் வாழ்க !' என்று தொண்டை கிழியக் கத்தும் உரிமை என் வசத்து என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். மாரித் தவளைகளுக்கும் தமிழர்களுக்கும் உள்ள ஒற்றுமையும் வாழ்க !



படிப்பகம்

www.padippakam.com

கூலிக்கு மாரடியர்
கூட்டப்பிரான் சிங்களவர்
போர்விலைகளைப் பெட்டியர்
பொதிச் சீனர்
நூலெடுத்து
செம்மையிசை பாடுநரும்
ஈயமுலாம் பூசகரும்
எம்மண் மிதிப்பரோ
இன்று!

# 3. பஞ்சீலம்

காலநதி ஓடுகிறதா? ஓடுவது என்ன? நீரா? காலமா? கரை தட்டுவன என்ன? நுரைகளா? பூக்களா? நுரைகளானாலென்ன? பூக்களானாலென்ன? அற்ப ஆயுசுகள்!

www.padippakam.com



மெய்யாத்தான். என்ரை சின்னமாமா அற்பாயுசு, சேட்டமாக வளர்ந்த தென்னங்கன்று, கன்னிப் பாளை தள்ளிப் பூரிக்கிற சமையத்திலை வெட்டிச் சாய்ச்சது போல, அது கடிய சாவு!

பிராமணனையும் வெண்ட சிவலை. 'சிலுப்பா' வெட்டு முடி, இலேசாகச்சுருண்டு பிறடியைக் கொஞ்சும். குஸ்திப் பயிற்சிகளும் கம்பு விளையாட்டுகளும் செய்து ஊழைச்சதை வடித்தெறிந்த உடம்பு. 'புளியம் வைரத் திலை கடைந்தெடுத்த பாளைப் பொல்லுப் போல' என்று ஓட்டை நாகேசர்கூட வாயூறுவார். ஒரு முழு இளந்தாரியை மடியிலை பிடிச்சு ஒற்றைக் கையாலை தூக்கியெடுத்து, தலைக்கு மேலாலை மூன்று சுத்திச் சுத்தி, பக்குவமாக மறுபடியும் நிறுத்தி வைப்பார். 'புழிஞ்ச தேங்காய்ப் பூவும் கழனித் தண்ணியும் குடிச்சு வளர்ந்த உடம்பே? கைத் தீனாக எள்ளுப் புண்ணாக்கு திண்டு வளர்ந்ததாக்கும்' என்று அப்பையா பட்சமுடன் புழுகுவார். 'வேள்விக் கிடாய்கள்' வளர்ப்பதுதான் அவர் பொழுதுபோக்கு. தனது அநுபவங்களைச் சடைஞ்சு கதைப்பது அவர் இயல்பு. ஆச்சி மூத்த அக்கா. சின்ன மாமா பிறந்த ஒரு வருஷத்திற்குள்ளேயே தாயைத் தின்னியாகி விட்டார். ஆச்சிதான் அக்கையும் அம்மையுமாக அவரை வளர்த்தவர். இதனாலும் இள வயதிலேயே அவ 'ஆச்சி' என்கிற மரியாதை பெற்ற வர். கடைசி வரையிலும் சின்ன மாமாவின் சாவு பற்றிச் சலிப்புச் சொல்லிக் கொண்டே இருந்தவ. 'என்ரை துரையன் மட்டும் உசிரோடை இருந்தால், எந்தப் புழுக்கையன் நாக்கு நெளிச்சுக் கதைப்பான்?...அவன் பைசிக்கிள் ஏறி வந்தான் எண்டால், அர்ச்சுன மகா ராசன் தேரிலை ஏறி வந்தது போலை தானெணை... எப்பேர்ப்பட்ட அல்லி அரசாணி எண்டாலும் அவன்ரை மணத்திலையே மருண்டு போவாள்...' என்று ஆச்சி சலிப்புச்சொல்லி, மூக்கைச் சீறி, கண்ணீரைத் துடைக்கும்

www.padippakam.com



பொழுது பார்ப்பதற்குப் பாவமாக இருக்கும். அவர் நினைவிலே அவ மனம் உக்கியது.

அப்புத்துரை என்ற பெயரை அநேகர் அறியமாட்டினம். 'துரையன்' என்றால்தான் வடிவாத் தெரியும். 'வல்லவன், விண்ணன், துணிந்தவன். எண்ணியது முடிக்கும் அருள் பெற்றவன்.' தொட்ட தெல்லாம் பொன்னாகும்; அப்படி ராசியான ஒரு கை, அவர் கசவாரமல்ல. 'சம்பாத்தியத்திலும் பார்க்க சிலவு கையடக்கமாக இருக்க வேணும்' என்ற சூக்குமம் அறியாதவர். செலவுக்கும் மீறிய வருமானத்தை, 'மாவைக் கந்தன் தாறான்' என்கிற தாராளப் போக்கு. கோயில் வளவில் பாம்பு ரெண்டு பிணைச்சல் லீலையில் ஈடுபட்டிருப்பதை 'பேப்பர்' செல்லையா அறிவிக்க தன் சிலுக்குச் சால்வையைக் கொண்டு வந்து எறிந்தவர். பிணைச்சல் அந்தச் சால்வையின் மீது 'பிரதட்டை' செய்து சென்றது. முக்கிய பணிவிடைக்குப் போய் வாரது என்றால், அந்தச் சால்வை தோளில் ஏறும். 'துரையன் வெண்டு வருவான்" என்பது அநுபவமாகப் பொலிந்தது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில், பின்னாளில் இலங்கை வங்கியின் முதலாவது யாழ்ப்பாணக் கிளை செயற்பட்ட கட்டடத்தில், பலசரக்குக் கடை ஒன்று நிறுவி முதலாளியானவர். சொந்தக் கடை வைத்து நலிந்து போன தீவுப்பகுதிக் கடைக்காரர் ஒருவரை மனேச்சராக வைத்தவர். அப்பொழுது துரையனுக்கு வயசு இருபதுதான். மனேச்சர் கடைத் திறப்புகளை வீட்டிலே ஒப்படைத்துச் செல்லும் பொழுது, கடைக்காக வாங்கும் 'வீரகேசரி'யைக் கொடுத்துச் செல்வார். இவ்வாறுதான் எங்கள் வீட்டிலே தினசரி வாங்கும் பழக்கம் ஏற்பட்டது. அவருடைய மின்னல் வேக வளர்ச்சி பலருக்கு புகைச்சலையும் எரிச்சலையும் ஊட்டியது. தன் தம்பியைச் சுட்டுப் பொசுக்கும் 'கண்ணூறை' போக்குவதற்கு ஆச்சி எத்தனையோ

www.padippakam.com



எத்தனங்கள் எடுப்பா. சின்ன மாமா அதாப்பியம் பேசித் தப்பித்துக் கொள்ளுவது வேடிக்கையாக இருக்கும்.

இந்தச் சின்ன மாமாவின் மான்மியத்தைச் சொல்லி உங்களை அறுப்பது என் நோக்கமல்ல. ஆனால், அவருடைய புதுமையான போக்குகளின் காரணமாகத் தான் அக்காலக் கதை மாந்தர் பலருடைய முதல் தரிசனம் எனக்கு வாய்த்தது. அவர்களைப் பற்றிய நினைவுப் படங்கள் என் மனத்தில் எழும்பொழுது, அவற்றின்மீது இவரின் படம் மெல்லிதாகSuper-impose ஆகி இருப்பதை அவதானிக்கின்றேன். மூலங்கள் அச்சாவாகப் பேணப்படுதல் எழுத்துச் சத்தியத்திற்கான நிலைக் களன் என்பதை இன்றளவும் என் மதமாகப் பயிலுகின்றேன்.

என் அம்மா இந்த மாமாவுக்கு நேர் மூத்தவள். அப்பையா 'பேக்கர்' என்று ஊர் வழங்கிய பட்டத்தை ஆட்சேபிக்காதவர். இயக்கச்சிக்குத் தெற்கே வேட் டைக்குப் போக வேண்டிய நாள்களைப் பற்றிக் கனாக் காணுவதிலும், வேட்டை அநுபவங்களைப் பற்றிப் 'புசத்து'வதிலும் காலம் கழிப்பவர். ஏனையன இரண் டாம் பட்சம். சோதிமாமியின் மகள் 'கடுக்கண்டு' விட்டதாக 'விசளம்' வந்தது. அம்மா உரித்திக்காரி' ஆயத்தங்கள் நடந்தன' 'தயிலா'ப் பெட்டியிலே லாமிச்சை வேர்களினால் மணமூட்டி வைக்கப்பட்டிருந்த 'அருமந்த' ரவுக்கை 'சின்னனா'ப் போய் விட்டதை அப்பொழுதுதான் உணர்ந்தா. அவவுக்குப் பெரிய அந்தரம். இதனை அறிந்த சின்னமாமா சைக்கிளை உருட்டிக் கொண்டு வெளியே போனார். ஒரு மணி நேரத்திற்குள் 'பொட்டணியாவாரி' ஒருத்தன் அம்மா முன்னால் தன்னுடைய கடையை விரித்தான். (பல்லாண்டுகள் கழித்து, சீனப் பிரதமர் சௌ என்

www.padippakam.com



லாய் பொலநறுவைக்கு வந்த பொழுது, அவருக்குச் சிவப்பு மாலை அணிந்து மகிழும் வாய்ப்பு ஏற்பட்டது என்பது வேறு விஷயம்.) நான் என் வாழ்க்கையிலே முதன் முதலாகப் பார்த்த சீனன் அந்தப் பொட்டணிக் காரன்தான். எப்படி மறக்க முடியும்?

அந்தச் சீனன் சிரித்தால் கறுப்புக் காவி ஏறிய பற்களும் இடையிடையே டால் அடிக்கும் தங்க பற் களும் தெரியும். கொள்ளை கொள்ளையான, வகை வகையான, சிலுக்குத் துணிகளை, அம்மா விரித்துப் போட்ட பாயிலே பரப்பி வைத்தான். எல்லாமே சீனா வில் செய்யப்பட்ட பட்டுத் துணிகள். அந்தக் காலத் திலே 'அபூர்வமான சிலுக்குத் துணிகளை விற்பவர்கள் சீனர்களே' என்ற கியாதி இருந்தது. 'அக்காச்சி, என்ன யோசிக்கிறாய்? வேண்டிய துணியை எடு... உன்ரை தம்பி துரையன் செத்துப் போனானோ?' என்று கேட்ட படிமுற்றத்தின் ஒதுக்கில் நின்றமாமரத்தில்சைக்கிளைச் சாத்தினார். பிறகுஎன்ன? துணி செலக்ஷனும் பேரமும். இடையில் அக்கம் பக்கம் வீடுகளிலே வாழும் பெண் களும் வந்து சேர்ந்து கொண்டார்கள். 'ஒலு லூவாக்கு மூனுயாலு' என்று அம்மா காட்டிய துணிக்கு விலை சொன்னான். அந்தக் காலத்தில் ரூபாய்க்கு எத்தனை யார் என்பதுதான் பேரத்தின் அடிப்படையாக இருந் தது. அம்மா கண் வைத்த துணியில் இன்னும் இரண்டு பெண்களுக்கும் ஆசை வந்துவிட்டது. 'ஒலு லூவாக்கு நாலு யாலு' என இணங்கி, நீட்டுச் சதுரப் பொல் லாகத் தோன்றிய 'முழத்தடியால்' அளந்து வெட்டி னான். அன்று அவனுக்கு நல்ல வியாபாரம். பின்னர் அவன் காலத்துக் காலம் வீட்டுக்கு வருவான். அவனி டம் வாங்கிய துணியிலே தைச்ச கழிசான்தான், நான் போட்டு 'மகிழ்ந்த முதலாவது சிலுக்கு உடுப்பு. இரண் டாம் உலக யுத்தத்தின் போது, யப்பான்காரன் சிங்கப் பூரைப் பிடித்த பிறகு, இந்தச் சீனப் பொட்டணி வியா

www.padippakam.com



பாரிகள் மறைந்து போனார்கள்! கொழும்பில் இன்றளவும் சீனச் சாப்பாட்டுக் கடைகள் ஓகோ யாவாரம் நடத்துகின்றன.

அந்தக் காலத்து யாழ்ப்பாணக் கலாசாரத்தைப் பழஞ்சோத்துக் கலாசாரம் என்று கூடச் சொல்லலாம். பழந்சோத்துத்தண்ணி, மோர், ஊறுகாய்த் தண்ணி, எலுமிச்சம் பழம் மலிஞ்ச காலத்தில் சக்கரைத் தண்ணி, உலையில் வடிச்ச தெளிவுக் கஞ்சிக்குள் கொஞ்சம் தேங்காய்த் துருவல் போட்ட... இவையே யாழ்ப்பாணத்தின் பானங்களாகப் பயன்பட்டன. (பனை கொடியேறும் காலங்களில் வேறு பானங்களும் உலவின என்பது வேறு விஷயம்.) இருந்த போதிலும், காலையில் கோப்பி குடிக்கும் பழக்கம் நான் அறிவறிந்த காலத்திலேயே வந்து விட்டது. கொத்தமல்லி, வேர்க்கொம்பு, கோப்பிக் கொட்டை ஆகியவற்றை பவுண் நிறத்துக்கு வறுத்தெடுத்து, உரலிலே பட்டுப்போல இடித்து, அரித்து, 'மணம் போகாமல்' 'மோட்டமினுக்கு'ப் போத்தல்களிலே அடைத்து வைத்தல் அரிய கலையாகும். இந்தக் கோப்பித் தூளைக் கலந்து முட்டைக் கோப்பி அல்லது பால்கோப்பி தயாரிப்பார்கள். (கடுகக் காய்ச்சிய ஆட்டுப்பால் கலந்து ஆச்சி தயாரித்த பால் கோப்பியின் சுவை இதனை எழுதும் இப்பொழுதும் என் வாயில் ஊறுகின்றது.)

ஒரு காலத்தில், 'கொழும்பார்' சிலருடைய வீடுகளிலும், பறங்கித் தெருவார் வீடுகளிலும் தவிர, மற்றைய இடங்களில் தேநீர் அருந்தும் பழக்கம் புகவில்லை. யாழ்ப்பாண மண்ணிலே, தேநீர் குடிக்கும் பழக்கத்தினை, இலங்கைத் தேயிலைப் பிரசார சபை திட்டமிட்டே புகுத்தியது. தெருத் தோறும் இச் சபையின் வான்கள் வந்து பால் தேத்தண்ணியும் வெறுந் தேத்தண்ணியும் இலவசமாக வழங்கின.

www.padippakam.com



இலவசமாகத் தலையிடியைத்தான் கொடுத்தாலும் 'ஃபோலிங்'கிலை நின்று, பெற்றுக் கொள்ளும் நமது மக்கள் தேநீரை விட்டு வைப்பார்களா? மூன்று மணியளவில் எங்கள் தெருவில் தேநீர் விநியோகம் நடக்கும். வின்சன்ற் அண்ணர்தான் இருந்குப் பொறுப்பு. ஒரு நாள் வின்சன்ற் அண்ணரும் சின்ன மாமாவும் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார் கள். மறுநாள் 'தேத்தண்ணி' வான் வரும் நேரத்தில் 'பாண், பாண்!... சீனிப்பாண்' என்ற குரல் கேட்டது. கறுத்த ரெக்ஸின் துணியிலே போர்வை தைக்கப்பட்ட கூடையை (அதற்குப் பாண்பெட்டி என்றும் பெயர்) சுமந்து கொண்டு சிங்களப் பேக்கரிக்காரன் ஒருவன் வந்தான். மேவிச் சீவி ஒரு சின்னப் புளியுருண்டை சைஸில் குடுமியை முடித்திருந்தான். வளைந்த சீப்பு ஒன்று குடுமியை புறம்பு படுத்திக் சொருகப்பட்டிருந் தது, அந்த சீப்பு புதினமாகவும் வடிவாகவும் இருந் தது. நீலம் நிறம் தூக்கலாகத் தெரிந்த கட்டம் போட்ட சாறம். சாறத்தை இடுப்பிலே இணைத்து அகலமான கறுத்த பெல்ட். காசுகள் வைப்பதற்கு பெல்ட்டில் அறை கள் இருந்தன. 'மொதலாளி சொன்னதுதானே?...ஆரிய குளம் பாஞ்சாலைக்கு வாறதுதானே... அது சுட்டி இந்த ரோட்டுக்குங் வாறது கஷ்டாங் இல்லை...' என்று அந்த மாத்தறைச் சிங்களவன், மாமாவுடன் தமிழிலே பேசி னான். கூடையைத் திறந்தான். கூடை நிறையத் தின் பண்டங்கள். (பிற்காலத்திலே, சீனிப்பாண், சங்கிலிப் பாண், பன்ஸ், கேக் வகைகள், ரஸ்க் வகைகள் பிஸ்கட் வகைகள் என அவற்றை இனங் கண்டேன்.) எங்களைக் கேட்டுக் கேட்டுச் சில பண்டங்கள் வாங்கி எடுத்தார். அவன் சென்ற பின்புதான் தேநீர்வண்டி எங்கள் தெரு விலே நுழைந்தது. (இவ்வாறுதான் சாயந்தரங்களிலே தேநீருடன் 'டிபன்' சாப்பிடும் பழக்கத்தினை மாமா எங்கள் வீட்டிலே புகுத்தினார். பின்னர் இந்த பேக் கரிக்காரர்கள் பலராக சைக்கிள் கரியர்களிலே பாண்

www.padippakam.com



களும், ஏனைய பேக்கரிப் பண்டங்களும் வீட்டுக்கு வீடு விநியோகித்து வந்தார்கள். இந்த விநியோக முறை யாழ்வாசிகளுக்கு வசதியாகவும் இருந்தது. தனிச் சிங்கள இனவாதம் நிச்சயித்த போர்களினால், யாழ்ப் பாண மண்ணிற்கு வசதிசேர்த்த இந்தக் கதை மாந்தர் களும் யாழ்ப்பாணத்திலிருந்து மறைந்து போனார்கள்!

பெருமாள் கோயிலின் கிழக்கு வீதியிலே நடை பெற்ற காத்தவராயன் கூத்து இன்னமும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றது. புகழ் பூத்த சண்டியன் 'அழுக்கடை'ச் சண்முகத்தின் மோதாவிலே அது நடந்தது. வேட்டையாடச் செல்லும் காத்த வராயன் ஆரியப்பூமாலை என்னும் இளவரசிமீது காதல் வசப்படுகின்றான். அவனுடைய தாய், அவளை மறந்து முறை மச்சாள்களுள் ஒருத்தியை மணந்து கொள்ளும் படி அறிவுரை வழங்குவாள். 'நாவல் பழம் போல நல்ல கறுப்பியம்மா...' என்றெல்லாம் மச்சாள்மாரின் அழகைக் கிண்டல் செய்யும் அவன், 'காலால் நடக்கா மலே தொட்டியத்துச் சின்னான்-அவன் காற்றாய்ப் பறந்து வந்தான் தொட்டியத்துச் சின்னான்' என்று அழைத்ததும் உதவிக்கு வரும் தோழனுடன் 'வளையல் வாங்கேல்லையோ வளையல்...' என்று கூவிக்கொண்டு, வளையல் வியாபாரியின் வேடத்தில் ஆரியப்பூமாலை யின் அரண்மனைக்கு வருவான். அவளுடைய கை களிலே மாட்டிவிடும் பொழுது வளையல்கள் பல உடை யும். அந்தச் சாட்டிலே காதலர்கள் இருவரும் கைகள் மூலம் ஸ்பரிசம் மாறிக் கொள்வார்கள். இந்தக் கட்டத்திலே 'அழுக்கடை'ச் சண்முகம் கம்பீரமாக விசில் அடித்துக் கூத்துக்குக் களை சேர்ப்பார். ரஸிகப் பெருமக்கள் பலரும் 'விசில் அடிச்சான் குஞ்சு' களாக மாறுவார்கள்! பெண்கள் பகுதியிலிருந்து ஏதோ அருவருப்பை மிதிச்சதுபோலக் கூச்சல் எழும்பும். விசிலடியும், பொய்க்கோபமான எதிர்க் கூச்சலும்

www.padippakam.com



கொஞ்ச நேரம் வலு முசுப்பாத்தியாக இருக்கும்...விடிய விடிய 'முழிப்ப'தற்குக் கிடைக்கும் 'டானிக்' போல! சிவபெருமான், மாரியம்மன் போல 'வளையற்காரா'னும் தேவலோகத்தில் வாழும் மாந்தர்களாகவே நான் கன காலமாக நினைத்திருந்தேன்.

அக்கா (பெரியம்மா மகள்) பெரியபிள்ளையாகி விட்டா. இதனால் அந்த வருடம், நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழாக்களுக்கு, அவ போகவில்லை. அயலிலே வாழ்ந்த அவவுடைய தோழியர் பலரும், கை நிறைய வளையல்கள் மாட்டிய பொலிவுடன், வண்ணாத்திப் பூச்சிகள் போல, பொட்டுகளாலே பூத்து புறப்பட்டுத் திரிந்தார்கள். அக்காவின் மனக்குறையை யாரும் கண்டு கொள்ளவில்லை. மற்றவர்களுடைய மனக்குறைகளை நுட்பமாக அறிந்து கொள்ளும் ஆற்றல் என் சின்ன மாமாவுக்கு இருந்தது. ஒரு நாள் அவர் திடுதிப்பென்று வளையல்காரன் ஒருவனை வீட்டுக்குக் கூட்டிவந்தார். கண்ணாடி வளையல்கள் என்றும் ரப்பர் வளையல்கள் என்றும் பல size களிலும் shape களிலும் மனம் கற்பனை செய்யக்கூடிய அத்தனை நிறங்களிலும் வளையல்கள் இருந்தன. அக்காவுக்கு இரண்டு கைகள் நிறைய வளையல்கள் மாட்டச் செய்து அழகு பார்த்தார். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் வளையன்காரன் என்பது கூத்திலே வரும் பாத்திரமல்ல, யாழ்ப்பாணத்திலே நடமாடும் யதார்த்தமான பாத்திரமே என்ற அறிவு என் மண்டையிலே உறைச்சது. பிறகு பல சந்தர்ப்பங்களிலே வளையற்காரர்களைப் பார்த்திருக்கிறேன். பார்க்கும் பொழுதெல்லாம் அந்தக் காத்தான் கூத்து சீன் மனத்திலே படர்ந்து மறையும். பின்னர், இவர்கள் காலத்தின் தேவையை அநுசரித்து, மணிக் கடைக்காரர்களாக அவதாரம் எடுத்தார்கள். வளையல்கள் மட்டுமின்றி, குட்டிக்குறா உட்பட்ட பலவகையாக புசல்மா டின்கள், சந்தன சோப்பு உட்பட பலவகையான

www.padippakam.com



வாச சவர்க்காரங்கள், பல வகை ஊசிகள், நிற நூல் பந்துகள், பொத்தான்கள், கிளிப்பின்கள், ரிப்பனுகள், சீப்புகள், கண்ணாடிகள், பூச்சி உருண்டைகள் என்று பெண்கள் விரும்பும் அத்தனை மணிச் சாமான்களையும் தகரப் பெட்டி ஒன்றிலே நைஸாக அடைத்தெடுத்துக் கொண்டு வருவார்கள். 'இனிக்க இனிக்கப் பேசி உந்த அறுவானுகள் அறா விலை சொல்லுவான்கள்' என்று ஆச்சி அவங்களுடைய செவிகளில் விழத் தக்கதாகப் புறுபுறுப்பா. அவங்களுக்குக் குடுக்கிறது அநியாயக் காசு என்பது அவ கட்சி.

ஆச்சிக்குப் பிடித்தமான ஒரு வியாபாரியைக் கொண்டு வந்து சேர்த்ததும் சின்ன மாமாதான். அவர் ஒரு இந்தியாக்காரக் கிழவர், அசப்பில் சினிமாவில் வரும் மீசை முருகேசு! அட்டைப் பெட்டி ஒன்றுக்குள் நிறையப் புத்தகங்கள் திணித்து, எடுத்து வருவார். தேவாரப் புத்தகங்கள், விரதங்களின் மகத்துவம், கை ரேகை சாஸ்திரம், பாரதம் (நான்கு பருவங்களும்), 'ராஜா தேசிங்கு' 'நல்லதங்காள்' போன்ற பெரிய எழுத்துக் கதைப் புத்தகங்கள் என்று பலவகையான புத்தகங் களும் கிடைக்கும், அநேகமான புத்தகங்களைக் கற்றுத் தேர்ந்த பாண்டித்தியம். நினைத்த வரிகளைக் குறித்த புத்தகத்தில் குறிப்பிட்ட பக்கத்தைத் திறந்து கணப் பொழுதிலே காட்டுவார். கண்ணாடியை மாட்டி, ஒற்றையைப் புரட்டி, 'ஒற்றைக் காலுக்குச் சிமிட்டாக் கொடுத்தான் ராஜாதேசிங்கு...' என்று பாடத் தொடங் கினால், ஓர் அரசன் குதிரைமீதேறி வேகமாக ஓடு வதைக் கண்ணாற் பார்ப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படும். 'நடமாடும் பல்கலைக் கழக'மாக நான் மதித்த முதலாவது மனிதன் அந்தக் கிழவர்தான். அவரிடம் வாங்கும் புத்தகங்களை ஆச்சி ராகத்துடன் பாடியோ, வாசித்தோ மகிழ்வார். அந்த நேரங்களில் அவவுடன் ஒட்டிக் கொண்டால், சலிக்காமல் அந்தக்

படிப்பகம்

www.padippakam.com



கதைகளை எல்லாம் சொல்லுவா. ஆச்சி வாங்கி, ‘தயிலாப் பெட்டி’யின் கீழ் லாச்சி ஒன்றிலே அடுக்கி வைத்திருந்த புத்தகங்கள் பலவற்றை, ‘ஆனந்த விகடன்’ ‘கல்கி’ ‘சுதேசமித்திரன்’ முதலிய பத்திரிகைகளை ஒழுங்காக வாங்கி, கதைகளைச் சுவைக்கத் துவங்கிய காலத்திலே, வாசித்துக் காட்டி ஆச்சியின் பட்சத்தைப் பெற்றது இன்றும் பசுமையாக இருக்கின்றது.

வெண்தாடிக் கிழவரான தாத்தா ஒரு சர்வாதிகாரி. யார் எவர் என்று பார்க்காமல் புழுத்த பாட்டிலை ஏசுவது அவருடைய உரிமை. சின்ன மாமா அவருக்கு நல்ல பயம். தாத்தா சொகுஸூப் பிரியர். மழை காலத்தில் வெந்நீர் கலந்துதான் குளிப்பார். ஒரு தடவை தண்ணீர் சூடாக்குவதற்கு, கிணற்றடியிலே அடுப்பு மூட்டி, கிடாரத்தைத் தூக்கி வைத்தார். கிடாரத்தின் அடி ஒழுகி, அடுப்பை நனைக்கத் துவங்கியது. ‘உந்த மூதேசியளுக்கு ஒரு சாமானை ஒழுங்காப் பாவிக்கத் தெரியுமே?... கிடாரத்தின்ர அடி புண்டு கிடக்குது... ஊரான் வீட்டுப் பெண்டுகள் புள்ளைப் பெத்தால், இந்த வீட்டுக் கிடாரந்தான் குண்டி தேய்ச்சு இழுபட வேணும்...’ என்று ஒரேயடியாக, அச்சிலே போட முடியாத வார்த்தைகளையும் இடையிடையே தூவிப் பாடத் துவங்கி விட்டார். இனி, கிழவர் வெந்நீர் வைக்க எத்தனிக்கும் நாளெல்லாம் கிணற்றடியில் ‘மண்டகப்படி’ விழும். எல்லோரும் ஒருவர் முகத்தைப் பார்த்து ஒருவர் ‘முழி’ பிதுங்க, அதற்கும் தீர்வு கண்டவர் சின்னமாமாதான். அடுத்த நாளே பித்தளைப் பாத்திரங்கள் திருத்தி, ஈயம் பூசும் ஒருவனை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார். அவனுக்கு சின்னப் பையன் ஒரு ‘சிண்’ களி மண்ணிலே மேடை அமைத்து, துருத்தி நுழையும் தற்காலிகக் கம்மாலை சரிக்கட்டி,

www.padippakam.com



சிரட்டைக் கரி போட்டு அடுப்பு மூட்டுவது புனிதமாக இருந்தது. அவன் கிடாரத்தின் அடித்தகட்டை வெட்டி யெடுத்து, அதற்கு புதிய தகடு பொருத்தி, ஈயம் பூசி புத்தம் புதிய கிடாரம் போல மாற்றிவிட்டான். அயலிலே அடிகள் புண்டு தூங்கிக் கிடந்த சருவச் சட் டிகள், கிடாரங்கள் முதலியன அம்மாவின் இழகிய மனதினால், இங்கு வந்து சேர்ந்தன. தொடர்ந்து நாலைஞ்சு நாள்களுக்கு வேலை இருந்தது. இந்தக் காலத்திலே பித்தளை, வெண்கலப் பாத்திரங்களை யார்தான் உபயோகிக்கிறார்கள்? புதிய நாகரிகம் கன்னாரத் தொழிலை விழுங்கி ஏப்பமிட்டு விட்டது!

ஐப்பசி அல்லது கார்த்திகை மாதத்திலேயே யாழ்ப் பாணத்திலே மாரிமழையின் சுதி பேசும். அப்பொழுது 'குடை கட்டேல்லேயோ குடை' என்று புற்றீசல்களைப் போல 'குடை கட்டும் காக்காக்கள்' வந்து விடுவார்கள். இப்படி வருபவர்கள் பலர் 'வெள்ளத்திலே வரும் வால் பேத்தைகள்' என்று மாமா சொல்லுவார். அவர்கள் அவ சரப் பணம் தண்டப் புறப்படும்தொழில் 'தவ்வல்கள்' என் பது அவர் கண்டுபிடிப்பு. இதனால், எங்கள் வீட்டின் இறப்புகளிலும் பறன்களிலும் தூங்கும் 'நொண்டிக் குடை'களைத் திருத்துவதற்கு ஆவணி மாதத்திலேயே 'ஒறிசினல்' குடைகட்டும் காக்காவைக் கொண்டு வந்து விடுவார். திடீர் அரசியல் தலைவர் குமாரசூரியர் காலத் தில், பீடாதிபதி கைலாசபதி தொடக்கம் மடாதிபதி பிரேம்ஜி வரை டாக்டர் இந்திர குமார் மூலம், அவரு டைய பாத சேவையிலே ஈடுபட்ட பரிதாபம் குறுக்கிழை யில் நினைவுக்கு வருகின்றது. அப்பொழுது 'குடை கட்டும் காக்கா' பற்றி புதிய பரிமாணத்திலே கதைகள் பரவியதுண்டு. ஏன் பொல்லாப்பு?

இவர்களைத் தவிர வேறு கதை மாந்தரும் அக்கால யாழ்ப்பாணத்தில் நடமாடியதுண்டு. ஆனால் இங்கு,

படிப்பகம்

www.padippakam.com



சின்ன மாமாவுடன் தொடர்புடைய கதை மாந்தர் பற்றிய நனவிடை தோய்தலே நிகழுகின்றது.

நிறையப் பனைமரங்களும், எல்லை ஓரங்களில் சில தென்னங்கன்றுகளும் கொண்ட பெரியவளவு ஒன்றுநீரா வியடிக்கும்கந்தர்மடத்தின் இடையில், அந்தக் காலத்தில் இருந்தது. அதைக் குத்தகைக்கு எடுப்பதற்கு முன்வீட்டு 'முட்டுக்காய்' செல்லமுத்து ஓடித் திரிஞ்சாராம். ஒருநாள் வெண்தாடிக் கிழவர் ஆச்சி சகிதம் இரண்டு கூலியாட் களை அழைத்துக் கொண்டு அந்தக் காணிக்குச் சென் றார். சில பிணைச்சல் தேங்காய்களையும், இரண்டு நுங்குக் குலைகளையும் கொண்டு வந்தார்கள். அந்தக் காணியைச் சின்ன மாமா அசுப்பிடாமல் வாங்கி விட்டார் என்றும், இவர்கள் 'ஆட்சி' எடுத்து வந்திருக்கிறார்கள் என்றும் பின்னர் அறிந்து கொண்டேன். அவர் கல்யா ணம் முடிச்சுச் சரியாக ஆறு மாசத்திலே அதனை வாங் கினதாகத் தாத்தா கணக்குச் சொல்லுவார்.

அன்று சனிக்கிழமை. முழுகுவதற்குச் செழிக்க நல்லெண்ணை வைச்சு ஊறவிட்டிருந்தார். 'துரை... துரை...' என்ற குரல் கேட்டு படலையைத் திறந்து வீதியில் இறங்கினார். சைக்கிளில் வந்த சிப்பித்தறை நடேசனுடன் சிறிது நேரம் கதைத்திருக்கிறார். கதை சுமுகமாக இருக்கவில்லை. 'சரி...உங்களாலை முடிஞ்ச தைச் செய்யுங்கோ...' என்று சொல்லி மாமா திரும்பி னாராம். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்தவனைப் போல, 'முட்டுக்காய்' செல்லமுத்து திடீரெனத் தோன்றி விரித்து வைத்திருந்த 'எட்டிஞ்சி' வில்லுக் கத்தியால் தன் பலம் கொண்ட மட்டும் பல தடவைகள் குத்தினானாம். அந்த நிலையிலும் சின்ன மாமா அவனைத் தூக்கி ரயில் பாதையிலே அடித்தாராம். 'ஐயோ...துரையன் என்னைக் கொண்டு போட்டான்... ஆஸ்பத்தரிக்குக் கொண்டு போடா...' என்று

www.padippakam.com



மாய்மாலம் செய்து கொண்டு நடேசனின் சைக்கிளிலே தப்பிச் சென்றானாம். மாமா பிரக்ஞை இழக்கவில்லை. 'வாட்'லை சேர்க்கப்பட்ட பிறகுதான் கத்திக் குத்துகள் ஆழமானவை என்று தெரிய வந்தது. மூன்றாம் நாள், இருபத்தி மூன்று வயது பூர்த்தியாவதற்கிடையில், அவர் சாவைத் தழுவினார். மின்னலைப் போன்று என் வாழ்க்கையைப் பிரகாசமாக்கியவர். அவர் அற்பாயு சாகப் போயிருக்காவிட்டால் என் வாழ்க்கைப் போக்கு வேறு விதமாக அமைந்திருக்கும் என்பது திண்ணம். என் அப்பையா கண்ணீர் மல்கத் தேம்பித் தேம்பி அழுததை அப்பொழுதுதான் முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் கண்டதாக எனக்கு நினைவு. அம்மா செத்த பொழுதுகூட அப்பையா வாய்விட்டழு ததை நான் பார்க்கவில்லை.

ஆனால், அப்பையா-ஆச்சி-அம்மாஎல்லோரையும் தூக்கி அடித்ததுபோல ஒப்பாரி வைத்தழுத லெட்சுமி மனுஷியை மறக்க முடியாது. பெண்கள் கூட்டத்தில் நின்றால் எல்லாருக்கும் மேலாலை அவதலை தெரியும். ஒரு ரேஸ் குதிரை நிண்டதுபோலைதான். நல்ல நெடுப்பி. தொக்கச்சி அல்ல வஞ்சகமில்லாத வாளிப்பு. தேக்கு மரத்திலை கடைஞ்சு வார்னிஷ் அடிச்சது போலை நிறம். சுருண்டு தவழும் கேசத்தைக் கூரை யாகக் கொண்ட வட்ட முகம். முகத்தின் பேர்பாதியை அடைத்ததுபோல பெரிய கண்கள். போதை ஊட்டுவது போலவும், போதை உண்டது போலவும் மாறி மாறித் தோன்றும் கண்களிலே எப்பொழுதும் செவ்வரி படர்ந் திருக்கும். தாவணியின் மடிப்புகளுக்குள் மசியாது திமிறும் மார்பகங்கள். அந்தத் திமிர்த்த மார்பிலே, இரண்டு கைகளாலும் பலம் கொண்ட மட்டும் அடித்து அதனால் எழும் ஓசையைத் தாளமாகக் கொண்டு,

www.padippakam.com



'துரையாரே கிளியாரே துக்கத்து ராசாவே
துணைக்கு யாரைநீ வைச்சுத்தான் போனாயோ
கரை சேரார் அழுத கண்ணீர்
காலனை விரட்டாதோ கண்ணனை
எழுப்பாதோ...'

என்று குரல் எழுப்பிய பொழுது, அந்தச் சாவீட்டிலே சோகம் புதியதொரு பரிமாணம் அடையலாயிற்று. ஒரு சூத்திரதாரி போல... அண்ணாவி போல... வந்த பெண்களுடன் சுற்றி நின்று மாரடித்தா...பெண்கள் வட்டமாகக் குந்தி கட்டிப் பிடித்து ஒப்புச் சொன்ன பொழுது, லெட்சுமி மனுஷியின் ஒப்பாரிகள் தனித்தும் தூக்கலாகவும் ஒலிக்கும்! குரலிலே தனிக் கம்பீரம். ஒருத்தி சொன்ன ஒப்பாரிக்கு உடனே ஒன்றை இணக்கிச் சொல்லும் வித்துவம்! துரையனின் பெருமைகளை யாராலும் அத்தனை ஒப்பாரிகளிலே பாடி இருக்க முடியாது. அவவுடைய அழுகையும், அவதியும், ஆவேசமும், துக்கத்தைக் கனக்கச் செய்வதிலே இருந்த அக்கறையும் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

அடுத்த நாள்தான் சவம் எடுப்பார்கள். மைமல் வந்தது. சைக்கிள் கடைராசா வந்து, 'பெற்றோமாஸ்க்' விளக்குகள் எரிப்பதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கின்றார். மழை பெய்து ஓய்ந்ததுபோல ஒரு நிசப்தம். எனக்குப் பயம். அப்பையாவைத் தேடுகிறேன். ஒரு மூலையிலே பாறி நின்ற பூவரசின் கீழ் அவர் லெட்சுமி மனுஷியுடன் தனிமையில் பேசிக் கொண்டிருப்பது தெரிகிறது.

'எந்தச் சாவீட்டிலைதான் குடிமை வண்ணானும் அம்பட்டனும் சண்டை பிடிக்காமல் இருந்தவங்கள்?... இப்ப துவங்கினாத்தானே சுடலையிலும் எட்டுச் சிலவிலும் பிய்ச்சுப் புடுங்கலாம்...' (லெட்சுமியின் இந்த

www.padippakam.com



'ஒரு வாசக'த்தை எழுத்துலக வித்துவச் சண்டைகளின் போது, எத்தனையோ சந்தர்ப்பங்களிலே நினைவு கூற நேர்ந்தது!)

'எனக்கு என்னத்தைத் தெரியும்? நான் மலையான மலையைக் குடுத்திட்டு இருக்கிறன்...' அப்பையாவின் கேவல்.

'எல்லாம் இவர் வந்து பாப்பார்...முதலிலை சவம் காக்க வாற பெண்களைக் கவனிக்க வேணும்...'

'தெரிஞ்சுதானே உனக்கு முதல் சாவிசளம் அனுப் பினனான்...சின்னாச்சி மனுஷி வீடு தெரியுமல்லே...'

'தெரியாமல்...'

'அவவிட்டைக் காசு குடுத்திருக்கிறன்...அசுப் பிடாமல் பாத்துக் கொள். நீயும் எல்லாரோடையும் நிண்டு புடிக்க அல்லவே வேணும்...'

'தெரியுமண்ணை...நான் செய்யிறதைப் பாத்துப் போட்டுப் பேந்து சொல்லன்...இப்ப என் கூட வந்து மனுஷிட்டை நேரில்லை சொல்லெணை...அவ ஒரு ரெக்கிளாஸுக்காரி...'

பிறகு, இந்த லெட்சுமி மனுஷியை, எங்கடை சாதி சனங்களின் எத்தனையோ செத்த வீடுகளில் கண்டி ருக்கிறேன். குடிமைகளின் கடமைகளிலும் பார்க்க அவவுடைய பணி உச்சமானது என்ற மலைப்பே நிலைத்துள்ளது. கயம்புளியிலே பிறந்து, ஒண்டுக் குள்ளை ஒண்டு என்று 'இத்தினியன்' எல்லுவனைக் கல்யாணங் கட்டி... 'உந்தக் குதிரையை அடக்கே லாது...' என்று கண்ட கண்ட கொட்டில் எல்லாம் அவன்

ப—4

www.padippakam.com



புசத்தித் திரிஞ்சு...'கோழி மிதிக்கப் பிறந்த இத்தினி யனோடை பட்ட கிழிசகேடு போது'மென்று...யாழ்ப் பாணம் வந்து...'வெள்வண்ணார' நாகலிங்கத்தின் வைப்பாட்டியாக வாழத் தலைப்பட்டதெல்லாம், அவ ளுடைய சோகக் கதையின் ஓம்ஸமே! அந்தச் சோகங் களுக்கெல்லாம் ஒரு வடிகாலாகவும், அதே சமயம் ஒரு கௌரவமான பிழைப்பாகவும் அவள் பணி அமைந்தது. ஆனால், அவள் உள்ளத்தின் உயர்வை அறிவதற்கு முப்பது ஆண்டுகள் நான் காத்திருக்க நேர்ந்தது.

என் அப்பையாவுக்குக் கொள்ளி வைப்பதற்கு நான் தத்துவகாரன். மரணச் செய்தி அறிந்து. மட்டக்களப்பிலிருந்து குடும்பத்துடன் சென்றேன். கொள்ளி வைப்பு- தகனம்- உடன் காடாத்து எல்லாம் முடிந்தன. பயணக்காரரின் வசதிக்காக மறு நாளே எட்டுச் செலவு என்றும் முடிவாகியது. குடும் பத்தின் நெருங்கிய உறவினர்கள் எல்லாம் அன்று காலையில் கூடியிருந்தார்கள். பெரிய மாமா தலைவர். வசதிக்காக எல்லாச் செலவுகளையும் என் இரண்டு தங்கைகள் முன்னின்று செய்தார்கள். எல்லாச் செலவுகளுக்கும் வாய்க்கரிசிச் சில்லறை உட் பட கணக்குக் காட்டப்பட்டிருந்தன. 'இண்டைய எட்டுச் சிலவுச்செலவுகள் இனித்தான். இதுவரை நடந்த செலவு இந்தக் கணக்குகளின்படி இவ்வளவு செலவுகளிலே ஒவ்வொரு பிள்ளையும் ஏர்வைப்படும் தொகையைச் சொன்னால், கணக்கு வழக்குகளைச் சரிசெய்து கொண்டு மற்றைய அலுவல்களைப் பார்க்கலாம்...' என்று மாமா அறிவித்தார். 'மட்டக்களப்பானின் பங்கு என்ன?' என்பதுதான் வாக்கு. மட்டக்களப்பா னான என் மனைவிக்கு இந்தக் கணக்கு விவகாரம் அசிங்கமாகவும் அநாகரிகமாகவும் பட்டது. எல்லாச் செலவுகளும் கொள்ளிவைச்ச மகனுடையது. இன்றைய

www.padippakam.com



செலவும், அந்தியேட்டிச் செலவும், அப்படியே...' என்று மனைவி கூறினார். செலவுத் தொகை முழுவதையும் மாமாவிடம் ஒப்படைத்தாள். (இந்தப் பணம் என் மனைவியின் தாலிக் கொடியை விற்று அவசரமாகத் திரட்டப்பட்டது என்பது வேறு விஷயம்) யாழ்ப்பாணத் துச் சிக்கன கலாசாரத்துக்குப் பரம திருப்தி!

நானும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் வாரிசே! 'குருத்து வெட்டின கூலி இரண்டு ரூபா...' என்று கணக்கிலே புகுந்துள்ள நுட்பமான விபரங்களை நான் ரஸித்துக் கொண்டிருந்த பொழுது, லெட்சுமி வந்து சேர்ந்தா. அவ கேசத்திலே தேங்காய்த் துருவல் தூவப்பட்டதுபோல நரை. தேகம் கொஞ்சம் வாடியிருந் தது. மற்றும் படி அதே அச்சு. அதே நயம், சட்டென்று ஒரு பொறி, அவவுக்குக் காசு கொடுக்கப்படவில்லை. அந்தத் துக்கத்திலும், நெருக்கடியிலும் அவவுடைய பிரயாசை என் கவனத்தை ஈர்த்திருந்தது. முப்பது வருடத்திற்கு முன் நடந்த சா வீட்டின் கோலமும் கவ்வியது. குற்ற உணர்வு மனசைத் தைத்தது. அவவை ஒதுக்குப் புறமாக அழைத்துச் சென்றேன். நூறு ரூபாய் தாள் ஒன்றினை மடித்து, திருப்தியுடன் அவவின் கையிலே திணித்தேன்.

'என்ன தம்பி இது?' என்று நெருப்புக் கட்டியைத் தொட்டுவிட்டது போல கையை உதறினா. 'உவை யளும் தரப் பாத்தவை...காசு தந்து என்னைக் கொல்லாதை. சண்முகம் அண்ணரிலை நான் வைச் சிருக்கிற பட்சத்துக்கு, நான் காசு வாங்கி மாரிலை தட்டினனான் எண்டால் பறைத் தட்டுவாணியல்லே? ...காசை எப்பவும் காணலாம் தம்பி...எப்பிடியும் காணலாம்...மனுஷனைக் காணுறதுதான் கஷ்டம்... நான் இப்ப எட்டுச் சிலவுக்கு உதவி செய்யத்தான் வந்தனான்...உனக்கும் ஒரு வடிவான பொம்பிள்ளைக்

www.padippakam.com



குஞ்சு இருக்கு...கண்டனான்...உந்தக் காசிலை குஞ்சுக்கு ஏதேன் வாங்கிக்குடு...' எல்லாவற்றையும் ஈசுரார்ப்பணமாக்கிய பரம பக்தையின் தெளிவுடன், முற்றத்துக்குப் போன அவ, வெற்றிலைத் தட்டினை எடுத்து,வாய் நிறைய வெற்றிலை போடத்துவங்கினா.

அழகு சுப்பிரமணியம் (எனக்கும் முன்னோடியான அற்புதக் கதைஞர்; யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு ஆங்கில மொழிமூலம் புதிய பரிமாணம் கண்ட சிற்பி) மட்டும் 'Professional Mourners' என்ற சிறுகதையை எழுதியிருக்காவிட்டால், ஐம்பது ஆண்டுகளாக என் நனைவிலே புடம் போட்டுச் சுடரும் இந்த லெட்சுமி Characterஐ மையமாகக் கொண்டு எஸ். பொ. கதை ஒன்று உருவாகியிருக்கும். இடித்த மாவை இடிப்பதிலும், செத்த பாம்பை அடிப்பதிலும் தமிழர்கள் மெய்யா வலு விண்ணர். நான் அப்படிக் கொத்த தமிழனல்ல என்று அறிக்கையிடுவதற்கு நான் கொஞ்சமும் வெட்கப்படவில்லை.

www.padippakam.com

மாட்டு வண்டி ரிக்ஷோ
மனம்போல் றலி சைக்கிள்
பாட்டிமனம் கொண்ட A40
ஓட்டியநாம்
ஓடியவை போக
ஓய்ந்தறியா நம் துணையாய்
தேடிநின்ற றலியெம்
திரு

# 4. ரதம்

காலநதி பீய்ச்சியடித்து ஓடுகிறது. காலநதி ஓடுவதற்கு வசதி செய்யும் ரோதைகள் எவை? சக்கரம் இல்லாத ஓட்டமா?

www.padippakam.com



அப்பையா என்று என்னாலும், பிற்காலத்தில் முகத்தார் என்று பிறராலும் அழைக்கப்பட்ட அவர், கால நதியின் ஓரத்திலே நம்பிக்கையை இழக்காது நடை பயின்றிருக்கின்றார் என்பதை நிதானிக்க முடிகிறது. ஒரு மாமாங்க கால மண வாழ்க்கையின் பின்னர், அதுவும் மூன்றாம் திருமணக் கோலம் பூண்டு, அவருடைய வாய் முறைப்பாட்டின்படியே அரிய தவமிருந்து, கொள்ளி வைக்கும் தத்துவக்காரனான என்னை மகனாகக் கண்டவர். பேய்க்கர் என்றாலும், காரியப் பேய்க்கர்! அவருடைய வெற்றியின் பூபாளமாகப் பூத்த நான், அளவுக்கு அதிகமான சலுகைகளை எனதாக்கிக் கொண்டேன். இதனால், எதுக்கும் பஞ்சிப்படும் சோம்பேறியாகவும், அளவுக்கு அதிகமாக விழுங்கும் சாப்பாட்டு ராமனாகவும் வளர்ந்தேன்.

கண்டதையும் விழுங்கினதாலோ என்னவோ, எனக்கு நல்ல காய்ச்சல். 'அடுப்பிலை ஏற்றி வெச்ச ஓட்டைப் போலை மேல் சுடுகுது...கண் மேலை கொண்டு போய்ச் சொருகுது... என்ரை அருமந்த பிள்ளையைக் காப்பாத்துங்கோவன்...' என்கிற அம்மாவின் புசத்துதல். அப்பையா கூட பேதலிச்சுப் போனார். அப்பொழுது விக்டோரியா வீதியில் வாசல் திறந்து வைத்திருந்த தர்மாஸ்பத்திரிக்கு என்னை தூக்கிக் கொண்டு போயிருக்க முடியும். 'ஆரைக் கண்டாலும் குலுக்கிச் சிரிக்கிற உந்தக் கங்காணிப் பெண்டுகளை' மேய்க்கிற அந்த மூதேசி கலந்து தாற அந்தக் கலர்த் தண்ணியால் 'வருத்தம்' குணமாகும் என்பதிலே அவருக்கு இல்லிப்போலையும் நம்பிக்கை இல்லை.

அந்தக் காலத்தில், சில வைத்தியர்களுடைய விந்தாரச் சாக்ஸங்களினால், சில ஊர்களே புகழ் பூத்து விளங்கின. குழந்தைகளின் கிரந்தி நோய்களுக்குச் சில்லாலை வைத்தியர், சன்னிக் குணங்களுக்குச் சுதுமலைப்

www.padippakam.com



பரியாரியார், முறிவுகளுக்கு ஒட்டகப்புலம், கட்டுகளுக்கு பருத்தியடைப்பு...இந்தப் பட்டியலில், விசருக்கு கள்ளி யங்காட்டுப் பூனைக்கண் நடராசா வைத்தியர் என்று சொல்லும் அளவுக்கு அவருடைய கியாதியும் வளர்ந்து கொண்டிருந்த காலம்...அவர் பண்டாரக்குளத்தின் அயலிலே வாழ்ந்ததினால், நமது குடும்ப வைத்தியர் என்று சொல்லும் அளவுக்கு ஒரு நெருக்கம். ஆனாலும், 'இவனை 'பிளஸ்' ஸிட்டை கூட்டிக் கொண்டு போய்க் காட்ட வேணும்' என்று அப்பையா முடிவெடுத்து விட்டார். சம்பத்திரிசியார் கல்லூரிக்குப் பின்னால், பெரிய கோயில் வேதக்காறச் சவக்காலைக்கும் பின்னால், றெக்கிளமேஷன் றோட்டில், கரையூருக்கும் பாஷையூருக்கும் இடையில், 'பிளஸ்'ஸின் இங்கிலீசு வைத்திய சாலையின் புகழ், கொடி கட்டிப் பறந்த காலம். (இதனை நிறுவி நடத்திய டாக்குத்தர் சுப்பிரமணியம் தர்மப் பிரபுவாக இருந்தார் என்பதைப் பறைசாற்றி, றவுண் ஹோலுக்கும் முற்றவெளிக்கும் இடையில், சுப்பிரமணியம்பூங்கா குந்தியிருப்பதை இன்றைய தலை முறையினரும் அநுபவித்திருக்கலாம்.)

அந்தரத்துக்கு ஒரு வாகனத்தைப் பிடிக்க ஏலாது. நேர காலத்தோடை சொல்லி வைச்சால் உண்டு. சின்ன மாமா இருந்திருந்தால், சைக்கிளில் வைச்சு மிதிச்சிருப்பார். வாகனம் பிடிக்க அலைஞ்சவை, தாராக்குளத்து வேலாயுதத்தின்ரை குதிரை வண்டில் சில்லாலைக்குப் போயிற்று என்றார்கள். நல்ல வேளையாக, குட்செற்றடிச் செல்லன், மக்கிக் கிடங்கடியிலை நிண்ட நிலையிலை ஒரு போத்தில் 'தென்னை' அடிச்சுப்போட்டு ரிக்ஷாவைத் திருப்பேக்கை, பேப்பர் செல்லையாவின் கண்ணிலே பட்டதினால் தப்பினேன்! நான் செல்லனின் ரிக்ஷாவில் ஏற்றப்பட்டு, 'பிளஸ்'ஸிடம் கொண்டு செல்லப்பட்டேன். அவன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அப்பையா ரிக்ஷாவில் ஏறவில்லை. பாவம்

www.padippakam.com



ஓட்டமும் நடையுமாகப் பின்னால் வந்தார். 'உயிர் போனாலும் மனுஷனை மனுஷன் வைச்சு இழுக்கிற ரிக்ஷாவிலை ஏறமாட்டன்' என்ற கொள்கையை அப்பையா கடைசி வரையிலும் கடைப்பிடித்தார்.

அந்தக் காலத்து யாழ்ப்பாணத்தில், சுக தேசிகள் போகவேண்டிய தூரம் பத்துக் கட்டைகளுக்குட்பட்டால் நடந்தே போய்விடுவார்கள். சுண்ணாகத்திலிருந்த ஈழ கேசரி கந்தோருக்கு என் சிறுகதைகளை ஈழகேசரியிலே பிரசுரிக்க வேண்டும் என்கிற அரிப்பில் நான் நடந்து போய் வந்தது நல்ல ஞாபகம். 'நடந்த கால் சீதேவி' என்பார்கள். அந்தக் காலத்தில் மாட்டு வண்டிகளுடைய ஆதிக்கம் கோலோச்சியது. 'தாவளம்'போல, பனைப் பகுதியிலிருந்து கிடுகுகளை ஏற்றிக் கொண்டு வண்டி லுக்குப் பின்னால் வண்டிலாக வருவது கண்கொள்ளாக் காட்சி. ஒரு தடவை, பூவரசம் குழைக்கட்டுளை ஏற்றிக் கொண்டு ஒன்றின் பின் ஒன்றாக இருபதுக்கும் மேற் பட்ட வண்டில்கள் பலாலி ரோட்டில் செல்வதை எண்ணி மகிழ்ந்திருக்கிறேன். மாட்டு வண்டில்கள் எத்தனையோ ஷேப்புகளிலும் சைஸுகளிலும் வலம் வந்தன. அந்தக் காலத்தில் வெலிங்டன் தியேட்டர் உள்ள இடம் சிறாம்பியடி. அதிலை ஒரு பெரிய கம் மாலை. வண்டில் சில்லுகள் திருத்தப் பெரிய பட்டறை. ஒரு பக்கத்தில், மாடுகளுக்கு லாடம் அடிக்கப்படும். எத்தனை மாடுகளைக் கட்டிப்போட்டு... மாடுகளின் குழம்புகள் தேயாமல் இரும்புச் சப்பாத்துகள் மாட்டப் படும் விந்தை! இக்கால லொறிகளுடைய அனைத்துப் பணிகளையும் அக்காலத்தில் மாட்டு வண்டில்கள் செவ் வனே செய்தன. வண்டில்களை நிறுத்தி வைப்பதற்கு 'ஸ்ராண்டுகள்' இருந்தன. சிறிய பொருள்களை ஏற்றிச் செல்வதற்குத் தள்ளு வண்டில்கள் பயன் பட்டன. இவற்றை மனிதர்கள் தள்ளிச் செல்வார்கள்.

www.padippakam.com



தள்ளிப் பார்த்தால் தெரியும். வண்டில் தள்ளுறது லேசான காரியமல்ல.

மனிதர்களுடைய பயண வாகனங்களாக வில்லு வண்டி, திருக்கல் வண்டி, 'பக்கி கரத்தை' ஆகியன பயன்பட்டன. இவை விசையாகச் சென்றன. பெரும் பாலானவை தனியார் உபயோகத்திற்குப்பயன்பட்டன. வண்டிலின் அலங்காரம், கம்பீரம் ஆகியவற்றை வைத்து கமக்காரனுடைய செல்வ நிலையை மட்டுக் கட்டலாம். இவற்றின் மத்தியில் குதிரை வண்டிகளும் இருந்தன. யாழ்ப்பாண ஸ்ரேஷனிலே மெயில் வண்டியில் வந்து இறங்குபவர்களை ஏற்றிச் செல்வதற்கு வாடகைக் குதிரை வண்டிகள் கிடைத்தன. அக்காலத்தில் றீகல் தியேட்டரிலும், வின்ஸர் தியேட்டரிலும் திரையிடப்பட்ட புதுப் படங்களுக்குப் பிரசாரம் செய்வதற்கும் குதிரை வண்டிகளே பயன்படுத்தப்பட்டன. பாண்டு வாத்திய இசைக் கருவிகளுடன் வரும் அந்தக் குதிரை வண்டிகளுக்குப் பின்னால், ஒரு விளம்பர நோட்டீஸ் பெறுவதற்குக் கெஞ்சிக் கொண்டு ஓடுவோம். ஒரு நோட்டீஸ் கிடைச்சால் சுவீப் விழுந்த சந்தோஷம்! 'மைக்' பூட்டிய காரிலிருந்து நோட்டீஸ் விநியோகிக்கும் முறை பின்னால் வந்தது. வின்ஸர் தியேட்டர் முதலாளி குதிரையிலே சவாரி செய்ததைப் பார்த்திருக்கிறேன். யாழ்ப்பாணத்திலே போலீஸ் சூப்பிரிண்டாகக் கடமை பார்த்த சிட்னி சொய்ஸா குதிரையிலே கம்பீரமாகப் பவனி வருவதைக் கண்டு, யாழ்ப்பாணத்துக் காடையர் கூட்டம் நடுங்கும். காவாலிகளை வளைச்சுப் பிடிச்சு, 'சிலிப்'பாத் தலைகளை மொட்டை அடிப்பதை சொய்ஸா தமது போலீஸ் கடமைகளுள் ஒன்றாக வரித்திருந்தார். பின்னர், அவர் அவமானப் பட்டுப்போனது வேறு கதை.

இருந்தாலும், சாதாரண மக்களுடைய பயணத் தேவைகளை ஈடுகட்டக்கூடியதாக ரிக்ஷாக்களே பவனி

www.padippakam.com



வந்தன. கச்சேரியடியில், கோட்டடியில், ஸ்ரேஷனடியில், ஆஸ்பத்தரியடியில், பெரிய கடையில் நிரந்தரமான ரிக்ஷா ஸ்ராண்டுகள் இருந்தன, மனிதர்களை வண்டியில் ஏற்றி வைத்து, மனிதன் இழுத்துக் கொண்டு ஓடும் எளிமையான வாகனம். ரிக்ஷா இழுப்பவர்கள் மாடுகளைப் போலத்தான் பாடுபட வேணும். ஈழத்துச் சிறுகதை உலகின் மும்மூர்த்திகளான சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோருக்குப் பின்னர், கதைக் கலைக்கு வளஞ் சேர்த்தவர் அ.செ. முருகானந்தன். அந்தக் காலத்துச் 'சிறுகதைக் கோவை'யிலே ஈழத்துக் கதைஞராய் சிறப்பிக்கப்பட்ட பெருமை அவருக்கு உண்டு. அவ்வாறு இடம் பெற்ற படைப்பு 'மனித மாடு'; ரிக்ஷாக்காரனைப் பற்றிய கதை. ரிக்ஷாக்காரனின் அவலங்கள் எழுத்து நெஞ்சங்களிலே சலனங்களை ஏற்படுத்தின. சில பணக்காரர்கள் வீட்டுத் தேவைக்காக சொந்தத்தில் ரிக்ஷா வாங்கி வைத்து, ரிக்ஷா இழுப்பதைத் தமது வேலைக்காரர்களின் பகுதி நேர வேலையாக்கியிருந்தார்கள். இலக்கிய விமர்சகர் ஏ. ஜே. கனகரத்னா, சிறுவனாகச் சொந்த ரிக்ஷாவில் கல்லூரி வந்ததாக ஞாபகம். வெகு காலத்துக்குப் பின்னரும், அந்த ரிக்ஷாவை மியூஸியப் பொருளைப் போல அவர் வீட்டுக்கு எதிரில் பார்த்திருக்கின்றேன்.

ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா, ஒட்டோ ரிக்ஷா என்றெல்லாம் தமிழ்நாடு ரிக்ஷாவின் பரிணாம வளர்ச்சியைக் கண்டது. தி.மு.க. வளர்த்த அரசியல் கலாசாரம் ரிக்ஷாவுடன் பின்னிப் பிணைந்தது போலவுந் தோன்றுகிறது. சிவாஜியும் சிவகுமாரும் ரிக்ஷாக்காரன் வெஷத்தில் பிய்ச்சு வாங்கினார்கள். எல்லாருக்கும் வாத்தியாரான எம். ஜி. ஆர். ரிக்ஷாக்காரன் படத்தின் மூலம் தமது அரசியற் செல்வாக்கின் அடித்தளத்தைக் கட்டி எழுப்பினார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்

www.padippakam.com



ரிக்ஷாவுக்குச் சமாதி கட்ட விழைந்த அ.செ.மு.வும் இன்று ரிக்ஷாவுக்கு 'குமுத'மான விளக்கம் கொடுக் கும்ஜெயகாந்தனும்!...யாழ்ப்பாணத்தில்,சைக்கிள்களின் பெருக்கமும் வாடகைக் கார்களின் வருகையும் ரிக்ஷா வின் உபயோகத்தைச் செயலிழக்கச் செய்தன.

ஆரம்ப காலத்து வாடகைக் கார்கள் 'ஹுட்' (Hood) மடிக்கக்கூடியனவாக இருந்தன. 'ஹுட்' மடித்து, ரத்தினக் கம்பளம் விரித்து, புதுக் கல்யாண ஜோடியை தோழன் தோழி புடை சூழ அமர்த்தி, 'பெற்றோ மாக்ஸ்' வெளிச்சத்தில், அரக்கி அரக்கி ஓட்டுவது கண் கொள்ளாக் காட்சியாகும். இதனாற் றான் 'கல்யாணம் காட்சி' என்று சொன்னார்கள் போலும்! எங்கள் பகுதியில் மயிலு, நாகநாதி, சுப்ரன், இராசையா ஆகிய கார்க்காரர்கள் பிரபலமாகத் திகழ்ந் தார்கள். நாகநாதி வேட்டைப் பிரியர். அப்பையாவின் கூட்டாளி. அந்தக் காரிலே பல தடவை பயணஞ் செய் திருக்கிறன். கார்களையும், பஸ்களையும் ஓட்டும் 'இறைவர்கள்' பெரிய விண்ணன்கள் என்கிற மலைப்பு எப்பொழுதும் எனக்கு உண்டு. பெரிய ரப்பர் குமிழ்கள் பொருத்தப்பட்ட அந்தக் காலத்து 'ஹோரன்'களுக்கு நிகர் இல்லை என்று சொல்லலாம். கார் ஸ்டியரிங்கை இடக்கையால் பிடித்துக் கொண்டு, வலக்கையால், வெளியே பொருத்தப்பட்டிருக்கும் 'ஹோர'னின் ரப்பர் பகுதியை உள்ளங்கை முழுவதையும் அமுக்கிப் பிசைந்து 'பூம்...பூம்...' என்று ஒலி எழுப்புவார்கள். அந்தச் செயல் பெண் பிரயாணிகளை நாணச் செய்யும்! கார்க் காரர் பலர் அந்தக் காலத்திலே பெரிய காதல் மன்னர் களாகத் திகழ்ந்ததற்கு இந்த 'ஹோரன்' அடிக்கும் வித்தை பெரிதும் உதவியிருக்கலாமோ என்கிற என் சந்தேகத்திற்கு இதுவரை விடை கிடைக்கவே இல்லை,

www.padippakam.com



ஆரம்ப காலத்தில் தட்டி பஸ்ஸுகளே ஓடின. மூன்று பக்கமும் வளைச்சு வாங்குகள் மாட்டி வைக்கப் பட்டதைப் போன்று நீட்டு 'சீற்'றுகள். நடுவில் வக்கு. பயணிகளின் சாமான்களும் கடகங்களும் இங்கு-வக்கில் குவிக்கப்படும். சாமான்களுடன் 'சாமான்'களாகப் பஞ்சமரும் அமர்த்தப்படுவர்கள். காலியாக இருந்த 'சீற்'றுகளிலே கையைக் காலை நிமிர்த்திக் குந்தி, 'தர்ம அடி'க்குப் பிறகு அறிவு தெளிஞ்ச கீழ் சாதிச் சனங்கள் ஏராளம்! குடாநாட்டின் பஸ் சேவைகளை மூன்று தனியார் பஸ்கம்பனிகள் பங்கிட்டுக்கொண்டன. நான்காவது பஸ் கம்பனி 'என்ஓபி' பெரியது. குடா நாட்டுக்கு வெளியே, மன்னார், முல்லைத்தீவு, திருக் கோணமலை போன்ற இடங்களுக்கு 'என்ஓபி' தான் போகும். முள்ளியவளைக்கு அப்பாலுள்ள பற்றாப்பளை அம்மனின் வைசாகப் பொங்கலுக்குப் போவதற்காகத்தான் நான் முதன் முதலில் பஸ் பிரயாணஞ் செய்ததாக ஞாபகம். என்ன சோக்கான பயணம்! முற்பகலில் புறப்பட்டு வலு பின்னேரமாச்சு முள்ளியவளை வர. இவ் வளவு நீண்ட நேரம் நான் பயணஞ் செய்த தில்லை. வழியில், முறுகண்டியிலும் இன்னொரு இடத்திலும் சங்கரக் குஞ்சி கொப்புக் கொப்பாகப் பாலைப்பழம் ஆய்ஞ்சு தந்தவர். ஐஞ்சாறு பாலைப் பழங்களை ஒண்டாப் போட்டுச் சப்பினால் சூயிங்கம் போல சப்புப்படும். நல்ல வெந்தயக் குழம்போடை பச்சையரிசிச் சோறு கட்டுச் சாதமாகக் கொண்டு போயிருந்தம். மாங்குளத்திலை வண்டிலாச்சி குழைச்சுத் திரணை திரணையாக எல்லார் கைகளிலும் வைச்சவ. அங்கு ஒரு சாப்பாட்டுக் கடை இருந்தது. 'தொங்கு மான் இறைச்சி போடுவாங்கள்' என்று அங்கு சாப்பிடப் பலருக்கும் பயம்.

www.padippakam.com



இரண்டாம் உலகமகாயுத்தம் எல்லாத்தையும் சட்டுப்புட்டென்று மாத்திப்போட்டுது. ஜீப்புகளும், மிலிட்டரி ட்றக்குகளும் ஓடத் துவங்கின. ‘கண்விண்’ தெரியாத, புழுதி பறந்த ஓட்டம். அப்பொழுதுதான் நான் முதன் முதலாகக் காப்பிலிகளைப் பாத்தனான். ஓட்டக்கார ஹிபுக்காவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந் தனான். சம்பத்திரிசியார் கல்லூரிச் சுவர்களில் மாட்டப் பட்டிருக்கும் Team Photos ஸில் அவன் உருவத்தைப் பாத்திருக்கிறன்.' ஓட்டுமடத்தைச் சேர்ந்த சோனகப் பொன்னம்மா வீட்டிலிருந்து ஒரு பொம்பிள்ளையை காப்பிலிகள் கூட்டிக் கொண்டுபோனவங்களாம். பேந்து அவள் ரெட்டைப் பனையடியிலை சவமாக் கிடந்தவளாம். துவாய் கட்டினாலும், அவங்களின்ரை கோஷான் கீழாலை தெரியும். ‘அவங்களை சரிக்கட்டலாம் எண்டு இந்தப் பேய்ப் பொடிச்சி போயிருக்கிறாளே!’ யாழ்ப்பாணமே கலங்கிப் போச்சு! பேந்தென்ன? காப்பிலிகளுடைய தலையைக் கண்டால், ஒரு பொம்புளைக் காக்கை குருவிகூட றோட்டிலை நிக்காது.

எண்பது ஆண்டுகளுக்கு முன்பே ரயில் வந்து விட்டது அப்பொழுது இராமநாதன் துரை தமிழரது-ஏன் இலங்கையரது தனிப்பெருந் தலைவராக கொடிகட்டிப் பறந்த காலம்! மருதனாமடம் அல்லது நாச்சிமார் கோயிலடியில் நின்று அவர் குடையைக் காட்டினால், ஓடும் இரயில் நின்று அவரைஏற்றிச்செல்லுமாம். இப்படி எத்தனையோ கதைகள். இதில் உய்த்துணரப்பட வேண்டியது இராமநாதன் துரையின் பெருமை மட்டுமல்ல. அந்தக் காலத்து ரயில்களின் வேகமுந்தான்! கொள்ளையாகப் புகை கக்கும் கரிக்கோச்சிகள். பளைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில், இன்சினும் இருக்கைகளும் ஒரே பெட்டியில் அடங்கிய ‘ரொலி’கள் ஓடின. அவை நெடுங்குளம், கச்சேரியடி, நாவான்

www.padippakam.com



துறை (நாவலர் வீதி), நாச்சிமார் கோயிலடி போன்ற ரயில் கடவைகளையும் தரிப்பிடங்களாகக் கொண்டன. பெரும்பாலும் 'கேற்' போட்டுப் பாதுகாப்பு செய்யப் படவில்லை. 'கோச்சி வரும் கவனம்' என்ற எச்சரிக் கைகள் மட்டுமே மாட்டப்பட்டிருந்தன. இதனால் 'கொப்பரும் வருவார் கவனம்' என்று எழுதிய தாகக் கல்லடி வேலனின் சாமர்த்தியங்களுக்கு வால் வைக்கும் ஜிகினா வேலைகள் சுலபமாயின. எஸ்.எஸ். ஸி. சோதினை எழுதியதற்குப் பரிசாக எனக்குக் கொழும்புப் பயணம் வாய்த்தது. புத்தகக்கடை பூபாலசிங்கந்தான் எனக்குப் பயணத்துணை. இர வெல்லாம், பதின்மூன்று மணி நேரம், யன்னலால் வந்த புகையிலே மண்டிய கரித்தூள்களிலே குளித்துக் கொழும்பை அடைந்தேன். பூபாலசிங்கம் நல்ல நாவலா சிரியாகத் திகழ்ந்திருக்க வேண்டியவர். பாவம், எழுத வாய்ப்புக் கிடைக்கவில்லை. ரயில் பாதையிலே திருத்த வேலைகள் நடைபெற்றால் குட்டிக் குட்டி வாகனங்கள் வந்து நிற்கும். சில சமயம் வெள்ளைத் தோல்காரரும் வருவார்கள்.

குட்டி வாகனங்களைப் பற்றிச்சொல்லும் பொழுது, யாழ்ப்பாணத்திற்குக் கார் வந்த போது நடந்த கலாதி கள் பற்றி வெண்தாடிக் கிழவர் சின்னண்ணனுக்குச் சொன்ன கதைகள் நினைவுக்கு வருகின்றன. பணக் காரப் புள்ளி ஒருவர் கொழும்பிலிருந்து 'அவிழ்த்துக் கொண்டு' வந்த ரயில் குட்டியைப் புதினம் பார்க்கச் சென்ற வர்த்தமானத்தை வர்ணித்தார். நாம்பன் குட்டியைப் போன்று உறுமிக் குதித்துக் கொண்டுதான் 'ஸ்ராட்' எடுக்குமாம். இரவில் காவோலைப் பந்தத் தைப் பிடித்துத்தான் ஓட்டினார்களாம். அடிக்கடி அதுக்குத் தண்ணி காட்ட வேண்டுமாம். அலவாங்கை வளைத்தது போன்ற பெரிய சாவியைப் போட்டு 'ஸ்ராட்' எடுப்பதற்கிடையில் சிலருக்கு மூலம் புறப்பட்டு

www.padippakam.com



விடுமாம். 'ஏபோட்டி'களும் 'மொறிஸ் மைனர்'களும் வந்த பின்னர்தான் காரின் பாவிப்பு யாழ்மண்ணிலே வேரூன்றியது. மெயின் றோட்டுகளைச் சறுக்கி, உள்ளுக்குள் பல சங்கிலி 'வானா'க்களை இணைத்துச் செல்லும் யாழ்ப்பாணக் குச்சொழுங்கைகளுக்கு பெரிய கார்கள் சரிப்படாது. 'மரபு' ஆசிரியர் அரவிந்தன் அண்மையிலே தமது தந்தை பற்றிய ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். புதிய வக்ஸோல்கார் ஒன்றை வாங்கி வந்த தந்தையார், ஒடுக்கமான ஒழுங்கையால் ஓட்ட முடியாது, அதனைப் பாதி வழியில் நிறுத்தி வைத்தாராம். அப்பொழுது ரயில் பெட்டி ஒன்று தனியே கழன்று நிற்கும் புதினத்தைப் பார்க்க ஊர் கூடிவிட்டதாம்! மட்டக்களப்பு வாசியாகி பிறகு யாழ்ப் பாணம் போனால், யாழ்ப்பாணம் தேவனின் 'பக்பியட்' ஓடித்திரிந்ததும் மறக்க ஒண்ணா அநுபவமே. மட்டக் களப்புத் தமிழ் விழாவுக்கு பண்டிதர் தங்கம்மா அப்பாக் குட்டியை அழைப்பதற்கு மல்லாகத்து ஒழுங்கைகள் ஊடாகத் தேவன் தமது காரை ஓட்டிய லாவகம் மெச்சத் தக்கது. பனையோலை வேலிகளைச் சிராய்ச்சுக் கொண்டு, வேலிக்கும் நோகாமல், காருக்கும் சேத மில்லாமல் காரை ஓட்டியது ஒரு சாகஸமே.

கமலா சர்க்கஸ்காரன்கள் வந்து யாழ்ப்பாணத்தை ஒரு கலக்குக் கலக்கியது, இன்றைய வழுக்கத் தலையர்களுக்கும் நரை தலையர்களுக்கும் நல்லா ஞாபகம் இருக்கலாம். சிங்கள இன வாதத் தின் கடுப்புக்கும் கொதிப்புக்கும் இலக்கான யாழ் நூல் நிலையம் அமைந்துள்ள இடம் அக்காலத்தில் பொட்டல் நிலம். யாழ் நகர் மாடுகளின் மேய்ச்சல் மைதானம். பொதுக் கூட்டங்களின் அரங்கு. அங்கு தான் கமலா சர்க்கஸ் 'டேரா' போட்டு யாழ்ப்பாணக் கசவாரங்களுடைய காசுகளைக்கூட வறுகி எடுத்த வனுகள். பாதாளக் கூண்டிலே நடத்தப்பட்ட மோட்

www.padippakam.com



டோர் சைக்கிள் சாகஸத்தை உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு பாக்க வேணும். மெக்கானிக் அப்பாமணியை வெண்ட மோட்டார் சைக்கிள் ரேஸ் காரன் யாழ்ப்பானத்தில் இல்லை. அவர் றோட்டிலை சர்க்கஸ் ரிக்ஸ் காட்டி, கனகாலம் ஆஸ்பத்திரியிலை கிடந்தவர். பேந்தும் ரேஸிலை அவரை அடிக்கேலாது. கொட்டடித் தெய்வேந்திரன் மோட்டார்ஸ் ரோர்ஸ் முத்தையா எல்லாம் எந்த மூலைக்கு? சிவன்கோயிலடிச் சீனனும் ரேஸிலை விண்ணன் என்று பெயர்எடுத்தவன்.

எனக்கென்னவோ அந்த கமலா சர்க்கஸ் சைக்கிள் சாகஸங்களை மறக்கொண்ணா. அந்தரத்திலே காட்டப் பட்ட கொடிக் கம்பியிலே, ஒற்றைச் சில்லுச் சைக்கிள் களில் குடைகள் பிடித்தும் பிடிக்காமலும் அவளுகள் செய்த திறிக்கீஸுகள் கொஞ்சமே?...எப்படியும் சைக்கிள் ஓட வேணும் எண்ட வெறியை அவளுகளுடைய நூதன மான குண்டி நெளிப்புகளும் தூண்டியும் இருக்கலாம். இல்லாட்டிலும், யாழ்ப்பாணக் காலாசாரத்திற்கு மசித லும் தவிர்க்க இயலாத நியதி.

என்ன இருந்தாலும், அன்றும் இன்றும், ஏன் என்றுமே யாழ்ப்பாண மண் இயல்பாகத் தத்தெடுத்துக் கொண்ட வாகனம் சைக்கிள்தான். சைக்கிள் என்றால் றலி; றலி என்றால் சைக்கிள். இந்த றலி சைக்கிளு டைய முழுத்துவ வடிவை—நல்லூர்க் கந்தனின் தேர் அசைந்து வரும் பவ்விய கோலத்தை—பிராண்பத்தை என்ற கிராமத்திலிருந்து 'கறியர்'களில் எண்ணெய் டின்களை வைத்து நல்லெண்ணெய் வியாபாரிகளாய் பவனி வந்தவர்களுடைய வாகனங்களைப் பார்த்தால் தான் தெரியும். முன் 'மட்காட்'டில்பூட்டப்பட்ட குதிரை என்ன? பல்வேறு ஓசைகள் எழுப்பும் மணிகள் என்ன? அலங்காரச் சங்கிலிகள் என்ன? 'சீற் கவர்' அலங்காரம் என்ன?'பார் கவ'ரின் வனப்பென்ன?'ரிம்' துடைக்கும்

www.padippakam.com



குஞ்சங்கள் என்ன? சும்மா சொல்லப்படாது, அவர்கள் தங்கள் மனைவிமார்களிலும் பார்க்க தங்கள் சைக்கிள் களைக் கண்ணும் கரிசனையுமாகப் பராமரித்தார்கள். அவர்கள் விடையேறிய கடவுளர்கள்!

இரும்பினாலே செய்த ஏதோ ஒன்றை நமது கவட்டுக்குள் வைத்துக் கொண்டு, நமது சக்தியை விரயஞ் செய்தே அதனை உருள வைத்து, நம்மை அது சுமப்பதாக நம்மை ஏமாற்றும் வித்தைதான் சைக்கிள் ஓட்டுவது என்று அந்தஆங்கில அறிஞர் பாணியிலே நினைக்க இன்றுவரை தோன்றவில்லை. பழைய சைக்கிள் றிம் ஒன்றை, வட்டுறுப்பான துவரங்கேட்டியால் உருட்டிக் கொண்டாடுவதில் உள்ள சுகமே தனி. அந்த வளையம் இருக்கும் வரையிலும் எத்தனை தடவை வேண்டுமென்றாலும் செல்லத்துரை கடைக்குச் சாமான்கள் வாங்கி வரப்போவதற்கு நான் பஞ்சிப்பட்டதே கிடையாது. அதனை வேகமாக ஓட்டிக் கொண்டு ஓடுவதிலுள்ள 'திறி'லும் திருப்தியும் அலாதியானவை. நான் வளையத்துடன் மினக்கெட, அண்ணன்மார் இருவரும் (பெரியம்மா பிள்ளைகள்) சைக்கிள் ஓட்ட நன்றாகக் கற்றுக் கொண்டார்கள், பின்னாலுள்ள கறியரிலும், முன்னுக்கு பாரிலும் 'டபிளா' க்க் குந்திச் சவாரி செய்தது அலுத்து, நானே ஓட்ட வேண்டுமென்ற ஆசை விஸ்வரூபம் எடுத்தது. சின்னண்ணனுக்குச் 'சிண்'ணாகவேலை செய்தும், சில சமயம் 'கப்பம்' செலுத்தியும் அவரை மசிய வைத்தேன். மத்தியானச் சாப்பாட்டுக்குக் காசு கிடைக்கும் வரை பணத்துக்குப் பஞ்சமில்லை. எல்லாம் தயார். விடுமுறையும் வந்தது.

நேற்று முளைச்ச தகரப் பற்றை . . ல்லோ, கமல ஹாஸனை சகலகலாவல்லவன் என்று தூக்கிக் கொண்டாடுவானுகள். சைக்கிள் கடை ராசா அண்ணர்

ந—5

www.padippakam.com



தான் 'ஒரிசினல்' சகலகலாவல்லவன். அவருக்குத் தெரியாத வித்தை இந்த லோகத்தில் இல்லை. கார், மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்று அவருக்கு ஓட்டத் தெரியாத வாகனமும் இல்லை. அவர் சைக்கிள் ஓட்டத் திலை காட்டுற வித்தையை நாள் முழுவதும் சாப்பிடா மல் பாத்துக் கொண்டிருக்கலாம். கால்களை ஹாண்டி லில் போட்டுக் கொண்டு, தலைக்கு மேலே கையைத் தட்டிக் கொண்டு, பிறிவீலில் ஓடும் சைக்கிளை எத்தனை சுற்றுச் சுற்றுவார் தெரியுமே? சைக்கிளை றோட்டிலே தள்ளிவிட்டு, ஒரு துள்ளு துள்ளிக் காற் றிலே நீத்தி சீற்றிலே தாவும் லாவகம் என்ன? கை ஹாண்டிலிலும் இல்லை; கால் பெடலிலும் இல்லை; சைக்கிள் வீச்சாக ஓடிக் கொண்டே இருக்கும்... கிராம்போன் பெட்டிகள், பெற்றோமாக்ஸ் லைட்டுகள் என்று எதைத்தான் திருத்தத் தெரியாது? கல்யாணம், சாமத்தியச் சடங்கு, பணச் சடங்கு எண்டு எது வந்தா லும், ராசா அண்ணரின் உதவி தேழ்வை. எது பழுது பட்டாலும் 'ஒருக்கா ராசாவைக் கையோடை கூட்டிவா' என்பார்கள். அவர் வந்து திருத்தத் தேவையில்லை. கைவச்சாப் போதும். அப்பிடி ஒரு கை, வடிவான ஆம்பிளையும். 'பூலோகரம்பை'யிலும் 'மனோன்மணி' யிலும் செக்கண்ட் கதாநாயகனாக நடிச்ச டி. ஆர். மஹாலிங்கம் ராசா அண்ணரின் வடிவிலை பிச்சை கேட்க வேண்டும், போங்கள்! நாவலர் றோட்டில் மணிக்கூட்டுத் தெரு ஏறுகிற சந்தியிலிருந்து, நீராவி யடிப் பக்கமாக, ஓலைகளும் தகரங்களும் சப்புப் பலகை களும் இணைந்த ஒரு கட்டடத்தில் ராசா அண்ணரின் வாடகைச் சைக்கிள் கடை இருந்தது. அவருடைய கடையில் எந்த சைஸிலும் சைக்கிள் கிடைக்கும் என்னைப் போன்ற 'பக்கிடாஸ்' பழகக்கூடிய சைக்கி ளுக்கு வேறுகடை இல்லை! கடைக்கு அடையா நெடுங்கதவு. அவர் கடையில் நின்றால் ஏதாவது 'ரிப்பேர்' வேலை நடக்கும். அவருக்கு ஊர் 'துளவாரம்'

www.padippakam.com



கணக்கு! திரைச்சீலைக்குப் பின்னால் நின்று, கடையை அவர் மனைவி ராணிதான் நடத்துவா. பெயர் வேறு என்னவோவாம். அவ பெரிய இடத்துப் பெண்ணாம். இவருடைய அழகில் மயங்கி ஓடி வந்தவவாம். பி.யூ. சின்னப்பா நடித்த பிருதிவிராஜ் படம் வந்த காலத்துச் சமாசாரம் என்றபடியால், அவ ராணி சம்யுக்தை என்று பட்டஞ் சூட்டப்பட்டு, 'ராணி' எனச் சுருக்க மாக அழைக்கப்பட்டா.

சின்னச் சைக்கிள் எடுத்து, பெருமாள் கோயில் வீதியைச் சுற்றி நான் சைக்கிள் ஓடப் பழகியது ஒரு தனிக்கதை...நான் உழக்க, சீற்றைப் பிடித்து வரும் அண்ணர் இடையிடையே கையை விட்டு...என் 'பலன்ஸிங்' முன்னேற்றத்தில் திருப்தி கண்டு, ஒரு சுற்றுக்கு என்னைத் தனியே விட, தெற்கு வீதியிலே, கேணிக்கு அருகில் கல்லுக் கும்பலுடன் மோதி...என் முழங்கால் சிரட்டையும் சைக்கிளும் உடைந்து... முழங்கால் புண்ணை மறைக்க பட்ட அவதியும், சைக்கிள் திருத்தங்களுக்கு மூன்று ரூபாய் கொடுக்கப் பட்ட உத்தரிப்பும்... ஒருவாறு சைக்கிள் ஓடப் பழகிக் கொண்டேன். பெடலை மிதித்து ஏறத் தெரியாது. அச்சிலை கால் வைத்து, நாலைஞ்சு யார்கள் கெந்தி அடிச்சு, 'சீற்'றுக்கு மேலாலை காலைத் தூக்கிப் போட்டுத்தான் ஏறுவன். வேர்த்து விறுவிறுக்க, யாழ்ப்பாணத்து தார் வீதிகள், மக்கிறோடுகள் ஒழுங்கைகள், குச்சொழுங்கைகள் எல்லாம் நான் மிதிச்ச சைக்கிள் பறந்தது. சாப்பாட்டுக் காசுகள் எல்லாம் சைக்கிள் வாடகைப் பணமாக ராசா அண்ண ரின் கைக்கு மாறியதைப் பற்றிக் கவலைப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் அத்தனையையும் அங்குலம் அங்குல மாக அளந்து தீர்த்த ஆனந்தத்திற்கு ஈடுஎன்ன...இதை யும் மறக்காமல் சொல்லவேணும். பெடிலை மிதித்துச் சைக்கிள் ஏறும் கலையைத் தாம்பரத்தில் எம்மாவின்

www.padippakam.com



உதவியுடன் வாலாயப்படுத்திய பிறகு, அச்சுவேலிக்கு 'டபிள்'போட்டுச் சைக்கிளில் போனபொழுது, கோப்பாய் போலீஸாரிடம் பிடிபட்டுவிட்டேன். வழக்குப் பதிவாகியது. அதனை மறந்து, கம்பளைக்குச் சென்று வேலையிற் சேர்ந்தேன். எனக்குப் பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டது. பின்னாளில் கல்வி அமைச்சராகப் பலதும் செய்த பதியுத்தீன் மஹ்மூத்தான் என் பிரின்ஸிப்பல். பிடிவிறாந்தைக் கண்டவுடன் ஒரு விசாரணையே நடத்தி முடித்தார். சைக்கிளில் டபிள் போன கேஸென்று அறிந்த பிறகு, அவர் சிரித்த சிரிப்பில் ஸாஹிரா கல்லூரி கட்டடம் அதிர்ந்தது. புத்தூர் கிராமக் கோட்டிலே வழக்கு நடந்தது. தீர்ப்பு: WARNED AND DISCHARGED! அந்த வழக்குக்குப் பிறகுதான், முழு லைசென்ஸ் பெற்ற உணர்வும், யாழ்ப்பாண வாகன கலாசாரத்தின் ஒரு குடிமகன் என்கிற பெருமையும் எனக்கு ஏற்பட்டது!

யாழ்ப்பாணக் கலாசாரப் பெருமைகளுள் நீண்ட காலமாக நிண்டு பிடிப்பவற்றுள் ஒன்று றலி சைக்கிள் நாகரிகம் என்று நான் துணிந்து சொல்வேன். ரஞ்சன் விஜயரத்னா செத்த பிறகு வரக்கூடிய எந்தக் கொம்பனான சிங்களவன் அனுப்பக்கூடியகெலிகொப்டர் கண்காணிப்பிற்கும் பதில் சொல்லக்கூடியதிறமை யாழ்ப்பாணத்து சைக்கிள் நாகரிகத்துக்கு உண்டு என்று கத்துவேன். கத்துவதற்கான அரசியல் உரிமையை மட்டும் தமிழன் தாராளமாக அநுபவித்து வந்திருக்கிறான்.

பொங்கல் எங்கள்
தைப் பொங்கல்
பொங்கல் பொங்கல்
தைப் பொங்கல்

பழையன கழித்துப்
புதியன புகுத்தி
அழகியல் செய்தது
எம்பொங்கல் -நம்

உளவியல் எல்லாம்
உலகினர் உணர்ந்து
உயிர்பெற வைத்தது
தைப் பொங்கல்

கங்குற் பொழுதில்
கதிரவன் எழுகையில்
பொங்கிச் சரிந்திடும்
புதுப்பானை -அட
எங்கும் சீனா
வெடிபல சிதறிட
எழுச்சி தந்தது
எம் பொங்கல்

பொங்கல் எங்கள்
தைப் பொங்கல்
பொங்கல் பொங்கல்
தைப் பொங்கல்

# 5. புதிசு

காலநதி ஓடிக் கொண்டிருக்கு ! ஓட்டத்தின் பயன் என்ன? ஒலிம்பிக் மெடலா ? நதி கடலிலே சங்கமிக்குமாம். அப்பொழுது பழையன கழியுமா ?... உற்பத்திக்கும் சங்கமத்துக்கும் இடையில் நதி வற்றாத யௌவனம் சிந்தும் இரகசியம் என்ன ?

www.padippakam.com



காலக் குறளியிலே ஏறி, வசதி போலே முன்னும் பின்னும் எகிறி, நனைவுகளிலே எப்படியெல்லாம் நிச்சடிக்கின்றேன்? தோய்ச்சலடிக்கிறேன். சற்றே நிதானிக்கும் பொழுது, அதற்கிடையில் எனக்கு அறுபது வயதாகி விட்டதா?

நாலு ஆண்டுகளுக்குமுன்னால், அவுஸ்ரேலியாவில் குடியேறிய என் மூத்த மகன் அநு வீட்டில் வந்து தங்கினேன். நத்தார் கழிந்தும், அதன் அமளி கள் அடங்குவதற்கு முன்னர் வந்தவன், புதிய ஆண்டு. பிறகு? 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று என் மனம் உச்சாடணம் செய்கிறது. 'பழக்கம் பெரிசோ? பரவணி பெரிசோ?' அம்மா கேட்பாள்.

''மகள், பொங்கல் வருகுது. இங்கை நீங்கள் தைப் பொங்கல் கொண்டாடுறது இல்லையா?'' என்று மெதுவாகக் கேட்கிறன். அநு மகனின் மனைவி ஷாமி னியை நான் மகள் என்றுதான் அழைப்பேன். அவள் முதன் முதலாக ஒரு மாமாங்க காலத்திற்கு முன்னர், சின்ன உப்போடையிலுள்ள வீட்டுக்கு வந்த பொழுது, எ னை ''அப்பா'' என்றே அழைத்தாள். இன்றுவரை ''அப்பா'' என்றுதான் அழைக்கிறாள். அந்த அழைப் பின் கனிவு எனக்கு நல்ல விருப்பம்.

''இங்கையும் பொங்கிறதுதான். சாய் சென்ட ரிலை வடிவாப் பொங்குவார்கள். நாங்களும் அரிசியும், சக்கரையும் வாங்கிக் குடுக்கலாம். பொங்கலுக்குப் போனால், நாங்களும் பொங்கினது போலைதான்...'' ஷாமின் விக்கித் தக்கி நடைமுறை வழக்கத்தைச் சொல்லிச்சு.

''புட்டபத்தியிலை சிவராத்திரி, நவராத்திரி, கிறிஸ் மஸ் கொண்டாடுறதுபோலை, பொங்கலும் கொண் டாடுறவையாமோ?''

www.padippakam.com



''தெரியாது அப்பா...''

''பொங்கல் சமய வழிபாட்டு வைபவமல்ல. அது தமிழர் விழா. வீட்டிலைகொண்டாடுறதுதான் வழக்கம். அவுஸ்ரேலியத் தமிழர்களுடைய வழக்கம் புதிசாய் இருக்கு...'' தொடர்ந்து பேசாது முத்தாய்ப்பு வைத்தேன். புதிய உலகத்தில் கிழடு கட்டைகளுடைய அபிப்பிராயம் செல்லாது. வேறு அலுவல்களில் என் பிராக்குத் திரும்பியது.

அடுத்த நாள். ''அப்பா, நாங்கள் வீட்டிலை பொங்குவம்!'' என்கிற அறிவித்தலுடன், பொங்கலுக்கான சாமான்கள் சகிதம் அநுமகன் வந்து சேர்ந்தான். நான் குஞ்சானாய் இருந்த காலத்தில்...

நான் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், சேணிய தெருவதின் கிழக்கு விலாவில் வைத்துப் படுத்துக் கிடக்கும் ரயில்பாதையில் நின்று குதிக்கின்றேன். இரவு வலசில் பளையை நோக்கிப் போய்விட்டது. அதற்குப் பச்சை விளக்குக் காட்டி, பேந்து, பென்னம் பெரிய ஒளிரும் குங்குமப் பொட்டை அப்பிக் கொண்டுநிக்கிறது கைகாட்டி. இலேசாக நிலவு எறித்ததாகவும் நினைவு. பழைய நினைவுகள் காவியந் தடவுவதாகவும் இருக்கலாம். நத்தார் மழை ஒழுங்கு. அது நிச்சயம். நத்தாருக்குக் கடைகளில் முட்டை வலு'அருந்தல். அப்பையாவுக்கு எந்த நாளும்- வெள்ளிக்கிழமை எண்டாலும்- காலையில் இரண்டு முட்டையடிச்சுக் கோப்பி தேவை. காலையில், வேதக்காரன்களைப் பற்றிப் புறுபுறுத்தபடி ஆட்டுப்பால் கோப்பிதான் குடிச்சவர். நத்தார் முடிஞ்சாலும் பறங்கித் தெருப் பக்கம் இடையிடை சீனவெடிச்சத்தம் கேட்டுக் கொண்டு இருந்தது...இப்ப, இந்த இராத்திரியில், அந்தா... அந்தா...வானத்திலிருந்து சிவப்பும்,பச்சையும்,நீலமும்,

www.padippakam.com



மஞ்சளுமாக தீப்பூக்கள் சொரியப்படுகின்றன. அது சோக்கான மத்தாப்பு...! ஈக்கில் வானமும் வானத்தைக் கிழிச்சுக் கொண்டு போய் அந்தரத்தில் வெடிக்குது...சம்பத்திரிசியார் கல்லூரிக்குப் போகும் வரையிலும், வேதக்காரர் வாழ்ந்த பகுதிகள் வேறொரு தனியுலகம் என்கிற கற்பனைகளிலை வாழ்ந்து கொண்டிருந்தவன். அந்தக் கற்பனைக் காலத்தில், தென் கிழக்குத் திக்கிலே வானைப் பார்த்து இப்பிடி வாழூறது வழக்கம். எங்கடை பகுதியிலை—சைவப் பகுதியிலை—பொங்கலை அண்டித்தான் சீனவெடி அமளி நடக்கும்.

குஷினிக்குப் பின்னால், பதினெட்டு அடியான் தென்னைக்குப் பக்கத்தில், அம்மா புது அடுப்புகள் பிடிக்கத் துவங்கினவுடனை எனக்கு விளங்கிப் போகும், பொங்கல் கிட்டடியிலை வரப்போகுது எண்டது, சின்ன மாமாவின்ரை புண்ணியத்திலை தேவையான செம்பாட்டுக் களிமண்ணும் வந்து சேர்ந்திடும். அம்மா எப்பவும் எதிலும் தூசு துப்பரவு. ஒரு ஒழுங்கு. சாயங்கால வேளைகளில் அவவைப் பார்த்தாத் தன்னாலை பக்தி வரும். மூன்று நான்கு கை விளக்குகள். சாமி அறையில் ஒரு குத்து விளக்கு அவை அனைத்தும் வெண்கலம். புளியும் சாம்பலும் போட்டு அம்மா மினுக்கினால், பவுணிலை செய்தது போல மினுங்கும். வீட்டிலை ஒரேயொரு அரிக்கன் லாம்புதான். காத்து அடிச்சாலும் அரிக்கன் லாம்பு நூராது, ஆனால், அடிக்கடி 'சிம்னி' உடையும். ''அக்காச்சி தேய்க்கிற தேய்ப்புக்கு நிண்டு பிடிக்காது'' என்று சின்ன மாமாவே பகிடி பண்ணுவார். அரிக்கன் லாம்பு போலை. கைவிளக்கும் மண்ணெண்ணையிலை எரியும். ஒரு போத்தில் நாலு சதம். ஒரு கலன் பெட்ரோல் இரண்டே கால் ரூபாய்க்கி நான் வாங்கியிருக்கிறன். குறள் திரி எண்டால் புதுத் திரி போடுவா. திரிபோடுறதுக்கென்றே பழைய,

www.padippakam.com



கிழிஞ்ச வெள்ளை வேட்டியளைப் பத்திரப்படுத்தி வைச்சிருப்பா. விளக்குகளுக்கு எண்ணெய் விடுவதற்குச் சின்ன புனல் வைச்சிருந்தவ. குத்து விளக்கு தேங் காண்ணெயிலைதான் எரியும். குத்துவிளக்கை ஏற்றின பிறகுதான், மற்ற விளக்குகளைப் பத்த வைப்பினம். வெள்ளிக்கிழமையலிலை சாம்பிராணிப் புகைக் காட்டி னால், எல்லா இடமும் கமகம என்று வாசினையாய் இருக்கும். விளக்கு வைப்பதற்கு முன்னர் வளவு கூட் டப்படும். அம்மா முற்றத்தைக் கூட்டினால், நல்ல வடிவாய் இருக்கும். வகிடு எடுத்துத் தலைவாரியது போல, விளக்குமாறின் ஈக்கில்களின் நர்த்தனச்சுவடு கள் ஆழமாகப் பதிந்திருக்கும். வெயில் காலத்தில் மண்ணின் மணம் புழுதியுடன் கிளம்பும். நிலத்தைக் குளிர்ச்சியாக்க தண்ணீர் தெளிப்பா. சில சமயம் மஞ்சள் தண்ணீர். மஞ்சள் ஒரு கிருமிநாசினி எண்ட நம்பிக்கை இருந்தது.

புது அடுப்பிலை, புதுப் பானை வைத்து, சூரிய ஒளி நன்றாக விழக்கூடிய முற்றத்திலே வைத்துத்தான் தைப்பொங்கலுக்கான பொங்கல் நடக்கும். பொங்க லுக்கான முதல் ஆயத்தம் புது அடுப்புப் பிடிப்பது. ஒரு அடுப்புக்கு மூன்று கற்கள். மாட்டுப் பொங்கலுக்கும் புது அடுப்பு. அப்ப இரண்டு அடுப்புக்களுக்கான ஆறு 'கற்கள்' பிடிக்கப்படும். ஒரு கல்லின் உயரம் ஒரு அடி இருக்கும். 'கல்' என்றாலும் அது கட்டியான களிமண்ணிலே செய்யப்படும். நன்றாகப் பிசைஞ்சு இருக்கமான களியிலே செய்யப்படும். வெடிப்புகள் ஏற்படாமல் காயவேண்டும். அடுப்புகள் செய்வது பாரிய வேலை. அம்மா களைச்சுப் போவா, ஆனால் அடுப்புச் செய்யிற வேலையில் யாரும் அவவுக்கு உதவி செய்யப்போகக் கூடாது. உதவியை உபத்திரவமாக விளங்கிக் கொள்ளுவா. தன் பணியைத்தனியே செய்து பழக்கப்பட்டவ. அடுப்புக்கான கற்களைப் 'பிடித்து'க்

www.padippakam.com



காய வைத்தவுடன், மற்றைய வேலைகளும் துவங்கி விடும். வீடு அல்லோல கல்லோலப்படும். அறைகள், குஷினி ஆகியவற்றுள் அடைஞ்சு கிடக்கும் அத்தனை சாமான்களும் வெளியில் வந்து விடும். சின்ன மாமா எதையும் சுறுக்கெனப் பிடிச்சுக் கொள்வார். ஆரும் நச்சரிக்கத் துவங்கிறதுக்கு முந்தியே அப்புக்குட்டி மேசனைக் கொண்டு வந்து சேர்த்துப் போடுவார். அந்த வீட்டை அப்புக்குட்டி மேசன்தான் கட்டினவர். இண்டு அறைகள்; ஒரு விறாந்தை. பச்சைக் களிமண் 'கற்கள்' வைச்சுக் கட்டப்பட்ட சுவர்கள். உட்சுவர் வெளிச்சுவர் எல்லாம் சிப்பிச் சுண்ணாம்பில், பளிச்சென்று வெள்ளை நிறம் தெரியத் தக்கதாக நீலம் கலந்து வெள்ளையடிப் பார் அவர் வெள்ளையடிக்கிறதைப் புதினம் பார்த்துக் கொண்டு நிற்பன். பசிக்கவும் மாட்டுது. விறாந்தை நல்ல சீமெந்துக் கட்டு. பெரிய வீட்டுக்கு நடைபாதை. அது விறாந்தையைச் சின்னத் திண்ணையாகவும், பெரிய திண்ணையாகவும் பிரிக்கும். சின்னத் திண்ணை யின் கணிசமானஇடத்தைஒரு கட்டில்அடைத்துக் கொள் ளும். அந்தக் கட்டிலிலைதான் சின்ன மாமா படுப்பார். விறாந்தையின் பெரும் பாகமாக அமைந்துள்ள பெரிய திண்ணை, 'சபைகள்' நடத்துவதற்கும் ஏற்றது. அதற் குச் சீமெந்து இழுத்த பொழுது அப்புக்குட்டி மேசன் தனது வித்தை எல்லாவற்றையும் பிழிந்தார் என்று நினைவு. எத்தனையோ சதுர அமைப்புகள் பதியும் வண்ணம் என்னென்னவோ செய்தார். 'திண்ணை யிலை சாய்ஞ்சு இருப்பினம். பேந்து கஷ்டம். மூண்டடி உயரத்துக்கு டிஸ்ரெம்பர் அடிப்பம்' என்று ஆலோ சனை நல்கிச் செயற்படுத்தியவரும் அவரே. தளிர்ப் பச்சை நிறம் 'டிஸ்ரெம்பர்' அடித்தால் கொஞ்சக் காலத்துக்கு வஜ்ஜிரமும் சேர்ந்து மணக்கும், விறாந்தை வளையை நாலு மரத்தூண்களும், இரண்டு அரைத் தூண்களும் தாங்கின. அந்தத் தூண்களை நல்ல வேலைப்பாடுகளுடன் திருநெல்வேலித் தச்சு சின்னத்

www.padippakam.com



துறை இணக்கினவர். அந்த மரத்தூண்களுக்கு நல்லா 'மாட்ச்' ஆகும் என்று மரகதப்பச்சை வர்ணம். இந்த வெள்ளையடித்தல், வர்ணம் பூசுதல் எல்லாம் வீட்டுக்கு ஒரு புதுப் பொலிவு கொடுக்கும். இந்த மேசன் வேலைகள் எல்லாம் பொங்கலுக்கு இரண்டு மூன்று நாளுக்கு முன்னால் முடிச்சால்தான் அம்மாவுக்கு நிம்மதி. திருப்பி அடுக்கிற வேலை எல்லாம் பம்பலாய்க் கிடக்கும். தூண்களுக்கு அடிச்ச மிச்ச 'பெயிண்'ரைக் கொஞ்சம் தண்ணியாக்கியும் சங்கடப் படலைக்கும் பெயின்ற் அடிச்ச பிறகுதான் மேசனின் கணக்கு வழக்குகள் தீர்க்கப்படும்.

அடுப்படிப் பக்கம் அப்புக்குட்டி மேசன் எட்டியும் பார்க்க ஏலா. அடுப்படி சின்னன். இரண்டு பக்கம் இரண்டடி உயரக் குந்துகள். குந்துகளின் மீது ஒரே உயரமான பனைமட்டைகள் வரிச்சுப் பிடிக்கப்பட்ட கிறாதிகள். இந்தக் கிறாதிகள் வழியாகப் புகை கெதியா வெளியாலை போயிடும். காக்கைக் கிளியளின்ரை தொந்தரவும் இல்லை. செம்பாட்டு மண், முள் முருக்கம் இலைச்சாறு, இளங்கன்றுச் சாணகம் ஆகியவற்றால், அப்புக்குட்டி மேசனிலும் பார்க்கக் கலாதியான புதுப்புனைவை அம்மா அடுப்படிக்குக் குடுத்துப் போடுவா. எல்லாம் அவவின்ரை ஒரு கைப் படத்தான் நடக்கும். வீட்டுக்கு வாறவை எப்பவும் பெருமையாகச் சொல்லுவினம். ''அம்மாக் குட்டியின்ரை குஷினிக்கை இலை போடாமல், நிலத்திலை சோறுபோட்டுச் சாப்பிடலாம்...'' அம்மா எப்பவும் அப்பிடித்தான். எதிலும் ஒரு ஒழுங்கு; ஒரு துப்பரவு; ஒரு நறுவிசு. ஒப்பிட்டுப் பார்க்கையில் அப்பையா காட்டு மனிதன். ஒழுங்கு முறைகள் தன்னுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக அலுத்துக் கொள்வார். 'OPPOSITE POLES ATTRACT' என்று சொல்லி இன்னாசிமுத்து சேர் PHYSICS CLASSஇல் படிச்சவர்.

www.padippakam.com



சரியான உதாரணம்: அப்பையாவும் அம்மாவுந்தான். அம்மா நல்ல சிவப்பு. உறைநிலை அடைந்த குத்து விளக்குச் சுடர் போல! கருங்காலி மரத்திலை கடைஞ் செடுத்தது போலை அப்பையா பேய்க் கறுவல், ஆறடி உயரமுள்ள கட்டுடல். அம்மா துள்ளிப் பாய்ஞ்சாலும் அவருடைய உச்சியைத் தொடமுடியுமா என்பது ஐமிச்சம். ஒண்டாகப் போனால், பாலும் கோப்பியும் போகுது எண்டு ஒட்டை நாகேசர் பகிடி பண்ணுவார். அப்பையாவும் அம்மாவும் சண்டை பிடிச்சதை நான் பார்த்ததேயில்லை. எனக்கு நான்கு தம்பிமாரும்; நாலு தங்கச்சிமாரும். சிவஞானம் என்கிற தம்பி மட்டும் சின்ன வயசில் செத்துப் போனான். எங்கள் எல்லாரிலும் அவன்தான் விண்ணன் என்பது அப்பையா வின் அபிப்பிராயம்.

கழுவல் வேலைகள் துவங்கினவுடனை பல சாமான் கள் அடுப்புக்கு மண் எடுத்த கிடங்குக்குள் போகும். ஆச்சி ஊர்த் துலவாரங்களைத் தலையிலை அள்ளிப் போடுறதிலை விண்ணி. ஆக்களை நையாண்டி பண்ணு றதிலை அவ வெண்தாடிக் கிழவரின் அச்சாவான கார்பன் கொப்பி, அம்மா வீட்டைக் கோயிலாக்கிற திலை திருப்தி கண்டவ. நெருங்கிய உறவு முறையில் செத்த வீடு, முறை உறவின் சாமத்தியச் சடங்கு என்று போனால் உண்டு. விரத காலத்தில் இருபத்தைந்து நாளும் நல்லூர்க் கந்தசாமிகோயிலுக்குப்போய் வருவா. மாவிட்டபுரத்துக்கும் செல்லச் சந்நிதிக்கும் போய்வந்த தாகவும் ஞாபகம். கோயிலுக்குப் போனால், கடலைக் கொட்டைகளும் குஞ்சுப் பனங்கட்டிக் குட்டான்களும் வாங்கிவர மறக்கமாட்டா. வடிவான குஞ்சுப்பெட்டி, குஞ்சுக் கடகம், அடுக்குப் பெட்டி, மூடல் பெட்டி எல்லாம் வாங்குவா...கோயிலடியிலை சின்ன மாமாவைச் சந்திச்சால் வெண்கலச் சாமான்கள் வாங்கிப் போடுவா. சருவச்சட்டிகளும், மூக்குப்பேணிகளும் வந்து சேரும்.

www.padippakam.com



புதுச் சுளகும் வாங்கு வா. எல்லாத்தையும் பொதுக்கிப் பொதுக்கி வைச்சிருப்பா. பாவனைக்கு வராது. வீட்டின் சின்ன அறையைத் தொடுத்தாப்போல, கிழக்குப் பக்கமாக, கூரை இறக்கி இருக்கு. அதைக் கொட்டில் என்றுதான் சொல்லுவம். சுவரை ஒட்டினாற்போல, மண் திண்ணை. இந்தத் திண் ணையையும் அம்மாதான் இணக்கியிருக்க வேணும். அதிலை குந்தி அம்மா பாய் இழைக்கத் துவங்கீட்டால் தெரியும் அவ வீட்டுக்குத் தூரம் எண்டு. பனையோலை வார்ந்து நல்லாப் பாய் இழைப்பா. சின்ன மாமா தெல்லிப்பழைப் பக்கம் போனால், அம்மாவுக்குக் குருத் துப் பனையோலைகள் கொண்டு வர மறக்க மாட்டார். கரிக்கட்டியாலை திண்ணையிலே ஒரு கோடு போடுவா. தலைமாட்டிலை ஒரு இரும்புச்சாமான். திண்ணையை வகுத்தது போல பழைய உலக்கை. அவ எல்லையிட் டுள்ள பிராந்தியம் துடக்கு. அதற்குள் நான் கூடப் போகக் கூடாது. இந்தக் காலங்களில் இழைக்கப்படும் பாய்களும் பொதுக்கப்பட்டுவிடும். பொங்கல் சமயத் தில் பழைய பெட்டிகள், சுளகுகள், கிழிந்த பாய்கள் எல்லாம் பதினெட்டடியான் கிடங்கிலே வீசப்படும் பொழுதுதான் புதியன புழக்கத்துக்கு வரும். பொங்க லின் போது எல்லாச் சாமான்களும் புதியன போன்று தோன்றும். இந்தப் புதுக்கலுக்கு அம்மா நீண்ட கால மாகத் திட்டமிட்டு உழைப்பது வழக்கம் என்கிற உண் மையை இப்பொழுது நிதானிக்க முடிகிறது.

பொங்கலுக்கான சாமான்களை எல்லாம், பொங் கலுக்கு முதல் நாள்தான் அப்பையா வாங்குவார். ஐயம்பிள்ளை மாமாவும், சில சமயங்களில் கணவதி மாமாவும் சேர்ந்து கொள்வார்கள். பெரிய கடையிலை தான் வாங்குவினம். இதற்கும் முதல் நாளே செல்லத் துரை கடைக்குப் போய் பொங்கல் பானை வாங்கப் படும். பொங்கல் பானை வாங்கிறதுக்கு அம்மாவும்

படிப்பகம்

www.padippakam.com



கிறது முஸ்பாத்தியாம் இருக்கும். சின்ன மாமாவும். பெரியண்ணருந்தான் கனக்கச் சீனவெடிகள் கொழுத்து வார்கள். அம்மாவுக்கு எப்பவும் அடுப்படி வேலைகள் குவிந்து கிடக்கும். அப்படி என்னதான் வேலை இருக் குமோ? மற்றவர்களுடன் சண்டை போட்டு, சின்னண் ணருக்கு சீனவெடிகளிலே பெரிய பங்கு பெற்றுக் கொடுப்பதிலே வெண்தாடிக் கிழவர் குறியாக இருப் பார். ''எல்லாத்தையும் சுட்டுப் போடாதேயுங்கோ... நாளைக்குப் பொங்கல் பானைக்கும் தேவை'' என்று ஆச்சி அடிக்கடி நினைவுபடுத்துவா, கம்பி மத்தாப்பு கள். அதைப் பூந்திரி என்று சொல்லுவம். எனக்கு அதிகமாகத் தருவார்கள். அம்மா குஷினியை விட்டு வரும் வரையிலும் காத்திருப்பன். அவ உயரமான கைவிளக்குடன் வந்து சேருவா...அந்த விளக்கின் சுடரிலை கம்பி மத்தாப்பை எப்பிடிப் பிடிச்சுச் சுட வேணும் என்று காட்டித்தருவா. அதைச் சுழற்றினால், தங்கத்தை உருக்கி எடுத்த நிறத்தில், அல்லது நிலா வைப் பொடி செய்த நிறத்தில், பொறிகள் பறக்கும். நான் கம்பி மத்தாப்பைக் கொளுத்திச் சுழற்றும் பொழுது, அம்மாவின் முகம் என்னமாய் பிரகாசமாய் மலர்ந்திருக்கும்? அத்த முக மலர்ச்சியைப் பார்ப்பதற் காகவே, கம்பி மத்தாப்புகள் கொளுத்திக் கொண்டே இருக்கலாம் போலவும்!

புது வருஷமும் தீபாவளியும் பெரிய பண்டிகைகளே. ஆனால் யாழ்ப்பாணத்தில் பொங்கலுக்கு நிகரான பண்டிகை இல்லை எண்டு சொல்லலாம். சென்னை யிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளை விழுந்து விழுந்து வாசித்து என் இலக்கியத் தவிப்புக்குத் தீனி போட்ட காலத்தில், 'ஆனந்தவிகடன்' 'கல்கி' தீபாவளி மலர்களுக்காகத் தவம் கிடப்பன். அத்திம்பேருக்கோ, அக்காவுக்கோ பட்டாசு கொளுத்தி வேட்டு வைக்கும் வாண்டுப் பயல் பற்றிய ஹாஸ்ய துணுக்கு ஒன்றாவது

www.padippakam.com



வெளிவராத தீபாவளி மலர் இல்லை என்றே சொல்ல லாம். தீபாவளிக்குப் பட்டாசு சுடும் பழக்கம் யாழ்ப் பாணத்தில் இருக்கவில்லை. பட்டாசு வெடிக்கும் விவ காரத்தில் இருந்து, சென்னையும் இலங்கையும் வெவ் வேறான தமிழ் உலகங்கள் என்கிற எண்ணம் என் பிடிமானத்திற்குள் முதலில் எழுந்ததாக என்னால் இப்பொழுது நிதானிக்க முடிகிறது...எவ்வளவோ காலத் துக்குப் பிறகுதான், தமிழ்நாட்டில், திராவிட இன எழுச்சிப் பிரசாரத்தினால், பொங்கல் விழா 'தமிழர் விழா'வாக ஓர் அழுத்தம் பெறலாயிற்று.

சடங்கு சம்பிரதாயங்களிலே, அரசியல் சாயங்கள் பூசப்படுவதற்கு முந்தியே, யாழ்ப்பாணப் பொங்கல் விழா, கமக்காரர் விழாவாக, பாட்டாளிகளின் விழாவாக, தமிழர் பண்பாட்டு விழாவாக, விளைவுக்கு உதவும் கதிரோனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக, பழையன நீக்கி புதியன புனைந்து, புதியன கொண்டு வந்து சேர்க்கும் என்கிற நம்பிக்கைகளின் நுழைவாயில் விழா வாகப் பொங்கல் பண்டிகையை யாழ்ப்பாண மக்கள் கொண்டாடினார்கள். அந்தப் பண்டிகை பற்றிய நினைவுகளிலே தோய்தல் எத்தகைய சுகமான அநுபவ மாகவும் இருக்குது! அத்தகைய பண்டிகையை, அவுஸ்ரேலியாவில், சாய் பகவான் பெயரால் கொச்சைப் படுத்தும் கோணல் யுக்தி எப்படி உருவாகியது ?

பொங்கல் முற்றத்திலேதான் நடக்கும். பொங்கல் நடக்கும் இடத்தில், மணலைத் துடைத்து, வெறுந்தரை யாக்கி, இளங்கன்றுச் சாணகத்தால், அம்மா மெழுகி வைச்சிடுவா. சீனவெடி கொளுத்தி, மத்தாப்புக் கனவு களிலே, தூங்கிய நாங்கள், எழும்பி முழிப்பது முற்றத் தின் புதுக்கோலத்திலேதான். அன்று, அதிகாலை யிலே, பெண்கள் தோய்ந்து முழுகிவிடுவார்கள். தலை முடியுடன் வெள்ளை ரவுக்கை ஒன்றைச் சேர்த்து முடிந்



படிப்பகம்

www.padippakam.com



திருந்தால், அம்மா முழுகிவிட்டா என்று அர்த்தம். குத்து விளக்குகள், சருவச்சட்டிகள், தாம்பாளங்கள் எல்லாம் புதிசு போல இருக்கும். பொங்கலுக்கான சாமான்கள் எல்லாம், பூசைச் சாமான்கள் உட்பட, பெரிய திண்ணையிலே பக்குவமாக எடுத்து வைக்கப் பட்டிருக்கும். தேங்காய் துருவுவது பெரிய வேலை. பொங்கலுக்குத் தேங்காய்ப்பால் முக்கியம். பழவகைகள், வெற்றிலைபாக்கு எல்லாம் கழுவித் தாம்பாளங்களிலே வைக்கப்பட்டிருக்கும். பொங்குவதற்கான அரிசி, பயறு, சர்க்கரை, பொங்கலுக்கு உருசி சேர்க்கும் வாசனைப் பொருள்கள், எல்லாம் தனித் தனியே தயாராக இருக்கும். வாழைப் பழத்துக்கு மூழ் வெட்டுவதும் இள நீர் சீவி எடுப்பது ஆகியன பொங்கல் துவங்கும் வரை காத்திருக்கும்.

சடைச்சிருக்கும் கறுத்தக் கொழும்பான் மாமரத் துக்குக் கீழே இருந்துதான் ஆச்சி, அம்மா, அக்கா ஆகிய 'பெண்டுகள்' வேலை பார்ப்பினம். அம்மாவும் அக்காவும் திருவலைக் குத்தியில் இருப்பினம். ஆச்சி எப்பவும் ஒரு மேஸ்திரிபோல. அவவுக்கென்று ஒரு பலகைக் குத்தி இருந்தது. அது அவவின்ரை முதிசம் போலை!

பொங்கல் நடத்தும் முகாமை ஓர் ஆணுக்கு. பொங்கல் உலையில் யார் முதலிலை அள்ளிப் போடு வாரோ, அவர்தான் பொங்கல்காரர். அரிசிமா, மஞ்சள் மா, சிவப்புச் செங்கல்மா ஆகியன கலந்து, பொங்கலுக் கான இடம் கோலமிடப்படும். பொங்கல்காரன் தோய்ஞ்சு வந்தவுடன் கோலம் போடத் துவங்குவார். அவர் துவங்கி வைச்சால் வசதியைப் பொறுத்து, மற்றவர்கள் அவருக்கு உதவி செய்யலாம். நல்ல நேரம் பார்த்து, அம்மா செய்த அடுப்புக் கற்கள் மூன்று அடுப்பாக வைக்கப்படும். புதுப்பானையைக்கழுவி, அதில் அளவுக்கு நீர் வைத்து, அந்தப் பானையின் கழுத்தைச்

www.padippakam.com



சுற்றி மஞ்சள், இஞ்சிமர செடிகளுடன், மாவிலைத் தோறணமும் கட்டப்படும். அந்தப் பானை முதலிலே, மூன்று சிரட்டைகளினால் உருவாகிய அணைப்பில் வைக்கப்படும். பால், தேங்காய்ப் பால் ஆகியன உரிய அளவிலே விடப்படும். பொங்கற்காரன் பானைக்கு விபூதிப்பூச்சுகள் வைச்சதும், பொங்கல் பானை அடுப்பிலே ஏற்றப்படும். பொங்கல் பானை வைக்கும் பொழுது சீன வெடிகள் பம்பலாய் வெடிக்கும். பானை எத்தனை மணிக்கு அடுப்பிலே ஏற வேண்டும் என்பதைப் பெரிய மாமா பஞ்சாங்கத்தைப் பார்த்துச் சொல்லிப் போடுவார்.

பொங்கல் அடுப்புக்குக் கண்ட கண்ட விறகுகளும் வைக்க அப்பையா விட மாட்டார். இதுக்கு அவர்தான் பொறுப்பு. நல்லாத் தணல் விழக்கூடிய, நின்று எரியக் கூடிய காட்டுக்கம்புகள், தென்னம்பாளைகள், பாளைகளைத் தடல் வேறு பூக்கம் பாளை வேறாகப் பிரித்து, மல்லாக்காய்ப் போட்ட உரலிலே, ஏக அளவுக்குக் கொடுவாக் கத்தியால் வெட்டி வைப்பார். அடுப்பை மூட்டுறதுக்குப் பனம் பன்னாடை ஏற்றது. எல்லாப் பக்கமும் ஒரே அளவான தீ நாக்குகளை எழுப்பி அடுப்பு எரிந்தாற்றான் அவருக்குப் பத்தியம். பொங்கி, பால் நுரைகள் பானையின் விளிம்பிலே நர்த்தனமாடி, சடுதியாகச் சரிந்து அடுப்புக்குள் கொட்டுப்படும். வெண்தாடிக் கிழவர் 'அரோகரா' போடுவார். ஆச்சியின் நாக்கு இலேசான குரவை ஒலி எழுப்பும். கொடிக் கம்பியிலே கட்டப்பட்டிருந்த சீனவெடிப் பட்டுகள் எல்லாம் ஏக காலத்தில் வெடிக்கவிடப்படும். இந்தச் சமயத்திலே, பென்னம் பெரிய சருவச்சட்டியிலே கழுவி வைக்கப்பட்ட பச்சையரிசியும் பயறும் பொங்கல் பானையிலே போடப்படும். பொங்கற்காரன் அடுப்பினை மூன்று தரம் வலம் வந்து, பக்தி சிரத்தையுடன், இரண்டு கைகளாலுங் கோலி, மூன்று தடவைகள் பானைக்குள் அள்ளிப் போடுவார். அந்த நேரம்

www.padippakam.com



பென்னம் பெரிய சீனவெடிக் கோர்வையைக் கொளுத்தும் அப்பையா மாவடிப் பக்கமாக வீசி, ஆச்சியின் ஏச்சை வாங்கிக் கொள்ளவும் தப்ப மாட்டார். பொங்கல் அடிப்பிடிக்காமல் அடிக்கடி கிண்டித் துழாவ வேணும். சரியாக நேரம் பார்த்து, அன்று திருவப் பட்ட தேங்காய்ச் சிரட்டைகளை அப்பையா அடுப்புக்குள் சொருகுவார். நெருப்பைப் பிரித்து, பொங்கலை அமிழ விடும் பொழுது, சிரட்டைத் தணல் அளவான சூட்டைக் கொடுக்கும் என்பது வாகடம்.

பொங்கல் சரியாகப் பதத்துக்கு வருவதை ஆச்சி மேற்பார்வை செய்வா. பெரிய வாழை இலையிலே படையல். அந்தக் காலத்தில் கிடைக்கக்கூடிய அத்தனை பழங்களும் படையலுக்கு ஆகும். வாழை முக்கியம். கரும்பு, தை மாதம் என்றபடியால் மாரி மாம்பழம் உண்டு. மாதுளை, தோடை கிடைக்கும். 'சீஸன்' தப்பியதால் பலாப்பழம் கிடைக்காது. படையல் நடக்கும் போதும் ஒரு பாட்டம் சீனவெடிகள் வெடித்து ஓயும். படையலைத் தண்ணீர் தெளித்துப் பிரித்த பிறகு, தட்டிலே வாழை இலை போட்டு, எல்லாருக்கும் பொங்கல் பரிமாறப்படும். ஆச்சி ஒரு சின்னப் பானையில் வெண்பொங்கல் பொங்குவதைத் தனது பழக்கமாக்கிக் கொண்டா. பொங்கல் முடிந்ததும் ஆண்கள் 'தையும் பிறந்தது; புது வழியும் பிறந்தது' என்கிற நம்பிக்கையிலே, தங்கள் அலுவல்களைக் கவனிக்க வீதியில் இறங்குவார்கள். அயலட்டையிலும், உறவுக்குள்ளும் அந்தத் தைக்குப் பொங்காதவர்களுடைய வீடுகளுக்கு, புத்தம் புதிய மூடற் பெட்டியிலே பொங்கல் அனுப்பி வைத்த பிறகு தான் அப்பையா உசும்புவார். கடமைக்கு இன்னொரு பெயர்தான் அம்மா. முற்றத்தில் வெயில் உக்கிரமாக எறிக்கும். எதையும் சட்டை செய்யாது, புத்தம் புதுச்சட்டிகளிலே மூன்று சோக்கான ஆருதக் கறிகள் சமைச்சு முடிப்பா.

www.padippakam.com



அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். எங்கள் வீட்டில் வளர்ந்த லட்சுமி மாட்டுக்கு அன்றைக்கு என்றும் இல்லாத நடப்பு. மாட்டுப் பொங்கல் வெண்தாடிக் கிழவரின் ஏகபோகம். அவர் பிறவியில் சர்வாதிகாரி. தனது இஷ்டப்படிதான் அவர் மாட்டுப் பொங்கலை நடத்துவார். மாட்டுப் பொங்கலுக்கு சுண்டல், வடை என்று சிற்றுண்டி வகைகளையும் சேர்த்துக் கொள்வார். மாட்டுக்குத் தன் கைப்பட உணவு ஊட்டுவார்.

வெள்ளைக்காரனுடைய ஆட்சிக் காலத்திலும் பொங்கலுக்குப் பொதுவிடுமுறை நாள். எனவே, எங்களுக்கு நல்ல கும்மாளம். சின்ன அண்ணர் எதிலும் ஒரு தனிப் பிறவி, மாட்டுப் பொங்கலுக்கு என்று சில சீனவெடிக் கட்டுகளை ஒளிச்சு வைச்சுக் கொள்ளுவார். அதற்குக் கிழவர் எப்பவும் Support. சீனவெடியில் சின்ன அண்ணன் எத்தனை Tricks அறிஞ்சு வைச்சிருந்தவர். பெரிய சீனவெடி ஒன்றைப் பற்ற வைச்சு, அது வெடிப்பதற்கு முன்னர் ஒரு தகரப் பேணியால் மூடிப் போடுவார். அது புதினமான சத்தத்துடன் வெடிக்கும். பேணியும் ஆகாயத்திலை கிளம்பி, சப்பிழிஞ்சு கீழை விழும். வீட்டிலும், விசாலாட்சி மாமி, பாக்கியம் அத்தை, தாமோரியர் வீடு எல்லாம் அலைஞ்சு திரி நூர்ந்து வெடிக்காத சீனவெடிகளை எல்லாம் (ஊசி வெடிகளைக் கூட விடாது) பொறுக்கி வருவார். பெரிய சீனவெடியென்றால் 'V' போல மடக்கி, மருந்திலை தீ வைப்பார். அது 'புஸ்' ஸென்று எரிஞ்சு சக்கரம் போல சுத்தும். இதுகளைச் சாறணை சண்டிக் கட்டுக் கட்டிக் கொண்டுதான் செய்ய வேணும். வெடிகளின் மருந்தை நூல்போல இழுத்து Remote Control இல் வெடிகளை வெடிக்க வைப்பார். வாலில்லாத ஈக்கில் வாணத்தை தென்னங்கன்று வட்டுக்கை வைச்சு விட்டு, பண்ணாடை பத்தி ஆச்சியிடம் மண்டகப்படி வாங்கினார். ஒரு பலகையில் ஆணியால் துவாரம்

www.padippakam.com



போட்டு, அதற்குள் ஆணியை வைச்சு, ஓட்டை நாகேசர் புளுகிக் கொண்டிருக்கேக்க, கோடாலி வெடி போல அடிச்சுத் திடுக்கிட வைச்சார். நெருப்புக் குச்சி மருந்திலும் கோடாலி வெடி இணக்குவார். பெரிய மாமாவிடம் பூவரசம் கம்பு தூள் பறக்க அடிவாங்கிய பிறகுதான், சின்னண்ணனின் சீன வெடி விளையாட்டு நிற்கும்.

சீனவெடிகளின் ஒலியிலே, புதுப் பொங்கல் உண்டு மகிழ்ந்த மண்ணிலே, சீனராணுவ ஊர்திகள் குண்டு மழை பொழிகின்றன... சின்னண்ணன் செய்த 'றிக்ஸ்' உதவுமா? சிறுபிள்ளைத் தனமான யோசனைகள். சிறு பிள்ளைத்தன மென்றாலும் வெடிகள் பற்றி அசை போடக் கொஞ்சம் என்றாலும் தைரியம் வேணும். அந்த உசுக்குட்டித் தைரியம் வாழ்க! ★

www.padippakam.com

மண்ணளைந்த கைகள்தான்
மண்வா சனையறியும்
விண்ணளந்த பட்டம்தான்
விண்கூவும் -அம்மம்மா
காலவிளை யாட்டென்று
கக்கிவிடும் குண்டுமழை
பாலைவன மாக்கும் பதியின்று
ஓலமிடும் -என்றாலும்
காலத்தால் சாகாத
கருத்திணைந்த சீரடிகள்
ஏலத்தால் போகா துணர்

# 6. வெளி

காலநதி ஓடிக்கொண்டிருக்கிறதா? இந்த இடத்திலே, மணற் பிட்டியின் பிடரியிலே மோதி, கரையிலே பரம்பிக்கிடக்கும் மணலுடன் அளைந்து விளையாடத் தரித்து விட்டதா?

www.padippakam.com



விளையாட்டு என்றதும் மண் அளைந்ததுதான் நினைவுக்கு வரும். பிற்காலத்தில் 'மண்ணின் மைந்தர்கள்' என்பது அரசியல் கோஷமாகவும், 'மண் வாசனை' என்பது இலக்கிய கோஷமாகவும் உருவெடுத்தது. மண்ணின் ஸ்பரிசத்திற்கு, அது புழுதியாக இருந்தாலும், தனியான ஒரு சுகம் உண்டு. முற்றத்தில் பரம்பிக்கிடக்கும் மணலைச் சிறு புட்டியாகக் கோலி, அதற்குள் ஒரு பச்சை ஈர்க்கிலைச் சாமர்த்தியமாக ஒளித்துவிட வேண்டும். எதிரியை அணாப்ப, 'கீச்சுமாச்சுத் தம்பளம், கீயோ மாயோ தம்பளம்' என்று மந்திரம் சொல்லுவதும் கலாதியாக இருக்கும். ஈர்க்கில் இருக்கும் இடத்தை ஊகித்து, இரண்டு கைகளையும் இணைத்துப்பொத்த வேண்டும். பொத்திய இடத்தில் ஈர்க்கில் இருந்தால் வெற்றி! கூரையிலிருந்தோ, வேலியிலிருந்தோ ஈர்க்கில் முறித்து விளையாடக் கூடாது. பழைய ஈர்க்கில் குத்தினால் 'ஏற்பா'க்கிப் போடும் என்று ஆச்சி கத்திக் கொண்டே இருப்பா. மண்ணுக்குள் ஒளிந்து வாழும் 'குளுவான் மாடு'களைப் பிடிக்கும் விளையாட்டை என்ர மச்சான் காங்கேசுதான் காட்டித் தந்தவர். வீட்டின் புறச் சுவர்களுக்குப் பலப்பாகவும், ஈரம் சுவறாமலும் மணல் குவிக்கப்பட்டிருக்கும். அந்த மணல் மேடுகளிலே, ஆங்காங்கு நேர்த்தியான சிறு குழிகள் தெரியும். இந்தக் குழிகளை விரைவாக விரல்களால் உழுதால் குளுவான்களைப் பிடிக்கலாம். இவை சின்ன உயிர்ப் பிராணிகள். பலகையிலே மணல் பரப்பி இவற்றை விட்டால், கடற்கரை நண்டுகளைப்போல, இவையுங் கோலங்கள் தீட்டும். புழுதி அளைந்தால் வயிற்றிலே பூச்சி-புழு விளையும் என்பது ஆச்சியின் கவலை. உயிர்களைச் சித்திரவதை செய்வதும் அவவுக்குப் பிடிக்காது. சத்தம் போடுவா. அவவைத் திருப்திப்படுத்துவதற்காக, அப்பையா என்னை அடிப்பதுபோல பேய்க்காட்டுவார். ஏதோ சண்டைக்குப் போகிறவர் போல 'சலா வரிசை'

www.padippakam.com



எடுத்துக் கொண்டு, தேர்ந்தெடுத்த ஈர்க்கில்கள் மூன்று நான்கினை ஒன்றாக வைத்து, என்னை அடிப்பது போல, தன் தொடைகளுள் அடித்துச் சத்தம் எழுப்பிப் பேய்க்காட்டுவார். இந்தப் புருடா எல்லாருக்கும் தெரியும் என்பது அவருக்கு மட்டும் தெரியாது! அப்பையா என்னை அடித்ததும் இல்லை. கோபித்து ஏசியதும் இல்லை. முறிச்சு வளர்க்காத முருகையாக நான் வளர்ந்தேன். அதற்காக அப்பையாவை நோகாதீர்கள்.

மணல் வீடு கட்டுவது விளையாட்டா? அல்லது **Romantic** ஆ? சென்னை கூத்தாடிகள் எடுக்கும் சினிமாவில் அது பாரிய **Symbolism** ஆகவும் மாறிவிட்டது. 'தீ' நாவலை எழுதிய காலத்திலே, தேத்தாதீவுக் கடற்கரையில் அமர்ந்து, எத்தனை மணல் வீடுகளைக் கட்டி அவற்றை அழித்துக் கொண்டே என் கற்பனையை வளப்படுத்தினேன் என்பது நினைவுக்கு வருகின்றது...'யாழ்ப்பாண அலுப்பாந்தியிலே குவிந்திருக்கும் ஈர மணல் கும்பங்களிலே, மாலை நேர மயக்கத்திலே, என் ஈஸ்பரத்துடன் கழித்த இனிய பொழுதுகளை என் நினைவுகள் இப்பொழுது இச்சையுடன் அசைபோடுகின்றன...ஆனால், சின்ன வயசில்? 'வீட்டின் முன் பக்கத்தையாவது கல்வீடு ஆக்குவம்' என்ற திட்டத்திலே, முற்றத்தில் குருத்துக் குறுமணல் குவிக்கப்பட்டிருக்கிறது. 'பாலாத்து மணல்' என்று பேசிக் கொண்டார்கள். விளையாட்டு விஷயங்களில் சின்னண்ணர் மகா விண்ணன். அழகான மணல் வீடுகள் கட்டுவார். எத்தனையோ பொந்துகள் வைத்து எலிவளைகள் செய்வார். லேஞ்சிகளில் எலிகள் செய்து, பொந்துகளிலே பூந்து புறப்பட்டு வரும் 'மெஜிக்' காட்டுவார். பால்நிலவு இரவொன்றில் இருவரும் சேர்ந்து எலி வளைகள் செய்து முடித்தோம். அசதியில் தூங்கி விட்டோம் போலும். காலையில் வெண்தாடிக் கிழவர் வெயில் குளிக்க அதில் குந்திய பொழுது

www.padippakam.com



எலிவளைகள் பொறிய, மண் கவ்வி விட்டார்! கிழச் சிங்கத்தின் கர்ஜனைக்கு முன் நாம் எம்மாத்திரம்? அப்புக்குட்டி மேசன் வீடு கட்டிய வேகத்தில், அந்த மணல்மேடு சுவடு தெரியாது அழிந்து போயிற்று !

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தான் முன்தோன்றியதாகப் புளுகாவிட்டால் தமிழனுக்கு மண்டை வெடிச்சுப் போகும்! இவை தோன்றுவதற்கு முன்தோன்றிய தமிழன் எங்கே கக்கூசுக்குப் போனான் என்று நினைக்கும் பொழுது எனக்குச் சிரிப்பு வரும்... மண்ணைப் போன்றே, கல்லும் விளையாட்டுக் கருவி யாகப் பயன்பட்டது. அக்கா சொக்கட்டான் ஆடுவதில் படுசூரி. அவ விளையாடுவதற்கு, ரயில் பாதையில், சலவைக் கல்லைப் போன்ற, சிறிய பளிங்குக் கற்களை நான் பொறுக்கிக் கொடுப்பன். தலைக்கு மேலே ஒரு கல்லை எறிந்து, அது அந்தரத்தில் நிற்கும் பொழுதே, தரையில் பரப்பி வைத்த கற்களை எடுத்துக் கொண்டு, கீழே விழும் கல்லை ஏந்தும் லாவகமும் வேகமும்... புளியங் கொட்டைகளை வைத்துப் பாண்டி விளை யாடுவா. பாண்டிக் குழிகள் செதுக்கிய பலகை ஒன்று, பக்கத்து வீட்டு ஆண்டாளிடம் இருந்தது. அவ அக்காவின் சிநேகி. என்னதான் உதவிகள் செய்தாலும், அக்கா தன் சிநேகிதிகளுடன்தான் விளையாடுவா. எங்களைச் சேர்த்துக் கொள்ள மாட்டா. பொம்பிளையள் விளையாட்டில் பொடியள் சேரக்கூடாது என்று அழுவா. அழுகைதான் அவவுடைய பெரிய ஆயுதம். குட்டான் சோறு ஆக்கி விளையாடும் பொழுது, சாப்பிடுவதற்கு எங்களைக் கூப்பிடுவது மட்டுந்தான் அவ கடைசிவரை எங்களுக்குக் காட்டிய சலுகை.

சிறு கோயில் நிறுவி, திருவிழாக்கள் நடத்துவது அலுக்காத விளையாட்டு. அயலிலுள்ள கோயில்களிலே

www.padippakam.com



திருவிழாக்கள் நடக்கும் காலத்தில் ஒரு வேகம் பிடித்து விடும்! இந்த விளையாட்டில் பிள்ளைகள் பம்பலாகச் சேர்ந்து கொள்வார்கள். பக்தியை வெளிப்படுத்தும் ஆசாரத்திற்கு யாழ்ப்பாணம் எப்பொழுதும் 'ரெடிமேட்' டாக அங்கீகாரம் வழங்கிவிடும். ஒரே அளவான நான்கு ஈர்க்கில்களை எடுத்து, நான்கு குரும்பட்டிகளை இணைத்து ஒரு சதுரம் செய்வோம். மேலும் நான்கு குச்சிகளை வைத்து முட்டியாக ஒரு குரும்பட்டியைக் குத்தி நிறுத்திவிட்டால் தேர்! பாக்கி அலங்காரந் தானே? சப்பிரம் கட்டுவது கூடுதலான வேலைப்பாடு கொண்டது. அயலிலே சடங்குகள் நடந்து முடிந்தால், அலங்காரப் பேப்பர்களை—ரிஸ்யு பேப்பர், வாணிஷ் பேப்பர், காக்கா பொன் முதலியன—நைஸாகக் களவெடுத்து வைத்துக் கொள்ளுவோம். அந்தக் காலத்தில், அயலிலே இருந்த தென்னந் தோப்புகள் அழிந்து, புதிய வீடுகள் எழுந்து கொண்டிருந்தன. தென்னங் குருத்துகளுக்கும், தந்தச் சிரிப்பினை அடக்கி வைத்திருக்கும் குஞ்சுப் பாளைகளுக்கும் பஞ்சமில்லை. கோயில் கட்டுவதற்கும் தோறணங்கள் இணக்கு வதற்கும் இவை மிகவும் பயன்படும். பூவரசம் பூக் களிலே வடிவாப் பொம்மை செய்யலாம். கொடி மல்லிகை, குண்டு மல்லிகை, அடுக்கு மல்லிகை, ஊசி மல்லிகை, வேசி மல்லிகை, வாடா மல்லிகை, அரிதாகக் கிடைக்கும் ராஜமல்லிகை என மல்லிகை பல வகைத்து... நந்தியாவட்டை, சிதம்பரத்தம் பூக்கள், அரளி, கொன்றை, மணிவாழை, காசித்தும்பை ஆகிய பூக்களும் பாடுபடாமல் கிடைக்கும். தாமரைப் பூக்களும், ரோஜாப் பூக்களும் கஷ்டப்பட்டால் கிடைக்கும். பறங்கித் தெருப் பகுதியிலேதான் காகிதப் பூக்கள் என்ற போகன் வில்லா கிடைக்கும். அது நெடு காலத்துக்கு வாடாது. முள் முருக்கம் பூவும், பூசணிப் பூவும் அலங் காரத்துக்குக் கலாதியானவை. வெள்ளைப் பூக்களை நூலாலே தொடுத்து மாலைகள் கட்டுவோம். கந்தசாமி

www.padippakam.com



கோயிலடியில், அரசடி வீதியில் பொம்மைக் கடைகள் இருந்தன. கடவுள் சிலைகள் மட்டுமல்லாமல், எருது-குதிரை-யானை முதலிய வாகனங்களும் கிடைக்கும். சிலைகள் உடைந்தாலும், வேப்பம் பிசினால் ஒட்டிச் சரிக்கட்டி விடுவோம். திருநீறு, சந்தனம், குங்குமம் எல்லா வீட்டிலும் கிடைக்கும். வாழைத் தடலில் சாம்பிராணிக் குச்சிகள் குத்துவம். பெரிய எள்ளெண்ணெய் சட்டியில் (பெருமாள் கோயில் உபயம்) சாம்பிராணி. பழைய வாளிகளும், தகர டப்பாக்களும் இருந்தால் பல கூட்டம் மேளங்கள். பூவரசம் இலைகளிலும், தென்னோலைக் குருத்துகளிலும் ஊது குழல்கள் இணக்கும் வித்தையையும் கற்றுக் கொண்டோம். 'பீப்பீ... டும்டும்...' ஒலிகள் வாயிலிருந்து புறப்பட்டும் சுருதி சேர்க்கும். பக்தி பரவசமாக திருவிழா ஊர்வலம் வந்தால், பெரியவர்கள்கூட மரியாதை செய்வார்கள். அவ்வாறு கிடைக்கும் மரியாதை எங்களுக்குத் தரும் சந்தோஷம் கொஞ்சமல்ல... திருவிழா கும்பலாக நடத்தும் விளையாட்டு...

வெற்றி தோல்வி காணும் கோஷ்டி விளையாட்டுகளும் பல, வாரோட்டம் விரைவாக ஓடவல்ல பயிற்சி அளிப்பது. ஆனால், கெத்தியடி ஜனரஞ்சகமானது. இரண்டு கோஷ்டிகள் பிரிக்கப்பட்டதும், பெரிய வட்டக் கோடு ஒன்று மணலிலே கீறப்படும். ஒரு கோஷ்டி வட்டத்திற்குள் நிற்கும். வெளியே நிற்கும் கோஷ்டியில், ஒவ்வொருவராக 'கெந்தியடித்து' (ஒற்றைக் காலை மடக்கிக் கொண்டு, ஒற்றைக் காலால் எஃகி ஓடுதல்) உள்ளே உள்ளவர்களைத் தொட்டு 'அவுட்'டாக வேண்டும். உள்ளே உள்ளவர்கள் கோட்டுக்கு வெளியே ஓடினாலும் 'அவுட்', கெந்துபவரின் இரண்டு கால்களும் நிலத்தில் பட்டால் 'அவுட்'. கெட்டிக்கார விளையாட்டுக்காரர்கள் பிடிபடுவது போலப் போக்குக் காட்டி, சடுதியாக உச்சுவதின் மூலம் கெந்தியடிப்பவரை விழ

www.padippakam.com



வைத்து விடுவார்கள்! கெந்தியடிப்பவர் பழைய கறளை வைத்துக் கொண்டு, தொடுவதிற்குப் பதிலாக ஊன்றி அடி கொடுப்பதும் உண்டு. ஒரு கோஷ்டியில், கடைசி வரை ஒருவராவது 'அவுட்'டாகாமல் இருந்தால், அந்தக் கோஷ்டிக்கு ஒரு 'பழம்'. தாய்ச்சி விளையாட்டும் கோஷ்டி விளையாட்டே. இதனைச் சிறுவர்கள் மட்டுமல்லாமல், இளந்தாரிகளும் விளையாடுவார்கள். வேட்டியை மடித்துக் கொடுக்குக் கட்டிக் கொண்டு அவர்கள் விளையாடுவது வேடிக்கையாகவும் பயங்கரமாகவும் இருக்கும். இந்த விளையாட்டுக்குச் சற்று விசாலமான இடம் தேவை. கிராமங்களுக்கிடையில் பெரிய அளவில் தாய்ச்சி விளையாட்டுப் போட்டிகள் நடந்ததை நான் பார்த்திருக்கிறேன். கட்டைப் பந்து அல்லது பிள்ளையார் பந்து வேடிக்கையானது. அது மக்கள் ஆதரவைப் பெருமளவிலே பெறவில்லை. பிற்காலத்தில் கரப்பந்தாட்டமே இளந்தாரிகளுடைய வீர விளையாட்டாக நிலைத்தது.

ஒளிச்சுப் பிடிக்கிறதும் சோக்கான விளையாட்டு. பிறகு, இதை 'கள்ளனும்—போலீஸும்' விளையாட்டு என்று அழைத்தார்கள். எதிர்காலத்தில் 'ஆமியும்—புலிகளும்' விளையாட்டு என்று அழைப்பார்களோ, என்னவோ? ஒளிச்சு விளையாடும் பொழுதுதான், நான் இன்னொரு விளையாட்டையும் அறிஞ்சனான், எதிர் வீட்டில் கொஞ்சக்காலம் 'கூலிச்சனம்' குடியிருந்தவை. ரயில் பாதையைக் கடந்து, இந்த வளவின் மேற்குப் பொட்டால் பூந்தால், வேதப் பள்ளி. வேதப்பள்ளிப் படலையில் நின்று பார்த்தால், மயிலு கடை வலுகிட்ட. மயிலு கடைக்குப் போற வாற வழியிலைதான் அந்த வீட்டிலை குடியிருக்கிய பராசக்தி அக்காவைக் கண்டனான். அவ நல்லவ. அவவுக்கு உப்பிலை ஊறின நெல்லிக்காய் என்றால் வலு விருப்பம். நான் அவவுக்கு வாங்கிக் குடுக்கிறனான். ஒளிச்சு விளையாடேக்

www.padippakam.com



கிள்ளை, ஒருநாள் பராசக்தி அக்கா வீட்டுக்குள்ளை போய் ஒளிச்சனான். பகல் நேரத்தில் அந்தப் பக்கம் ஆக்கள் இருக்க மாட்டினம். ஓவெண்டு இருக்கும். நான் பிடிபடவேயில்லை. அன்றைக்கிருந்து எனக்கு ஒளிக்கிறதுக்குச் சோக்கான இடம் வாய்ச்சுப் போச்சுது. நான் ஒளிக்கிறதுக்கு வீட்டுக்குள்ளே புதிசு புதிசான இடம் எல்லாம் கண்டு பிடிச்சுத் தருவா. இரண்டு மூன்று ஆட்டம் என்றாலும், ஒரு மணித்தியாலம் என்றாலும், என்னைக் கண்டு பிடிக்க ஏலா... பிறகு பொட்டாலே பூந்து, சைவப்பள்ளி ஒழுங்கையாலை மிதப்பேன்... அப்படி ஒரு நாள் ஒளிச்சிருக்கும் பொழுதுதான் அவ எனக்கு அப்பா-அம்மா விளையாட்டுப் பழக்கினவ. அது பெரிய விளையாட்டு. இனந்தெரியாத இன்பம்... ஒருவருக்கும் தெரியாமல் திரும்பவும் திரும்பவும் விளையாடவேணும் என்கிற ஆசை... ஒளிச்சு விளையாடாத நேரத்திலும், பராசக்தி அக்காவோடை 'அது' விளையாட வேண்டும் என்ற ஆசை... பலநாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவான். அந்த வீட்டிலை இருந்து நான் வரேக்க பெரிய மாமா பார்த்து விட்டார். அன்று சாட்டுக்காவது ஒளிச்சு விளையாடவும் இல்லை. 'வடுவா! அந்த எளிய சனங்கள் வீட்டிலை உனக்கென்னடா வேலை?' என்று இரண்டு பூவரசம் கம்புகள் என்முதுகிலும், கால்களிலும் முறிய முறியச் 'சவல்' அடி!... அன்று விட்டேன் கொண்டலடி.... சிறிது காலத்தில் பராசக்திஆக்களும் வீடுமாறி கலட்டிப் பக்கம் போய் விட்டார்கள்.

திடீரென்று வளர்ந்தவன் போன்ற நினைப்பு. முழுக்க முழுக்க ஆண்களுக்கான விளையாட்டுகளில் ஈடுபடலானேன். பருவ காலத்துக்கு ஏற்ப யாழ்ப்பாண விளையாட்டுகள் மாறும். மாங்கொட்டை விளையாட்டு இலேசாகத் தலைகாட்டி மறைந்து விடும். இலுப்பைக் கொட்டையடி ஒரு சமூக அந்தஸ்தைப் பெற்றிருந்தது.

www.padippakam.com



அந்தக் காலத்தில், அயலில் இலுப்பை மரங்கள் ஏராளம். பலாலி றோட் நாவலர் வீதியைக் குறுக்கறுக்கும் சந்தி இலுப்பையடிச் சந்தி என்றே அழைக்கப்பட்டது. கோயில் வளவுக்குள் மூன்று நான்கு இலுப்பை மரங்கள். வேதப் பள்ளியை ஒட்டினாற்போல பென்னம் பெரிய இலுப்பை மரம். பருவ காலத்தில் எங்கள் முற்றத்திலேகூட, வௌவால்கள் இலுப்பைக்கொட்டைகளைப் போட்டுவிடும். ஆரம்பத்தில் இலுப்பைக் கொட்டைகள் அருந்தலாகத்தான் கிடைக்கும். நீள் சதுரக் கோடு கீறி, நீள் பாட்டில் நடு நரம்பும் கீறப்படும். ஆட்டத்துக்கு குறைந்தது இரண்டு பேர் தேவை. நாலைஞ்சு பேரும் விளையாடலாம். ஒவ்வொரு ஆட்டத்துக்கும் கட்டுவதற்கானகொட்டைகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டு, அவை நடுநரம்புக் கோட்டின் நீளத்துக்கு அடுக்கப்படும். அடிக்க உதவும் கொட்டை 'உச்சான்'. இரண்டு பக்கமும் சப்பையான கொட்டைகள், அல்லது கொழுத்த முதுகுடைய உருண்டைக் கொட்டைகள் 'உச்சான்'களாகப் பயன்படுத்தப்படும். அவை கனமாகஇருந்தால் விசேஷம். உச்சான்களைக்'கட்டு'வதின் மூலம் அடிக்கும் வரிசை நிர்ணயிக்கப்படும்.அடிப்பதின் மூலம் நீள் சதுரத்துக்கு வெளியே வரும் கொட்டைகள் அடிப்பவருக்குச் சொந்தம். முழுக் கொட்டைகளையும் அடித்தெடுப்பதுவிளையாட்டின்ஒரு பாட்டம்.இலுப்பைக் கொட்டைகள் மலிவாகப் புழங்கும் காலத்தில் இளந்தாரிகள் 'கோதா'வில் இறங்கிவிடுவார்கள். ஒரு வட்டம் கீறப்பட்டு, ஒரு பாட்டத்துக்கு ஆளுக்கு ஐம்பது அல்லது நூறு என்று பெருந்தொகைக் கொட்டைகள் நிர்ணயிக்கப்பட்டு, அவை வட்டத்தின் மத்தியிலே குவிக்கப்படும். அடிக்கும் வரிசை இதிலும் 'உச்சான்' கட்டுவதின் மூலமே நிர்ணயிக்கப்படும். யார் முதலில் ஒரு கொட்டையை முதலில் அடித்து எடுக்கிறாரோ, அவருக்கே முழுக் கொட்டைகளும் சொந்தம். 'கட்டும்' பொழுதே கொட்டையை

படிப்பகம்

www.padippakam.com



வெளியே வரச் செய்யும் விண்ணன்களும் இருந்தார்கள். இது ஒரு வகைச் சூதாட்டம் போல நடத்தப்பட்டது என்பதை இப்பொழுது நிதானிக்க முடிகிறது. ஒருவனால் ஒரே நாளில் மூவாயிரம் முதல் பத்தாயிரம் கொட்டைகள்வரை ஜெயிக்க முடியும். இப்படிச் 'சம்பாதி'க்கப்படும் கொட்டைகள், வீட்டுக் கோடிகளிலே தூங்கும் வெடித்த பானைகளிலும், காலியாண சீமெந்துப் பீப்பாக்களிலும் சேமிக்கப்படும். இலுப்பைக் கொட்டை 'சீஸன்' முடிந்ததும், வியாபாரிகள் வந்து இலுப்பைக் கொட்டைகள் வாங்கிச் செல்வார்கள். இந்தக் கொட்டைகளிலிருந்து வடிக்கப்படும் இலுப் பெண்ணெய்தான் கற்பகத் தரு நாட்டிலே Olive Oil ஆகப் பயன்பட்டது என்பதை இன்றைய தலைமுறையினர் அறியார்கள். சிறுபிள்ளை விளையாட்டு-சூதாட்டம்- வியாபார பேரம் என்கிற வாய்பாட்டில் அமைந்த அரசியல் 'சாணக்கியத்' தனத்தை நேற்றைய தமிழ் அரசியல் தலைவர்கள் இலுப்பைக் கொட்டை விளையாட்டிலிருந்து கற்றுக் கொண்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா? எனக்கும் அவ்வாறே!

பனைமரங்களுக்கு அடுத்ததாக யாழ்ப்பாணத்தின் சிறப்பான Land .mark வேலிகளே. யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஒரு பகுதியை வேலிக் கலாசாரம் எனக் கொள்ளினும் பொருந்தும். அந்தக் காலத்தில், யாழ்ப்பாண நகர்ப் பகுதியைக் கிடுகு வேலிகளே ஆக்கிரமித்திருந்தன. கிடுகு வேலிகளை 'அறிக்கை'யாக அமைப்பதற்காகப் பூவரசம் கதிகால்கள் சிரத்தையுடன் வளர்க்கப்படும். வளர்ப்பதும் சுகம். மழை காலத்தில் கம்புகளை ஊன்றி விட்டால், பராமரிப்பு இன்றி வளர்ந்துவிடும். மழை காலத்தை அண்டிக் குழை வண்டில்களின் திவ்விய காட்சி! பூவரசங் குழைகள் புகையிலைச் செய்கையாளர்களுக்கு மிகவும் பயன்

www.padippakam.com



படுமாம். குழை வாங்கவும்-விற்கவும் கடுமையான பேரம் நடைபெறும். எங்கள் பகுதியில் ஓட்டை நாகேசர் மத்தியஸ்தத்துக்கு இல்லாமலும் ஒரு பேரமா? என்றாலும் ஆள் வலு சுழியன்! ஓட்டைப்பற்களுக் கிடையில் எச்சில் தூவானம் பெய்து கொண்டே இரண்டு பக்கத்தாரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக விலையைத் தீர்த்துவிடுவார். அவர் தரகு பெறுவதில்லை. அவருடைய சமூகத் தொண்டில் இதுவும் அடங்கும்.

வேலிக் கலாசாரத்திலே முகிழ்ந்த வீர விளையாட்டுத்தான் கிட்டியடி என்று எனக்குத் தோன்றுகின்றது. குழை வெட்டும் காலத்தில் கிட்டியடி உச்சம் பெறும். கிட்டிகளுக்கும் புள்ளுகளுக்கும் ஏற்ற பல Size களிலும் தடிகள் கிடைக்கும். சும்மா காலத்தில் கிட்டிகளுக்குப் பூவரசங்கம்பு வெட்டினால் 'வாழத்தெரியாத ஊதாரிகள்' என்று யாழ்ப்பாணம் உமிஞ்சு போடும். கிட்டியடி விதிகள் இடத்திற்கு இடம் சிறிய பாடபேதங்களுடன் ஆளப்படும். தெண்டுவதற்கான குழிதான் மையம். கிட்டியால் புள்ளைத் தெண்டிய பின்னர், குழிக்குப் பின்னால் கிட்டி குறுக்குப் பாட்டில் வைக்கப்படும். தெண்டும்போது புள்ளை Catch பிடிச்சாலும் அவுட்; புள்ளால் எறிந்து கிட்டியில் பட்டாலும் அவுட்! இந்த Preliminaryக்குப் பிறகுதான் அடிக்கத் துவங்கலாம். புள்ளை அடிக்கும் போது எதிர்க் கோஷ்டியினர் அதனை 'காட்ச்' பிடித்தால் அடிப்பவர் அவுட். புள் விழுந்த இடத்திலிருந்து, புள்ளைக் குழியை நோக்கி எறிய வேண்டும். எறியும் பொழுது புள் குழிக்குள்ளோ, கிட்டியின் அளவுக்கு உட்படக் குழியின் அருகிலேயோ புள் விழுந்தால் அடிப்பவர் 'அவுட்'. புள் 'ஆறு'வதற்கிடையில் அதனை அடித்தால் 'ஸ்கோர்'. அடிக்கும் பொழுது புள் போய்விழும் இடத்திற்கும் குழிக்கும் இடைப்பட்ட தூரத்தைக் கிட்டி

ந—7

படிப்பகம்

www.padippakam.com



யால் அளந்துதான் 'ரன்' அல்லது 'ஸ்கோர்' கணிக்கப்படும். புள்ளைப் பல பாங்கங்களிலே வைத்து தூர இடத்திற்கு அடிப்பதிலும், புள்ளை எறியும் பொழுது அதனை எதிர்கொண்டு வீச்சாகக் கிட்டியால் அடிப்பதிலுந்தான் ஆட்டக்காரனின் திறமையும் நுட்பமும் கணிக்கப்படும். 'பாட்டம் இத்தனை ரன்களில்' என்று முன்னரே தீர்மானிக்கப்பட்டிருக்கும். அந்த 'ரன்'களை எந்தக் கோஷ்டி முதலில் அடித்து எடுக்கிறதோ, அதற்கு வெற்றி! அதனைத் தொடர்ந்து 'பாட்டம்' அடிப்பார்கள், கெட்டிக்காரக் கோஷ்டி பாட்டம் நடத்தினால், குழியிலிருந்து இரண்டு மூன்று மைல்களுக்கும் ஓட வேண்டிவரும். பாட்டத்தின் ஓர் அம்ஸம் 'சடு குடு' போல இருக்கும். மூச்சு விடாமல் கூவிக்கொண்டு புள்ளைக் குழிக்குக் கொண்டு வந்து சேர்த்தால் ஆட்டம் முடிவடையும். பூவரசம் புள் சீக்கிரம் உடைந்துவிடும், தூரத்துக்கும் போகாது. என் சின்ன அண்ணர் கிட்டி விளையாட்டில் ஒரு சம்பியன்; மன்னன். அவர் ஊர் எல்லாம் தேடி கொய்யாப் புள், துவரம்புள், புன்னைப்புள் ஆகிய வகைகளும் வைத்திருப்பார். அவர் இந்த விசேஷ புள்ளை அடித்தால் விண் கூவிக் கொண்டு பறக்கும். அவர் அடிக்கும் புள்கள் எதிர்க்கோஷ்டியினருடைய தலையையும் முகத்தையும் பதம் பார்ப்பதும் உண்டு. ரத்தக்காயங்களும், அம்மாக்களின் 'குய்யோ முறையோ' அழுகுரலும் அவர் விளையாடும் பொழுது சகஜம். எது எப்படி இருந்தாலும், பிற்காலத்தில் கிரிக்கெட் மாட்ச் ஒன்றைப் பார்த்த வெண்தாடிக் கிழவர், கிட்டியடியிலிருந்துதான் வெள்ளைக்காரன் 'கிரிக்கட்' விளையாட்டைக் கண்டு பிடித்தவன் என்ற ஒரு கோட்பாட்டை முன் வைத்தார். இதற்கு ஓட்டை தாகேசரும் ஆதரவாளர்.

கோஷ்டி விளையாட்டுக்கும் எனக்கும் ஒரு ராசி உண்டு. நான் எந்தக் கோஷ்டியில் இருந்தாலும்

படிப்பகம்

www.padippakam.com



அந்தக் கோஷ்டி தோற்பது நிச்சயம். இதனால், என்னை விளையாட்டுகளிலே சேர்க்கப் பஞ்சிப்பட்டார்கள். இந்த அவமானத்தாலும் நான் வாசிப்புப் பழக்கத்தை வலாயப்படுத்தத் துவங்கினேன். விளையாட்டுத் துறையில் அடைந்த தோல்விகள், இன்னொரு துறையிலே வெற்றி பெறவேண்டும் என்ற வெறியை என் பிஞ்சு நெஞ்சிலே ஊன்றி இருத்தல்கூடும் என்பதை இப்பொழுது நிதானிக்க முடிகிறது.

Kite—பட்டம்—காற்றாடி—கொடி என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும். கொடி ஏத்தினால் நாங்களே ஆகாசத்திலே பறக்கிறது போல ஓர் உணர்வு ஏற்படும். மொறட்டுவ சிங்களவர்கள்தான் உலகத்துக்கே கொடிஏத்தக்கற்றுக்கொடுத்தவங்கள்என்றகணக்கிலைதான் இந்தக் காலத்திலை கொழும்பு பத்திரிகைகளிலை எழுதுறாங்கள். கலர்ப்படங்களும் பிரசுரிச்சுப் படு அட்டகாசம். ஒரு புளுகைச் சொல்லி, காலப்போக்கிலே அதையே உண்மை என்று நம்பும் வியாதி மகாவம்ஸ காலத்திலிருந்தே சிங்களவங்களுக்குஉண்டு. இந்த அணாப்புதல்களும் கெறுக்களுந்தான் இன்று இலங்கை பீயாப்போனதுக்குப் பிரதான காரணம். யாழ்ப்பாணத்துக்கு கொடி ஏத்துற விளையாட்டிலை தனி மரபு உண்டு.

பாம்புக் கொடிதான் மிகவும் எளியது. சீனாக்காரன்களும், அவங்களைக் கொப்பியடிச்சு இலங்கையின் 'சீனாப் புள்ளி' களும் ஏத்துற பாம்புக்கொடிகள், பாம்பின் உருவ அமைப்பில் இருக்கும். யாழ்ப்பாணம் பாம்புக் கொடி more Symbolic. படம் எடுத்தாடும் பாம்பின் தலையை உருவகப்படுத்துவது போல கொடி. அதற்குக் கட்டும் வாலை, நாம் பாம்பின் உடலாக உருவகப்படுத்திப் பார்க்க வேண்டும். சின்ன வயசிலேயே பாம்புக் கொடி

www.padippakam.com



கட்டப் பழகிக் கொண்டன். அப்பையாதான் என் குரு. நான் பாம்புக் கொடி ஏத்தத் துவங்கீட்டால், நான் குளிக்கும் பொழுது கட்டுற கோவணங்களுக்கு வந்தது ஆபத்து! அவை கொடிகளுக்கான வால்களாக மாறி விடும். பேந்து குளிக்கிறதுக்குக் கோவணம் இல்லா மல் நான் பட்ட அவதிகளை இப்பொழுது நினைத் தாலும் சிரிப்பு வருகின்றது. நான் பாம்புக் கொடி கட்டும் வித்தை, நைஜீரியாவிலும் கொடி கட்டிப் பறந்தது! நைஜீரியாவிலிருந்து இன்று கனடாவிலும் இங்கிலாந் திலும் குடியேறியுள்ள தமிழ்ப் பிள்ளைகள் பலருக்கும், நைஜீரியாக் காற்றிலே பறக்க விடுவதற்கு எத்த னையோ பாம்புக் கொடிகளைக் கட்டிக் கொடுத்தேன் என்பதை இப்பொழுது அசைபோடும் பொழுது சுகமாக இருக்கிறது.

ஆடிக்காத்திலை அம்மியும் பறக்கும் என்பார்கள். அம்மி பறந்ததை நான் கண்டதில்லை. அம்மி போன்ற பாரமான கொடிகள் பறந்ததைக் கண்டிருக்கிறன். கொடி பறக்க விடுகிற காலத்திலை காற்று எப்படி வீசும் தெரியுமே? அது ஒரு காத்துத்தான்! பாம்புக் கொடி—பருந்துக் கொடி—கொக்குக் கொடி—பெட்டிக் கொடி—சானாக் கொடி... எத்தனை நிறங்களிலே, எத்தனை வகையான கொடிகள் வானத்தை மொய்த்துப் பறந்து கொண்டிருக்கும்! கொடிச் சண்டை போடுற துக்கு பருந்துக் கொடிதான் ஏற்றது. சானாக்கொடிக்கு விண் கட்டிக் கூவச் செய்யலாம். ஆனால், விண் கூவப் பறக்க விடுறதுக்கு எட்டு மூலைக் கொடிதான் விசேஷம்.

எங்கடை அயலிலை கொடி ஏத்துறதிலை ரெங்கண் ணாவை அடிக்கிறதுக்கு ஒருத்தரும் பிறக்கேல்லை. அவர் தபால் கந்தோரிலை. பெரிய வேலை, கொடி ஏத்துறதுக்கு அவரைப் போல ஆராலும் செலவழிக்கவும் ஏலாது. ஒரு முறை அவர் பன்னிரண்டடி உயரமுள்ள

www.padippakam.com



எட்டுமூலைக் கொடி ஒன்று செய்தவர். இது செய்வ தற்கு ஸ்பெஷலாகச் சலாகைகளும், மூங்கில்களும், பிரம் புகளும் தேவைப்பட்டனவாம். எத்தனையோ கயிறு முடிச்சுகளைப் பிரித்தெடுத்துதான் வால் கட்டினவர்கள். அது ஏத்துறதுக்கான நூலை ரெங்கண்ணா கொழும்புக் குப் போய் வாங்கி வந்தவராம். அதற்கு விண் பூட்டுற துக்கு வலு கஷ்டப்பட்டவராம், கடைசியிலை அதைப் பூட்டுறதுக்குத் திருநெல்வேலியிலிருக்கிற ஒரு தச்சுக் கிழ வர்தான் வந்து உதவி செய்தவராம். அதைப் பறக்க விடுவதற்கு மட்டும் பத்துப் பேருடைய உதவி தேவைப் பட்டது. தனி ஆள் எண்டால் இழுத்துக் கொண்டு போயிடும். ஏத்தின பிறகு பூவரசம் மொக்கு ஒன்றைச் சுற்றித்தான் நூல் விட்டவை. பூவரசம் மரம் பாறிப் போகும் என்று கிழவர்கள் அந்தரப்பட்டதும் உண்டு.

அன்றிரவு முழுவதும், அயலெல்லாம் அந்த எட்டு மூலைக்கொடி எழுப்பிய விண்கூவல் கேட்டுக் கொண்டே இருந்தது. வீடுகளிலும் அது பற்றித்தான் பேச்சு. 'கைக்குளஞ் சந்தையார் ஏத்துற 'ஆள் கொடி'யை பீட் அடிக்க ஏலாது' என்று அப்பையா தன் மண்ணின் பெருமை பேசப்போய், வகையாக மாட்டிக் கொண்டார். அன்றிலிருந்து 'ஆள்கொடி' பறக்க விடுவதைக் காட்டும் படி நுழைக்கத் துவங்கினேன். நல்லூரிலே, பண்டாரக் குளத்து வெளியில், ஆள் கொடி ஏறிக்கொண்டிருப் பதை, அப்பையா கரிசனையுடன் என்னைக் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டினார். ஆள் கொடியும் பெரிசு தான். அதற்கு 'பல்பு' களும் பூட்டியிருந்தார்கள்.

ரெங்கண்ணா சும்மா இருக்கவில்லை. ராசா அண் ணரின் உதவியுடன், அடுத்த கிழமையே தன்னுடைய எட்டுமூலைக் கொண்டிக்கும் 'பல்பு' பூட்டிப் பறக்க வைத்தார், இரவிலே, நிர்மலமான வானத்திலே. 'பல்பு'கள் நட்சத்திரங்களைப் போல 'டால்' வீச விண்

www.padippakam.com



கூவுதல் இசை மழையாக பெய்ய, அந்த வெண்ணிற எட்டுமூலைக் கொடிப் பறந்த அழகே அழகு! நான் சாகும் வரையில் இந்த அற்புதக் காட்சியை மறக்க மாட்டேன்.

விளையாட்டின் கைவண்ணம் அன்று ஓங்காரமிட்ட அந்த யாழ்ப்பாணத்து வானிலே, இன்று தமிழ் உயிர்களைப் பலிகேட்டு helicopter கள் உறுமித் திரியும் செய்தியைக் கேட்கும் பொழுது மனம் வியாகூலம் அடைகின்றது. மீண்டும் அந்த வானிலே பிரமாண்டமான ஆள் கொடிகளையும் ரெங்கண்ணாவின் எட்டு மூலைக் கொடிகளையும் பறக்க விட்டு அழகு பார்க்க வேண்டும், என்கிற என் இனிய தமிழ்க் கனவினை யாரால் கலைக்க முடியும்? ஐயா, at least, கனவுகாணும் உரிமையாவது தமிழனுக்கு இல்லையா? ★

www.padippakam.com

ஆங்கிலக் கல்வி மோகம்
அனைவரும் யாழ்ப்பாணத்தின்
ஓங்கிய சாதியென்று
உயர்கொடி ஏற்று காலம்

தாங்கிய இதயம் ஒன்று
தகர்த்திடத் துடித்துப் பாயும்
வேங்கை போல் தாவி வீழ்ந்த
வெறிபிடி இதயம் ஒன்று

தாங்குமின் இதயத்தோடு
தமிழ்வெறி இதயம் மோதி
ஓங்கி ஓர் உண்மை சொல்லி
உளத்துணர் ஓதி நிற்கும்

உரிய உணர்வில் இன்று
உணர்ந்தவர் சால்பு சொல்ல
தேறிய கதைகள் உண்டு
திசையெல்லாம் அறிவு மன்னோ

# 7. கல்வி

காலநதி, பிதுக்கி எறியப்பட்ட நுங்குக் கண்களை மட்டுந்தான் உதைத்து உருட்டிக் கொண்டு, ஓடுகிறதா? அதன் தடத்தில் கூளன் கற்களும் விசிறிக் கிடப்பது எதனால்? அந்தக் கற்களுக்கிடையில் எதைத் தேடுகிறன்? சிவப்புக்கல் கடுக்கன்களையா?

www.padippakam.com



சுருட்டுக் கொட்டில்களில் புராண படனம் நொந்து போயிற்று. இரண்டாம் உலக மகாயுத்தம் பற்றிய செய்திகளை 'வீரகேசரி'யிலே வாசிப்பது என்கிற வழக்கம் கசியலாயிற்று. ஆண்டு: 1941. ஜனவரி மாசம். தேதிதான் சரியாக ஞாபகமில்லை. அந்த நாளின் சம்பவங்கள் அனைத்தும், வலு செப்பமாக, 'கல்மேல் எழுத்துக்கு நேர்' என்று ஜேக்கப் மாஸ்டரிட்டைப் படிச்ச சொற்றொடரைப் போல, ஞாபகம் இருக்கு. அந்த நாளுக்கான ஆயத்தம் பல காலமாகவே நடந்தது. பிள்ளையார் சுழி இங்கிலீசு ரியூஷன்! பல பலத்து விடியிறதுக்கு முந்தி, வெறும் வயித்தோடை, ரயில் பாதையில், எதிர்ப்பக்கமாக மூன்றாம் வீட்டில் குடியிருந்த 'நல்லையா அண்ண'ரிடம் (பிற்காலத்தில் நியமன எம். பி. யாகத் திகழ்ந்த எம். ஸி. சுப்பிர மணியம்) போவம். இங்கிலீசு சொல்லித்தாற சாட்டிலை மனுஷன் வாட்டு வாட்டென்று வாங்குவார். Dictation சோதினை எண்டால் உயிர் போகும், தூணோடை சாய்ந்து நாற்காலி போட்டுக் குந்த வேணும்; ஒவ்வொரு பிழைக்கும் பத்து நிமிஷம். அது கலப்படமில்லாத சித்திரவதை! சனி, ஞாயிற்றுக் கிழமை களில் 'லொண்டு' சிவகுரு (பிற்காலத்தில் Rail way guard ஆக இருந்த மாணிக்கம்) மக்கிக் கிடங்கடியில் விசேட ஆங்கில வகுப்புகள் நடத்துவார். இருவரும் பணம் பெற்றதில்லை. சமூகத்தின் இளைய தலைமுறையினர் கல்வியில் முன்னேற வேண்டும் என்கிற சமூகப் பிரக்ஞை யுடனும், சேவா உணர்ச்சியுடனும், படிப்பு தந்தார்கள். ஒரு வகைத் தர்மாவேசம்! அதிலை எங்கடை ஆக்கிளை களை மறந்து போனார்கள். ஆங்கிலம் படிச்சதில் எனக்கு ஒரு வகையில் வசதி. 'பேத்தையன்' 'ஊத்தைப் பல்லன்' என்கிற என் பட்டங்கள் மறைந்தன. 'ஹவுஞ்' என்ற பட்டம் ஒட்டிக் கொண்டது. House என்ற சொல்லை 'ஹவுஞ்' எண்டு, உச்சரிக்கிறது பிழை என்பது வெகு காலமாக எனக்குத் தெரியாது.

படிப்பகம்

www.padippakam.com



ஆங்கிலம் படிக்கும் முயற்சியில் எத்தனை ‘G’ நிப்புகள் முறிந்தன, எத்தனை அடி மட்டங்கள் என் வலக்கை முட்டியிலே பிடில் வாசித்தன என்பன கனவாய், பழங் கதையாய்...

சின்னண்ணன் போட்டுக் கழிச்ச, அவருக்குச் சின்னனாப் போன, காற்சட்டைகளை நான் பெரிய ஸ்டையிலாகச் சைவப்பள்ளிக்குப் போட்டுக் கொண்டு போயிருக்கிறன். புத்தம் புதிசாய், ‘ஓடர்’ குடுத்து இரண்டு சோடி உடுப்புகள் தைப்பிச்சினம், அதுவும் நத்தார் அமளியளுக்குள்ளை குடுத்த ஓடர். பெரியண்ணரை ரெய்லர் ரெண்டு மூண்டு வாட்டி அணாப்பிப் போட்டான். அப்பையா கிழிச்ச கிழிவையிலைதான் தந்தவன். காற்சட்டைகள் கருநீலம். வெள்ளை சேட்டுகள். பெரியகோயில் பள்ளிக்கு யூனிபோமிலை தான் போகவேணும். ZIP நாகரிகம் தலைகாட்டாத சாலம். காற்சட்டைக்கு Stud கள் எப்படிப் போடுறது, Buckle கள் எப்பிடி மாட்டிறது என்று பெரியண்ணர் சொல்லித் தந்தவர். சைவப்பள்ளியிலை சேர்டிபிக் கட்டும் எடுத்தாச்சு. அதைத் தரச் சுப்பையா வாத்தியார் வலு பஞ்சிப்பட்டவராம்.

பெரிய மாமா பஞ்சாங்கத்தையும் பார்த்து முடிவு செய்த அந்த நாள் விடிந்தது. காலையில் அம்மா என்னைக் குளிப்பாட்டினா. சொல்ல மறந்து போனன். மூன்று நாளுக்கு முன்னாடி, வண்ணான்குளத்துக்கு முன்னாலை இருந்த அம்பட்டன் சலூனுக்குக் கொண்டு போய் எனக்கு ‘பொலிஸ் குறப்’ வெட்டிவிச்சவை. அம்மா தைலாப் பெட்டியிலை, லாம்பிச்சம் வேர் களுக்குப் பக்கத்திலை, பக்குவமாய் வைச்சிருக்கிற குட்டிக்குரா சோப்புப் போட்டுத் தான் குளிப் பாட்டினவ. நல்லாச் சளிக்க நல்லெண்ணெய் தலையில் வைச்சா. சீப்பாலை ‘இழுத்து’ விட்டா. என்னைப்

www.padippakam.com



பக்கத்திலை வைச்சுக் கொண்டு, கற்பூரம் கொழுத்திச் சாமி கும்பிட்டவ. வடிவா நெத்தியிலை விபூதி பூசினா. புது உடுப்புகளை மாட்டிக் கொண்டன்.

இவ்வாறு அலங்கிருத்தியனான நான் பெரிய மாமாவுக்குமுன்னால் நிறுத்தப்பட்டேன். அவர் ஆரச்சோரஒரு வாய்க்கு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு அம்மா தங்கச்சி. மாமா என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, வெற்றிலைத் தூவானம் பறக்க, வாய்விட்டுச் சிரிச்சார். அவர் சிரிக்கிறது வலு குறைவு. அம்மா ஒன்றும் விளங்காமல் முழிசத் துவங்கீட்டா. ''இதென்னெணை? இவன்ரை 'சையிட் லையிட்'டைக் கண்டோடனை, வெள்ளைக்காரச் சுவாமியர் 'திருப்பிக் கொண்டு போங்கோ' எண்டெல்லோ சொல்லிப் போடுவார். ''உந்தக் கருநாடகம் எல்லாம் அவங்களுக்குப் பிடிக்காது'' என்று சொல்லி மீண்டும் சிரிச்சார். அவர் 'சையிட் லையிட்' எண்டு பகிடி பண்ணியது நான் போட்டிருந்த சிவப்புக்கல் கடுக்கன்களைத்தான் எண்டு எல்லாரும் விளங்கிக் கொள்ளுறதுக்குக் கொஞ்சம் நேரம் புடிச்சுது.

எனக்கு நல்லாப் படிப்பு வரவேண்டும் என்பதற்காக, திருநெல்வேலிச் சிவன்கோயில் குருக்களின் கட்டளைப்படி, அப்பையா எனக்குக் காது குத்துவிச்சவராம். என்ரை வடிவைக் கண்ணாரப் பார்க்கச் சிவப்புக்கல் கடுக்கங்கன் செய்வித்தவர். அதுவும் திறம் வேலைப் பாட்டுக்காரனான துரைப்பா ஆசாரி செய்த கடுக்கன். இடையில் எத்தனையோ இட்டு இடைஞ்சல் வந்தும் அவை கழற்றப்பட்டதில்லை. என்னை அருகில் அழைத்து, அந்தக் கடுக்கன்களைக் கழற்றி, ''இனி உதுகள் உவனுக்குத் தேழ்வைப்படாது. அத்தாரிட்டைச் சொல்லி இதை அழிச்சு உனக்கு ஏதாவது மின்னி செய்து போடு'' என்று கொடுத்தார். ''உப்பிடியே

www.padippakam.com



எண்ணெய் வைக்கிறது? ரெண்டு நாளிலை சேட்டுக் கொலர் எல்லாம் பினாட்டுப் பத்திப்போகும்... கிறிஸ்தவப் பிள்ளையளுக்குக் கட்டி வைச்சிருக்கிற பள்ளிக்குடத்திலை, இரக்கப்பட்டு எங்களையும் சேர்த்துக் கொள்ளுறாங்கள்... சைவத்தைத் தூக்கிப்பிடிக்கிற வடுவாக்கள் எங்கடை பிள்ளையளைச் சேர்க்கிறாங்களோ? நாங்கள் படிக்கிறது அவங்களுக்குப் பிடிக்காது... அப்ப, நாங்கள் என்ன செய்யிறது? எங்கடை ஆசாரங்களைக் கொஞ்சம் விட்டும் பிடிக்கத்தான் வேணும்... நீறில்லா நெற்றி பாழ், சரி. அதுக்காக, பண்டாரங்களைப் போல நெத்தி முழுக்க அப்பியே வைக்கவேணும்?'' என்று மாமா ஒரு குட்டி 'லெக்சர்' அடிக்க, என் அலங்காரங்களிலே சில திருத்தங்கள் செய்யப்பட்டன. வெண்தாடிக் கிழவர் எங்கள் வீட்டில் வளரும் லட்சுமி மாட்டை சங்கடப் படலைக்கு வெளியே, றெயில் பாதை ஓரம், புல்லு மேய்வது போலக் கட்டியிருந்தார். பசு முழி விசளத்துக்குத் திறம் என்பது யாழ்ப்பாண மண்ணின் நம்பிக்கை.

இத்தகைய பலத்த ஏற்பாடுகளுடன் நான் பெரிய கோயில் பள்ளி என்றும், சம்பத்திரிசியார் கல்லூரி என்றும் அழைக்கப்பட்ட St. Patricks College இல் சேர்க்கப்பட்டேன். சீனியர் சோதினையும், Matriculation பரீட்சையும் அதன் மாணவனாய் எழுதினேன். இந்தக் காலம் பூராவும் சங். பிதா. ரி. எம். எவ். லோங் (யாழ். நூலகம் தோன்றுவதற்கு ஜீவசத்தாய் அமைந்த உபகாரி என்றும் இவர் அறியப்படுவார்) அதிபராய் (Rector) இருந்தார். இவரிடம் லத்தீன் கற்றிருக்கின்றேன். ஒரே ஆண்டில் சீனியர் பரீட்சைக்குத் தயார் செய்யப்பட்ட விசேட மாணவர்களுள் ஒருவனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டதினால், இவர் சிறப்பு ஆங்கில வகுப்புகளும் எடுத்திருக்கிறார். இங்கு நல்லன, தீயன என்று எல்லாவற்றையும் கலந்து கற்றேன். எது எப்படி இருந்தாலும், நான் இன்றுள்ள நானாக உருவாக

www.padippakam.com



இந்தக் கல்விச்சாலையே பெருமளவில் உதவியது என்கிற விசுவாச உணர்ச்சி என் நெஞ்சில் ஆழமாக வேர் பாய்ச்சி இருக்கு. பாடசாலை என்பது இரைச்சல் மடம் என்பது என் முன்னனுபவம். பயம் மண்டிய அமைதிச் சூழலை அங்குதான் நான் முதலிலை சந்திச்சன்.

நான் First Year வகுப்பில் சேர்ந்தன். முதல் மூன்று வகுப்புகளும் Lower School என்றழைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலையில் நடந்தன. இந்த வகுப்புகள் தெற்கில் பெரிய சவக்காலையைப்பார்த்து எழுந்துநின்ற மூன்று மாடிக் கட்டடத்தில் நடத்தப்பட்டன. புளியடிச் சந்தியிலிருந்து கிழக்கு-மேற்காய்ப் படுத்துக் கிடந்த றோட்டுக்கு வடக்குப் பக்கமாக Upper School வகுப்புகள் நடந்தன. அதில் Formone என்கிற ஆறாம் வகுப்புத் தொடக்கம் Matriculation, H.S.C. வகுப்புகள் வரை நடந்தன. இந்து போர்டிங், கத்தோலிக்க போர்டிங் என்று இரண்டு விடுதிகள் மாணவர் தங்கிப்படிப்பதற்கு இருந்தன. குருப்பட்டம் பெறப்படிக்கும் மாணவர்களுக்கு புறம்பாக 'செமினறி'யும் இருந்தது.

Lower Schoolக்கு அகஸ்டின் சுவாமியார் தலைமை ஆசிரியர். நல்ல கிழவர். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு நூலகம் இருக்க வேணும் என்ற திட்டத்தைச் செயற்படுத்தினார். சின்னச் சின்ன வடிவான ஆங்கிலக் கதைப் புத்தகங்கள். அவருடைய அறிவுரைப்படி வாரம் ஒரு கதைப் புத்தகத்தை வாசிக்கும் பழக்கத்தை வாலயப்படுத்திக் கொண்டன். படிச்ச கதைகள் சிலவற்றை என் மொழி நடையிலே சொல்லி அவரிடம் 'கெட்டிக்காரன்' என்று பெயர் எடுத்தனான். தமிழ்-நவமணி வாசகம்-படிப்பிச்ச பிரான்ஸிஸ் சேர் சோக்கான கதைகாரர்- அவர் சொல்லற கதைகளைக் கேக்கிறதுக்காக அவர் வகுப்பு எப்ப வரும் எண்டு துடிப்பம். அவர் Coat போட்டாலும் வேட்டிதான் கட்டுவார்.

www.padippakam.com



அகஸ்டீன் சுவாமியாருக்கு ஒரு கூடாத பழக்கம். 'காறி' எடுக்கும் சளியைத் துப்பமாட்டார். 'சுவிங்கம்' போல அதைச் சப்பி மீண்டும் விழுங்குவார். செக்கண்ட் இயரில் தியேட்டர் சேர் இங்கிலிஷ். ஆங்கிலம் நல்லாப் பேசிற மாணவர்களைக் கொண்டு ரெண்டு நாடகங்கள் போட்டவர். இரண்டிலும் நான் நடிச்சனான். மன்னாரி லிருந்து வந்த ரஹீமும், அநுராதபுரத்து சோமபாலா வும் என்கூடப் படிச்சவங்கள். இந்து போடிங்கில் தங்கி யிருந்த அவன்கள் என்ரை நல்ல கூட்டாளியள். சோம பாலா சித்திரங்கள் கீறுறதிலை வலு விண்ணன், ஃபிஸ்ரோய் பத்தால முடிவையும் மறக்க மாட்டன், அவன் பறங்கிப் பொடியன். பால் வெள்ளை. அப்பன் போலீஸ் இன்ஸ்பெக்டர் எண்டபடியால் தான் ஒரு சண்டியன் என்ற கெறுவும். இரண்டு பேரும் கொழு விக் கொண்டம். பள்ளிக்கூடம் விட்டதும் இரண்டு பேருக்கும் சண்டை. அவன் தன்ரை இடுப்பு 'பெல்ட்' ஐக் கழட்டி அடி விடத்தொடங்கினான். வந்த விசரிலை என்ரை 'பொக்கெற்'றிலை இருந்த பேனாவை எடுத்து விட்டன் ஒரு குத்து. 'G' நிப் அவன்ரை கையிலை ஏறி முறிஞ்சு போச்சு. ஒரே ரத்தம். (பேனா ஒரு நல்ல ஆயுதம் என்று எனக்கு அப்பவும் தெரியும் என்பது உட்பொருள்.) இரண்டு நாள் அவன் பள்ளிக் கும் வரவில்லை, போலீஸ் வந்து என்னைப் பிடிச்சுப் போடும் என்று பயந்து கொண்டிருந்தன், அப்பிடி ஒன்றும் நடக்கேல்லை. பேந்து நாங்கள் ரெண்டு பேரும் நல்ல கூட்டாளியளாகி விட்டோம். இனத்தா லும், மதத்தாலும், மொழியாலும் வேறுபட்டவர்கள் ஒரு சாலை மாணவர்களாக மட்டுமல்லாமல், ஒரே வகுப்பு மாணவர்களாய் வாழ்ந்த அந்த இனிய காலத்தை நினைத்துப் பார்க்கிறன். அந்த ஒற்று மையை, சௌஜன்யத்தை- இனிமையைத் தட்டிப் பறித் தது யார்?...கல்வி என்பது தனித் தனி பீப்பாக்களிலே நீச்சலடிப்பதுதான் என்று சொன்ன பித்தலன்கள்

www.padippakam.com



யார்? தர்மாவேசம் காலநதி தீரத்திலே புதைக்கப் பட்டு விட்டதா!

நனவிடை தோயும் பொழுது நரசிம்மக் கோலம் எதுக்கு? Upper School களி மண்ணைப் பாண்ட மாக்கிய சக்கரமோ! மயனின் பட்டறையோ? இன்றைய நான் அங்குதான் வனைந்து, வேக வைத்து, வர்ணம் தீட்டப் பட்டு, வகைப்படுத்தப்பட்டு...களிமண் சிலை யனதா? உயிர்ப்புப் பெற்றதா? பேய்க்கரின் எச்ச சொச்சமான பேய்க் குஞ்சு கவிஞனாய்-கதைஞனாய் பேச்சு வல்லவனாய்-வார்த்தை வித்தகனாய்-சமூக அநீதிகளுக்கு எதிரான போராளியாய் உருவாகியது! எத்தனை வகையான உணர்வுகள்? உறவுகள்? நண் பர்கள்...எல்மோ, இம்மானுவல், பிரான்சிஸ், பத்தி நாதர், நடராஜா, நடேசன், சண்முகம், மயில்வாகனம் ஆரோக்கியநாதன், ஜேசுதாஸ், மத்தாய், கனகரத்னா, சுப்ரமணியம், குணசிங்கம்...பட்டியல் சரீ நீளம். 'குசுப் பெட்டி' செல்லத்துரை தொடக்கம் 'சூரன்' சவரிமுத்து வரை ஆசிரியர்கள் எத்தனைபேர்? அத்தனை பாத்தி ரங்களையும் இணைத்த வர்த்தமானத்தை எழுதுவதென் றால் ஐங்கரன் தன் கொம்பு முறித்து என் எழுத்த ளாய்க் குந்தியிருக்க நான் வியாசனாய்ப் புதுப் பாரதம் புனைய வேண்டும். ஆண்டவா, அதற்கான வசதியும் வாய்ப்பும் கிட்டுமா?

இப்பொழுதெல்லாம் விண்ணப்பப் பத்திரங் களை நிரப்பும் பொழுது Primary & Secondary Education என்ற இடத்தில் St. Patricks College என்று நிரப்புவது வழக்கம். இது வசதியான பொய். நான் கடுக்கன் அணிந்தவனாய், அதற்கு முன்னர் வேறு பள்ளிக் கூடங்களிலையும் தவண்டை அடிச்சவன் எண்டதுதான் மெய்.

www.padippakam.com



சின்ன வயசில் நான் விடாமல் ராகம் இழுத்து அழு வான். அழுகுணி எண்டு எனக்குப் பட்டமும்! அழுகை ஒரு சோக்கான ஆயுதம் எண்டதை உசுக்குட்டியனாக இருக் கும் பொழுது அறிஞ்சு கொண்டன். மச்சான் காங்கேசு உரிய முறையிலே வித்தியாரம்பம் செய்யப் பட்டு, கைக்குளன் சந்தைப் பள்ளியிலே சேர்க்கப் பட்டான். சோதி மாமியின் மகள்கள் தையல் பெட்டிகளிலை புளியம் பிஞ்சு, புழுக்கொடியல் எண்டு கன சாமான்கள் கொண்டு போறதையும் கண்டன். அங்கை சரியான முஸ்பாத்தி இருக்கும் எண்டு நினைச் சுக் கொண்டன். 'நானும் பள்ளிக்குப் போவன்' எண்டு அடம் புடிச்சு அழத்துவங்கினன். எனக்குச் சாதகம் எழுதிய திருநெல்வேலிச் சிவன்கோயில் குருக்கள், 'கல்வி வித்தைகளிலே இந்தச் சாதககாரன் பிறநாட்டுப் பிரபுக்களுடைய மதிப்பையும் பெறுவான்' என்று சொன்னவராம். அப்பையாவுக்கு இந்த விஷயத்திலை எப்பவும் வலுபுளுகம். நான் அழத் துவங்கியதும் கல்வி வித்தைகளிலே எனக்குள்ள ஒரு பாந்தந்தான் எண்டு அப்பையாவும் பேய்த்தனமா நினைச்சுப் போட்டார். இன்னொரு சங்கதியும். அப்ப நான் அழுதால் கண்ணீர் வராட்டிலும், மூக்குச் சளி வழிஞ்சு வாய்க்குள்ளை பூரும். 'அழுகுணியன்' என்று எனக்குப் பட்டம். எனவே, கோயில் குளம் போறதுக்கென வாங்கப்பட்ட பட்டுக் கழிசான் அணியப்பட்டு, பள்ளிக்கு அனுப்பப் பட்டன். என்னைச் சோதிமாமியின் 'பொடிச்சி'யளான இரண்டு மச்சாள்மார் கூட்டிக்கொண்டு போனவை. மாணிக்கம் மச்சாள் மூன்றாம் வகுப்பு. டாப்பிலை பேர் பதியச் செய்யத் தனக்குத் தெரியும் என்று ஏர்வைப் பட்டா. 'வயசு இருக்குத் தானே? ஒழுங்கா வந்து போகட்டும். பேந்து பேர் பதியலாம்' எண்டு வாத்தி யார் சொன்னவராம். 'அரிவரி' வகுப்பில் அரை மணித் தியாலம் கூட இருந்திருக்க மாட்டன். மற்றப் பொடியள் 'ஆனா ஆவன்னா...' என்று சத்தம் போடத் துவங்க,

www.padippakam.com



நான் அவங்களை மிஞ்சக்கூடியதா அழத் துவங்கிட்டன். பிறகு, நான் மாணிக்கம் மச்சாள் படிக்கிற வகுப்புக்கு அனுப்பப்பட்டன். அவளுக்குப் பக்கத்திலை குந்தினால் அழமாட்டன். ரெண்டு மூன்று நாள் இப்படி நகர்ந்திருக்கும். 'ஏன் மாணிக்கம்? உன்ரை குட்டி மச்சானைப் போட்டுத் தாலாட்டுறதுக்கு ஒரு ஏணையும் கொண்டு வந்து கட்டன்' என்று வாத்தியார் கேட்டுப் போட்டார். அவ பள்ளிக்கூடம் விட்டு அழுதழுது வந்தவ. நான் வந்தால், தாங்கள் பள்ளிக்குப் போவதில்லை என்று என் மச்சாள்மார் போர்க் குரல் எழுப்பினார்கள். பள்ளிக்குப் போறது ஓர் ஆக்கினையான அலுவல் எண்டது எனக்கு விளங்கிப் போச்சு. 'அரிவரி குரிவரி அம்பட்டக் கணபதி' என்று கத்த மட்டும் பழகிக் கொண்டன். கள்ளியங்காட்டுச் சந்தியில் தற்காலத்தில் 'செங்குந்தர் இந்துக் கல்லூரி' என்று எழுந்திருக்கும் கல்விச் சாலைக்கு என்னைத் தனது பழைய மாணாக்கன் என்று உரிமை பாராட்டும் பொசிப்பு இவ்வாறுதான் இல்லாமற் போயிற்று!

'பண்டாரக் குளத்தடியிலை இருந்தால் உவன் படிக்க மாட்டான். மாடுகளை மேய்ப்பான், அல்விட்டில் மச்சாள்மாரை மேய்ப்பான்...' என்று வெண்தாடிக் கிழவர் சேணிய தெருவில் துள்ளினவராம். அவர் துருவாசரைப் போல. எதுக்கும் பட்டென்று சாபம் போட்டிடுவார். அதுக்கு எல்லாரும் பயம். இந்தக் கலம்பவங்களுக்கிள்ளை நான் 'புலம் பெயர்ந்த தமிழ'னாய் சேணியதெருவில் குடியேறினன். முன்னால், இரண்டு மூன்று வீடு தள்ளி, கைகாட்டி. பொழுது பட்டோடனை அதன் நெத்தியில் சிவப்பு வெளிச்சம். காங்கேசன் துறைப் பக்கமிருந்து கூக்கூ என்று சத்தம் போட்டுக் கொண்டு ரயில் வர, பட்டென்று கைகாட்டி விழுந்து பச்சை வெளிச்சம் வரும்! பச்சை வெளிச்சம் வராட்டில் இவர் நின்று 'கூக்கூ' போட்டுக் கொண்டிருக்க

www.padippakam.com



வேணும். பண்டாரக்குளத்திலை பார்க்காத பல புதினங் களை இங்கை பார்க்கலாம்.

பஞ்சாங்கம் சொன்ன நல்ல நாள். 'சாக்கர்' என்றும் அழைக்கப்பட்ட ஐயம்பிள்ளைமாமாதான் ஏடு துவக்கின வர். நல்ல வடிவான பனையோலைச் சுவடியிலை 'அ, ஆ...ஃ' வரை எழுத்தாணி கொண்டு எழுதித் தந்தார். முள் முருக்கம் இலைச் சாறு பூசினோடனை எழுத்துகள் வடிவா தெரியும். அக்கா—எங்கள் சொந்த அக்காவாக எங்களுடன் வளர்ந்த பெரியம்மா மகள்— எனக்கு சிலேட்டிலை ஆனா ஆவன்னா எழுதவும் படிப் பிச்சவ. 'கண்ணாடிப் புடையன்' என்றழைக்கப்பட்ட நாகரத்தினம் மாஸ்டர் பக்கத்திலை சின்னாச்சி மனுஷி வீட்டுக்கு முஸ்பாத்தி போடவாறவர். அவர் மூலமாக, மணிக் கூட்டுத் தெருவில், பென்னம் பெரிய இலுப்பை மரம் குடை விரித்திடும் இடத்தில் வாசல் வைத்திருந்த மெதடிஸ்த மிஷன் தமிழ்ப் பாடசாலையில் சேர்க்கப் பட்டேன். வேதப் பள்ளி எண்டாத்தான் தெரியும். பிற்காலத்தில் பராசக்தி அக்கா இருந்த வீட்டுக்குப் புளியமரப் பொட்டால் சுறுக்காப் போகலாம். ஒரு புத்தகம் ; ஒரு சிலேட். சிலேட்டைத் துப்பல் போட்டு அழிக்கிறதுதான் சுகம். பருப்பை எடுத்து துப்பல் போட்டு ஒட்ட வைச்சு, அதை விரலாலே சுண்டிப் பறக்க வைக்கிறது சோக்கான விளையாட்டு. துவரம் பருப்புத்தான் நல்லா ஒட்டும். அதை நல்லா ஒட்ட வைக்கிற Tricks ஐ பெரியண்ணர் சொல்லித் தந்தவர். வேதப்பள்ளியில், படித்ததிலும் பார்க்கப் புற கிருத்தி யங்களிலே கூட நேரம் ஈடுபட்டதாக ஞாபகம். வராத பிள்ளைகளைச் சாய்ச்சுக் கொண்டு வாறதுக்கு நானும் அனுப்பப்பட்டிருக்கிறன். 'குட்செட்'டடிப் பொடியள் வண்டிலை விட்டிடுவான்கள். சின்னண்ணனோடை போய் அந்த வீடுகள் எனக்குத் தெரியும். அந்தக்

ந—8

படிப்பகம்

www.padippakam.com



காலத்திலை வீட்டிலை வளருற மாடுகளை முத்த வெளிக்கு மேய்க்கக் கொண்டு போறதுக்கு ஆக்கள் இருந்தவை, மாடுகளைப் போலைதான் மனிதரையும் சாய்க்க வேணும். கையிலை துட்டிருந்தால் சாய்க்கிற வேலை பிழையில்லை. பொடியள் படிக்க வாறதிலை வாத்திமாருக்குக் கரிசனை எண்டு அந்தக் காலத்திலை நினைச்சனான். மாணவர் வரவினைப் பொறுத்துப் பாடசாலைக்குக் கனக்க வசதிகள் உண்டு என்கிற நெளிவு சுழிவுகளை நான் வாழைச்சேனையிலை தான் முழுக்க முழுக்க அறிஞ்சு கொண்டனான். ஞாயிற்றுக் கிழமை பின்னேரங்களிலை கிறிஸ்தவ வகுப்புகள் நடக்கும். கட்டாயம் எண்டில்லை. போனால் சின்னச் சின்ன வடிவான படங்கள் தருவினம். கிறிஸ்மஸ் சமயம் நல்ல கலாதி. பெரிய வகுப்பு அண்ணன்மாரும் அக்காமாரும் நாடகம் நடிப்பினம். கெட்ட குமாரன் நாடகத்திலை கனகம்மாக்கா நல்லா நடிச்சவ. ஸ்ரான்லி வீதியில கட்டப்பட்ட முதலாவது கட்டடம் கனகபவனம்! அது அவவின்ரை பெயராலை கட்டப்பட்டது. கிறிஸ்மஸ்மரம் கனாவிலை காணுற மரம் போலதான்! சின்னச் சின்ன 'பல்பு'கள் டாலடிக்கும். காக்காப்பொன் குஞ்சங்கள் ஜிகினா சொரியும். வண்ண பலூன்கள் காய்க்கும். பென்சில்கள், கொப்பிகள், புத்தகங்கள், பொம்மைகள் என்று பல்வகைத்தான பரிசுப் பொருள்கள் அந்த மரத்திலை தொங்கும். பெயர்களைக் கூப்பிட்டுப் பரிசுகளை மரத்திலை ஆய்ஞ்சுதான் தருவினம். சோக்கா இருக்கும்.

நான் அங்கை அரிவரி படிக்கேக்கிள்ளைதான் உண்மையான இலவச மதிய போசனத் திட்டம் அமுலுக்கு வந்தது. அது கன்னங்கராவின் கைங்கரியம் எண்டு நினைக்கிறன். அது யுத்தகாலப் பஞ்சத்தினாலைஇடையிலை நிண்டது. 1956-க்குப் பிறகு தஹாநாயக்கா மீண்டும் இலவச மதிய போசனத்

www.padippakam.com



திட்டத்தைக் கொண்டுவந்தார். இந்தத் திட்டத்திலை Intervelலுக்கு இலவச 'பன்னிஸ்' கிடச்சது. இதனால் அவருக்கு 'பன்னிஸ் மாமா' என்ற பட்டம் நிலைச்சுது. பேக்கரிக்காரன்கள் காசு அடிச்சவன்கள். நடுவிலை அவியாமல் இருக்கிற கோதம்ப மாவை Ball செய்து பொடியன்களிலும்,சில சமயம் வாத்திமாரிலும், எறிஞ்சு பழக உதவினதுதான் மிச்சம்! இந்த ஆய்க்கினைக்குப் பிறகு Care விஸ்கோத்து குடுக்கிறதிட்டம் வந்தது. நான் வாழைச்சேனையிலை அதிபராய் இருக்கேக்கிள்ளை இந்த விசுகோத்துக் கணக்கு வழக்குகளை உப அதிபரிலை பொறிப்பிச்சுப் போட்டன். கிராமப்புறப் பள்ளிக் கூடங்களிலை அதிபர் வேலை பார்த்த சட்டம்பிமாருக்கு இந்த விசுக்கோத்தாலை நல்ல கொண்டாட்டம். இந்த விசுக்கோத்துகளை கோழித் தீவனமாக்கிப் பணக்காரராகியவையளும் இருக்கினம். பெரிய பள்ளிக் கூட அதிபர்களுக்கு வசதிக் கட்டணம்,தளபாடத்திருத்த வேலை,விளையாட்டுப் போட்டிகள், கட்டட நிதி என்று 'பாலப்பருப்பு'ப் போல காசடிக்க வேறு வழிகள் இருந்த தால், விசுக்கோத்திலை கைவைக்கிறதில்லை எண்டு அநுபவஸ்தர்கள் எனக்குச் சொல்லித் தந்தவை. வேதப் பள்ளியில் மதிய இலவச உணவு சோறு. ஒரு மரக்கறி, பருப்புப் போட்டு சாம்பார்போல குழம்பு, சொதி. இவ்வளவும் சோத்துக்கு உவப்பாகத் தருவினம். சொந்தமாப் பீங்கான் அல்லது தட்டு நாங்கள் கொண்டு போகவேணும். அவற்றைக் கழுவி வைக்கிறதுக்கு அலுமாரிகூட இருந்தது. கோக்கி ஒருத்தன் குழம்பு வாளியைக் கொண்டு வரேக்கிள்ளை அக்காமேலை கொட்டுண்டு போச்சு. பாவாடை எல்லாம் கறி. காலிலை சூட்டுக் குழம்பு. வேணுமெண்டுதான் அக்கா மீது கறியைக் கொட்டினவன் எண்டது ஆச்சியின் கட்சி. பள்ளிக்கு வந்து ஆச்சி அதிபரைக்கூடக் கேளாக் கேள்வி கேட்டவ. எங்கடை அயலிலை வாய்ச்சண்டயிலை ஆச்சியை ஆரும் வெல்லேலா. அக்கா அப்ப கடுக்கண்டி

www.padippakam.com



ருந்ததுதான் ஆச்சியின் கொதிக்கு மூலகாரணம். ஆச்சிக்கு சப்போட்டாக, 'சைவப்பள்ளிதான் படிப்பிலை முன்னுக்கு நிக்குது. உருப்படியா ரெண்டு தேவாரம் எண்டாலும் சொல்லிக் குடுப்பாங்கள், உந்த வேதக் காரன்கள் மதம் மாத்திப் போடுவான்கள்' என்று வெண்தாடிக்கிழவர் புசத்தத் துவங்கினார். அதோடை நான் சைவப்பள்ளிக்கு மாறினன். இரண்டு பள்ளி களையும் பாசி பிடித்த, உடைந்த 'வீதுரோடுகள்' பொறிக்கப்பட்ட உயரமில்லாத மதில் ஒன்றுதான் பிரிச்சு வைச்சது. 'வேதப் பள்ளி வெடுக்குச் சட்டி!' 'சைவப்பள்ளி சருவச் சட்டி' என்று பயன்கள் வக்கணை தெளிப்பார்கள். வேதப்பள்ளியிலை முழுசாக ஒரு வருஷந்தான் படிச்சாலும், என் பழைய பள்ளி என்கிற பாந்தம் அதிலைதான் கூட என்பதை இப் போது நிதானிக்க முடிகிறது.

வேதப்பள்ளி Vernacular School. சைவப்பள்ளி Bi-Lingual School. இங்கிலீசு ஒரு பாடம். சம்பத்தரிசி யார் கல்லூரி ஆங்கிலப்பாடசாலை. எல்லாப் பாடங் களும் ஆங்கிலத்தில கற்பிக்கப்படும். English Medium School. சைவப்பள்ளியிலை இரண்டாம் வகுப்பிலை சேர்ந்தனான். ஆசிரியர் சுப்பையா, நல்ல கறுவல். கன்ன உச்சி. பால்கூட அவருடைய பளிச்சிடும் பற் களிட்டை நிறத்துக்குப் பிச்சை கேட்கும். சாவகச்சேரிப் பகுதியிலிருந்து ஒவ்வொரு நாளும் ரயிலிலை வாறவர். கரிக்கோச்சிலை வந்தாலும் உடுப்புக் கசங்காது. பாலா டையிலை பாலாமணியும், வேட்டியும். அதிலைதான் சால்வையும். கனிவுப் பார்வை, நித்திய குஞ்சிரிப்பு. நான் யூனிவேஸிட்டி மாணவனாய் இருந்த காலத் திலும், அதே தடத்தில், அதே பார்வையுடனும் சிரிப் புடனும் வந்து போய்க் கொண்டிருந்தார். அவரையே இன்றளவும் என் நெஞ்சு எழுத்தறிவித்த இறைவனாகச் சம்பாவனை செய்யும். மூன்றாம் வகுப்பில் அவர்

www.padippakam.com



சரித்திரம் படிப்பித்தவர். எல்லாளன்- கைமுனு யுத் தத்தைப் படிப்பிச்சது Graphic ஆக நினைவு இருக்கு. சேவுகப் பொன்னையா மகன் மகாலிங்கமும், பெரிய சண்முநாதனும் வகுப்பிலை கடைசி வாங்கைக் குத்த கைக்கு எடுத்தவை. எங்களிலும் Double உயரம். பெஞ் சன்காரர் போலை வயசு. அவங்களைச் சண்டை பிடிக்கி றாப்போல எல்லாளன்-கைமுனு போல காட்டிப் பாடம் நடத்தியவர். அதன் தாக்கத்தாலும் நான் 'முதல் முழக்கம்' நாடகம் எழுதினன். அவர் வகுப்பை வரிசை யாய் நிக்க வைச்சுத்தான் மனக்கணக்கு வகுப்பு நடத்து வார். கணக்குக்குச் சரியான விடை சொல்லுறவன், பதில் சொல்லாதவங்கடை தலைகளிலை எல்லாம் குட்டிக் கொண்டு போய் முன்னுக்கு நிக்கவேணும். அப்ப நான் கணக்கிலை சூரன். சத்தம் நல்லாக் கேட்கக் கூடியதாகக் குட்டுவன். எல்லாளனையும் கைமுனுவையும் எத்தனை தடவைகள் குட்டியிருக் கிறன்! என்ரை குட்டிலை சிலபேர் அழுதும் இருக்கினம். ஆதி கால மனுஷரைப் போல சண்டையும் போடுவன். பல், நகம், கல் ஆகியன என் ஆயுதங்கள். என்கூடப் படிச்ச பெருமான்கோயில் சின்னக் குருக்கள் (அவனுக் குப் பெயர் வரதராஜ ஐயர் என்று ஞாபகம்) மொழு மொழுத்த தேகம். 'மோதகம்' என்று பட்டப் பெயர். எப்பவும் அவன் மடி நிறைய அரைச் சதங்களும் கால் சதங்களும்இருக்கும். 'போட்டிகோ' குடுமி. 'கள்ளப் பிரா மணி' 'உண்டியல் கள்ளன்' என்று எல்லாரும் அவனைச் சீண்டுவினம். சிறுபான்மைக் கோலத்தின் அவமதிப்பு! அதே பாணியில், இன்னொரு வகையிலை, என்னிலும் பதம் பார்க்கத் துவங்கீட்டினம். பொறுத்தால், குயில் குஞ்சைக் குட்டுறது போலை குட்டித் துலைச்சுப் போடு வாங்கள். ஒரு நாள். மூண்டு பொடியள் குருக்களிலை சேட்டை விட்டுக் கொண்டு நிண்டினம். அவையளிலை எனக்குப் பழம் கறளும். அவங்களுக்கு குட்டும், குத்தும், கல்லெறியும் விட்டன். தூரத்தில் பெரியண்ணன்

www.padippakam.com



வந்து கொண்டிருந்ததைப் பார்த்த தைரியமும் எண்டது அவங்களுக்குத் தெரியாது அதிலிருந்து அவை மடக்கம். பிறகு சின்ன ஐயர் என்னிலை ஒட்டு. முன்னா லிருந்த சைவத்தின்ரை கடையிலை நான் விரும்பிய எந்தச் சாமானும் வாங்கித் தருவான். உறவுக்கு அப்பாலும் நட்புகள் உண்டு என்பதன் ஞானோதயம் இது என்பதை இப்பொழுது இனங்காண முடியுது.

என்னோடை அவன் கூட்டாளியாத் திரியிறது வடிவில்லை என்று இராசையா வாத்தியார், பெரிய ஐயரிட்டைக் கோள் மூட்டினவராம். அவர் சிலுக்கு பாலாமணியும் சால்வையுமாக ஆனைப்பந்திப் பக்க மிருந்து சைக்கிளிலை வருவார், அவர் சித்தவைத்தி யரும். சைக்கிள் கரியரில் மருந்துப் பெட்டி. நெத்தியில் எப்பவும் சந்தனப் பொட்டு. அவர், சமய பாடத்திலை நான் எப்படிச் சரியாச் சொன்னாலும் பிழைகண்டு பிடிப் பார். மற்றப் பாடங்களிலை எவ்வளவு மார்க்ஸ் எடுத்தாலும் 'முட்டை' தந்து, நான் முதல் மூன்று பிள்ளைகளுக்குள் வராதவாறு கரிசனையாகப் பார்த் துக் கொள்ளுவார் பின்னாலை நின்று கல் லெறிந்து அவர் மண்டையிலிருந்து ரெத்தம் ஓடுறதைக் கண்ணாலை பார்க்க வேணும் என்று கறுவியிருக்கிறன். மூன்றாம் வகுப்பில்தான் இங்கிலீஸ் பாடம் துவங்கும். இங்கிலீசு படிப்பிச்சது ஒரு டீச்சர். அவ பாடசாலைக்கு ரிக்ஷாவிலைதான் வருவா கண்ணாடியும் போட்டி ருந்தா. அவதான் இங்கிலீசும் தையலும் படிப்பிக்கிற திலை கெட்டிக்காரியாம். அவவின்ரை புருஷன் ஆஸ்பத்திரியிலை நல்ல உத்தியோகமாம். அரைச் சுவருக்கு மேலாலை அவவோடை இராசையா வாத்தி யார் பேசிக்கொண்டிருப்பார். அவ படிப்பிக்கிறதுக்கு முந்தியே நான் ரியூஷனிலை இங்கிலீஷ் படிக்கத் துவங் கீட்டன். நான் கூனாவுக்கு முந்தின பீனா போலவும் நடந்திருக்கலாம். அவவும் எனக்கு மார்க்ஸ் தாறதுக்கு

www.padippakam.com



அருக்காணிப்படுவா். அந்த ரெண்டு பேரும் நான் முதலாம் பிள்ளையாய் வராமல் இருக்க ஏன் அவ்வளவு கரிசனைப் பட்டவை எண்டது எனக்குப் பேந்துதான் விளங்கீச்சுது. அப்ப நான் பெரிய கோயில் பள்ளியிலை முதலாம் பிள்ளையாக வந்து கொண்டிருந்தன்.

சைவப்பள்ளிலை சின்னச் சண்முகநாதனும் என்னை சிநேகிதன். அவன் நாவலர் றோட்டில், நீராவியடி வந்து ஏறும் இடத்துக் கிட்ட வசித்தவன். அப்பா இல்லை, அண்ணன்தான் படிப்பிச்சவர். தண்ணீரால் சீலேட்டைக் கழுவி, அதன் சட்டத்தைப் பிடித்து ஆட்டி ஆட்டி உணர்த்தினான். சட்டம் கழன்று, சிலேட் சிமெண்டுத் தரையிலை விழுந்து நொருங்கிப் போச்சு. அண்ணன் தன் தோலை உரிச்சுப்போடுவார் என்று அவன் அழத்துவங்கினான். பாவமா இருந்துது. என் சிலேட்டை அவனுக்குக் கொடுத்து, நான் என் சிலேட்டை உடைச்சுப் போட்டதாக வீட்டிலை போய்ப் பொய் சொல்லி வாங்கிக் கட்டினன். பிறருக்கு உதவு வதில் உள்ள சுகத்தை அப்பொழுதுதான் உணர்ந்தன். அவனுடைய வீட்டுக்குப் பின்னால நிறைய கறிவேப்ப மரங்கள் நின்றன, எனக்கு ரெண்டு மூன்று கன்றுகள் பிடுங்கித் தந்தவன். அவற்றை வீட்டுப் பின் வளவிலை நட்டுத் தண்ணீர் ஊற்றி வளர்த்தன். ஒரு மரம் சேட்ட மாக வளர்ந்தது. ஆனால், வாளிக் கக்கூசு கட்ட நிலையம் எடுத்த பொழுது, அந்த கறிவேப்பமரம் வெட்டப்பட்டுவிட்டது. வளருவதும் வெட்டுவதுமான சம்சார சக்கரம்!

தமிழில் எழுதும் பொழுது, சம்பத்திரிசியார் கல்லூரி யில், மேல் வகுப்புகளில் ஜேக்கப் சேரிடம் தமிழ் படிச் சதை மறக்கமாட்டன். அவர் பிற்காலத்தில் யாழ்ப்பாண மாநகரசபையின் மேயராகவும் உயர்ந்தவர். அவர் செய்யுளுக்குத் தரும் பொழிப்புரையில் ஒரு Sample.

படிப்பகம்

www.padippakam.com



''நெல்லுக்கிறைந்த நீர்— நெல்லுக்கு இறைத்த நீர்; வாய்க்கால் வழியோடி— வாய்க்கால் வழி ஓடி, புல்லுக் கும்மாங்கே பொசுயுமாம்— புல்லுக்கு மாங்கே பொசியும் ஆம்; தொல்லுலகில்— தொல் உலகில்; நல்லாரொருவ ருளரேல்— நல்லாரொருவர் உளரேல்; அவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யும் மழை- அவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யும் மழை... You uderstand ...now let us go to the next verse... இப்படியாகத்தான் நான் தமிழ் படித்ததனால், என் இரண்டாம் மொழியாக லத்தீனைக் கைப்பற்ற நேர்ந் தது. ஆனால் இன்று...

இப்ப அவுஸ்ரேலியாவிலே சில பேர், 'எனக்குத் தமிழ் பேச அவ்வளவாக வராது... மன்னியுங்கோ ஆங்கிலத்திலே பேசுகிறேன்...' என்று சொல்லுகிறார் கள். தங்களுடைய அறிவு மிதப்புக்கு இந்த அறிவிப்பு உதவும் என்று நம்புகிறார்கள். நான் ஜேக்கப் சேரிடம் தமிழ் படிச்சும், முதன் முதலில் ஆங்கிலத்தில் கதை சொல்லி, ஆங்கிலத்தில் நடித்தும் கலைகள் பயின்ற போதிலும், என்னாலே சபைகளிலே தமிழிலே பேச முடியும் என்று அறிக்கையிடுவதின் மூலம் தமிழருடைய மானத்தைக் கப்பல்ஏற்றுகிறேனா?என் தமிழ் சேவிப்புக்காக என்னை அறிவில்லாதவன் என்று நீங்கள் மட்டிட்டாலும் பாதக மில்லை. என் பேரப்பிள்ளைகள் மட்டுமல்ல, அவர் களுடைய பேரப்பிள்ளைகளும் தமிழிலே பேசக்கூடியவர் களாக வளரவேண்டும் என்று கனவு காணும் உரிமை எனக்கு உண்டு என்று நான் கொக்கரித்துக் கொண்டே இருப்பேன். இறக்கும் பொழுதுங்கூட அவ்வாறே கொக்கரிப்பேன். △

குதிரை முயல் குசுப்பெட்டி
குளவி சூரன்
சுதிசேர்த்த கள்ளுமுட்டி
கோழிக்காலன்
அதிநீள 'டானா'வாய்
அமைந்த வாத்தி
இதுபோல எத்தனையை
ஆசான் என்றேன்
பேராளர் பொரிச்ச மீன்
பேப்பர் சாந்தா
பொரியாத பிலாக்கொட்டை
பவளக்காலர்
காராளி அழுக்கடையர்
மத்தாப்பு ஒட்டை
கன்னியா பிறண்டி யப்பான்
கோனாங் தோட்டம்
குருவி நுழை ஜீவா போல
குலத்தின் ஏந்தல்
பெருந் தலைவர் எத்தனையை
பெற்றேன் அன்று.

# 8. பேர்

காலநதி, வாலைக் குமரி போல, பெருவிரலால் நிலம் உழுது நாணத்தை உமிழ்ந்து சிறுநடை பயிலுகின்றதா? அதிலே மிதப்பவை என்ன? சருகுகளா? இந்தச் சருகுகளைப் பார்த்து அவற்றின் இலைப் பெயர்களைச் சட்டென்று நினைவுக்குக் கொண்டு வர முடியுமா?

www.padippakam.com



'செத்த ராமன் வாறார்...பேப்பர் செல்லையா கூப்பிடுகிறார்...சைஸ் வல்லி உதாலை போறார்...' என்று வஞ்சகமில்லாமல், சில பாத்திரங்களின் தோற் றத்துக்கு நான் கட்டியம் கூறப்போய், அப்பையாவை சரியான சங்கடத்துக்குள் மாட்டியிருக்கிறன். சில மனிதர்களுடன் ஒட்டிக் கொள்ளும் பட்டம் பற்றிய ஞானம் எனக்கு சம்பத்திரிசியார் கல்லூரியிலைதான் ஏற்பட்டது. அதுவும், றோட்டுக்கு இங்காலை, புதி சாகப் பெரிய அத்திவாரம் போட்டிருந்த பெரிய கோயிலை ஒட்டினாப் போலிருந்த Upper schoolலுக் குப் போன பிறகுதான் 'பட்டங்கள்' பற்றிய நுணுக்க மும், பயனும் எனக்குச் சரியா விளங்கினது. 'நளக் காத்தி' 'கோவியக் கனகு' 'நச்சமயிலு' 'பள் பரமு', என்று ஜாதியை இணைத்தும், 'கிளாக்கர் பொன்னுத் துரை' 'தாகர் தம்பையா' என்று உத்தியோகத்தை இணைத்தும் ஆக்களை அடையாளம் காட்டுவது கற் பனை வரட்சியைக் காட்டும் என்பதைப் பின்னர் நிதானித்துக் கொண்டன். பெயரை மொட்டையாகச் சொன்னால், 'எந்த இவர்?' என்ற இரண்டாவது கேள்வி எழும். 'யாரிவர்' என்பதைச் சுலபமாக அறிவ தற்குப் பட்டப் பெயர்கள் வலு வசதி. அத்துடன் சில பட்டப் பெயர்கள் மகாசக்தி பெற்றனவாகவும் விளங்கின.

'செல்லத்துரை சேர் வாறார்' என்றால் எந்தச் செல்லத்துரை என்று யாருக்குத் தெரியும்? மூன்று செல் லத்துரைகள் இருந்தார்கள், அவர்களுடைய அப்பன், பாட்டன் பேர்களை எல்லாம் நினைவில் வைக்கிற எண் டால், மூளைக்கு வேற வேலை இல்லையா? கஞ்சல் கூளங்களை எல்லாம் சின்ன மூளையிலை ஏத்தி வைச்சு அதைக் கஷ்டப்படுத்தக் கூடாது என்று எங்கேயோ பிறகு படிச்சும் இருக்கிறன். செல்லத்துரை என்று பெயரே சொல்ல வேண்டாம். 'குதிரை', 'குசுப்பெட்டி',

www.padippakam.com



'முயல்' என்று பட்டத்தை மட்டும் சொன்னால், எந்தச் செல்லத்துரை என்பது பட்டென்று விளங்கிப்போகும். பட்டங்களைச் சிலர் பகிடியாக எடுத்துக் கொள்வார்கள், சிலருக்கு படு கோவம் வரும். 'குதிரை' ஓய்வு பெற்றதும், குசுப்பெட்டி, Head Master ஆனார், அவர் அயலிலே உள்ளார் என்பதை அறியாமல், 'குசுப்பெட்டி' என்று சொல்லி, பிரம்படி பெற்ற அநேக மாணவருள் நானும் ஒருத்தன். அவரிடம் பல நீளங்களிலும், பல மொத்தங்களிலும் பிரம்புகள் இருந்தன. Read a Book A week' என்கிற பிரசாரத்தால். George Bernaard shaw நல்ல நாடக ஆசிரியர் என்பது விளங்கிப் போச்சு, 'G.B.S.' என்ற எழுத்துக்களை 'Gas Box Selladurai' என்பதைக் குறிக்கப் பயன் படுத்தினோம். இது தன்னைக் குறிக்கும் என்பதை உளவாளிகள் மூலம் 'குசுப்பெட்டி' அறிந்து கொண்டதால், எங்கடை யுக்தி நீண்ட காலத்துக்கு நிண்டு பிடிக்கவில்லை. மீண்டும் 'குசுப்பெட்டி'யும் பிரம்படியும் தொடர்ந்தன. ஆனால் 'முயல்' சோக்கான ஆள். அவர் பூமிசாத்திரம் படிப்பிச்சவர். புல்வெளிப் பகுதிகளைக் காட்டி, 'இங்கு முயல்கள் வாழும், முயல் செல்லத்துரை வாழமாட்டார்' என்று சொல்லிச் சிரிப்பார். அப்படிச் சிரிக்கும் பொழுது, அவருடைய செவிகள் முயலுடைய செவிகளைப் போல தான் காட்சி தரும்!

துரைசிங்கம் சேர் தமிழ் படிப்பிச்சவர். நல்லாப் படிப்பிப்பார். தமிழ்-ஆங்கில அகராதி ஒன்று தொகுப்பதிலும் அவருடைய இருமொழி அறிவு பயன்பட்டுள்ளது. வேறு துரைசிங்கம் கல்லூரியில் இல்லை. இருந்தாலும் அவர் 'குளவி' என்றே பிரபலமானார். பென்ஸிலையும் சேர்த்து விரல்களாலே நுள்ளுவார். செவி-வயிறு என்று மென்பாகங்களையே அவருடைய 'நுள்ளல்' பதம் பார்க்கும். 'ஐயோ சேர்...' என்று அளறினாலும் விட்மாட்டார். ''சொல்லு...குளவி

www.padippakam.com



கொட்டும்...''என்று உதடுகளைச் சத்தாருக்கு நீட்டிக் கொண்டே உரமாக நுள்ளுவார். இந்த ஆக்கினையின் உச்சத்தை அநுபவித்தவர்கள் 'குளவி கொட்டுவதுக்கு உந்த அறுவாலிடந்தான் படிக்க வேணும்' என்று வாய் விட்டு அழுதிருக்கிறார்கள். என் பொல்லாத காலமோ என்னவோ, அவரிடம் தமிழ் படிக்கும் யோகம் கிட்டவே இல்லை. குளவி துரைசிங்கத்தின் மகன் எங்களுடன் படிச்சவன். 'குளவிக் குஞ்சு' என்று பட்டம் தெளிச்சு அவனை அழ வைப்போம். அவனுடைய சகோதரி ஒருத்தி கன்வெண்டில் படிச்சுக் கொண்டிருந்தாள். வடிவானவள். அவள் அடைக்கல மாதா கோயிலடியில் இருக்கும் வீட்டை நோக்கிப் போகும்போது 'குளவிச்சி!...குளவிச்சி!!' என்று 'கூ'க் காட்டுவோம். அவள் வீட்டுக்குப் போய் அழுவாளாம்.

ஒரு வருஷம் 'சூரன்' சவரிமுத்துவிடம் நான் தமிழ் படிச்சனான். 'லகர' 'ளகர' 'ழகர' வேறுபாடுகள் 'றகர' 'ரகர' வேறுபாடுகள் ஆகியவற்றைத் தொகுத்து அந்தக் காலத்திலே ஒரு சின்னப் புத்தகம் வெளியிட்ட வர். பின்னாளில், அவர் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராக இருந்த காலத்தில், என்னைப் பேச்சாளராக அழைத்துச் சிறப்பித்தவர். F.N.C. சவரிமுத்து குள்ளம். இவர் நல்ல உயரம். பெரிய சைஸ். இதனால் 'சூரன்'! கரும்பலகையை அழிக்கும் Duster மரப்பிடி கொண்டதாக இருக்கும். அந்த 'டஸ்டரி'ன் மரப்பிடியினால் நெற்றியில் இடிப் பது, அல்லது மண்டையில் அடிப்பது அவர் தரும் தண் டனை முறை. 'This is Called Dustering' என்று சொல்லிச் சூராதி சூரனைப் போல சிரிப்பார். ஆனால், சூரனுக்கு இளகிய உள்ளம். Tuck Shopஇல் Intervel நேரத்தில் ருசியான 'பற்றிஸ்' விற்பனைக்கு உண்டு. நெருக்கி அடிச்சு, பொக்கிட்டாசுகளான எங்களால்

www.padippakam.com



வாங்க ஏலாது. எங்களுக்கு சூரனும் முயலும் கருணையுடன் உதவுவார்கள்.

செல்வநாயகம் சேருக்கு 'டானா' என்று பட்டம். அவர் கெமிஸ்றி படிப்பிச்சவர். அவர் வரும் சைக்கிளில் எப்பொழுதும் ஒரு 'சூட்கேஸ்' கட்டப்பட்டிருக்கும். அதிலை அவர் புத்தகங்களையும் கொப்பிகளையும் கொண்டு வருவார் என்றுதான் நம்பியிருந்தம். 'சின்னக் கடையில் மீன் வாங்கி, அந்தப் பெட்டியில் வைப்பதைக் கண்டனான்' என்று எல்மோ புரளியைக் கிளப்பி விட்டிட்டான். அவர் பேசும் பொழுது அவர் வாய் 'டானா' Shapeஇல் இருக்கும். அவருடைய வகுப்பில் 'குழப்படிக்காரன் நம்பர் வண்' என்கிற கியாதி எனக்குத்தான் இருந்தது. அவருடைய வகுப்பில் நான் வாங்கில் அமர்ந்திருந்ததைப் பார்க்கிலும், வகுப்புக்கு வெளியே முழங்காலில் நின்ற நேரந்தான் அதிகம். ஒரு காலத்தில் Junior Cambridge, London Matriculation என்று இங்கிலாந்துப் பரீட்சைகளும் எழுத வாய்ப்பிருந்தது. லண்டன் மற்றிகுலேஷன் பரீட்சை கடைசியாக 1948இல் நடந்தது. அதற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுள் நானும் ஒருவன். ஜூனியர் கேம்பிறிஜ் பரீட்சை எப்பவோ நின்று போயிற்று. அக்காலத்தில் J.P.U.S. (Junior Passed Unable to pass Senior) குவாலிபிக்கேஷன் இருப்பவர்களுக்கே அரசாங்க உத்தியோகம் கிடைக்கும் வாய்ப்பிருந்தது. ஜூனியர் (ஜே.எஸ்.ஸி) பரீட்சையை N.P.T.A. நடத்தும் முறை 1946இல் அறிமுகமாயிற்று. அந்தப் பரீட்சை எழுதிய முதல் Batch மாணவர்களுள் நானும் ஒருத்தன். அந்தப் பரீட்சையில், கெமிஸ்றி பாடத்தில், இரண்டே இரண்டு மாணவர்களே Distinction எடுத்தார்கள். அதில் நான் ஒருவன் என்பதை 'டானா' சேரால் நம்பமுடியவில்லை. பிறகு, அவர் என் மீது தனி அன்பும் மரியாதையும் செலுத்தினார்.

www.padippakam.com



இத்தகைய பட்டங்களின் பட்டியல் மகா நீண்டது. 'தும்புமுட்டாஸ்' மோத்தா, 'கோழிக்கால்' அல்பிரட், 'கரிக்கோஸ்' சந்தியாப்பிள்ளை, 'கள்ளுமுட்டி' அழக ரத்தினம், 'சொறியர்' சவரிமுத்து 'பீப்பல்லு' யேசு தாஸ், தழிஸை சுப்பிரமணியம், 'ஓட்டைவடை' இன்னாசிமுத்து...இத்தனை கால ஓட்டத்துக்குப் பிறகு, இந்தப் பட்டப் பெயர்கள் சிலவற்றை நினைத்துச் சிரிக்க முடிகிறது; சிலவற்றை நினைத்துக் குற்ற உணர்வுடன் குமையவும் நேர்கின்றது.

நான் சம்பத்திரிசியார் கல்லூரியிலே படித்த காலம் முழுவதும் வண பிதாலோங் (Long) தான் Rector ஆக இருந்தவர். ஐரிஷ்காரர். கண்டிப்பானவர். படிப்பாளி. அவருடைய கல்வி நேசிப்பு விசாலமானது. அதன் சான்றுகளுள் ஒன்றாய் எழுந்ததுதான் யாழ். நூல் நிலையம். டவுன் ஹோலுக்கு கிழக்குத் திசையில், வாடி வீட்டிலிருந்து கடற்கரைப் பக்கமாக, கொசு கலைத்துக் கொண்டிருந்த ஒரு தேத்தண்ணிக் கடைக்கு மேலே, பென்சன்காரரின் வாசிகசாலையாகத் தூங்கி வழிந்த ஒன்றினை ஒரு கலைக்கோயிலாக மாற்றியதிலே லோங் சாமியாருக்குப் பெரும் பங்கு உண்டு. (அதனைச் சாம்பலாக்கிய பெருமைக்கு எத்தனை சிங்களத் தலைவர்கள் போட்டி போடுகிறார்கள் என்பதையும் எண்ணிப் பாருங்கள்.) கல்லூரிக்கு வெளியே, பட்டப்பெயர்களைச் சூட்டும் சூக்குமமும் தன்மையும் ஒரு மண்ணின் நாகரிகத்தினை மட்டும் அல்லாது, ஒரு காலத்தின் கோலங்களை, அன்றேல் அலங்கோலங்களை நினைவு படுத்த உதவும். சில சரித்திர நிகழ்வுகளை நினைவில் வைக்கவும் இவை உதவியிருக்கின்றன என்பது என் அனுபவம்.

இந்த நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்த அசகாய சூரர்களிலே முதல்மையானவன் 'காரளி'

www.padippakam.com



முத்தையன். அவன் பெயரைக் கேட்டால் அழுத பிள்ளை பால் குடிக்கும்; படுத்த பிள்ளை மூத்திரம் பெய்யும் என்று சொல்வார்கள். (பின்னாளில் 'யக்கடயா' என்றும் இரும்பு மனிதன்' என்றும் புகழ்பெற்று, வட மத்திய மாகணத்தை ஒரு கலக்குக் கலக்கினவனுக்கு 'காராளி' முத்தையனே ஆதர்சமாக விளங்கினான் என்று என் பெரியண்ணன் அடிக்கடி சொல்வார். 'யக்கடயா'வைக் கைது செய்த போலீஸ் கோஷ்டியிலே என் பெரியண்ணன் சார்ஜண்டாகப் பணி புரிந்தவர்.) காராளி முத்தையனின் பெயரைக் கேட்டு, வீடுகளைப் பூட்டி, ஆறுமணிக்கு முன்னரே வீட்டிலே அடைஞ்சு, பய ஜுரத்துடன் யாழ்ப்பாணப் பணக்கார வர்க்கம் வாழ்ந்து கொண்டிருந்தது. தெருவிலோ, பொது இடங்களிலோ அவனைப் பற்றிப் பேசுவதற்கும் மக்கள் பயப்பட்டார்கள். அவன் தூணிலும் துரும்பிலும் ஒளிக்கக்கூடிய ஜகஜால மாயாவி என்று அக்கால மக்கள் சத்தியமாகவே நம்பினார்கள். 'இத்தனை மணிக்கு உனக்குச் சாவு' என்று நேரம் குறித்து, கொலைகள் செய்வானாம். பகிரங்கமாக அறிவித்தே கொள்ளை அடிப்பானாம். ஓட்டை நாகேசர் பயந்து பயந்து வெண்தாடிக் கிழவருக்குக் கதை கதையாச் சொல்லுவார். ஒரு நாள், மணற் கும்பலிலே அரிக்கன் லாம்பை வைச்சுக் கொண்டு. அப்பையா வேலாண்டி மாமாவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். ''நான் நேத்து மாரிமுத்து மச்சானைப் பாக்க முலவைக்குப் போனகனல்லே... பேந்து அவரோடை அலுப்பாத்திப் பக்கமாக ஒரு பணிவிடை... அப்ப நான் காராளி முத்தையனைக் கண்டனான். என்ரை நிறம். என்னிலும் கட்டை; என்னிலும் மெல்லிசு. நம்ப மாட்டாய், முகமெண்டால் பசுபதி போலை... மச்சானைத் தெரியும். கண்டோடனை சிரிச்சவன்'' என்று அப்பையா காராளி முத்தையனுக்கு மனித சாங்கங்கள் கற்பித்துப் பேசிக் கொண்டிருந்தது எனக்குப் பெரிய புதினமாகப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அப்பையா சொன்ன சில வாரங்களின் பின்னர், நானே காராளி முத்தையனைக் காணுவேன் என்று கனவிலும் நினைச்சிருக்கேல்லை. அந்தக் காலத்தில், சம்பந்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானம் செமினறியில், தெற்கில் கண்டி வீதியும், கிழக்கில் கோயில் வீதியும் எல்லைகளாக அமைய, அமைந்திருந்தது. மைதானத்தின் மேற்கு எல்லை தேவரிக்குளம். குளத்தையும் மைதானத்தையும் உயரமான மதில் பிரித்து வைத்தது. யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தையும் அலுப்பாந்தியையும் இணைக்கும் ரயில் பாதை தேவரிக்குளத்தை ஒட்டினாற்போல, வலது விலாவில் திருக்குடும்பக் கன்னியாஸ்திரி மடத்தை. விலத்திக் கொண்டு செல்லும். அந்தக் காலத்தில் குட்ஸ் வண்டிகள் இப்பாதையில் ஓடின. அந்த மைதானத்தில் நடைபெற்ற மறக்கமுடியாத கிரிக்கட் மாட்சுகளுக்கு நான் சாட்சி. எங்கள் கல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்கும் இடையில் நடைபெறும் மாட்சுகள் குடா நாட்டின் கவனத்தைக் கவர்ந்திழுத்தது. அன்றைக்கு அந்த Match தான் நடந்தது. வெயிலும் கொளுத்தத் துவங்கியது. இருந்தாப்போல பார்வையாளர் மத்தியிலே பரபரப்பு. 'அது காராளி முத்தையன்... அது காராளி முத்தையன்' என்கிற குசுகுசுப்பு. எல்லார் பார்வையும் மதில் உச்சியில் தன்னந்தனியாக அமர்ந்திருந்த உருவத்தின்மீது தரித்து உறைநிலை பெற்றது. தூரத்தில் சிறிய உருவமாகத் தெரிந்தது. கறுப்பு நிற 'ஆம்கட்' பனியனும் சாறமும். படு காஸ்யுவலான பாவம், அப்பையா சொன்ன அடையாளங்களை முழுமையாகப் பொருத்திச் சரிபார்க்க முடியவில்லை, அரை மணித்தியாலம்; மிஞ்சிப் போனால் ஒரு மணித்தியாலம் நிமிர்ந்து பார்த்தால், ஆளைக் காணவில்லை! வீடு திரும்பும் பொழுது, காராளி முத்தையன் எப்படி மதிலிலை ஏறியிருப்பான் என்பதைப் பார்ப்பது என்று தீர்மானித்தோம். அந்தத் தடயத்தையும் பெற முடிய

www.padippakam.com



வில்லை. எங்களுடைய துருதுருப்பைப் பார்த்த, அலுப் பாந்தி ரயில் பாதையிலை அமர்ந்திருந்த ஒரு கிழவர் சொன்னார்; ஒரு கம்பு எடுத்தான் எண்டால், உந்த மதில் என்ன, பனைமர உயரத்தையும் காராளி முத்தையன் தாண்டிப் போடுவான்... இந்தத் துளவாரங் களிலை மினக்கெடாமல், வீட்டை போய் ஒழுங்காப் படியுங்கோ... இந்தச் சம்பவத்தின் சில மாதங் களுக்குப் பின்னர், 'காராளி முத்தையன் கைது செய்யப் பட்டு விட்டான்' என்கிற செய்தி பரபரப்பாகப் பேசப் பட்டது. ஒவ்வொரு ஆணின் உயர்ச்சிக்குப் பின்னால் ஒருபெண் இருக்கிறாள் என்று சொல்வார்கள். உண்மை. இந்திரன் கெட்டதும் பெண்ணாலை. ஒவ்வொருவீரனின் வீழ்ச்சிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருந்தாள் என் பதும் மெய். தேவரிக்குளத்தடியில் வசித்த, அவனுடைய அன்பைப் பெற்ற ஒரு பெண் மூலந்தான் அவன் கைது செய்யப்பட்டான். ''காராளி முத்தையன் நல்ல சூழலிலே வளர்க்கப்பட்டிருந்தால், பெரிய மனுஷனாக வந்திருப்பான். அவன் மகா மூளைசாலி'' என்றுகெயில் சேர் வெளியிட்ட கருத்து ஒன்று, இன்றும் என் செவி களிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது அவன் ஒரு காலத்தின் தைரியத்தைப் பிரதிபலித்தான். He, in a sense, was the Robinhood of Jaffna! முத்தையனின் பெயருடன் 'காராளி' என்கிற பட்டம் எப்படி ஒட்டிக் கொண்டது என்கிற விபரம் எனக்குத் தெரியாது.

எவனாலேதான் எல்லாம் தெரிந்த சுவாமித்தம்பி யாக வாழ முடிகிறது? யாழ்ப்பாணத்திலிருந்து கால் நூற்றாண்டு காலமாக 'மல்லிகை' என்கிற பெயரில் ஒரு மாசிகை வெளிவந்தது. எனவே, இலக்கிய ஆர்வலர் களுக்கு அது பற்றிக் கொஞ்சமாவது தெரிந்திருக்கும். அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா இன்றும் நம் மத்தி யில் இருக்கிறார். டொமினிக் ஜீவா என்பது இயற்



படிப்பகம்

www.padippakam.com



பெயரா? புனைபெயரா? பட்டப்பெயரா? இது எத்தனை பேருக்குத் தெரியும்? காராளிக்குச் சாகும் வரையிலும் எத்தனையோ ஜோலிகள் இருந்தன. ஆனால், டொமினிக் கடந்த ஒரு மாமங்கத்துக்கு மேலாக மல்லிகைப் பந்தலில் அமர்ந்து சோம்பல்தானே முறித்துக் கொண்டிருக்கிறார்? சோம்பல் முறிப்பதுகூட இலக்கியவாதியின் சுதந்திரம் என்று மதிப்பவன் நான். இலக்கியத் தில்லுமுல்லுகளுக்குத் துணை போவதைப் பார்க்கிலும், காராளி முத்தையன் தனம் கௌரவமானது என்ற எண்ணம் எனக்கு எப்பவும். கைலாசபதி-சிவத்தம்பி கூட்டுத் துவங்கி வைத்த இலக்கியப் புரட்டுகள் ஏற்படுத்தக்கூடிய பாதக விளைவுகள் பற்றி முதலில் எச்சரித்தவர்கள் மு. தளையசிங்கமும் நானுமே. இப்பொழுது புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள ஈழத்து இலக்கியவாதிகள் கைலாசபதி-சிவத்தம்பி கூட்டின் அறிவு மோசடிகளைப் பற்றிய புலன்விசாரணையில் ஈடுபடுதல் நற்சகுனமே. நனவிடை தோய்தல் அறிவுப் பிரயத்தனமல்ல. பெரிய வித்துவச் சேட்டையும் இல்லை. நான் சத்தம் கேட்கக் கூடியதாக அசைபோடுகிறன். யாழ்ப்பாணத்தில் நிலவிய பட்டப் பெயர்களைப் பற்றிய நினைவு அலைகளிலே 'டொமினிக் ஜீவா' என்கிற பெயரும் வெகு இயல்பாக மேலெழுந்து வருகுது! என் நினைவுகள் கட்டுப்பாடற்றன.

சம்பத்திரிசியார் கல்லூரியைத் தொடர்ந்து, நான் பரமேஸ்வராக் கல்லூரியில் H.S.C. வகுப்பில் சேர்ந்தேன். எழுத்தாளர் செ. கணேசலிங்கன், நாடகக் கலைஞர் ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் உடன் சாலை மாணாக்கர். சு. நடேசபிள்ளை, வித்துவான் வேந்தனார் ஆகியோர் தமிழாசிரியர்கள். இந்தப் பரமேஸ்வராக் கல்லூரிதான் இக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாக மாறியிருக்குது. பரமேஸ்வராக் காலத்திலேதான் எனக்குக் கந்தர்மடத்தில்

www.padippakam.com



வாழ்ந்த அற்புத இலக்கியவாதியான த. இராஜ கோபால் அவர்களுடைய அறிமுகமும் நட்பும் கிட்டியது. 'ஈழகேசரி'யில் 'மலர்பலி' தொடர்கதை எழுதிய சொக் கன், கவிஞர் இ. நாகராஜன் ஆகியோர் அவருடைய நண்பர்கள். அவர் அப்பவே இந்தியப் பத்திரிகைகளி லும் எழுதிக் கொண்டிருந்தார். இலக்கிய ஆர்வத்தைத் தூண்டுவதைத் தமது வாழ்க்கையாக்கியவர். நல்ல ஓவியரும் கூட. அவர் மூலமாகத்தான் கே. டானியலும் யோசப் டொமினுக்கும் எனக்கு அறிமுகமானார்கள். இலக்கிய ஆர்வங்களை ஒன்றிணைத்த வித்தகர் அவர்!

வண்ணான்குளத்து தெற்குக் கரையில், செம்மா தெருவில் வாசல் வைத்தாப் போல, யோசப் சலூன். அக்காலத்தில் அது பேர் விலாசமானது. தொழிலில் முதன்மை பெற்றது. வாடிக்கையாளரை அலுக்காமல் மினக்கெடுத்துறதுக்காகப் பத்திரிகைகளும் வாங்கிப் போட்டார்கள். மத்திய இடத்தில் இருந்ததினால், இலக்கிய நண்பர்களின் சமாக்களுக்கு ஏற்ற இடமாக அது மாறியது. சலூனின் பின் அறையும், அதனை ஒட்டினாற் போலிருக்கும் விறாந்தையும் அரட்டை அடிப்பதற்குச் சோக்கான இடம். ஒரு காலத்தில் டொமினிக் விசுவாசமான கத்தோலிக்கராகவும், தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளராகவும் விளங்கினார். அதே காலத்தில், தடை செய்யப்பட்டிருந்த இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் தலைவரான பா. ஜீவானந்தம் யாழ்ப் பாணம் வந்திருந்தார். அவர் என் அத்தானின் வீட்டில் தங்கியிருந்ததினால், அவருடன் நெருக்கமான ஈடுபாடு கிட்டியது. முற்றவெளியிலே பேசி, 'அற்புதமான பேச் சாளர்' என்ற கியாதியை ஜீவானந்தம் சம்பாதித்துச் சென்றார். அதே காலத்தில் சென்னையிலிருந்து 'காண்டீபம்' என்கிற வாரப்பத்திரிலகை ஒன்று வெளி வந்தது. மாரிசாமி என்பவர் அதன் ஆசிரியர் என்று ஞாபகம். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொதுவாகவும்,

www.padippakam.com



தலைவர் ஜீவாவைக் குறிப்பாகவும் திட்டித் தீர்ப்பதற்குக் காண்டீபம் அமோக பக்கங்களைக் கரியாக்கிக் கொண்டிருந்தது. காண்டீபத்தின் ஈழத்து 'மைக்'காக டொமினிக் ஒலித்தார். 'ஜீவாவின் தாவா' என்றெல்லாம் தூள் கிளப்புவார். 'ஜனசக்தி' ப. ஜீவாவைத் திட்டுதல் டொமினிக்கு Obsession ஆக மாறிவிட்டது. ஜீவாவை ஆவேசமாக டொமினிக் திட்டுவது நல்ல முஸ்பாத்தியாக இருக்கும். அந்த முஸ்பாத்தியை ஈ. ஆர். திருச்செல்வமும், ஜீ. தேவதாஸும் வெகுவாக ரஸித்தார்கள். டொமினிக்கை 'ஜீவா' என்று பட்டப் பெயர் கொண்டு அழைக்கத் துவங்கினோம். யாழ்ப் பாணத்தில் பட்டப்பெயர்கள் பெரும்பாலும் பெயருக்கு முன்னால் வரும். ஆனால், டொமினிக் தமது பட்டத்தினை, பல்கலைக் கழகப் பட்டம் என்கிற மகிமை ஏற்றிப் பெயரின் பின்னால் ஒட்டிக் கொண்டார். இந்தப் பறதியிலே அப்பன்சுவாமியாகி, யோசப் என்கிற அப்பன் பெயரையும் துறந்தார். சத்தியமா இதில் எதுவும் தப்பில்லை. 'ஜீவா' என்பது டொமினிக்கின் பட்டப்பெயர் என்பதைப் பூசி மெழுகுவதில் யாருக்கு என்ன ஆதாயம்? இதுதான் எனக்கு விளங்கவில்லை.

பிற்காலத்தில் பட்டங்கள் வைப்பதிலே அரசியல் வாதிகளை யாரும் 'பீட்' அடிக்கேலாது. எதிரிகளுக்குப் 'பட்டம்' வைப்பதிலே, 1947 தேர்தலிலே ஜீ. ஜீ. க்குத் தளபதியாக விளங்கிய சாவகச்சேரி எம். பி. குமாரசாமி வலு விண்ணன். நான் குழக்காட்டான் : பனங் காட்டு நரி' என்று சொல்லிக் கொண்டே மற்றவர்கள் மீது சாணி எறிவார். அவருடைய அகராதியல் தந்தை செல்வா 'செவிடன்', அமிர்தலிங்கம் 'சங்கூதி', நாகநாதன் 'டம்போலா டாக்குந்தர்'... கோகிலாம்பாள் வழக்கிலே, அமிர்தலிங்கம் தமது கட்சிக்காரருக்கு Maximum தண்டனை பெற்றுக் கொடுத்தார். இதனால், சிறிது காலம் 'கோகிலாம்பாள் புகழ்' அமிர்தலிங்கம்

www.padippakam.com



என்ற பெயரும் பிரபலமடைந்தது. எதிரிகளின் பிரசாரத்தால் ஏற்படக்கூடிய சங்கை நட்டங்களை Repair செய்யும் பணியில் 'சுதந்திரன்' ஈடுபட்டது. 'ஈழத்துக் காந்தி' செல்வா, 'இரும்பு மனிதர்' நாகா, 'தளபதி' அமிர், 'கோப்பாய்க் கோமகன்', 'சொல்லின் செல்வர்' இராஜதுரை... இந்தியாவிலிருந்து இரவல் வாங்கிய பட்டங்களை எல்லாம் சூட்டி, 'சுதந்திரன்' நடத்திய Image Building பிரசாரம் குழந்தைத் தனமாக இருந்தது!

யாழ்ப்பாணத்தில் வழங்கிய பட்டப்பெயர்கள் பற்றிய நினைவிலே தோயப் புறப்பட்ட என் மனம் தறிகெட்டுப் போச்சு, மன்னிக்கவும். 'சூரன்' சவரிமுத்துவைப் போல டபிள் சைஸ் இருப்பார் பொரிச்சமீன் செல்லையா. ஒரு காலத்தில் யாழ்ப்பாணக் கோட்டடி அவர் ஆட்சியின் கீழ் இருந்ததாகக் கற்பனை செய்து கொள்ளுவன். இத்தனைக்கும் அவர் ஒரு கிளாக்கர் மட்டுமே. பெரிய மீசை. அவருடைய மீசையை 'கொப்பி' பண்ணித்தான் ஸ்டாலின் மீசை வளர்த்தவர் என்றும் கற்பனை செய்து கொண்டனான். அப்பையாவுக்கு அவர்மீது அலாதியான பக்தி. வெற்றிலையுடன் போட ஒரு நெட்டி புகையிலை கொடுப்பதுக்கே அருக்காணியம் காட்டும் அப்பையா, பொரிச்சமீனுக்கு ஒரு பெரிய சுத்தைத் தன் கைப்படச் சுத்திக் கொடுப்பார். 'சண்முகம், உந்த வழக்குக் கீழ்க் கோட்டிலையே பறக்கும்' என்று அவர் சொன்னால், அப்படியே நடக்கும். சாம் சபாபதி, ஆர். ஆர். நல்லையா ஆகிய பிரக்கிராசிமார், ஜீ. ஜீ., ஆர். எல். பெரேரா, எச். வி. பெரேரா, கிரேஷியன் ஆகிய அப்புக்காத்தர்மார், நாகலிங்கம், ஸ்ரீஸ்கந்த ராஜா ஆகிய நீதிபதிகள் எல்லாரைப் பற்றியும் பொரிச்சமீனுக்கு நல்லாத் தெரியும். அப்பையா அவர்மீது செலுத்திய மரியாதை காரணமாக, 'பொரிச்சமீன்' பட்டத்தின் மூலத்தை நான் அறியவே இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



சேணிய தெருவில், வடக்குப் பக்கமாக, மூன்று வீடுகள் தள்ளி இருந்தது 'பேப்பர்' செல்லையாவின் வீடு. அவர் நல்ல உயரம். நல்லசிவலை. தவில்கார் பாணியில் குடுமியை அள்ளிச்சொருகியிருப்பார். அந்தக் குடுமியில் ஒரு 'லெப்பென்ஸில்' சொருகப்பட்டிருக்கும். புகையர்கள் அந்தக் காலத்தில், பீடியை அல்லது சிக ரெட்டைச் செவியிலே சொருகி வைத்திருப்பார்கள். பேப்பருக்கு எப்பவும் கனக்கப் புதினங்கள் தெரியும். வயசு வித்தியாசங்களைப் பார்க்காமல், சந்திப்பவர் களை நிறுத்திப் புதினம் சொல்லுவார். 'பேப்பரிலை போடாத கண்டறியாப் புதினங்களும் உவன் பேப் பருக்குத் தெரிஞ்சிடும்...' என்று வெண்தாடியர் அரி யண்டப்படுவதும் உண்டு. ''அப்பு, உவனுக்கு எப்பிடி பேப்பர்' எண்ட பட்டம் வந்தது?'' என்று ஓட்டையர் ஒரு நாள் வெண்தாடியரைக் கிண்டினவர். ''பிலாக் கொட்டைத் தம்பையனுடன் சேர்ந்து பேப்பர் நடத் தினவன் எண்டு உங்கினை சொல்லுகினம்'' என்றார் கிழவர். 'பிலாக்கொட்டை'த் தம்பையா கழிசான் போடுறவர். வடிவா இங்கிலீசு கதைப்பார். பிலாக் கொட்டைக்கு என்றால் பேப்பர் உயிரையும் கொடுப் பார். அவ்வளவு ஒட்டு. ''கள்ளக் கள்ளுக் காலத்துக் குப் பிறகு, மரவரி முறையைக் கொண்டு வந்தது இந்தத் தம்பையாதான்'' என்று பேப்பர் செல்லையா கோயில் வளவுக் கூட்டத்தில் பேசியதையும் கேட்டிருக் கிறேன். ''கள்ளு போதை தரும் பானமல்ல; அது யாழ்ப்பாண மக்களுக்கு உணவு'' என்று பிலாக் கொட்டை வாதாடினாராம். எது எப்படி இருந்தாலும் கள்ளிறக்கும் தொழிலாளர் மத்தியிலே, பொருளாதார சுதந்திர உணர்வை மரவரிமுறை கொண்டு வந்து சேர்த்தது என்பது மறுக்க முடியாது.

சேணிய தெருவையும் ஆரியக்குளத்தையும் தொடுப் பது சாயக்கார ஒழுங்கை. காளிகோயிலுக்கு கிழக்கு

www.padippakam.com



விலாவில், அந்த அயலிலேயே முதலாவது மாடிவீடு கட்டியவர் 'சாந்தா' செல்லத்துரை. E.M.V. நாகநாத னின் ஆசியினால், தமிழரசு அரசியலில் ஈடுபட்டு, யாழ் மாநகர உதவி மேயராகவும் உயர்ந்தவர். அவருடைய அரசியல் ஈடுபாடு பலாலிறோட்டு சன் மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தில் முளை கொண்டது. அவர் சிறிது காலம் தனாதிகாரியாக இருந்தவர். ஒவ்வொரு கூட்டத்திலும், ''அங்கத்தவர்கள் சாந்தாப் பணத்தைச் செலுத்த வேண்டும்'' என்று உருக்கமான வேண்டுகோள் விடுவாராம். இதனால் அவர் 'சாந்தா'' செல்லத்துரை என்று கியாதி பெறலானார்.

ஏனையோரைப் பார்க்கிலும், யாழ்ப்பாணத்தில் சண்டியர்களே பட்டப் பெயர்களால் பிரபலமடைந் தார்கள். 'கோணாந்தோட்டத்து மணியம்', 'கொட் டடித் தெய்வேந்திரன்'. 'காட்டுவாடி சுப்பையா', 'கறடி' கந்தையா; 'மந்தாப்பு.' இராசையா, 'சுருள் வாள்' மயிலு, 'பெரிய மாதா' கிருஷ்ணசாமி,' 'கெட்ட வன்' நடேசன்... என்று இந்தப் பட்டியல் நீளமானது. இவர்கள் சிலருடைய வீரதீர சாகஸங்களை நேரில் பார்த்திருக்கிறன். 'டூப்' போட்டு பெரிய சண்டியர் களாகப் பாவலாச் செய்யும் தமிழ்ச் சினிமா நடிகர் களுக்கு 'விசில்' அடித்து ரசிகர் மன்றங்கள் வைப்பதி லும் பார்க்க, நேற்றைய தலைமுறையில் வாழ்ந்த சண்டியர்களைப் பற்றி அசைபோடுதல் சாவான பாவ மல்ல. தனித்தனியே அவர்களைப் பற்றி எழுத இடம் தோதுப்படவில்லை. காராளி முத்தையனுக்கு அடுத்த படியாகக் கியாதி பெற்ற 'அழுக்கடை' சண்முகத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லாட்டில் என்ர பொச்சம் தீராது.

வண்ணார்பண்ணைப் பகுதியில் எந்தப் பொது விழா நடந்தாலும் 'அழுக்கடை' நிப்பார். அவர்

www.padippakam.com



வந்தால் அது ஒழுங்காக நடக்கிறதுக்கு Guarantee, நல்ல சிவலை. அப்பையா அளவுக்கு உயரமில்லை. ஆனால் தொக்கை, படங்களிலே கீறப்பட்டுள்ள மாவீரன் அலெக்ஸாந்தர் முடி. வெறும் மேல், ஏகவடமிடும் சால்வை. நிதானமின்றி இடுப்பைக் கவ்வும் வேட்டி. மல்யுத்த வீரனைப் போல நிமிர்ந்த நெஞ்சு. 'அப்பையா' சண்முகத்துக்கும் 'அழுக்கடை' சண்முகத்துக்கும் இடையில் சுமுக உறவு இருந்தது. ''உயிர் நிலையைப் பார்த்து அழுக்கடை காலாலை அடிச்சான் எண்டால் தப்பேலாது...'' என்று அப்பையா சொல்லுவார். பெருமாள் கோயில் வடக்கு வீதியில், கண்ணாதிட்டிக் குளத்துக்குப் போகும் வாய்க்கால் வாறதுக்கு முந்தி, இடப்பக்கமாக ஒரு குருட்டு ஒழுங்கை. அந்த ஒழுங்கையில் ஒரு கிழவியும் மகளும் வாழ்ந்தவை. அந்தக் கிழவி திடீரென்று செத்துப் போனாள் என்று அயலெல்லாம் பரபரப்பு. மகளின் வாக்கு மூலத்தில், கிழவியைக் கொன்றது அழுக்கடை என்று சொன்னதினால் அவர் கைது செய்யப்பட்டார். நடந்தது இதுதான். மகள் அழுக்கடையைக் கிணற்றடியிலை சந்திச்சிருக்கிறாள். அழுக்கடை விட்ட சேட்டையிலை அவள் திமிறிக் குரல் எழுப்பியிருக்கிறாள், மகளின் குரல் கேட்டுக் கிழவி வந்திருக்கிறா. வந்தது கிழவி என்று மனசார அழுக்கடைக்குத் தெரியாது. யாரோ வந்திட்டான் என்ற நினைப்பில் எட்டி உதைத்திருக்கிறார். சுருண்டு விழுந்த கிழவி எழுந்திருக்கவே இல்லை. ''கிழவியின்ரை மகள் பாய்ச்சல் காட்டுறவள் போலை. அவளின்ரை சாட்சி நிண்டு பிடிக்காது'' என்று பொரிச்சமீன் செல்லையா சொன்னவர். வழக்குக் கீழ்க்கோட்டிலேயே தள்ளுப்பட்டது.

'அழுக்கடை கொலை வழக்'கும் கீழ்க்கோட்டிலை தள்ளுப்பட்டது. பகிடி என்னவென்றால் இரண்டு வழக்குக்கும் அப்புக்காத்தர் ஜீ.ஜீ. பொன்னம்பலமே! அழுக்

www.padippakam.com



கடைக்கு இரண்டு மனைவிகள். அக்கா-தங்கை! அவர் களுடைய தம்பி மேசன். ஒரு சுள்ளி ஆள். குடும்பச் சண்டையிலே அழுக்கடைக்கு மச்சான் இளமைத்துடிப் புடன் வாய்காட்டியிருக்கிறான். கோபத்தில் அழுக்கடை வளவுக்குள் பாய்ந்திருக்கிறார். 'இனித் தப்பேலாது' என்ற பயத்தில் மச்சான் பெரிய கல் ஒன்றை வீசி எறிந்தான். குறிதப்பேல்லை. எதிர்ப்பாராத நிலையில் அழுக்கடை Balance தவறி வீழ்ந்தார். மேசனுக்கு மேலும் பயம் வந்துவிட்டது. முற்றத்தில் விறகு வெட்டக் கிடந்த கோடாலியை எடுத்து தலையிலை நாலு மொங்கான் விட்டான். அழுக்கடை அந்த இடத் திலையே 'குளோஸ்'. வேதப்பள்ளிக்கூடத்திலை சொல்லித் தந்த கோலியாத் என்கிற இராட்சதனைக் கொன்ற தாவீது பற்றிய கதை எனக்கு அப்ப நினை வுக்கு வந்தது. வழக்குத் தள்ளப்பட்டதும், கோட்டடி யிலிருந்து மேசன் பொடியன், நேர்த்திக்கடனை முடிக்க நல்லூருக்குப் பிரதட்டை பண்ணிப்போனதை நான் கண்டனான். வருஷம் நினைவில்லை. 'அழுக்கடை' என்ற பட்டத்துக்கு வீர வரலாறு உண்டு. கொழும்பில் 'அளுத்கடை' (புதுக்கடை) என்கிற இடத்தில் புதி தாகக் கடை திறந்த யாழ்ப்பாணத்தாருக்குச் சிங்களக் காடையர் 'கப்பம்' கேட்டுத் தொந்தரவு கொடுத்தார் களாம். அந்தக் காடையர்களை ஓட ஓட விரட்டி, யாழ்ப்பாணத்தாருக்கு சண்முகத்தின் வீரமே பாதுகாப்பு அளித்தது. அளுத்கடை சண்முகம், யாழ்ப்பாணம் வந்து வாழத் துவங்கியதும், அழுக்கடைச் சண்முக மானார்!

சண்டியர்களுக்கு நிழல் விரித்த பணக்காரர் களும் பட்டப் பெயர்களிலே புகழ் சொரிந்தார்கள். 'பிறண்டி' வேலுப்பிள்ளை, 'பவளக்கால்' நடராசா, 'யப்பான்' ஆறுமுகம், 'ஈச்சமட்டை' முத்தையா, 'குருவி' துரையப்பா... இப்படிப் பல பெயர்கள் பிர

www.padippakam.com



பலம். அவர்களுள் 'குருவி' துரையப்பா, எங்கள் அயலில், மணிக்கூட்டுத் தெருவில், புட்டுச்சந்தி மத குக்கு வடக்கில், 'பங்களா' போன்ற வீட்டில் வாழ்ந்த வர். அவருடைய கழுத்திலை மின்னும் 'அச்சரக்கூட்டுச் சங்கிலி' ஒரு கட்டைக்கு அங்காலும் தெரியும். மட்டக் களப்பு இரண்டாம் எம். பி. ராஜன் செல்வநாயகம் 28 சவரன் பவுனிலே ஒரு சங்கிலி போட்டுத் திரிஞ்சவர். அதிலும் பார்க்கக் குருவியரின் சங்கிலி பெரிசு. சின்னி விரல் மொத்தம் இருக்கும். அச்சரக்கூடு எங்கே தொங்குது என்று தெரியாமல், வேட்டி அவருடைய செல்ல வண்டியிலை குந்தி இருக்கும். வெள்ளிக்கிழமை மாலையில், பெருமாள் கோயிலிலிருந்து அவர் தம்பதி சமேதரராய் வருவது கண் கொள்ளாக் காட்சி. மனுஷி நெடுப்பி. அவவுடைய இடுப்பிலை குருவியரின் தலை முட்டுப்படும். ''இவன் கதிரையிலை ஏறி நிண்டுதான் மனுஷியைக் கொஞ்சுறவன்'' என்று ஒட்டை நாகேசர் விட்ட புருடாவை மெய்யெண்டு நம்பினனான்.

பட்டப்பெயர்களால் அறியப்பட்ட பெண் பாத்திரங் களும் யாழ்ப்பாணத்திலே நடமாடினை. 'கன்னிகா' பரமேஸ்வரி ஒரு சினிமா ஸ்டார் போல! காங்கேசன் துறை வீதியில், சிவலிங்கப் புளியடிக்கு வாறதுக்கு முந்தி அவவின்ரை வீடு இருந்தது என்று ஞாபகம். நல்ல சதிராட்டக்காரி, அவ ஆடி சதிரைக் கன்னாதிட்டிக் காளிகோயிலில் பார்த்தனான். வடிவு எண்டாலும் வடிவு. ''ஏதோ பவுணிலை செய் திருக்கும் எண்ட நினைப்பிலை அல்லோ, பாலப் பருப்புப் போலை நூறுரூபாய் கொண்டந்தனான். என்ரை பெண்டிலுக்கும் உப்பிடித்தான். என்ரை காசைத் திருப்பித்தா...'' என்று ஒருத்தன் சண்டை பிடிச்சவர் என்று கட்டாடி சதாசிவம் அவிட்டுவிட்ட கதையின் உண்மை பொய் எனக்குத் தெரியாது. ஆனால், அந்தக் காலத்து ஸ்திரீ லோலர்களுக்கு.

www.padippakam.com



சோனகப் பொன்னம்மாவை நல்லாத் தெரிஞ்சிருக்கும். அவ ஓட்டுமடத்திலை, ஆருக்கும் பயப்படாமல் கொம்பனி தடத்தினவவாம். அவ வீட்டிலை இருந்த ஒரு பெண்ணைக் 'காப்பிலியன்' கொண்டு போக, அவள் செத்துப் போனாள். அப்பத்தான் நான் 'சோனக' பொன்னம்மாவைப் பற்றி வடிவாக் கேள்விப் பட்டனான்.

பராசக்தி அக்கா கலட்டிப் பக்கம் போயிட்டா. பறங்கித் தெரு விக்டர் ஸ்ருடியோவில் சிறில் அண்ணன் Print பண்ணித்தந்த போட்டோ போல, அவ உருவம் மங்கலாத்தான் தெரியுது. அவ சுழி போட்ட வித்தையை அறிய எத்தனை ஆண்டுகள் சென்றன...? சிலோன் மணி அக்காவை மறக்கமாட்டன். ஹரிதாஸ் படத்திலை 'உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ...' என்று எம். கே. தியாகராஜ பாகவதர் பாடும் பொழுது டி. ஆர் இராஜகுமாரி 'சுவாமி' என்று சொல்லிச் சிரிப்பா. சிலோன்மணி சிரிக்கிறது சரியா அப்பிடித் தான் இருக்கும். தல்லாலையிலை வைச்சு எனக்கு அவ பாடம் படிப்பிக்கேக்க, அவவின்ரை புருஷன் மறியலிலை இருந்தவன். அவனும் ஒரு சண்டியன், இப்ப உயிரோடை இருந்தா ஏன் பொல்லாப்பு எண்டுதான் மறந்து போனதாகப் போக்குக் காட்ட வேண்டி இருக்கு!

தமிழ்ச் சினிமா வளர்க்கும் ஊத்தையை உண்டு வளர்ந்த இன்றைய தமிழ்நாட்டு அரசியல், பல்கலைக் கழகங்களையும் பிசக்கி, யார் யாருக்கோ 'டாக்டர்' பட்டம் வழங்க முண்டியடிக்கும் அவல நிலையில்... யாரிவர் என அறிந்து, பொருத்தமான பட்டங்கள் சூட்டி மகிழ்ந்த, நான் வாழ்ந்த யாழ்ப்பாணமே! உன்னைப் பாராட்ட முந்துவதில் எவ்வித தப்பும் இல்லை. ★

இசையில் மிதந்து படியேறி
இதயங் கவர்ந்து நின்றோங்கி
திசை வென்றுயர்ந்து திருவோங்கி
தேடற்கரிய நிலையோங்கி
விசைகொண் டுயர்ந்த இசை மன்னர்
விண்ணோ ரானதும் தமிழகத்தில்

நடிகர் சினிமாப் படியேறி
நம் தமிழ் நெஞ்சில் குடியேறி
கொடிபிடித் தலைந்த நெஞ்சினிலே
கொலுவீற்றிருந் தாங்கு அரசோச்சி
கடவுளராகிக் கோயிலிலே
கருணை புரிவதும் தமிழகத்தில்

# 9. கோலம்

ஓடுவது என்ன? காலநதியா? வசுக்கோப்பு மடுவத்திலே சலனப்படச் சுருள்கள்கூட ஓடும்! 'பாரு பாரு... என்ன விநோதம் பாரு!' என்று கந்தசாமி கோயில் வீதியில் கத்தியவன் வைத்திருந்த ஒரு பெட்டிக்குள் கண்களை நுழைத்து, ஏதோ உருவங்கள் அசைவதைப் பார்த்ததாக இலேசான நினைவு...

www.padippakam.com



எதிர்வீட்டில் குடியிருந்தல்பராசக்தி அக்காகாட்டிய துக்குப் பெயர் வசுக்கோப்பா? இல்லை தல்லாலையில் வைச்சுச் சிலோன்மணி அக்காவுடன் செய்ததுதான் வசுக்கோப்பா? வழக்கம் போல வெண்தாடிக் கிழவர், ரயில் பாதை ஓரத்திலே, கிழக்குக்கு முதுகு காட்டி வெய்யில் காய்ந்து கொண்டிருக்கிறார். அவர் வாலா யப்படுத்திய சூரிய நமஸ்காரம். இப்பொழுதெல்லாம் வண்ணாத்திப் பூச்சி பிடிக்கிறது அவ்வளவு சுதியில்லை என்கிற போக்கு. ஓமோம்; நான் கொஞ்சம் முந்திப் போனன். எதிர் வீட்டு வேலிக்கு மேலாலை இலே சாகத் தெரிந்த முகம் சடுதியாக மறைகிறது. ''என் னெணை அப்பு! உந்தத் தட்டுவாணியள் வீட்டுக்கு முன்னாலை குடியிருந்து வசுக்கோப்புக்காட்டுறாளவை... பாத்துக் கொண்டிருக்கிறதே?... பேந்து எங்கடை வீடு களில் குமர் குஞ்சுகளை வைச்சுக் காப்பாத்திறேல்லை யே?" வார்த்தைகளை மட்டுமல்ல, எச்சிலையும் தூவானம் பீச்சிக்கொண்டு ஓட்டை நாகேசர் வந்து சேர்ந்தார். முடிச்சு. அந்த முடிச்சை உசுப்பேலா படு முடிச்சுத்தான். வசுக்கோப்பிலை நெடுங் காலமாய் நாரதராய் நீடிச்ச மஹாதேவன்கூட நாகேசரிடம் பாடம் படிக்க வரவேணும். பேந்தென்ன? ஒரு மாதத் துள்ளை பாராசக்தி அக்கா குடும்பம் கலட்டிப் பக்கம் போயிட்டினம்.

வசுக்கோப்புப் பார்க்கறது வேறு சங்கதி எண்டது அப்பவும் எனக்குத் தெரியும். நான் உசுக்குட்டியனாய் இருக்கேக்கை நடந்தது எனக்கு நல்ல ஞாபகம். அண் டைக்கு முழுதும் வீட்டில் வசுக்கோப்புக்குப் போற கதைதான். திருவிழாவுக்குப் போறதுக்கு அடுக்குப் பாக்கிறதைப் போல பெண்கள் நகைநட்டு இரவல் வாங்கிறதிலை வலு கரிசனை. இதிலை ஏதோ புதினம் இருக்கு எண்டது எனக்கு விளங்கிப் போச்சு. பேந் தென்ன? நானும் வருவனெண்டு கூத்தெடுக்கத் துவங்

www.padippakam.com



கீட்டன். அழுதால் கண்களிலை கண்ணீர் வராட்டாலும் மூக்காலை ஒழுகும். என் அழுகைக்கு மசியாத அப்பை யாவோ; Line Clear! அப்பையாவின் தோளிலை சவாரி செய்து வசுக்கோப்புக்குப்போனனான். அது UDCயிலை நடந்தது. யாழ்ப்பாண Town Hallக்கு அப்ப அருநான் பெயர், என்னைக் கொண்டு போகேக்கிள்ளை அப்பை யாவுக்குத் தெரியும், சனியனை விலை குடுத்து மடி யிலை கட்டிக் கொண்டு போறமெண்டு! அன்று பார்த்த படம் ஞாபகமில்லை. நல்லாக் கடலைக் கொட்டை கொறிச்சனான்.

பிறகு சம்பத்திரிசியார் கல்லூரியிலை இங்கிலீசுப் படிப்பு. ஸ்டேஷனடியில், எவரெஸ்ட் டீ றூமை ஒட்டி னாப் போல வசுக்கோப்புக்கான விளம்பரப் படங்கள் ஒட்டுப்பட்டிருக்கும். அந்தப் படங்களைப் பார்த்து வாணீர் வடிக்கிறது முக்கியமான பொழுது போக்கு. நாங்கள் கொஞ்சம் வளந்திட்டம் எண்ட நினைப்பு வீட்டிலையும் தோன்றியிருக்க வேணும். இதனால் சில சலுகைகள். அவற்றுள் ஒன்று பொங்கல். புதுவருஷம், தீபாவளி ஆகிய மூன்று பெருநாள்ளை அண்டி, நாங்கள் வசுக்கோப்புக்குப் போகலாம். அப்ப யாழ்ப்பாணத்திலை ரெண்டே ரெண்டு வசுக்கோப்பு மடுவங்களே இருந்தன.

றீகல் தியேட்டரிலை கச்சதேவயானி எண்ட படத்துக்குப் போனது வடிவா ஞாபகம் இருக்கு. அது புல்லுக்குளத்துக்குப் பக்கத்திலை. முன்னாலை அதரும் கோட்டையும், போதாக் குறைக்கு முனியப்பர் காவல், றீகலுக்குப் பக்கத்திலை ஒரு பெற்றோல் குதம். அதுக்குப் பின்னாலை ஒரு பேரீச்ச மரம் நிண்டது. அந்த மரத்திலை பிடுங்கின பச்சைப் பேரீச்சம் பழம் திண்டிருக்கிறன். கடையிலை வாங்கித் தின்னுற பேரீச்சை போலை அவ்வளவா இனிக்காது. கொஞ்சம் கசறும். பேந்து அது பட்டுப் போச்சு. உப்புத் தண்ணி

www.padippakam.com



ஊறினதாலை பட்டுப்போச்சு எண்டு அப்பையா சொன்னவர். வீரசிங்கம் மண்டபம், பெரிய தபால் கந்தோர் என்ற கட்டடங்கள் அப்ப கிடையாது, அதெல்லாம் ஒரு பெரிய தென்னந் தோட்டம். பெரிய மாமாதான் அதைக் குத்தகைக்கு எடுத்திருந்தவர். இதனாலை ரீகலிலை டிக்கற் எடுக்கிற சண்டியன்மாரை அவருக்கு வடிவாத் தெரியும். மாமாவின் கூட்டாளியான பொரிச்ச மீன் செல்லையாவுக்கு அவங்களெல்லாம் சரியான மரியாதை. அன்று தீபாவளி. அண்ணன்மாரையும் என்னையும் வசுக்கோப்புப் பாக்க வரச்சொல்லி மாமா விசளம் அனுப்பினவர். எங்களுக்கு குண்டியிலை தட்டின புளுகம். வெண்தாடிக்கிழவர் வசுக்கோப்புக்குப் போனதேயில்லை. ‘உந்த வசுக்கோப்பாலை உலகமே அழியும்...இருந்து பாருங்கோ’ என்று அறம்பாடுவது அவர் வழக்கம். கிழவரின் சாபம் இப்ப பலிக்கத் துவங்கீட்டுதே என்று இப்ப பயமாகவும் இருக்கு. அண்டைக்கு அவருக்கு இருந்த தீபாவளி ஏத்தத்திலை அறம்பாடுறதை மறந்து போனார்.

கொழும்பாருக்குத்தான் மேல் வகுப்பு ‘டிக்கட்’டுகள் கட்டும். சுத்த சுயம்புவான யாழ்ப்பாணிகளுக்குக் கலரிதான் கட்டுபடியாகும். கலரி டிக்கற் ‘இருபத்தைந்து சேம் . அப்ப அது பெரிய காசு. கலரிக்குப் போனாத்தான் பத்தியம் எண்டும் சொல்லலாம். கலரி மகா சனங்கள் வெத்திலையைச் சப்பிக்கொண்டு பாப்பினம். ‘புளிச் புளிச்’ செண்டு நிலத்திலை துப்பினாத்தான் வெத்திலைக்கு வடிவு. இருட்டுக்குள்ளை போய் இந்த வெத்திலைத் துப்பலை மிதிச்சு, சில சமயம் சறிக்கீஸ்ங் காட்டி, வாங்கிலை நெருக்குப்பட்டுக் குந்திறதிலை ஒரு கலாதி இருக்கு. சுருட்டும் பீடியும் தாராளமாகப் புகைப்பார்கள். ஒரே புகை நாத்தம். கலரிக்கு Fan ஏதும் இல்லை. சன நெருக்கத்திலை வேர்வை நாத்தமும் சேர்ந்து கொள்ளும். இத்தகைய திவ்வியச்

www.padippakam.com



சூழலிலே வசுக்கோப்பு பார்க்கக் குடுத்து வைச்சிருக்க வேணும்!

அந்தக் காலத்திலை 'கியூ' 'போலிங்' எண்ட சங்கதிகளை நாங்கள் அறியமாட்டம். இவை யப்பான் காரன் கொழும்பிலை குண்டு போட்ட பிறகு வந்த சமாச்சாரங்கள். கூட்டத்திலை நெருக்குப்படுறதிலை யில் வீரம் கண்டனாங்கள். வல்லவனுக்குத்தான் காலம். இப்பவும் யாழ்ப்பாணத்திலை அப்படி எண்டுதான் சொல்லுகினம். அப்ப கலரி டிக்கற் எடுத்துக் குடுக்கிற துக்கெண்டே சண்டியங்கள் இருந்தவை. இவைய ளைக் கண்டோடனை மதிக்கலாம். நேந்தேலை பின் னின 'ஆம் கட்' பெகனியன் போட்டிருப்பினம். றேந்தை பின்னக் கூடிய நோனாக்கள் அப்ப இங்கையும் இருந்தவை. யாழ்ப்பாணப் பெண்குலம் தங்கள் ஆண்மையைக் கௌரவிக்க வேண்டுமென்பதிலும்சண்டியர் வலு கவனம். ரெண்டு மூன்று வைப்பாட்டி வெச்சிருக் காதவனும் ஒரு சண்டியனே? இந்த நெளிவு சுளிவு களைப் பிற்காலத்தில் கெட்டவன் நடேசன் மூலம் அறிஞ்சனான். அவனும் நானும் ஒருசாலை மாணாக் கர். றேந்தை பெனியன் சண்டியர் எனக்கும் முந்திய தலைமுறை. இந்தச் சண்டியர் கூட்டத்துக்குள்ளை நுழைஞ்சால், தன்பாட்டிலை வழி விலகிவிடுவினம். இல் லாட்டில் உத்தரிக்க வேண்டியதுதான். கச்சதேவ யானிக்குக் கலரி டிக்கற் வாங்க மாமா நியமித்த சண் டியன் கூட்டத்துக்குள்ளை பூந்தான். கொஞ்ச நேரத் திலே முள்ளுக் கம்பிகளுக்கு மேலாலை பாய்ஞ்சு வந்தான். கையிலை ஒரு கத்தை டிக்கற்றுகள்!

நீண்ட காலமாக தமிழ் சினிமாவிலை கொடிகட்டிப் பறந்த கதாநாயகியான டி. ஆர். ராஜகுமாரி நடிச்ச முதல்படம் கச்சதேவயானி. இந்தக் காலத்தில் கன்னட ஆந்திர மலையாளப் பெண்கள்தான் சினிமா நாயகி

www.padippakam.com



களாகப் பவனி வருகிறார்கள். அந்தக் காலத்திலும் இதே கதைதான். ராஜம்மா, ஜமுனா, விந்தியா, சந்தியா, சரோஜா தேவி, ஜயந்தி, ஜெயலலிதா, கண்ணாம்பாள், காஞ்சனமாலா புஷ்பவல்லி, அஞ்சலி தேவி, பானுமதி, சாவித்திரி, லலிதா, பத்மினி, ராகினி, ஸ்ரீதேவி, அம்பிகா, ராதா, ரேவதி எண்டு கண்ணை மூடிக்கொண்டு உம்பாரமாகப் பெயர்களை அடுக்கிக்கொண்டே போகலாம். ராஜகுமாரி போன்ற ஒரு சிலரே தமிழச்சிகள். இவவுக்கு கதாநாயகனாகக் கொத்தமங்கலம்சீனு.அதிலை கொத்தமங்கலம் சுப்புவும் நடிச்சவர். இவர் 'தில்லானா மோகனாம்பாள்' ஆசிரியர்; இலக்கியக்காரர்; வில்லிசை வேந்தர்; பேய்த்தனமாக சீனுவும் சுப்புவும் சகோதரர் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தன்.

ரீகல் தியேட்டரிலும் பார்க்க,வின்ஸர் மடுவத்துக்கு ஒருபெரியவரலாறு உண்டு.இப்ப வீடோவாக மாறியிருப் பதுதான் ஒறிஜினல் வின்ஸர் மடுவம். தமிழிசைக்குப் புதிய புகழ்சேர்த்த எம்.எஸ்.சுப்புலட்சுமி நடித்த சாவித் திரி, சகுந்தலை போன்ற படங்கள் முதன் முதலிலை இந்த மடுவத்திலைதான் ஓடின. பரமேஸ்வராக் கல்லூரி கார்னிவேலுக்கு 'எம். எஸ்,' வந்த பொழுது, யாழ்ப்பாணம் ஸ்டேஷனில் ஒரு பாட்டுப்பாடினா. பார்த்தனான். அவ அப்ப தியாகபூமிச் சீலை கட்டி யிருந்தவவாம். சகுந்தலையிலை எம். எஸ்ஸோட நடிக்க ஏலா எண்டு எம். கே. தியாகராஜ பாகவதர் ஒதுங்கியவர் எண்டு ஆரேனும் சொன்னால் அப்பச்சிக்கு மூக்கிலை கோபம் வந்திடும். காத்தான் கூத்திலை மாரியம்மனாக நடிச்சு அப்பச்சி பேர் பெற்றவர். நல்லாப் பாடுவார். பாகவதருடைய பரம பக்தரும். 'என் சொந்தக்காரன்' என்று கெறுவும் பேசுவார். சிவகவி றிலீஸாகி இருந்த காலத்தில், ஒவ்வொரு

ந—10

www.padippakam.com



நாளும் முதல் ஸோ பார்க்க அவர் போவார். அன்றைக்கு அப்பையாவுக்குக் கொஞ்சம் கீறு. சுதியிலை இருந்தவர். அப்பச்சியைப் பார்த்து 'ஏன் வின்ஸர் மடுவத்தைத் தகரக் கொட்டகை எண்டு சொல்லுறம்?' எண்டு அப்பையா கேட்டவர். 'என்ன பேய்க் கதை? தகரத்தாலை அடைச்சதை தகரக் கொட்டகை எண்டுதானே அழைப்பினம்' எண்டார் அப்பச்சி. 'அப்ப, நீகல் தியேட்டர் முழுதும் கொங்கிறீட்டிலையோ கட்டப்பட்டிருக்கு?' என்று அப்பையா அடுத்த மொக்குக் கேள்வியைக் கேட்டு மடக்கிப் போட்டார். அவர் அண்டைக்குச் சொன்ன வர்த்தமானம் இண்டைக்கும் நல்ல ஞாபகம்.

துரைராஜா முதலாளிதான் அதன் சொந்தக்காரர். அவர் புலி வளர்த்தவர். குதிரையிலை சவாரி செய்தவர். துவக்கும் கையுமாகப் போவாராம். பெரும் பணக்காரன் எப்படி ஆடம்பரமாக வாழலாம் என்பதுக்கு அந்தக் காலத்திலை இலக்கணம் வகுத்தவர். பணக்காரர் எதிலும் நூதனத்தைத் தேடும் வசதி படைத்தவர்கள். அவர்களுடைய சாதகங்களில் பல இடங்களிம், 'நூதன ஸ்திரி சேர்க்கை' என்று எழுதப்பட்டிருக்கும். யாழ்ப் பாணத்துப்பெண் குலத்தின் கற்பு நெறியைப் பிசகாது, இந்த 'நூதன ஸ்திரி'களை மதறாசிலிருந்து பிடித்துக் கொண்டுவந்தார்......சில புள்ளிகள் கோயில் திருவிழாக் களைச் சாட்டி, சதுர்க்காரிகளைக் கூட்டி வந்தார்கள். திருவிழாவிலே புதிய சதுர்க்கச்சேரியைச்சேர்த்த கியாதி ஒரு புறம். நூதன ஸ்திரிகள் சேர்க்கையியே கிடைக்கும் இன்பம் மறுபுறம். துரைராஜாவைப் பொறுத்த மட்டில் சதுர்க்காரிகள் மலிவு விலைச் சரக்குகள். வின்ஸர் மடுவத்திலே நாடகம் போட டிறாமா கொம்பனிகளை அங்கிருந்து தருவித்தார். இந்தக் கொம்பனிகளிலே பல நடிகைகளும், உறவினர்களும் இருந்தார்கள். வயசுக்கும் வகைக்கும் ஒவ்வொன்றாக நூதனங்கள் குலையாக

www.padippakam.com



வந்தன. அவர்கள் இங்கு பாத சேவை செய்ய மறுத்த தால் வந்தது வினை! 'வயித்து வலியையும் வடக் கத்தியானையும் நம்பேலாது' எண்டு வசனம் பேசி, ஒப்பந்தப் பணம் கொடுக்காது, பட்டினி போட்டு அவ மானப்படுத்தி அனுப்பி வைப்பார்கள். நாடக உலத்திலே கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் ஒரு கலக்குக் கலக் கினவை எண்டதைப் பழைய கட்டைகள் அறிவினம். சுப்பையா பாகவதரும் ஒரு காலத்திலே கியாதி பெற்ற நாடக நடிகர். அவர் வின்ஸர் மடுவத்திலே நாடகங்கள் நடித்துக் கொண்டிருந்தார். அவருடன் வந்த நாடகக் காரிகள் சிலர் முதலாளியுடன் முரண்டு பண்ணியிருக்க வேணும். பழைய கதை. இதனாலே கோபங்கொண்ட பாகவதர் 'இந்த இடம் தகரக் கொட்டகையாக மாறவே' என்று அறம்பாடினாராம். அறம் பாடியதைத் தொடர்ந்து மடுவத்தைச் சுற்றியிருந்த வழியிலே தகரப் பற்றைகள் முளைத்தனவாம். இதிலிருந்து வின்ஸர் மடுவம் தகரக் கொட்டகை என வழங்கப்படலாயிற்று. அந்தக் காலத்துக் கலைஞர்களுக்கு அறம் பாடும் அருட் சக்தி இருந்ததாக அப்பையா நம்பினார். துவரம்பருப்புச் செடிபோன்றது தகரை. வின்ஸர் வளவிலே அது வளர்ந்து காடாகிக் கிடந்ததை நான் பாத்திருக்கிறன். றேந்தை பென்னியன் சண்டியரின் ஆதிக்கம் வின்ஸர் மடுவத்திலும் இருந்தது எண்டு சொல்லத் தேவை யில்லை. பிற்காலத்தில் அந்த மடுவத்திலைதான் கோணாந் தோட்டத்து மணியத்தை நடேசன் 'பீட்' ஆக்கினவன். அந்தக் கியாதியாலைதான் அவன் கொட் டடித் தெய்வேந்திரத்துக்கு வலது கையாக மாறியவன். இவர்கள் எல்லாருக்கும் முந்திக் கொக்குவில் சண்டியன் ஒருவனுடைய ஆதிக்கமே தகரக் கொட்டகையில் இருந்தது. அவன் ஆளைத் தெரியாமல் துரைராஜா முதலாளியோடையும் கொழுவிக் கொண்டான். பிற கென்ன? முதலாளி துவக் கெடுத்து, அந்தச் சண்டி யனைச் சுட்டுக் கொண்டு போட்டார். முதலாளி இழு

www.padippakam.com



படாமல் அப்புக்காத்தர். ஜீ. ஜீ. காப்பாத்தினார் என்டு நினைவு. வண்ணான்குளத்து வடக்குக் கரையிலே எழுந்திருந்த இந்தத் தகரக் கொட்டகைக்கு இன்னும் பல கியாதிகள் இருந்தன.

அந்தக் காலத்து சூப்பர் ஸ்டார் எம். கே. தியாகராஜ பாகவதர்தான். பாட்டிலை வலு விண்ணன். அவர் பாடிய அத்தனை பாட்டுகளும் HIT, ராசா அண்ணர் சடங்கு வீடுகளுக்கு கிராமபோன் பெட்டி கொண்டு வந்தால், அவர்பாடிய தட்டுகளை மறக்காமல் கொண்டு வருவார். ஓட்டை நாகேசரைப் போன்ற விபரம் அறிந்தவர்கள் படத்தையும் பாட்டையும் சொல்லிக் கரைச்சல் குடுப்பார்கள். அவர் நடிக்கும் படங்களிலை நாயகிகள் முக்கியமில்லை. எஸ். டி. சுப்பு லட்சுமி, வசந்தசேனா என்று யார் யாரோ ஜோடியாக நடித்தார்கள். ஆனால், சிந்தாமணியிலை அவர் ஜோடியாக நடித்த அசுவத்தம்மாவை மறப்பதற்கில்லை. அவளுடைய தரிசனத்துக்காகச் சிலர் ரயில் ஏறி மதுரைக்குச் சென்றார்களாம். சிலருக்குப் பைத்தியங் கூடப் பிடிச்சதாம், 'அந்தத் தோறை கசம் பிடிச்சுச் செத்தவள்' என்று அவள் புராணத்தை நாகேசர் முடிப்பார். இந்த இடத்திலை இன்னொரு விஷயத்தைக் கட்டாயம் சொல்லவேணும். இந்தக் காலத்திலை காதல் காட்சிகள் உபத்திரவமான வேலை. ரொட்டிக்கு மா பிசைகிறார்களோ, இல்லாட்டிலை முதுகிலை மண் படச் செய்யும் குஸ்தி வேலை செய்கிறார்களோ கொட்டுப்பட்ட மையை ஒத்துத்தாளிலை ஒத்தி எடுக்கிறார்களோ என்று நிதானிக்க ஏலாது. அந்தக் காலத்திலை ரெஸ்ட்பெக்டான மூன்றடி இடைவெளி விட்டுத்தான் காதலர்கள் பேசினார்கள்; பாடினார்கள். உச்சமான காதல் வசனங்கள் 'பிரியே!' 'நாதா!' என்று இருக்கும். காதல் வசப்பட்ட நாயகி மயக்கம் போடுவதாகவும் காட்சிகள் வரும். அவளுக்கு பிரக்ஞை மீளும்

www.padippakam.com



பொழுது 'நான் இப்பொழுது எங்கிருக்கிறேன்?' என்று கேட்பாள். அப்பொழுது கலரி மகாஜனங்கள் படம் ஓடும் மடுவத்தை நினைவில் வைத்து 'நீ இந்த மடுவத்தில் இருக்கிறாய்!' என்று கூச்சலிட்டு விசிலடிக்க வேண்டும். விசிலடிக்கும் திறமையை வைச்சே ரஸனை மட்டிடப்பட்டது. விசில் அடிக்கிறதிலை இன்றளவும் நான் சக்கையன்.

அழகிய அடுக்கு வசனங்களை வசுக்கோப்புக்குக் கொண்டுவந்த பெருமை இளங்கோவனைச் சாரும். கண்ணகி, மஹாமாயா போன்ற படங்களிலை அந்த வசன வல்லபத்தைக் கேட்டு மகிழலாம். அப்படிப்பட்ட வசனங்களைப் பேசி நடிப்பதில் பி.யூ. சின்னப்பா கெட்டிக்காரன். அவர் அந்தக் காலத்து ஜகதலப் பிர தாபன். பல முன்னணி நடிகைகளுடன் நடிச்சவர். சீனடி சிலம்படி விளையாட்டிலும், எம் ஜீ ஆருக்கும் அப்பனாகத் திகழ்ந்தார். ஆனாலும், அவரை 'ஆக்ஷன் ஹீரோ' என்று யாரும் கொண்டாடிய தில்லை. சின்னப்பாவுக்கு முந்தியே பல சண்டைப் படங்கள் வந்தன. முந்தியெல்லாம் கனக்க, மலிவான சீரியல் படங்கள் ஆங்கிலத்தில் வந்தன. ஒரு கதா நாயகன் தன்னந்தனியாக முப்பது நாற்பது எதிராளி களை அடித்து விழுத்துவான். இதிலை கெட்டித்தனம் என்ன வெண்டால், எவ்வளவு சண்டை பிடிச்சாலும் கதா நாயகனின் தொப்பி கழன்று விழாது! அன்று தொடக் கம் இன்றைய மணிரத்தினம் வரை ஹோலிவுட் படங் களை 'கொப்பி' அடிச்சுத்தானே சினிமாப் பிழைப்பு நடத்துறம்? அந்த சீரியல் படங்களைப் போல தமிழில் மின்னல் கொடி, ரூபான் குயீன், பம்பாய் மெயில் போன்ற சண்டைப்படங்கள் வந்தன. டி. கே. ருக்மணி தேவி, நாடியா போன்ற நடிகைகள் வீர சாகஸம் புரிவதில் முன்னணியிலே திகழ்ந்தார்கள். ஆனால், அந்தப் படங்களிலே நடித்த எஸ்.எஸ். கோக்கோதான்

www.padippakam.com



Action king. அவர் ஒரு விசில் அடிச்சுப் பின்னாலை எம்புவார். மறுகணம் கட்டடத்தின் உச்சியில் நிற்பார். இன்றைக்குச் சினிமாக்காரர்கள் என்னென்னவோ கூத்துகள் ஆடுகிறார்களே. அவர்களுடைய மசாலா ஸ்ரண்ட் வியாபாரத்துக்கு வழிகாட்டியாக இருந்தகொக் கோவுக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பினால் கெட்டா போய்விடுவார்கள் என்கிற ஆதங்கம் இப்பவும் எனக்கு உண்டு, என்றாலும், நாயகர்களுக்காகக் கோஷம் போடும் தமிழர்களுடைய பாமரத்தனமான ரஸனை இன்றிருப்பது போலவே அன்றும் இருந்தது என்பதை எண்ணித் திருப்திப்படலாம். இன்று ரஜனியா கமலா என்று கோஷம் போடுகிறோம். நேற்று சிவாஜியா எம் ஜி ஆரா என்று கோஷம் போட்டோம் அன்று எம். கே. டி. பாகவதரா சின்னப்பாவா என்று கோஷம் போட்டோம். இதைச் சொல்ல வெட்கப்பட வில்லை. நான் சின்னப்பா கட்சி.

அந்த ஆனானப்பட்ட சின்னப்பாவுக்கு 'சான்ஸ்' வாங்கிக் குடுக்கிறதிலை கே. தவமணிதேவிக்குப் பெரிய பங்கு இருந்தது என்ற ஒருசாட்சியத்தைக் கிட்டடியிலை வாசிச்சனான். சிங்கள சினிமாவின் முதலாவது கதா நாயகியாகவும் பாடற்குயிலாகவும் செழுமை சேர்த்தவர் ருக்மணிதேவி. அவர் ஒரு தமிழச்சி. அவவுக்கும் முன்னோடியாக விளங்கி தமிழ் வசுக்கோப்பு உலகத் திலே ஈழத்தமிழருக்கு, ஒரு கியாதியை ஏற்படுத்தியவர் தவமணிதேவிதான். பாலு மகேந்திராவும் குகநாதனும் அவவுக்குப் பேரப்பிள்ளைகள் போல. அவவுக்குப் பூர் வீகம் மானிப்பாய்-நவாலிப் பக்கம் எண்டு சொல்லு வினம். ஆடலிலும் பாடலிலும் வல்ல கலைஞராகவே சினிமா உலகில் நுழைந்தார். இராமேஸ்வரம் புரோகி தர் ஒருவரைக் கல்யாணஞ் செய்து அமைதியான குடும் பப் பெண்ணாக வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில்

www.padippakam.com



ரெண்டு மூன்று சந்தர்ப்பங்களிலே அவவை நேரிலே கண்டிருக்கிறன். அவ வனமோகினி எண்ட படத்திலை கதாநாயகியாக நடிச்சு ஒரு கலக்குக் கலக்கினவ. நீச்சல் உடையிலை யானைமீது அமர்ந்து வரும் அந்த வடிவான காட்சி இப்பவும் கண்ணுக்குள்ளை நிக்கு. சில்கு சுமிதாக்களும், குயிலிகளும், டிஸ்கோ சாந்திகளும் எதை எதையோ அவிழ்த்துக் கவர்ச்சி காட்டினாலும், வனமோகினியிலே 'இலங்கைக் குயில்' சிந்திய இயற் கைச் செழுமைக்கு ஈடாக மாட்டா. ஆனால், தவமணி தேவியின் உடன்பிறப்புகள் அப்பிடி நினைக்கேல்லை யாம். 'உவள் எங்கடை மானத்தை எல்லாம் சென்னை யிலை உரிஞ்சு காட்டுறாள்' என்று ஆத்திரப்பட்டார் கள். வனமோகினி ஓடிய மடுவத்துக்குப் போய் அவ தோன்றும் காட்சியில் அவ செத்துப்போகும்படி கத்தியிருக்கிறார்கள். திரைபுண்டதுதான்கண்டமிச்சம்! இந்தச் சம்பவத்தை இரசிகமணி கனக செந்திநாதன், தமக்கே உரிய பாணியிலே சொல்லி, தொண்டையில மணி கிலுக்கிச் சிரித்தார். ஆரம்ப காலத்தில், வசுக் கோப்பின் போது நடிகர்கள் உயிருடன் தோன்றி னார்கள் என்று அக்கால யாழ்ப்பாண மக்கள் பலரும் பாமரத்தனமாக நினைச்சார்களாம். வெள்ளைத் திரையைக் கட்டி, அதற்குப் பின்னால் நின்று திறிக் கீஸா விடுறாங்கள் என்று யாழ்ப்பாணத்து உண்மை விளம்பி ஒருவர் ஆவேசப்பட்டாராம். அவர் லாந்தரும் எடுத்துக் கொண்டு திரைக்குப் பின்பக்கமாக தகரத்தைக் கழற்றிக் கொண்டு போனவராம். இந்தப் பழைய வசுக்கோப்புச் சங்கதிகளை 'சொக்கா' போட்டு இரசிகமணி சொல்லும் பாணி நேரில் அநுபவிக்க வேண்டிய ஓர் இன்பமாகும்.

ஆனாலும், இந்த ஆடை குறைப்பு நாகரிகத்தைத் தவமணிதேவி அறிமுகஞ் செய்தார் என்பது மகா கொச்சைத்தனமானது. பிற்காலத்தில்கே. சாரங்கபாணி

www.padippakam.com



கொமடி ஜோடியாகவும் நடித்த கே.ஆர்.செல்லம் நீச்சலுடையில் தோன்றி நடித்த ஒரு படம் வனமோகினிக்கும் முன்னர் திரையிடப்பட்டது.அந்தக் காடசிகள் அடங்கிய படம் Second run வந்த பொழுது விழுந்து விழுந்து பார்த்தது ஞாபகம் இருக்கு. ஈழத் தமிழருடைய கலைத் திறன்களை உரிய முறையிலே மதிப்பதற்கும் போற்றுவதற்கும் தமிழ் நாட்டினர் பெரும்பாலும் பஞ்சிப் பட்டனர்.கரிசல்காடு கி. ராஜநாராயணனின்எழுத்தைப் போற்றுபவர்கள்கூட ஈழத் தமிழுக்குத் தனி அகராதி வேணும என்று இலவச ஆலோசனை வழங்கக் கூச்சப் படுவதில்லை. படித்தவர்களே இந்தப்பாடுபட்டால், கோடம்பாக்கத்திலே குவிந்து கிடக்கும் அரைவேக் காடுக் கலைஞர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? விபசாரக் கோட்டங்கள் நடத்தியவர்களையும்,திருட்டுப் பிள்ளை பெற்றவர்களையும், நீலப்பட நாயகிகளையும் கண்டு கொள்ள மாட்டார்கள். இதுகும் ஒண்டு சொல்ல வேணும். இதெல்லாம் அடக்கிய ஒரு விநோத கனவுலகந்தான் வசுக்கோப்பு!

சிறாம்பியடிச் சந்தியிலை இருந்த கொல்லன் கம்மாலையில், தெங்குகள் தறிக்கப்பட்டு வெலிங்டன் தியேட்டர் கட்டப்படத் துவங்கியது ஓட்டை நாகேசருக்கு சுவீப் விழுந்ததைப் போல இருந்திருக்க வேணும். அவருடைய வீட்டுக்கு முன்னால கட்டப்பட்ட வெலிங்டனில் அவருக்கு ஆத்மார்த்த கரிசனை இருந்தது. அது மடுவமல்ல, அதுதான் கொழும்பு கிங்ஸ்லி போன்ற படமாளிகை எண்டு பொச்சடித்தார். தம்பு தேத்தண்ணிக் கடையிலை மசாலைவடையும் கடிச்சு பிளேன் டீயும் குடுச்சபடி கட்டட வேலை முன்னேறுவதை அவர் ரஸித்ததை நான் கண்டிருக்கிறன். யாழ்ப்பாணத்திலை கட்டப்பட்ட மூன்றாவது வசுக்கோப்பு மடுவம் வெலிங்டன். ஸ்ரீ வள்ளி என்ற படம் இதிலை ஓகோ என்று ஓடியது. அந்தக் காலத்து

www.padippakam.com



குமர் நெஞ்சுகளை மட்டுமல்லாமல், நாயக நடிகை களையும் தனது வசீகரத்தாலே கிறங்கடிக்கச் செய்த டி. ஆர். மஹாலிங்கம் அதில் வேலன்-வேடன்-விருத் தன் ஆகிய மூன்று வேடங்களிலும் நடிச்சார். நடிகை லட்சுமியின் தாயும், ஐஸ்வரியாவின் பாட்டியுமான குமாரி ருக்மினிதான் வள்ளி. டப்பிங் செய்வதிலே ஏவி மெய்யப்பன் செட்டியார் சாதித்த வெற்றியாலும் அவர் தினைப் புனத்திலே பெரிய நாயகியின் குரலிலே பாடிக் கிளிகளை விரட்டினார். வள்ளியின் தோழியாக வந்த ஜெயலட்சுமி 'நாம் இருவர்' படத்தில் கதாநாயகியாக நடிச்சார். பழம் பெரும் நடிகர் வி.கே.ராமசாமி இந்தப் படத்தின் மூலம் சினிமா பிரவேசம் செய்ததுபோல, பி.ஆர் பந்துலு தமிழ் பிரவேசம் செய்ததாக ஞாபகம். ஜெயலட்சுமி வல்வட்டித்துறை அப்பனுக்குத் தமிழ் நாட்டுச் சின்ன வீட்டின்மூலம் பிறந்தவர் என்று அந்தக் காலத்தில் பேசிக் கொண்டார்கள்.

விழுமியங்களைப் பற்றிச் சாமியார்கள் பேசட்டும். காட்டுறதைக் காட்டிப் பிடுங்கிறதைப் பிடுங்கும் ஒரு பிஸினஸ் ஆகவே வசுக்கோப்பு என்னும் சினிமா. குறளும் சிலம்பும் உடைய தமிழ் மக்களாலே மதிக்கப் பட்டு வருகிறது. கலையாவது, கத்தரிக்காயாவது? இருந்தாலும், உலக மகா சாதனையை நடத்தியதும் தமிழ் சினிமாதான் என்டதை எந்தக் கொம்பனாலும் மறுக்கேலா! ஞானிகளாலும், அறிஞர்களாலும், சிந் தனையாளராலும், பரமாத்மாக்களாலும், மகாத்மாக்களா லும் சாதிக்க முடியாதவற்றை வசுக்கோப்புக் கவர்ச் சியை மட்டும் வைத்துக் கொண்டு, தனி ஒரு மனித னாகப் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சாதித்தார். புறணி அளக்கத் தேழ்வையில்லை. 'சதிலீலாவதி'யிலை நடிக் கத் துவங்கி, படைவீரனாகவும், விறகுதலையனாகவும், ஹொன்னப்ப பாகவதருக்கு அப்பனாகவும் சின்ன சின்ன றோல்களிலே பல காலமாக நடிச்சுக்

www.padippakam.com



கொண்டிருந்தவர் என்டது உண்மை. இது வெட்கமே? கதருடை பக்தராய் கோவை சென்றல் ஸ்டுடியோவை Bit parts பெற வலம் வந்து கொண்டிருக்கேக்கை, ஜுபிட்டர் மொஹிதீன், டைரக்டர் அந்தோணிசாமி ஆகியோரின் அநுதாபத்தை பெற்றார். அவர்களால் உருவாக்கப்பட்ட 'ராஜகுமாரி' என்ற மந்திர-தந்திரப் படத்திலே கதாநாயகனாக நடிக்க வாய்ப்புக் கிடைச்சது. பெயர் எம். ஜி. ராமச்சந்தர். அவருக்கும் கன்னடத்துப் பெண்களுக்கும் அப்படி ஒரு ராசியாக்கும்! கதாநாயகி கே. மாலதி. அவர் வாயசைக்க 'கண்ணாரக் காண்பதெப்போ...' என்று அவருக்காக முதலாவதுபாடலை மாரியப்பா பாடியதாக ஞாபகம். இதிலேதான் 'பகு' என்கிற கொமடிறோலில் நம்பியார் சினிமாப் பிரவேசம் செய்ததாகவும் நினைவு. இதற்குப் பிறகும் சிலபடங்களிலே அவருக்கு செக்கண்ட் கதாநாயகன் வேஷமே கிடைத்தது. இந்தப் படத்தில் இரண்டாம் நாயகியாகநடித்த தவமணிதேவியின் கவர்ச்சியையும் மயக்கும் நடிப்பையும் விழுங்குவதற்கு அது திலீஸான றீகல் தியேட்டரை விசிலடிச்சான் குஞ்சுகள் மொய்த்தார்கள் என்பது மெய். 'ராஜகுமாரி' படவெற்றிக்குத் தவமணிதேவியின் Sex Appealம் ஒரு காரணம். கவர்ச்சி காட்டி நடிப்பதிலே தவமணியையும் ஏப்பமிடும் வகையில் வி. என். ஜானகி வசுக்கோப்பு உலகில் முன்னேறிக் கொண்டிருந்தார். அக்காலக் கச்சுகளைஇறுக்கிக் கட்டி, உபரியானவை முகம் நோக்கிப் பிதுங்க, கொங்கை குலுக்கி அவ நடிப்பதைப் பார்ப்பதற்கு யாழ்ப்பாணத்திலும் பம்பலான ரஸிகர்கள் இருந்தார்கள். அவரைக் கணபதிபட்டின் மனைவி என்று அக்காலத்தில் பேசும் படமோ, குண்டுசியோ எழுதியதாகவும் நினைவுண்டு. பேந்து 'மருதநாட்டு இளவரசி' என்ற படத்தில், ஓடும் ஆற்றிலே காதற்காட்சி என்ற செயலிலே ஏதோ குஸ்தி போட்ட பொழுது காதல் அரும்பியது என்டும் சொன்னவை. அப்ப இவர்களுடைய...

www.padippakam.com





காதல் மகா புரட்சியானது என்று கதைக்கப்பட்டது. வம்புக்காக அல்ல எம் ஜி ஆர் செய்த புரட்சிகளுள் இது முதலாவது புரட்சி எண்டபடியால் யோக்கியமாச் சொல்லவும் வேணும்.

எனக்கும் கூத்தாடிகளுக்கும் ஒரு ஒட்டு உண்டு எண்ட சங்கதியை இந்த வாய்ப்பை நழுவவிடாமல் சொல்லிப் போடவேணும். சில செமியாக் குணங்கள் காரணமாகநானும்காலத்துக்குக் காலம் கூத்தாடி இருக்கிறன். சென்னையில் உலக சமாதான மகாநாடு நடக்கேக்கிள்ளை நான் தாம்பரக் கிறிஸ்தவக் கல்லூரியிலை படிக்கிறன். அப்பதான் நான் எழுதி இயக்கி நடித்த 'சாவு' எண்ட நாடகம் சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் அரங்கேற்றப்பட்டது. அது கதம்ப நிகழ்ச்சி. சண்முகம் சகோதரரின் 'ஔவையார்' நாடகக் காட்சிகள், நடராஜ் சகுந்தலா நடனம் ஆகியனவும் இடம் பெற்றன. என் 'சாவு' நாடகத்தில் முகவை ராஜமாணிக்கம், தாம்பரம் லலிதா, ஆண்டாள் ஆகிய கலைஞர்களும் பங்குபற்றினார்கள். அந்தநாடக விழாவுக்கு எம் ஜி ஆர் தலைமை தாங்கினார். அவரைக் கம்யூனிஸ்டுகளும் 'புரட்சி நடிகர்' என்று தோளிலை காவின காலம் அது! என் நாடகத்தைப் பாராட்டி அவர் என் தலையிலை வைச்ச ஐஸிலை எத்தனை காலம் ஜலதோஷத்திலை கஷ்டப்பட்டனான் எண்டது இப்ப ஞாபகம் இல்லை.

சிறிது காலம் நான் இலங்கையின் அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பிரதி மதிப்பீட்டுக் குழுத் தலைவராயும் இருந்தனான். இலங்கையிலே சுதேசியத் தமிழ்ப்படங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்ற நோக்கத்திலே பல திட்டங்களை முன்வைச்சனான். அதன் தலைவர் அன்டன் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் சௌஜன்ய உறவு நிலவியது.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்ப் படத்துறையில் ஈடுபடும் ஆர்வம் மனைகோலியது. இது சம்பந்தமான ஞானத்தை மலிவிக்க Work shop Seminar ஒன்றினை பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதிலே என் முகாமை பயன்பட்டது. திரைப்படப் பிரதியாக்கப் போட்டி ஒன்றினை நடத்திப் பெருந்தொகைப் பரிசுகள் வழங்கக் காரணமாய் இருந்தேன். அந்தக் காலத்தில் 300க்கும் அதிகமான பிரதிகள் என் மதிப்பீட்டுக்கு வந்தன. சில நல்ல பிரதிகள். அவை இது வரையிலும் சினிமாவாக்கப்படவில்லை. திடீரென்று அந்தப் பதவியை ரஜினாமாச் செய்து விட்டுப் பரதேசியாகி விட்டேன்.

வசுக்கோப்புப் பற்றி நினைக்கும் பொழுது என் இரண்டு நண்பர்கள் நினைவுக்கு வருகிறார்கள். ஒருவர் சிறுப்பிட்டி இளையதம்பி. அவர் அண்ணாமலையில் சங்கீதம் பயின்றவர். பின்னர் சினிமாவிலே நடிப்பதற்கு கோடம்பாக்கத்தில் 'டேறா' போட்டார். இரண்டு மூன்று படங்களிலே முகத்தைக் காட்டினவர். ஒரு படத்தில் பாடுவதாக வாயசைச்சும் இருக்கிறார். இவை ஐம்பதுகளின் முற்கூறில் நடந்தன. பின்னர் சினிமாஎன்பது ஒருகெட்டகனவு என்று ஞானம் பெற்று ஊர் திரும்பி விட்டார். மற்றவர் 'கெட்டவன்' நடேசன். நாடகக் கலைஞர் ஏ.ரி. பொன்னுத்துரையுடன் இணைந்து 1948 இல் கஞ்சன் என்ற நாடகம் நடிச்சவர் நடேசன், நன்றாக நடிப்பான். நல்லாகப் பாடுவான். சினிமாவில் நடிக்கும் ஆசையினால், சென்னைக்கு ஓடிப்போய், ஆலந்தூர்ப் பகுதியில் ஓராண்டு அலைந்து திரிந்து, கனவுகள் கலைந்து, ஊருக்குத் திரும்பியவன்.

படச் சான்ஸுக்காக ஸ்ரண்ட் விளையாட்டுகள் படிச்சவன். வின்ஸர் மடுவத்திலே எம்ஜிஆரின் படம் ஒன்று ஓடக்கை, கலரி மகாஜனங்கள் மத்தியிலே ஒரு கலம்பகம். கோணாந்தோட்டத்து மணியம் என்ற

www.padippakam.com



சண்டியன் பலரை அடித்து நொருக்கத் துவங்கினான். சண்டை பிடிப்பவன் புகழ் பெற்ற சண்டியன் எண்டதை அறியாத நடேசன் கோதாவில் குதிச்சான். நடேசனின் தாக்குதல் உக்கிரத்தைத் தாங்க மாட்டாது கோணாந் தோட்டத்தான் ஓடி மறைந்துவிட்டான். அடுத்த நாள் கொட்டடித் தெய்வேந்திரனால் 'கெட்டவன்' நடேசன் யாழ்ப்பாணத்துச் சண்டியனாக ஞானஸ்நானம் செய் யப்பட்டான்!

நானும் நடேசனும் எட்டு ஆண்டுகள் ஒண்டாகப் படிச்சனாங்கள். அவன் நண்பர்களுக்கு இனியன். தாராக்குளத்தில், தன் பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஒரு Front போல வாடகைச் சைக்கிள் கடை ஒன்றை நடத்தினவன். யாழ்ப்பாணம் போகும் பொழுதெல்லாம் என் இலக்கிய நண்பர் A.J. கனகரத்னாவைச் சந்திப் பது நாளாந்தச் சடங்கு. சில சமயம் தாராக்குளம் வழியாகவும் செல்வதுண்டு. என்னைக் கண்டால் ஏக தடப்புடல் மரியாதை. 'மாஸ்டரைத் தெரியாதா?' என்று கேட்டு, தன் சீடர்களுக்கு என்னை இந்திரன் சந்திரன் என்று புழுகி வைப்பார்! எழுத்தாளன் எண்ட கியாதி பெற்றதாலும் இந்த மரியாதை.

அவனுடைய நிஜவாழ்க்கையின் சில காட்சி கள் இன்றைய சினிமா நடிகர்களுக்கே உதவக் கூடியவை. ஒரு நாள் நடேசனுக்கும் மனுஷிக்கும் சச்சரவு. சின்ன வீடுதான் தகராறுக்குக் காரணம். அவனுக்கு பயங்காட்டுவதற்காக பெஞ்சாதி ஓடிப்போய் கிணற்றுக்குள் விழுந்திட்டாள். (ரவுக்கை இல்லாமல், நடிகையைக்குளிக்கவைப்பது,இன்றைய சினிமாவின்மகத் தான புதுமையல்லவா?) பெண்டினைத் தொடர்ந்து. நடேசனும் கிணத்திலே குதித்தான்! பிறகு? 'இனி மேல் கிணற்றுக்குள் குதிப்பியா?' என்று கிணற்றுக்குள் வைத்தே மனைவிக்குச் 'சவல்' அடி. 'ஒரு நாளும்

www.padippakam.com



விழமாட்டேன்!' என்று அவள் எல்லோரும் அறியச் சத்தியஞ் செய்த பின்னர், கிணற்றுக்கு வெளியே கொண்டு வரப்பட்டாள். இது சீரியஸ் சீனுக்கு உதவாட்டிலும், கவுண்டமணி-செந்தில் காமடிக்காவது உதவாதா?

அவனுடைய சிலவீரதீரச் செயல்களுக்கு முன்னால், மலையூர் மம்பட்டியான்களும், தீச்சட்டிக் கோவிந்தன் களும் பிச்சை வாங்கவேண்டும். எத்தனையோ 'ஜல்ஸா' வேலைகளுக்கு அவன் யாழ்ப்பான நீதி மன்றக் கட்டடங்களை இரவுவேளைகளிலே உபயோகிப் பதாக ஒரு அரசல் புரசல். இது பற்றி ஒரு நாள் அவனிடம் கேட்டுவிட்டன். ''மாஸ்டர், உண்மையைச் சொன்னால், அந்த வேலைகளுக்கு அதுதான் பாது காப்பான இடம். இரவு நேரத்தில் கோட்டு வளவுக்குள் வாறதுக்குப் போலீஸ்காரன் பயப்படுவான்...என் தொழில் இரகசியம்...'' என்று படு காஸுவலாகச் சொன்னான்.

ஒரு பெரும்பணக்காரன் மலேசியப் பென்சன்காரர். பல இலட்சங்கள் செலவு செய்து தன் ஒரே மகளுக்குப் பெரிய சீதன வீடு கட்டினார். அவள் நல்ல வடிவு. கல்லூரிக்கு வாடகைக் காரில் சென்று வந்தாள். கார்க்காரனுக்கும் அவளுக்குமிடையில் காதல் மலர்ந் தது. ஒரு நாள் அவள் கார்க்காரனுடன் ஓடிப்போயிட் டாள். தகப்பனுக்குப் பைத்தியம் வந்துவிடும் போல் இருந்தது. ஆள் கொணர்வு வழக்குத் தொடுத்தார். கார்க்காரனைக் கொலை செய்விக்கக்கூட ஆட்கள் தேடினார். தெய்வேந்திரத்தின் சிபார்சின் பேரில் விவ காரம் நடேசனிடம் வந்தது. நடேசன் கார்க்காரனுடன் பேசினான். ''அவள் மேஜர். பிறப்புக் கொப்பி காட்டு வன். என்னை ஒருவராலும் புடுங்க ஏலாது'' என்று அவன் ராங்கி பேசிவிட்டான். வழக்குத் தவணையன்று

www.padippakam.com



காதலனும் காதலியும் கோட்டில் ஆஜரானார்கள். வயசு நிரூபிக்கப்பட்டது. பென்சன்காரர் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. நீதிபதியிடம் சமர்ப்பித்த Document ஐப் பெறுவதற்குக் காதலன் சுணங்க நேர்ந்தது. காதலி அவன் வருகைக்காக நீதிமன்ற வாசலில் நின்றாள். ஏராளமான சட்டத்தரணிகளும், போலீஸ்காரரும் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்கள். மின்னல் வேகத்திலே காரில் வந்த நடேசன், நீதிமன்ற வாசலில் வைத்தே 'காதலி' யைக் கடத்திக் கொண்டு மறைந்து விட்டான்! சில ஆண்டுகள் கழித்து, அந்தப் பெண், தகப்பனின் இஷ்டப் படி மலேயாவில் உத்தியோகம் பார்க்கும் ஒருவனைக் கல்யாணம் செய்து, குழந்தை குட்டி பெற்று வாழ்வதான தகவலை 'யாழ்ப்பாணம்—தேவன்' பல கதைகளுக்கு மத்தியிலே சொன்னார், 'சட்டம் என் கையில்' என்று பெயர் வைக்கத்தான் சினிமாக்காரனுக்குத் தெரியும். சட்டத்தைக் கையில் எடுத்து வாழ்ந்தவன் நடேசன்.

'மர்மயோகி' பார்த்திருக்கிறீர்களா? ஜூபிட்டர் படம். எம். ஜி. ஆரைக் கதாநாயக அந்தஸ்க்குஉயர்த்திய ஆரம்காலப் படங்களுள் ஒன்று. ஆலம் விழுது ஒன்றிலே தாவிக் குதித்து, அக்கிரமம் செய்யும் அரசன் முன் திடீரென்று தோன்றி எச்சரிக்கை விடுவார் எம். ஜி. ஆர். அந்தக் காட்சியின் போது 'விசில்' சத்தத்திலே சினிமாக் கொட்டகை அதிரும். ஆலம் விழுது பற்றித் தாவுவது டார்ஸான் படக்காலத்திலிருந்து சினிமாவிலே கையாளப்பட்ட டெக்னிக்தான்! ஜோன் கவாஸ்தான் டார்ஸானாக நடிச்சவர். ஆனால், நடேசன் புதிய டெக்னிக் ஒன்றைக் கையாண்டு, யாழ்ப்பாணத்தைப் பரபரப்புக் குள்ளாக்கியதை மறக்க ஏலாது.

பெரியகடையின் மீன்மார்க்கெட் பெண்கள் ஆதிக்கத்திலிருந்தது. புதிதாக மீன்விற்க வந்தஒரு இள

www.padippakam.com



வயதுக்காரி திடீரென்று ஸ்டாராகி, விரைவில் அல்லி ராணியானாள். மீன்சந்தையிலே செலாவணியிலிருந்த அத்தனை தூஷணை வார்த்தைகளையும் ஒரே சமயத்திலே அர்ச்சனை செய்வதிலே விண்ணி. மீன்களுக்கு அவள் வைச்சதுதான் விலை. பேரம் பேசும் ஆண்களின் வேட்டி அவிழும்! இந்த மாற்றங்களை அறியாதிருந்த நடேசன், ஓர் ஒடியல் கூழ் Partyக்காக மீன் வாங்க போனான். அல்லிராணியிடமே நல்ல மீன்கள் இருந்தன, ஒரு கூறினை எடுத்துப் போட்டு, விலை கேட்டிருக்கிறாள். பின்னர், மாமூல் போல பேரம் பேசினான். அல்லிராணி அர்ச்சனையில் இறங்கினாள். நடேசனுக்கு இது பழக்கமில்லை. தன் சண்டியன் பார்வை மூலம், அவளை மேலும் கீழுமாக அளவிட்டான். ''என்ன பார்க்கிறீர்? உந்தச் சேட்டையளைக் கொண்டு போய் உன்ரை பெண்டிலிட்டைக் காட்டும்...'' என்று துவங்க, நடேசனை அறிந்த மீன்காரிகள் சிலர் சமாதானம் செய்யப்போக, அல்லிராணி மேலும் ஆக்ரோஷம் அடைந்து நடேசனை வார்த்தைகளாலே குதறத் துவங்கினாள்... கறி உமலும் சந்தையிலே போக்கி, வெறுங்கையோடு நடேசன் Party புக்கான்!

இதுநடந்து ஒரு வாரம் இருக்கும். அந்தச் சம்பவத்தை மீன்காரிகள் மறந்து போச்சினம். அல்லிராணியின் புகழும் றாங்கியும் கொடி கட்டிப் பறந்தது! தாராக்குளத்துக்கும் கொட்டடிக்கும் இடையிலுள்ள ஆஸ்பத்திரி வீதி எப்பொழுதும் சனசந்தடிமிக்கது. அல்லிராணி வழக்கம் போல, தலையில் மீன் கடகத்துடன், பாங்கிபுடைசூழ, ஆஸ்பத்திரி வீதியில் ஏறி, மீன்சந்தை நோக்கி நடக்கத் துவங்கினாள். எதிரிலே வந்த நடேசனை அலட்சியமாகப் பார்த்து முன்னேறும் பொழுது.. மர்மயோகியில் வந்த எம். ஜீ. ஆர் பாணியிலே, அல்லிராணியின் முலைகளை விழுதுகளாகப் பற்றி, எம்பி

www.padippakam.com



தலையிலிருந்த மீன் கடகத்தைக் காலால் உதைக்க, மீன்களெல்லாம் றோட்டில் சிதறிக்கிடக்க... 'நீ ஒரு வார்த்தை பேசினால், இந்த ஆக்களுக்கு முன்னாலை, இந்த றோட்டிலை உன்ரை சீலையை உரிஞ்சு மான பங்கப்படுத்திப் போட்டுத்தான் விடுவன்...' என்று விழுதுகளின் பிடியை இறுக்கிக் கொண்டே நடேசன் கர்ஜித்தான்... ஆத்திரத்துடன் அல்லி ராணியைத் தள்ளிவிட்டான். பிறகு அவளைத் திரும்பிப் பார்க்காமல் நடக்கத் துவங்கினான்... அவள் அழுது கொண்டே கரையூரை நோக்கி ஓடத்துவங் கினாள். பிறகு என்ன? அல்லிராணி சூர்ப்பனகையாக மாற இரண்டு சாதிகளுக்கும் இடையில் ஒரு போர் நடந்தது. அந்தக் காலத்தில், சாதிக் கலவரங்களே வீரத்தின் பேரால் நடந்தன. இந்தக் கலவரம் ஒரு வாரம் நடந்து, இருபக்கத்தாருக்கும் பெரும் இழப்புகள் ஏற்பட்டன. பின்னர், இரு சாதியாரின் பிரமுகர்களும் கூடி, சமரசம் ஏற்படுத்தினர். அந்த அல்லிராணி மீன் சந்தையின் திசையிலும் தலைவைச்சுக்கூடப் படுக்கப் பயப்பட்டாளாம்.

இன்றைய சினிமாப் படங்களை விடியோவிலே போட்டுப் பார்க்கும் பல சந்தர்ப்பங்களிலே, ஏனோ தெரியாது. கெட்டவன் நடேசனின் நினைவு வரும். அவனை நான் கடைசியாக 80 ஆம் ஆண்டில் பார்த்த னான். அதே சைக்கிள் கடையில்.

ஆனால், அதற்குப் பிறகு, 1981இல், மதுரையில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் போது, எம்ஜிஆரைப் பல முறை பார்த்திருக்கிறேன். அந்த மாநாட்டினை மகத்தான தமிழ் விழாவாக நடத்தினார். எம்ஜிஆர் மகத்தான மனிதர். அரியன சாதித்தார். கருணாநிதியின் சாணக்கியம் அவர் முன்னால் தோற்றது. இரண்டு



படிப்பகம்

www.padippakam.com



தசாப்தங்களுக்கு மேலாக அவர் தமிழ் நாட்டு அரசியலின் சூக்குமமாய்— அதி மந்திரமாய் விளங்கினார். முருகனுக்கு ஆறுபடை வீடுகள் கண்ட மண்ணிலே, நவீன முருகனின் வள்ளியாய் வாய்த்த ஜானகி அம்மா தான் முதலாவது பெண் முதலமைச்சராகப் பதவியேற்றார் என்டதை நாங்கள் இவ்வளவு கெதியாக மறக்கப்படாது. பாவம், குடைக்காளான் சமாதியிலே, எம் ஜீ ஆரைத் தூங்கவும் விடமாட்டார்கள். இடையில் பராசக்தி அக்காவும், சிலோன்மணி அக்காவும் மின்னி மறைகிறார்கள். சர்வமுமே வசுக்கோப்பாகிவரும் தமிழ் நாட்டிலே, முருக பக்தர்கள் பக்தி மீதூர 'முருகன் அண்ணாச்சி' என்று வாய் மணக்க அழைப்பார்கள். அப்ப, வள்ளி நாயகியை 'சின்னண்ணி' என்று வழிபடுவதுதான் சரி. கணக்கு உதைக்கிறதே! சினிமாவுக்குக் கலாதி சேர்ப்பது 'டூப்'. ஒரு கேள்வி. ஒரிஜினல் வள்ளி யார்? 'டூப்' வள்ளி யார்? ஐமிச்சங்களைத் தீர்த்து வைப்பதற்கு ஓட்டை நாகேசரும் உயிருடன் இல்லை.

தமிழர்கள் எதையும் சாதிக்க வல்லவர்கள் என்கிற படுநம்பிக்கையை அவுஸ்ரேலியாவில் நடந்தேறிய ஐந்தாவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு (சுருக்கமாக மாநாடு) என்னுள் வளர்த்துவிட்டது. யாரும் தமிழுக்குப் பந்தம் பிடிக்கலாம். யாரும் தமிழையும் அதன் பண்பாட்டையும் ஆராயலாம், செப்பமான Bank Balance இருந்தால் போதும்...அந்தக் காலத்தில், இசை மேதைகளையும் கடவுளர்களாக்கினோம். பிறகு, சினிமாக்காரர்களை அரசியல் தலைவர்களாக்கி, முதல்வர்களாக்கி, தமிழின் வருங்காலத்தையே அவர்களுடைய பாதார விந்தங்களிலே நைவேத்தியமாக்கினோம்,இனி, அவர்களை 'மள மள' வென்று தெய்வமாக்குவோம். 'எம்ஜிஆர்' முருகனுக்கு கோயில் ஒன்று கட்டப்பட்டுவிட்டதாம். தமிழரின் மகா சாதனை. ஐந்தாவது

www.padippakam.com



மாநாட்டை அதிவிசேட அதிதியாய்ச் சிறப்பித்தவர் சிவகுமார். அவரும் சினிமா ஹீரோ தான். அவர் பாவம். அவருக்குச் சில உண்மைகள் தெரியாது. அவுஸ்ரேலியத் தமிழர்களுடைய First Preferance சாட் சாத் வள்ளிநாயகியே! கதிர்காமத்திலே, கந்தன் கோயி லுக்குப் பக்கத்தில் வள்ளியம்மை கோயிலைக் கட்டிப் பராமரித்தவர்கள் நாங்கள், வள்ளியம்மை கோயிலைக் கும்பிடேக்கை தான் என் புத்தி மகன் காணாமற்போகப் பார்த்தான். அவனுக்கு மயிர் நீக்கக் கடன் அங்கை தான் நடந்தது. சிட்னித் தமிழர்கள் பக்தியிலே பொங்கி எழுந்து, 'சின்னண்ணி'க்கு 'வள்ளிகோயில்' ஒன்றும் கட்டக்கூடும். அதற்கு யாரைப் புரோகிதராக நியமித்தல் சிறப்புடையது என்று ஆறாவது மாநாட் டிலே ஆய்வுக் கட்டுரை ஒன்று வாசிப்பதற்குச் சிட்னித் தமிழன் ஒருவன் புறப்பட்டுப் போகலாம் என்று ஒரு மாற்றத்துக்காக நனவிடை தோய்வோமா? அந்த ஆய்விலே, துக்ளக் 'சோ' புரோகிதர் ஆக்கப்படுதல் ஏற்புடைத்து என்று விதந்துரைக்கப் படலாம். நவீன வள்ளியம்மையைச் சேவிப்பதற்கான மந்திரம் தேடி அவர் தமது மொட்டைத் தலையைக் குடையத் தேவை யில்லை.

''......—குழல்
பாரத்திலே இத ழீரத்திலே யன்பு சூடி—நெஞ்சம்
ஆரத் தழுவி யமர நிலைபெற்றதன் பயனை யின்று
காண்பேன்'' என்று

பாரதியாரின் சரணங்களுக்கு முன்னால், 'எந்த நேரமும் நின் மையல் ஏறுதடீ, சின்னண்ணி! கனவுக் கன்னி!' என்று பாடவும் 'சோ' அடுக்குப் பார்ப்பாரோ? அவர் சந்தர்ப்பம் பார்ப்பாரல்லரோ? எனவே, பார்ப்பினும் பார்ப்பர்!

படிப்பகம்

www.padippakam.com



எது எப்படி இருந்தாலும், கூரை ஏறிக் கோழி பிடிக்க இயலாத தமிழர், சின்ன அண்ணியின் சேலை பிடித்து வைகுண்டம் செல்ல முக்கித் தக்கிக் கொண்டிருக்கும் பொழுது, ‘உந்த வசுக்கோப்பாலை உலகம் அழியும்’ என்று தீர்க்கதரிசனம் சொன்ன, என்றுமே வசுக்கோப்பைப் பார்க்காத, அந்த வெண்தாடிக் கிழவரை என் நனவிடை தேடுவதற்கு எனக்கும் உரிமை இல்லையா?

★

படிப்பகம்

காடுகள் மண்டிய கலட்டு மேடுகள் -இவன்
பாடுகளாலே பயன் தரும்
ஆடுகள் வளர்த்து ஆவினம் பெருக்கி
சோர்வது அறியா சோம்பல் அடையா -பண்
பாடு இது என்று பாடுபடுவான்
ஏடுகள் அறியா இவன் பாடுகள் எல்லாம்
பாழ்பட
வீடுகள் முளைத்து வீதிகள் வளர்ந்து
நாடுகள் ஆகி நகரங்களாகி
கூறுகளாகிக் குற்றுயிராகும்

# 10. பாடு

காலநதியின் கரையிலா நிக்கிறன்? நதி ஓடுமாம்! நீரைக் கைகளில் அள்ளி ஒழுகும் வரை வைத்திருக் கலாம். காலத்தைக் கோலி அள்ளுவது எப்படி? நன விடை தோயும் நான் எப்படிப் பண்டாரக் குளத்துக்கு வந்தேன் ? ஞாபகத்தினைச் சிந்தனைப் புளி தேய்த்துப் புதுப்பிக்கும் எத்தனங்களும், எழுத்து ஊருணியை ஆழ் படுத்தும் முயற்சிகளும், அந்த ஓர் இடத்தினைக் கரு மையமாகக் கொண்டனவா? Is this the still point of my subconscious? பண்டாரக்குளம்!

www.padippakam.com



காலநதியிலே சுழிந்து நுரைத்த எதை எதையோ மறந்துபோனன். எழுத்திலே செதுக்க நினைத்தவை கூட! அண்ணாமலைக் காலத்தில், இசைக் கல்லூரி மாணவி ஒருத்தி இசைக் கருவிகளின் வல்லபமனைத்தையும் தன் குரல் வளத்தில் பிழியவல்ல அந்த ஒருத்தி! —விழிகளிலே மின்னல் தெறிக்க மயல் தொடுத்துப் பார்ப்பாளே! அந்த விழி மொழி மோகனத்தை என் நெஞ்சம் மறக்கவில்லை. மூளையைக் கசக்கியாச்சு. ஆனாலும், பெயர் மறந்துபோச்சு. அஸியத்து என்கிற ஆபிரிக்கக்காரியின் பெயர் ஏன் நெஞ்சில் நிக்கிறது? எதற்கு? மறந்தாச்சு. என் இல்லறச் செழுமையின் சின்னம் சின்ன உப்போடை வீடு. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், சின்னபேத்தி சிந்து பிறந்த பொழுது அங்கு தங்கினேன். மூன்று நாள்கள் என் ஈஸ்பரத்துடன் உம்மனா மூஞ்சி. ஏன்? முந்தா நாள். Homebush Spice Centre ருக்குச் சாமான் வாங்கப் போனனான். ஐந்து சாமான்களுள் ஒன்று என்ன? யோசித்து மூளை வலித்தது. ஞாபகம் வரவில்லை. பின்னர் அயலிலுள்ள ராகினி வீட்டில் கொஞ்சம் புளி வேண்டி, ஷாமினி மகளின் ரஸம் வைக்கும் சங்கடத்தைத் தீர்த்தேன். என்ன விந்தையோ? வித்தையோ? பாடசாலைக்குப் போகாது, வெட்கத்தை மறைப்பதற்குக் கோவணத்தின் அவசியத்தைக் கூட உணராத அந்த உசுக்குட்டிப் பருவத்தின் நினைவுகள் எப்படி மொய்த்து வருகின்றன? கோவைப்படுத்தத் திணறும் உம்பாரத்தில்! எழுத்து வேகத்தை முடமாக்கும் கடுகதியில்! அந்த நினைவுகளை அழியாத மனக்குகை ஓவியங்களாகச் சமைத்த சித்தன் யார்? பிறந்த மண் மீதுள்ள பற்றுகள் வெறிமயமானவை. பக்தி வடிவானவை. அந்த பக்திவெறியைக் கலைக்கும் வலு காலத்துக்கு இல்லை. காலன் தோற்றும் போகலாம். என் உடலைச் சிதை மூட்டி எரித்த மிச்சிற் சாம்பலிலே கூடப் பண்டாரக்குளம் பற்றிய நினைவுகள் ஒட்டிக் கிடக்கும் என்று

www.padippakam.com



சத்தியமாகவே நம்புறன். என் உறவுகளினதும் அன்புப் பிணைப்புகளினதும் மூல ஊற்றாய், திவ்விய மந்திரங்கள் அனைத்தின் சூக்குமமாய், என் எழுத்து எந்தனங் களின் அதி சக்தியாய், என்னிலிருந்து பிரிக்க இயலாத மகத்தான ஒன்றாய், நானின் அதிநானாக அஃது ஒட்டிக்கிடக்கு. என் திறமைகள்-சாகஸங்கள்-திறிக் கீஸுகள் - Strength - Weakness சின்னத்தனங்கள்- இயலாமைகள் அனைத்தினதும் மூலத்தின் மூலவேர்! நனவிடை தோய்கிறேனா? இல்லாட்டில் பண்டாரக் குளத்திலே தோய்கிறேனா?

பாணரை ஆற்றுப்படுத்துதலும் இலக்கியம். இது சங்கத் தமிழ் மரபு. மரபு எண்டதும் முற்போக்குக் குஞ்சுகள் சிலர் முகஞ் சுழிக்கலாம். வல்லவன் வழி, வாரி இறைக்கும் புழுதிகளை ஏற்றலும்! பாணிகள்— கார் கார்த்த குஞ்சத்தை ஒட்டிக் கொண்ட யாழ்ப்பாணி களும்—நல்லூர்க் கந்தசாமி கோயிலை அறிவர். கோயிலின் தென்மேற்கு மூலையிலிருந்து, பருத்தித் துறை வீதியில், கிழக்குத்திசையில் நடவுங்கள். வலப் பக்கம் கிளைசேரும் வீதிகள் பற்றிக் கவலையில்லை. ஓரிடத்தில் வீதியொன்று நேராகக் கெவர்விட, பருத்தித் துறை வீதி டானாப்பட, ஆனால் வாகனங்கள் விரை வாகத் திரும்புவதற்குவாகாக வண்டிவிட்டு, வடதிசையில் நீளுகின்றது. வலப்பக்கம் மலைவேம்புக் காடாக முத்திரைச் சந்தை—ஒரு காலத்தில் முத்திரைக் காசு விநியோகமான சந்தை—தெரியும். சரி. நடவுங்கள். இடப்பக்கமுள்ள சட்டநாதர் கோயில் வரை நடவுங்கள். அதிலிருந்து கெந்தியடி தூரத்தில் கைக்கோளன் சந்தை உண்டு. அங்கு போகாமல், சட்டநாதர்கோயிலைச் சுற்றுவதுபோல, ‘T’ எழுத்தின் முள்ளந்தண்டாக மேற்கு நோக்கி நீளும் றோட்டில் நடவுங்கள். இடப் பக்கம் கொன்றலடி வைரவர் கோயில் உண்டு. சரி தானே? அதனையும் தாண்டி நடந்தால், மீண்டும் ஒரு

www.padippakam.com



'T' ஜங்ஸன். அதுதான் முடமாவடிச் சந்தி. தொடுத்துக் கொள்ளுவது கோயில் வீதி. இடப்பக்கம் திரும்பி, தெற்குத் திசையில் நேராக நடந்தால், கோயிலின் மேற்கு வீதியைத் தாண்டிப் புறப்பட்ட இடத்தைச் சேர்வீர்கள். நாம் நடைபயின்ற வீதிகளின் உள்ளே ஒரு சதுர நிலப்பரப்பு அடங்கி இருப்பதை நிதானிக்கலாம். அதன் நடுவண் அமைந்துள்ள பொய்கைதான் பண்டாரக்குளம்.

காலம் நான்காவது பரிமாணம் என்றும், ஒளியின் வேகத்தை (செக்கனுக்கு 186,000 மைல்) அடைந்தால், இறந்த காலத்தில் நாம் நிகழ்காலமாகச் சஞ்சரிக்கலாம் என்று விஞ்ஞானப் பாங்காக ஏதோ சொல்வார்கள். ஏன் பொல்லாப்பு? கற்பனைத் தேரில் ஓர் அறுபது ஆண்டுகள் பின்னுக்குப் போனால், பண்டாரக் குளத்தின் மேற்குக் கரையில் ஒரு வயலையும், அதன் வளம் தேடும் கிழவரையும் காணலாம். அவர் பலருக்கும் 'ஆறப்பா' பிரக்கிராசி விஸ்வலிங்கம் தத்தியார்—மேட்டுக்குடியினர்—'ஆறன்' என்று கூப்பிடுவினம், பேரப்பிள்ளைகளுக்கு 'பெத்தப்பா'. அப்பையாவுக்கு அப்பு. நானும் அப்பு முறைதான் கொண்டாடுவன். அப்பொழுது 'சண்முண்ரை பொடியே?' என்று பதில். அங்கீகாரமா? நிராகரிப்பா? வெண்தாடிக் கிழவரும் தாத்தா. அவர் அம்மப்பா. இவர் அப்பப்பா. நல்லைநகர் ஆறுமுகநாவலருக்கு என்னை வாரிசாக நியமிக்கவும் உபகாரியானவர். கருங்காலிப் பொல்லுப்போல, நிறமுந்தான்; உடல் வைரமுந்தான். வெள்ளிக் கம்பிகள் நிறைந்த சுருள் முடி. கருளை. குடுமி முடிவதில்லை. பாகவதர் 'கிராப்' போலல்லாமல் ஸ்டைலாக இருக்கும். அவர் குடிமை சவரி வந்தால் சவரம் உண்டு. நெற்றியில் விபூதி இருக்கும். இல்லாமலும் இருக்கும். அதிகாலையில்,

www.padippakam.com



கோழி கூவுவதற்கு முன்னர், நல்லூர்க் கந்தனின் முதலாவது மணியோசை கேட்கும் பொழுது, இறப்பிலே தொங்கும் சங்கிலிருந்து இவர் நெற்றிக்குத் தாவிய விபூதி பூச்சு வெய்யில் உச்சிக்கு வருவதற்கு முன்பே வியர்வையில் அழிந்து விடும். வெற்றிலைக் காவி படராத வெண்பற்கள். கோவணம் வெளியே தெரியும் விதத்தில் மடித்துக் கட்டிய வேட்டி. வேட்டிக்கும் மண்ணுக்கும் ஒரே நிறம். துருதுருத்த கைகள். எப்பொழுதும் வெட்டிக் கொண்டும், கிண்டிக் கொண்டும், நட்டுக் கொண்டும், பிடுங்கிக் கொண்டும், குவித்துக் கொண்டும், கிழித்துக் கொண்டும், பண்படுத்திக் கொண்டும். ஓயாத கைகள்; உழைப்பதற்கென்றே உரமேற்றப்பட்ட அப்புவின் கைகள்!

அப்புவைப் போன்று அற்புதங்கள் இயற்றவல்ல மாயாவி இல்லை என்கிற மலைப்பு இன்றளவும் எனக்கு உண்டு. வரம்பு வழியே கமக்காரனுக்கே உரிய பெருமித நடை. பயிரின் வளர்ச்சி காணும் திருப்தி. பச்சைப் பயிர்கள் கதிர் பிடித்துப் பொன் முலாம் பூசும். அறுவடை ஒரு விழாப்போல! கதிர் அறுப்பதும் சேர்ப்பதும், அவர் வாழ்ந்த குடிசைக்கு முன்னால் நிழல் கவித்த மாமரத்தின் கீழே குவிப்பதும், சூடு மிதிப்பதும் பதர் தூற்றுவதும், நெல்மணிகளைக் குவிப்பதும், அளந்து கட்டுவதும்... மக்கள்-மருமக்கள்-பேரப்பிள்ளைகள் என்று ஊரிப்பட்ட சனம். எல்லாரும் அப்புவின் எடுபிடிகள். ஒரு தடவை வயலை அப்பு புகையிலைத் தோட்டமாகமாற்றியிருந்தார். விளைச்சல் வாய்க்கவில்லையாம். அதுக்கு இது ஏற்ற தரையில்லை என்பதை நட்டத்தின் மத்தியில் கண்டுபிடித்தாராம். ஒரு தடவை வயலெல்லாம் பாசிப் பயறு. வரம்பிலே நடக்கும்போது, முற்றிய ஆனாலும் கறுக்காத காய்களை ஆய்ந்து உரித்துப் பச்சை விதைகளைத்

www.padippakam.com



திண்டால் சோக்கான ருசி. சோதி மாமி செய்ததைப் பார்த்துத்தான் நானும் காங்கேசு மச்சானும் இந்தக் களவிலை இறங்கினம். இன்னொரு தடவை வயல் மாவள்ளித் தோட்டமா மாறியது. ஒளிச்சு விளையாடு றதுக்கு அது கலாதியான இடம் என்று இரத்தினம் மச்சாளும் நானும் கண்டுபிடிச்சம். ஒரு மத்தியானம். அப்பையா ஒரு மரத்தைப் பிடிங்கினவர். பெத்தாச்சி அதிலை ரெண்டு பெரிய கிழங்குகளை எடுத்து அடுப்புக் குள்ள போட்டுச் சுட்டுக் குடுத்தவ. சுட்ட கிழங்கு சோக்கா இருக்கும். ஒரு ஈரவெங்காயமும் ஒரு பச்சை மிளகாயும் உவப்புக்குப் போதும். அப்பையா பல விஷ யங்களில் ஆதிகால மனுஷன். பனங்கிழங்கும் சுட்டுத் தின்பார். அவிச்ச கிழங்கில் ஒரு வகைக் காறல் இருக்கும் எண்டது அவர் கட்சி. சோளங்குலையும் சுட்டதுதான் அவருக்கு வேணும். வயலில் குரக்கன் விளைஞ்சதும் தெரியும். அப்பு அந்த வயலை ஒரு Experimental Farm ஆகத் தரிசித்தார் என்பதை இப் பொழுது நிதானிக்க முடிகிறது. ஆனால், அதனை நெல்வயலாகப் பார்க்கத்தான் எனக்கு ஆசை. 'எங்கை இவரைக் காணம்' என்று கண்களின் மேலே விரல் களாற் கூரை எழுப்பிப் பெத்தாச்சி பாப்பா. செடிகளின் அசைவிலிருந்தே அப்பு எங்கை இருக்கிறார் எண்டதை அவ சடக்கெண்டு கண்டு பிடிச்சிடுவா, குடிக்க ஏதாவது கொண்டு போவா. நீஏன் வேலை மினக்கிட்டு வந்தனீர் என்று குரல் எழுப்புவது தான் அப்புவின் வரவேற்பு!

வயலின் மேற்கில் இரண்டடி உயர்ந்த மேட்டு நிலத்துண்டு ஒரு பாத்தி, அதன் விளிம்பில், பிற்காலத் தில் சங்கிலியன் வீதியாகப் புதிது புனைந்த வீதியி லிருந்து கெவர் விடும் ஒரு ஒழுங்கை, பாம்பு போல நெளிந்து வளைந்து. ரெண்டு புளிய மரங்களைப் பிரித்து வைத்து, வயிரவர் கோயில் தெற்கு வீதியிலே போய் ஏறும், ஒழுங்கையை ஒட்டிறாற்போல ஒரு

www.padippakam.com



குடிசை. வடக்கு வாசல். பெரிய திண்ணை; சின்னத் திண்ணை. இரண்டையும் பிரிக்கும் நடைபாதையில் ஓர் அறைக்கான கதவு. அந்த அறை அப்புவின் களஞ்சிய அறையாகவும், செல்லம்மாக்காவின் படுக்கை அறையாகவும் பயன்பட்டது. பெரிய திண்ணை பெத்தாச்சியின் ஆட்சியில், பெட்டிகளும் அவற்றை இழைப்பதற்கான உபகரணங்களும் போட்ட இடங் களிற் கிடக்கும். அப்புவுக்குச் சின்னத் திண்ணை தாராளம். உறங்கி எழுவதற்கு ஒரு கட்டிலைப்போல அது உதவியது. ஒரு கப்பையும் இறப்பையும் இணைத் தாப்போல, பழைய பட்டை ஒன்றின் துணை பற்றி அப்பு ஒரு பறண் இணக்கியிருந்தார். அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் அந்தப் பறணில் இருக்கும். குடிசையைச் சுற்றியுள்ள பாத்தியும், அதன் வாசல் போன்று வடக்கில் இருந்த பாத்தியின் கறுத்தக் கொழும் பான் மாமரம் நின்ற பாதியும் பெத்தாச்சியின் ஆட்சிக்கு உட்பட்டன. கிழக்கில் இரண்டு பாத்திகள் தள்ளிக் கிணறு. பெத்தாச்சி கடும் சிவப்பியல்ல. அப்புவின் நிறத் துக்கு அவ சிவப்பி. வடிவும். செந்தளிப்பான சிரித்த முகம். இடக்கண் சற்று வாக்கு. 'செல்ல வாக்கு' என்று அதை அப்பு மெச்சுவார். குறுக்குக் கட்டு. ஏதா வது சடங்கு வீட்டுக்குக் கல்லட்டியல் அணிந்துபோனால் வலு வடிவு. அவவைத் தெய்விக் கிழவி எண்டாத்தான் மற்றவர்களுக்குத் தெரியும். சடங்கு வீடு, இல்லாட் டில் இழவு வீடு எண்டாத்தான் ஒழுங்கைக்கு ஏறுவா. இல்லாட்டில் வெளியிலை உசும்ப மாட்டா. வீட்டிலும் சுற்றியுள்ள நிலத்திலும் சரியான வேலையள். கறுத்தக் கொழும்பானும், கோடியிலுள்ள செம்பட்டானும் காய்ச் சுச் சொரியும். கத்தரி, வெண்டி, தக்காளி என்று பல வகை மரக்கறிகளும் பயிர் செய்வா. புடோல், பாகல், பயித்தங்காய் ஆகிய வகைகளும் உண்டு. அவை படரத் துவங்கியதும் அசுப்பிடாமல் பந்தல் போட அடுக்குப் பண்ணுவா. அப்பு பார்த்துக் கொண்டிரார். தன் ஏனைய வேலைகளை ஒத்திப் போட்டு, அவவை

www.padippakam.com



வாயெல்லாம் பல்லாக நிற்க வைக்கும் வகையில் சோக்கான பந்தல்கள் போட்டுக் குடுத்திடுவார். தண்ணிக் குடம் வைக்கும் இடத்தில் நாலைஞ்சு வாழை மரங்கள். வெடுக்குக் கழுவுவதற்கு ஒரு ஒதுக்கிடம். அதில் ஓர் எலுமிச்சைமரம் குடைவிரித்து நிற்கும். அதன் அயலில் கறிப் பாட்டுக்கு உதவும் என்று கொச்சிச் செடிகள், திப்பிலிக் கொச்சியும் உண்டு. இந்த மரக்கறித் தோட்டம் பொதுச் சொத்துப் போல அவ பதினொரு பிள்ளைகளைப் பெத்த மகராசி. அவர்களுள் சிலர் பெத்தாச்சிக்கு உதவுவதாகப் போக்குக் காட்டி மரக்கறிகளை ஆய்ந்து போவார்கள். அவவுக்குத் தெரியும். கோவிக்க மாட்டா. எப்பவும் அந்த வடிவான சிரிப்புத்தான். பெத்தாச்சிக்கு அரியண்டம் குடுக்காமல், அந்தப் பகுதியில் அப்பு இராசவள்ளியோ, சிறு கிழங்கோ நடுவார். அவ குடங்களில் தண்ணி சுமந்து வந்து மரக்கறிச் செடிகளுக்கு ஊத்துவா. அப்ப அப்புவின் கிழங்குக் கொடிகளையும் வஞ்சிக்க மாட்டா.

மாரியை நம்பிச் செய்யப்படுவனவும் உண்டு. இறைப்பை நம்பிச் செய்யும் பயிர்களும் உண்டு. கோடையில் வயலைக் கொட்டாவிவிட அப்பு விட மாட்டார். நடுக் கோடையிலும் வயலிலே பசுமைத் திட்டுகள் சில தெரியும். சுரைக்காய், பூசணி, வெள்ளரி, வற்றகப் பழம் ஆகியன தரும் கொடிகளின் மதாளிப்புத் தான் அவை. அப்பு ரெண்டு பசுக்களும் வளர்த்தார். இரண்டு தொழுவங்களும் இருந்தன. அவை வயலின் பல்வேறு இடங்களுக்கும் மாறும். 'டிக்' டிக், டோஸ்' விளையாடுவது போல அவற்றை அப்பு ஏன் இடங்கள் மாற்றினார் என்பது அப்போது விளங்கேல்லை. அப்பையாவுக்கு எதுவுமே கை வந்த கலை. களவு செய்து மொக்குத்தனமாகப்பிடிபடுவார். நல்லா முற்றி வெடித்த வெள்ளரிப் பழத்தைக் களவாக ஆய்ஞ்சு சேணிய தெருவுக்கு கொண்டு போவார். அடுத்த நாள்வயலை ரவுண்ட்

www.padippakam.com



அடிச்சுத் திரும்பிய அப்பு, 'நல்லொரு வெள்ளரிப்பழம் இண்டைக்கு ஆயலாம் எண்டு இருந்த நான்... கள்ளப் படையள்...' என்று புறுபுறுத்தார். வாயில் குதப்பிக் கொண்டிருக்கும் வெற்றிலைக்கு, நாறப் பாக்குப் பிளவு ஒன்றைச் சேர்த்து மணமூட்டிக் கொண்டே, 'உவன் சண்முகன் நேத்து வந்தனல்லே... அவள் அம்மாக் குட்டியும் வாயிலும் வயித்திலுமாம்...' என்பா பெத்தாச்சி. 'அவை பணக்காரரர்... கன்னாதிட்டியி லையும் காணி வாங்கத் திரியினமாம்... இஞ்சை முத்துவும் சோதியும் படுற அவலம் என்ன'... என்று அனுங்கிக் கொண்டே நூர்த்து வைத்திருந்த சுத்தைப் பத்த வைப்பார். அப்புவுக்குக் கெட்ட பழக்கங்கள் இல்லை. அப்பையா பதினேழு வயசில் குடிக்கிறான் என்று கேள்விப்பட்டு மதுவை விலக்கியவர். வெற்றிலை கூட இல்லை. புகையிலைச் சுத்து மட்டும் அவர் பல வீனம்.

களவெடுத்த வெள்ளரிப்பழத்தை 'அப்பு உனக்குத் தந்தவர்' என்று சொல்லி அம்மாவுக்குக் குடுப்பார். பெரிய கடையில் வாங்கும் பல சாமான்களை வீமன் காமத்திலிருந்து வந்தவையாகப் பண்டாரக் குள உறவு களுக்கு விநியோகிப்பார். செல்லச்சந்நிதியில் வாங்கும் வண்ணப் பனவோலைகள் இலவியமாக வந்தவையாகப் பெத்தாச்சியின் பெட்டி இழைப்புக்குப் போகும். திற மான தாவடிப் புகையிலை மாதம் ஒரு கோசு எண்டாலும் வாங்கிக் குடுப்பார். 'சண்முகன் கொண்டு வாற' நாறப் பாக்கும் நுங்குப் பாக்கும் எண்டால் பெத்தாச்சிக்கு உசிர். அவற்றில் ஒரு பிளவு குடுக்க அவ சரியாப் பஞ்சிப் படுவா. அப்பையா செய்யும் இந்தக் 'கோக்கு மாக்கு' வேலைகளாலும் அவருக்கு பேய்க்கர் என்ற பட்டமும் உண்டு.

'ஆறப்பாவின் பணம்பாத்திதான் ஆகப் பெரிசு' என்று அப்புவின் விளாத்தி. வேரோடிய செம்பாடு

www.padippakam.com



தொடக்கம் கட்டப்பிராய் வரை சொல்லுவினம். பாத்தியைப் பிரிப்பதுக்கு ஐஞ்சாறு மூழு ஆம்புளையள் தேவை. பாந்தி பிரிச்சுக் கிளறுவதில் கிட்ணக்குஞ்சி தான் விண்ணன். அந்தப் பென்னம் பெரிய பாத்தியை அப்பு தன்னந் தனியாக உருவாக்கியவர் எண்டு நினைக்க மலைப்பாக இருக்கும். அவ்வளவு பனங் கொட்டைகளை எங்கிருந்து கொண்டு வந்து குவித் திருப்பார் என்பது பெரும் புதினம். அயலிலுள்ள பனங் காணிகளின் மூலை முடுக்கெல்லாம் அப்புவுக்குத் தெரியும். விசர் வைத்தியத்துக்குப் பெயர் பெற்ற 'பூனைக்கண்' நடராசா பரியாரியார் அரிய மூலிகை களைப் பிடுங்குவதற்கு அப்புவின் உதவியை நாடுவதும் உண்டு. 'என்னபூதி? உழவாரத்தோடை? திருநாவுக் கரசரின்ரை பின் வளவுக்குள்ளை நல்ல சேட்டமான புல். போய்ச் செதுக்கன்' என்றும் உதவுவார்.

அப்புவின் வீட்டில இளமையின் கொடியாய் செல்லம்மக்கா வலம் வந்தா. கொக்குவில் நடராசா வுக்கு வாழ்க்கைப்படும் வரை, அப்புவின் பராமரிப்பில் வளர்ந்தவ. அவதான் அப்பையாவின் மூத்த மகள், அவவின்ரை தாய் இறந்ததும், இருபத்திநாலு வயசில் அப்பையா தாலியறுத்தவரானார். பிறகுதான் வீமன்காமத்துச் சம்பந்தம். முதலில் ஆச்சி. அவ மலடு என்ற அவப்பெயர் சுமந்தவ. அப்புறம் அம்மா. அப்பை யாவுக்கு கொள்ளி வைச்சவன் நான். செல்லம்மாக்கா என்னிலை நல்ல பட்சம். அவவின்ரை கல்யாண வீட்டில நான்தான் மாப்பிள்ளைத் தோழன். அதுக்குப் போய்வந்த பிறகு, வெண்தாடிக் கிழவர். ''பித்தளை மோதிரத்துக்காகக் கொக்குவிலான்ற காலைக் கழுவப் போனனீயே...'' என்று என் நெஞ்சைக்குத்தி அழவைச் சிருக்கிறார்.

www.padippakam.com



பெத்தாச்சியிடம் புதினமான சாப்பாடுகள் சாப்பிட்டிருக்கிறன், சித்திரைப் பால் கஞ்சியும், ஆடிப்பனங் கட்டிக் கூழும் மட்டுமே? மாங்காய் கெத்திட்டுப் போட்ட புளிக் கஞ்சி, அரைச்ச கஞ்சி, சில சமயங்களில் அஞ்சு வகை இலக்கறிகளும் போட்டு ஆக்குவா. அரிசிக்கூழ், குரக்கன் கூழ், ஒடியற் கூழ், என்று கூழ்களிலும் பல வகை, பலாயிலையைக் கோலிப் பிடிக்கத் தெரியாது. மேலெல்லாம் அளையிறன் எண்டு பனம் மூழ் பனு வலிலை கூழ் குடிக்கப் பழக்கினவவும் அவதான். எத்தனையோ வகையான கழிகள். குறுனல் தவிட்டைப் பனங்கட்டியோடை குழைச்சுந் தருவா. எள்ளுப் புண்ணாக்கு. மாம்பழத்தைச் சந்தகத்தாலை ஓலைநெட்டி கணியம் வார்ந்துதான் தருவா. மூன்று துண்டுகளை ஒண்டா வாயிலை போட்டாத்தான் பத்தியம் போலை இருக்கும். சிக்கனத்திலும் சுவையும் செழிப்பும் பெருக்கி வாழ்ந்தவ பெத்தாச்சி. அப்புவுக்கு அவ குளையல் தான் மகா பத்தியம்!

அப்புவின் அயராத உழைப்பை அநுபவிக்கும் வயலின் கிழக்கு எல்லை பண்டாரக்குளம். பாவட்டம் புதர்களும் சீமைக் கிளுவை சிலவும் பச்சைக் கதிகால்களாக நிற்கும். முள்ளுக் கம்பி நாலு வரிகள் இழுக்கப் பட்ட வேலி. குளத்துக்கு வருவதற்கு பல்வேறு உயரங் களில் பனங்குற்றி நாட்டப்பட்ட கடப்பு. அப்பு கடப் பால வந்து குளத்திலே மண்வெட்டிகள் கழுவுவதும் உண்டு. பல சைஸ்களிலும் Shape களிலும் மண்வெட்டிகள் இருந்தன. அந்தக் கரையில் ஒரு கடம்பமரம். அது கரையில் நிற்பது போலவும், நீரில் வளருவது போலவும் குளத்தின் நீர் மட்டத்தைப் பொறுத்துக் கோலங்காட்டும். எப்பொழுதும் வேர்கள் சில தண்ணீருக்குள் அம்மணமாகத் தெரியும். அந்த வேர்களுக்குக் கீழே ஆக்கள் ஒளிக்கக்கூடிய பொந்துகள் இருக்கலாம் என்று கற்பனை செய்வன். சைவப் பள்ளியில் சரித்திரம்

www.padippakam.com



படிச்சனான். பந்துகாபயன் என்னும் அரசன்தான் அநுராதபுரியைத் தலைநகராக்கினவன். அவன் சின்னனாய் இருக்கேக்கை அவனைக் கொல்ல மாமன் மார் பல சதிகள் செய்தவை. அப்பெல்லாம் குளக்கரை யில் உள்ள மரத்தின் வேர்களின்கீழ் ஒளிப்பானாம். பேந்து நீந்தி வருவானாம். பந்துகாபயன் ஒளிச்ச விந்தை, அந்தக் கடம்ப மரத்தை நினைச்சதும் நல்லா விளங்கும். அப்புவைப் போலவே கடம்ப மரத்துக்குப் பக்கத்திலுள்ள கடப்பைப் பெரியாக்களும் கடப்பினம். சின்ன மாமி வீட்டுக்குக் கடப்பால போறது என் சாதனை. இது பெத்தாச்சிக்கு எரிச்சல் தரும். 'அப்பனைப் போல பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு... உன்ரை பொடி ஒரு சொல்வழியும் கேக்கிறான் இல்லை. குளத்துக் கடப்பாலை சின்னப்பிள்ளை வீட்டை போறான். இருந்து பாரன். ஒரு நாளைக்குப் பொடியைக் குளத்துக்குள்ளைதான் தேடுவாய்...' தன்னைப் போல என்று குத்திக் காட்டியதில் பேய்க் கருக்குப் புழுகம் வந்திடும். என் பாட்டிலை விட்டிட்டு, அவர் தன் பிற பிராக்குகளைக் கவனிப்பார்.

பிற பிராக்குகளில் முக்கியமானது வேலாண்டி மாமாவுடன் சுடப்போவதுதான். எங்கடை ஆக்களுக் குள் வேலாண்டியரிடந்தான் துவக்கு இருந்தது. நல்ல வெடிகாரனும். அப்புவுக்கு அவரைப் பிடிக்காது. 'உவன் தன்ரை வெள்ளை நிறத்தையும், கள்ளச் சிரிப்பையும், துவக்கையும் காட்டித்தானே சோதிப் பிள்ளையை மயக்கியவன்' என்று அப்பு மனம் நோவார். சோதிமாமியை இவர் 'தூக்கி'னவராம். அப்புவின் பெண்பிள்ளைகளுள் சோதிமாமிதான் திறம் வடிவு. அவ வேலாண்டி மாமாவுக்கு இரண்டாம் பெஞ்சாதி. இருந்தாலும், அவரும் அப்பையாவும் வலு ஒட்டு. நேர்த்திக்கடன் மாதிரி, வைகாசி மாசத்தில்,

www.padippakam.com



பற்றாப்பளைச் சாட்டில் பெரிய வேட்டைக்குப் போவார் கள். இடையில் ஏதாவது அரிப்புவந்தால், நாகர்கோயில் பக்கம் அல்லது சுண்டிக்குளப் பக்கம் ஒரு சின்ன 'றிப்' போய் வருவார்கள். இதுக்கு கார்க்கார நாகநாதயும் ஒத்துவர வேணும். மற்றும்படி பண்டாரக் குள அயலில் வேட்டைக்குப் பஞ்சமில்லை.

சுந்தரம் மச்சானுக்கும் கூட்டாளி அன்னலிங்கத் துக்கும் துவக்குப் பற்றிக் கவலை இல்லை. பழைய சைக்கிள் ரியூப் கிடைச்சால் போதும். கெவத் தடிகளும் மான்தோல் துண்டுகளும் இருக்கும். பேந்தென்ன? நல்ல 'Catapault'கள் செய்வதில் வலுவிண்ணர். மடி களில் வட்டுப்பான கல்லுகள் இருக்கும். பறக்கும் எதுவுமே லக்குத்தான். கிளிகள் மைனாக்களும் தப்பாது. அணில்களும் பாவம். உயிர்களைச் சாய்ப்பதுதான் அவர்கள் வெற்றி. 'இந்தக் குறுக்காலை தெறிப்பாங்கள் பஞ்சவர்ணக் கிளியைக் கொண்டு போட்டாங்கள்...' எண்டு பெத்தாச்சி வைக்கிற ஒப்பாரி இவங்கடை காதிலை ஏறாது. இவங்கள் அடிச்சுக் குற்றுயிராக்கிய மைனா ஒன்றைக் காப்பாத்தி செல்லம்மக்கா வளத்தவ. அது கதைக்கும். அவவின் குரல் வடிவா விளங்கும். காங்கேசு மச்சானின் நல்லப்பு வீட்டிலை வளர்ந்த கிளிதான் சோக்கு. வடிவாப் பேசும். ஆக்களை திட்டும். கூட்டுக்கு வெளியாலை வந்து நல்லப்புவின் தோளிலை குத்தியிருக்கும். மச்சானுக்கும் எனக்கும் வேட்டை ஆட ஆசைதான். மாணிக்கம் மச்சானின் தையல் பெட்டியில்லை அவன் நூல் எடுத்துக் கொண்டு வந்தவன். வில்லுகள் செய்தம். ஈக்கில் அம்புகளால் பூவர சம் பூக்களுக்கு இலக்குப் பார்ப்போம். அம்புகள் இலை களிலே குத்தித் தொங்கினால் ஒரே கொண்டாட்டம். சில நாள்களிற் சலித்து விட்டது. சுந்தரத்தைப் போல



படிப்பகம்

www.padippakam.com



நாங்களும் 'கெட்டப்போல்' செய்யத் திட்டம் போட்டம். திட்டம் நிறைவேறவில்லை என்று ஞாபகம்.

பண்டாரக்குளத்தில் கிழக்குக் கரை பிள்ளையாருக்குச் சொந்தம். நீலகண்டமாய் கறுப்பு நிறமாக மாறும் பாசிகள் பழைமை அப்பும் ஒறுவாய் மதில்களுக்குப் பின்னால் கோபுரம் தெரியும். பிள்ளையார் முழிவிசளத்துக்குப் பனங்கூடல் விரிந்து கிடக்கும். குளத்தின் தெற்குக்கரை காடுபோல! விளாத்தி மரமும் நாலஞ்சு இலந்தை மரங்களும் நின்றன. விளாத்தி மரத்தில் தூக்குனாம் குருவிக்கூடுகள்தொங்கும். அதற்கு அப்பால் சில தென்னம்பிள்ளைகள் முளைத்தன. இவை சாக மனிதக் கை படத்துவங்கியதின் அடையாளம். அது அக்கரை. எங்களுக்கு எட்டாத பகுதி. தென் மேற்குப் பக்கமாக மழை காலத்தில் வாய்க்காலாகவும், கோடையில் ஒழுங்கையாகவும் இருபிறப்பு ஜாலங் காட்டும் வழி. அதை ஒட்டினாற்போல, சிறுபரப்பில் அல்லிக்கொடிகள். அந்த இடத்தில் சரியான சேறாம். ஒரு தடவை சுந்தரம் மச்சான் அதில் இறங்கிக் கஷ்டப் பட்டவராம்... பிழைச்சது மறுபிறவியாம். அடிக்கடி சின்னமாமி சொல்லுவா.

அந்தப் பகுதி பறவைகளின் சரணாலயம் போலத் திகழ்ந்தது. இக்காலத்துப் பறவைவகைகள் அனைத்தும் அங்கு வாழ்ந்தனவோ என்ற நினைப்பு இப்பவும் கிளுகிளுப்பு ஊட்டும். 'காவென்று கத்திடும் காக்கை-என்றன் கண்ணுக்கினிய கருநிறக் காக்கை' என்று பாரதி மெச்சும் காகங்களும் ஏராளம். செல்லம்மாக் காவின் கோழிக் குஞ்சுகள் இரண்டை அவை இறாஞ்சிக் கொண்டு போனதுகள். இதனால் சனிபகவான் காகக் கூடுகளிலே வளர்ந்து, குட்டுப்பட்ட குயில்களைக் கண்டிருக்கிறன். வேனிற்காலத்தில் குயில்கூவுவது தெளிவாகக் கேக்கும். குயிலுக்குக் கூவிப் பதில் குடுப்பதில் அக்கா

www.padippakam.com



வுக்கு இன்பம். 'பிராந்துகள்' ஆகாசத்தில் வட்டமிடும். உடனே கோழிக் குஞ்சுகளை கரப்புக்கூடையால் அடைச்சுப் போடுவா. கொக்குகளும் பிறவும் குளத்தில் தவமிருக்கும். நீலச் சிறகடிக்கும் மரங் கொத்திகளும் உண்டு. சாயங்கால வேளைகளில் குளத்துக்கு மேலா கவும் கூட்டம் கூட்டமாகப் பறவைகள் தோன்றும். மறு திசையின் கோடிவரை பறந்து கொண்டே இருக்கும். வானம்பாடிகளும் பறக்கும். செம்பகப் பறவைகள், புழினி கள், சிட்டுக் குருவிகள், பிலாக்கொட்டைக் குருவிகள், கரிக்குருவிகள் இன்னும் பெயர் தெரியாத எத்தனையோ வகையான குருவிகள். கிளிகளும் பல வகை. பஞ்ச வர் ணக் கிளிதான் ஆக வடிவு. தங்கக்கால் மைனாக்கள். புறாக்கள், மாடப்புறா, மணிப்புறா என்று அவற்றுள் வகைகள். புறாப் பாதங்கள் வடிவானநிறம். என் 'வீடு' கதையிலே அந்த நிறத்தின் உபாசகனும் நான். 'லொட் டிலொட்' டென்று மரங்கொத்தும் மரங்கொத்திகள். அவை பறவைகள் தச்சன் என்றும், கிளிகளுக்குப் பொந்துகள் சரிக்கட்டுகின்றன என்றும் கற்பனையில் ஆனந்தித்தேன். பறவைகளின் வண்ணங்களுடன்போட் டியிடும் வண்ணாத்திப் பூச்சிகள். எத்தனைவகைகளில்? எத்தனை வடிவுகளில்? புள்ளிகளைப் போல பறப்பன ஆகஉசுக்குட்டி. திராவிடக் கழக நிறங்களில் வெண்மை யும் இணைத்துப் பறப்பன பெரியன. தும்பிகள் ஏரோ பிளேன்களைப் போல! பறப்பின் ஜாலங்கள். உயிர்ப் பின் கோலங்கள். ஓசையின் வகைகள். இயற்கையிலே முகிழ்ந்து பொங்கும் இன்பத் திட்டுகள்... இந்தக் குதூ கலத்தைச் சொற்களிலே வடிக்க இயலாது... தேனுண்ட தியக்கத்திலே பறந்து காட்டும் தவிப்பு!

குளத்தின் வடகரையில் வேலியில்லை. கரையின் தொடர்ச்சியாக விரியும் தென்னந்தோப்பு, அதன் மத்தியில் ஓலைக்கூரையைச் சுமந்த ஒரு சிறிய மண்சுவர் வீடு. அதுதான் கணவதி மாமாவின் வீடு. அவர்

www.padippakam.com



பெஞ்சாதி அப்புவின் கடைக்குட்டி. மகா இஷ்ட புத்திரி. எனக்குச் சின்னமாமி என்னிலும் வலுபாந்தம். எந்தத் தின்பண்டம் எண்டாலும் மகன் காங்கேசுக்குக் கிடைக்கும் பங்கு எனக்கும் உண்டு. அந்தக் காலத்தில் அவன்தான் என்னுடைய பெரிய கூட்டாளி. ஒண்டாகவே மேய்ஞ்சு திரிவம் நாங்கள் இருவரும் இயற்கைக் கள்ளுண்ணும் வெறியர்களாக அலைந்து திரிகையில், 'எக்கணம் பிள்ளைகள் குளத்துக்குள்ளை...' என்கிற அரிப்பு சின்ன மாமிக்கு வருமாக்கும். 'டேய், காங்கேசு...' என்று இடைவெளி விட்டுக் குரல் தருவா. விழுந்து கிடக்கும் பாளைகளையும், மட்டைகளையும், பன்னாடைகளை யும் பொறுக்குவதாகப் போக்குக் காட்டிக் கொண்டு, அந்தப் பக்கமாக வருவா. குஞ்சுகளின் ரஸனையை அறியாத பேதையோ, பேச்சியோ?

வடக்குக் கரையின் மத்திய பகுதிதான் குளியல் துறை. ஆருக்கும் சட்டென்று விளங்கும். அது தெளி வாக இருக்கும். காலத்துக் காலம் சுத்திகரிப்பு வேலை கள் நடப்பதுண்டு. இந்த விஷயத்திலை அப்பு எப்பவும் முன்னுக்கு நிப்பார். குருத்துக் குரு மணலை நீருக்கு அடியில் பார்க்கலாம். நீல வர்ணத்தைப் பரிகசிக்கும் விதமான நிறம். நீரின் ஆழம் ஏழெட்டுக் கவடுகள் வரை மெதுவாக இறங்கி, பிறகு மத்தியை நோக்கிவலு steep! குளத்தில் ஒரு Swimming pool உருவாக்கப்பட்டுள்ளது போன்ற சோபிதம். மூன்று பக்கமும் கரை கட்டியது போலத் தாமரைக் காடு. சௌந்தர்யம் வழியும் வெண் தாமரை பூக்களும், செந்தாமரை பூக்களும், நான் அழகின் லோலனாக இருந்த காலத்தில் பார்த்திருந்தால், பூக்க ளிலே சிலவற்றைத் தவமணி என்றும், எம்மா என்றும் குஸுமா என்றும், பாத்திமா என்றும், ரீனா என்றும் இனங் கண்டிருப்பேனா என்னவோ? விழியழகி ஹம்ஸ தொனியைக் கண்ட பொழுது பண்டாரக் குளத்துத் தாமரை மலர்களிலே ரீங்காரஞ் செய்த வண்டுகள்

www.padippakam.com



இரண்டினை அவள் விழிகளாகப் பொருத்தி வைத்திருந் தென்று நான்மருண்டதும்உண்டு! பெரியபெரிய தாமரை இலைகள். விரதச் சாப்பாடுகள் தாமரை இலை யிலை சாப்பிட எங்களுக்கு விருப்பம்.வாழை இலையிலும் பார்க்கச் சொதியோடை சாப்பிடஇலேசு. சில இலைகள் நீர்மட்டத்தில் நீந்தும். மலர்களுக்கு முட்டுக் கொடுக்க எத்தனிப்பதைப் போல இலைகள் சில நீருக்கு மேலால் எம்பி மலர்களைத் தொட எத்தனிக்கும். இலைகள் தமது கக்கத்திலே கூச்சங் காட்டுவதாக உணர்ந்து போலும் சில மலர்கள் தலை கவிழ்ந்து நாணும்! சில இலைகளிலே நீர்த்துளிகள் முத்துச் சிதர்கள் போல ஊஞ்சலாடும். சூரிய வெளிச்சத்தை Reflect செய்து நட்சத்திரச் சாகசம் செய்யும் நீர்த் துளிகளும் உண்டு.

தப்புத் தண்ணியிலைதான் நாங்கள் நிப்பம். அப்பையா, கணபதி மாமா, வேலாண்டி மாமா, எல் லாரும் நீச்சடிப்பார்கள். எங்களுக்கும் நீந்த வலு ஆசை, ஒல்லித் தேங்காய்கள் இரண்டினைப் பிணைச்சு, அதன் நடுவில் குப்புறப் படுத்து மிதந்தால் நீச்சல் வரும் எண்டு சொல்லித் தந்தினம். ஒல்லித் தேங்காய் பிணைச்சல்களில் மாரித் தவக்கைகளைப் போல தொங்கியதை,நீச்சலடிச்சதாக நினைத்து மகிழ்ந் ததும் உண்டு.

'சனி நீராடு' என்பதை அப்பையா இறுதிவரை வேதமாகச் சுமந்தவர். நேரம் போவது தெரியாமல் தண்ணீருக்குள் கிடப்பார். மூச்சடக்கிச் சுழியோடுவார். அவர் தலைக்கறுப்பைக் காணாமல் பயந்தும் போவன். அவருக்குக் கண்கள் கோவைப் பழம்போலச் சிவக்கும் மட்டும் தண்ணீருக்குள் இருக்கவேண்டும். தமது முழுக் கின் நடுவில் அப்பையா தாமரைப் பூக்கள் ஆய்ந்து தருவார்.ஞாயிற்றுக்கிழமை சாமி விளையாட்டுக்கு இத் தாமரைப் பூக்களைக் கொண்டு போவதில் எங்களுக்குப் பெருமை. பூக்களின் நடுவிலுள்ள பிஞ்சுப் பீடங்களைச்

சாப்பிறதுக் கொண்டே சில சனியன்கள் சாமிகும்பிட வரும். அப்பையா தாமரைக் காய்களும் பறித்துத் தருவார். தாமரைக் காய்களைப் பிய்த்தால் விதைகள் கிடைக்கும். விதைகளின் தோலை உரித்து, பருப்பின் நீள் பாட்டில் ரெண்டாகப் பிளந்தால் வெளிர் பச்சை நிறத்தில் பித்துத் தெரியும். அது கைக்கும். அதனை நீக்கிச் சாப்பிட வேணும். நல்ல ருசி. முற்றிய பருப்புகளைக் கறி ஆக்கலாம். பெத்தாச்சி ஆக்கிறவ. தாமரை விதைகளிலும் பார்க்கப் பிஞ்சுக் கிழங்குதான் சோக்கான taste! தாமரைக் குருத்து இலை ஒன்றை அப்பையா கொடியுடன் இழுப்பார். தண்டின் மூன்றாம் முடிச்சுக்கு அப்பால், இரண்டாம் வகுப்பில் சுப்பையா வாத்தியார் என் முதுகைப் பதம் பார்த்த பிரம்பின் கணியத்தில், பால் நிறம் பிழியும்குருத்துக்கிழங்கு கிடைக்கும். எல்லாக் கொடிகளிலும் குருத்துக் கிழங்கு கிடைக்காது. எதிலை அது கிடைக்கும் எண்ட சூக்குமம் அப்பையா வுக்குத்தான் தெரியும். அவரை ஆராலும் வெல்லேலாது. கோடை காலத்தில் முற்றிய தாமரைக் கிழங்கைச் சேற்றிலே வெட்டி எடுக்கலாம். மூல வியாதிக்கு கரணைக்கிழங்கிலும் பார்க்கத் தாமரைக் கிழங்கு நயமானது என்பது அப்பையாவின் கட்சி. இயற்கை வைத்தியத்திற்கும் குளம் உதவியது. ஒரு தடவை எனக்குக் கால்களிலே சிரங்கு. நான் அழ அழக் குப்பைமேனியும் இளங்கன்றுச் சாதகமும் போட்டுத் தேய் தேய் எண்டு தேய்த்துக் குளத்திலே கொண்டு போய் விட்டார்கள். சின்ன சின்ன மீன்கள் புண்களின் ஆயர்களை கொத்திக்கொண்டு போய்விடும். வலிக்கவும் செய்யும். பிறகு பார்த்தால், சிரங்குப் புண் எல்லாம் மாதுளம் பழப் பரல்களைப் போல சிவப்பாய் இருக்கும். நல்லெண்ணையையும் தண்ணியையும் கலந்து கையிலே தேய்த்தால் சோப்பு நுரைப்போல வரும். அதைக் களிம்பாகத் தடவி விடுவார்கள். என் சிரங்கு சீக்கிரம் ஆறியது.

www.padippakam.com



ஒரு தடவை குளத்துங்கரையில் சோப்புத்துண்டு ஒன்று கிடைத்தது. அதைக் கோம்பையிலே வைத்துத் தண்ணீர் கலந்து நுரையாக்கினோம். பப்பாக் குழல் ஒன்றைத் தேய்த்துக் கோப்புக் குமிழ்களை ஊதினோம். சோப்புக் குமிழ்கள் குளத்திலிருந்து வீசும் சீதளக் காற்றிலே தவழ்ந்து, எழுந்து வெண் உடலிலே நிறபேத லாவண்யமும் காட்டிப் பறந்து, உடைந்தும் விடும். சோப்பு நுரைக் குமிழ்கள் மட்டுமா அற்ப ஆயுசு?

நான் சம்பத்திரிசியார் கல்லூரியில் படித்த காலம். 'அப்புவுக்குச் சுகமில்லை' என்று அப்பையா போய் வந்தார். மூன்று நாள் கழித்துச் சாவிசளும், 'உழைப் பின் பொருள் அறிதலே வாழ்க்கை' என்று வேதம் ஓம்பிய அப்பு கடந்த காலமானர். கல்லெறிந்தால் கந்தசாமி கோயில். திருவிழாக்களும் இருபத்தைந்து நாள். யாழ்ப்பாணமே அள்ளுண்டு வரும். ஒரு நாளும் அப்பு கோயிலுக்குப் போனதில்லை. பூசை பார்த்த தில்லை. இவை கடந்தவர் அப்பு. நிலம் வாழ உழைப் பதையே தமது தவமாகவும் யாகமாகவும் கொண்டார். மனிதன், மகா சாதாரண மனிதன். ஆனாலும் அப்பு!

'ஆறப்பாவுக்குப் பிறகு அதைக் குத்தகைக்கு விடமாட்டன் எண்டு கமக்காரன் சொன்னவராம்' என்று கணவதிமாமா சொன்னார். லத்தீன் மொழியின் இலக்கண சூக்குமங்களுடன் மல்லுக் கட்டுற அவதி. பண்டாரக் குளத்தின் தொடர்புகளும் தூரமாயின. காங்கேசு மச்சான் என் தங்கச்சியைக் கல்யாணம் செய்த பிறகு வெகு காலத்துக்கு பிறகு, அப்பு தவ மியற்றிய வயலைப் பார்த்தன். வயலின் மேற்குப் பகுதி மனித முயற்சியால் மேடாய் நிமிர்ந்தது. புதிய வீடுகளும், கொங்கிறீட் கலாசாரத்தின் அரக்கத்திற்குள் அது மூச்சுத்திணறுவது கண்டு கண்கள் பனித்தன. அப்பு செத்த பொழுது சுரக்காத கண்ணீர்!

படிப்பகம்

www.padippakam.com



வெண்தாடிக் கிழவருக்குப் பிராமணத் தோற்றம். பணத்தின் றாங்கியும் உண்டு. குறும்பரும். மற்றவர்களை நையாண்டி செய்வதைத் தமது அறிவு வித்துவமாக மகிழ்ந்தவர். அப்பையாவிலுள்ள கறளைச் சில சமயம் என்மீதும் திருப்புவார். ''உன்ரை கொப்பன்ரை பண்டாரக் குளமும் பாடல் பெற்ற தலமடா! 'பண்டாரக் குளத்தடி முத்தன் கொன்டானே சேனாதிரா சாவை' எண்ட பாடலுக்கு என்ன தமிழ் எண்டு உன்ரை கொப்பனைக் கேட்டுப் பார்!'' பொருள் எதுவாயினும் பாடல் உண்டு.

'மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றி யதோ கற்பனையின் சூழ்ச்சி' அல்ல

பண்டாரக்குளம். ஆனால் பாரதியை Quote பண்ணினால் தமிழ் தெரிஞ்சவன் என்று மற்றவர்கள் நினைப்பார்கள் என்று நினைக்கும் தமிழர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள். அந்தத் தமிழர்களும் பிழைத்துப் போகட்டும்! ★

மசிய அவிஞ்ச
மரவள்ளிக் கறி -கூட்டரைச்சு
இசைய அவிஞ்ச
பழைய விளைமீன் குழம்பில்
பிசைஞ்சு குழைச்சு
பழஞ் சோற்று உருண்டை திரட்டிப் பூ.
வரசம் இலையிலே
ஆச்சியிடக் கவ்வும் சுவை கனவே

# 11. சுவை

மனிதக் கற்பனைகளும் கற்பிதங்களும் காலநதி தீரம் ஒரு விந்தைக் கற்பனையா? பெருமாள் கோயிலுக்கு எள்ளெண்ணெய்ச் சட்டி யோகம் அடிக்கும் காலங்களில் அப்பையா விஷ்ணுவின் லீலைகள் பற்றிக் கதை கதையாச் சொல்வார். கதை சொல்லுவதில் அவருக்கு என்றுமே அலுக்காது. விஷ்ணு பாற்கடலிலே தான் பள்ளி கொண்டுள்ளாராம்... இந்தக் காலநதி பால்நதியாக ஓடினால்?...

www.padippakam.com



ஒட்டை நாகேசரை நினைத்துக் கொண்டதும் இப்படி ஒரு கற்பனைக் குறளி மனசிலே புகைகிறது.

செலவு சித்தாயங்களிலே அப்பையா யாழ்ப்பாண மண்ணுக்குஅந்நியமானவர். தாராளச்செலவு. நாளைக்கு ஒரு முட்டுப்பாடு வரலாம் என்று கவலைப் படாதவர். பெரிய ஆஸ்தீகாராகக் காட்டிக் கொள்ள வேஷம்போடத் தெரியாதவர். ஈசன் கல்லுள் தேரைக்குப் படியளக்கும் தயாளத்தை ஆட்சேபிக்காதவர். அம்மா எதிலும் அப்பையாவுக்கு எதிர்ச் சொல். ஒரேயொரு விஷயத்தைத் தவிர. சாயக்கார ஒழுங்கையிலுள்ள தமது வீட்டின் விறாந்தையை சித்த வைத்தியசாலையாக நடத்தும் சிவராசாப் பரியாரியார், 'எந்தக் குளிசையைச் சரையில் மடிச்சுக் குடுத்தாலும், 'முலைப்பாலில் கரைச்சுக் குடிக்க வேணும்' என்றுதான் முதல் அநுமானம் சொல்லுவார். இதனால், குஞ்சு மருந்துச் சிரட்டைகளுடன் முலைப்பாலுக்காக அலைந்து திரிஞ்சவை அதிகம். அப்படி யார் வந்தாலும் 'பிள்ளை இப்பதான் குடிச்சது; பின்னேரம் பாப்பம்' எண்டு மற்றப் பெண்டுகளைப் போல தவணை போட மாட்டா. பிள்ளைக்கு இல்லாட்டிலும், அந்தரிச்ச சீவன்களுக்கு உதவவேணும் என்பது அவ கொள்கை.

மயிலு மாமி முந்தானைச் சேலைக்குள் மருந்துச் சிரட்டையை மறைச்சுக் கொண்டு போவதைக் கண்ட ஒட்டை நாகேசர் சும்மா விடுவாரோ? நாகேசருக்கு மயிலு மாமி மச்சாள் முறையும். அவவுடன் தனகி, வாங்கிக் கட்டிக்கொள்ளுவதில் அவருக்கு ஒரு சொறி இன்பம்.

''எணேய், கிண்ணிய் பிச்சை எடுக்கிறது போலை அலைஞ்சு திரியிறாய்...மயிலுவை ஒருக்காச் சின்னக் கடைக்கு அனுப்பி வையன்...''

''ஏன் சின்னக் கடைக்கு? உன்னைப் போல கொம்புப் பிலாக்காய் தின்னுற ஆக்கள் எண்டு எங்களை

www.padippakam.com



நினைச்சுக் கொண்டியோ?...'' மயிலு மாமி சீறினா. கோவிச்சால் அவவின்ரை முகம் நல்லாச் சிவந்து போகும். ஆச்சிக்குப் பிறகு அவவைத்தான் நான் சிவப்பி எண்டு சொல்லுவன்.

''மெய்யைச் சொன்னால் உங்களுக்கு வயித்துக் குத்து எழும்பீடும். சிவராசப் பரியாரியாரைக் கேட்டுப் பாரன். முலைப்பால் குளிசை செய்ய அவர் பாலுக்கு எங்கை போறவர்? சின்னக் கடைக்குத் தான். அவளவை குதங்களைத்தான் கட்டி வைச்சிருக்கிறாளவை. கறந்தால் கையும் வலிக்கும். பரியாரியாரைக் கீழாலை கறந்தெடுக்க விட்டிட்டு, அவளவ மீன் யாவாரத்தைக் கவனிப்பாளவையாம்...'' பல்லு விளக்க வாய்க்குள் சப்பிக் கொண்டிருந்த குச்சியை எடுத்து, தூவானம் கொப்பளிக்கச் சிரிச்சார்.

''டேய், விடியக் காலமை வாயைக்கூட அலம்பாமல் என்ன பேச்சடா...'' என்று கறுவியபடி கைத்தடியை ஆகாயத்தில் சுழற்றிய வண்ணம், வெண்தாடிக் கிழவர் பிரசன்னமானார். இந்தச் சமயம் பார்த்து மயிலு மாமி சைவப் பள்ளிக்கூடத்து ஒழுங்கையால் இறங்கி மறைஞ்சா.

''நான் வம்புக்குச் சொல்லேல்லை அப்பு...உன்னாணை மெய்யெணை...சுறாவும் பால் சுரக்கிற மீனும் அவளுகள் தன்னு தின்னெண்டு திண்டு...''

''அதுக்கு... மயிலுவின்ரை இரண்டாம் பொடிக்குச் சுகமில்லையெண்டு அதுகள் அந்தரிச்சுத் திரியேக்கிள்ளை...'' என்று தாடியை உருவியவர் அங்கு நின்ற என்னைப் பாத்திருக்கவேணும். பூரணமக்காவின் குறுக்குக் கட்டுக்குள் பிதுங்குபவற்றைக் குதங்களாக்கும் கற்பனையிலே நான் அசதியாக இருந்திருக்க வேணும்.

''டேய், உதிலை என்ன செய்யிறாய்?...போய்க் கடையப்பத்தைக் கொட்டிக் கொள்ளன்...'' என்று

www.padippakam.com



தாத்தா கோபத்தை என்மீது திசை திருப்பினார், லீவு காலங்களில் எங்களுடைய சாப்பாட்டு நேரம் மாறிப்போகும்.

பள்ளி நாள்களில் காலையில் கடையப்பந்தான் வசதியானது. கோயில் வளவிலிருக்கும் கனகம்மா அக்காதான் அயலிலுள்ளதோசைக்காரி. 'ஓட்டத்து' மயில் வாகனத்துக்கு அவ ஒண்டுவிட்ட தங்கச்சி. அவ சுடுற தோசை ருசி. செத்தல் மிளகாய் கிழிச்சு, கறிவேற்பிலை எல்லாம் தாழிச்சுப் போட்டிருப்பா. நல்ல மஞ்சள் நிறம். மா பதமாப் புளிச்சது என்பது போல அவ தோசை. வார்க்கும் பொழுது, ஏக சோட்டுக்கு 'கண்கள்' விழும். அகப்பையைக் சட்டியில் அசைச்சால், வட்ட நிலா வடிவத்தில் தோசை வட்டுறுப்பாக இருக்கும். மெல்லிய மென்மையான தோசை. வார்க்கும் பொழுது, சில தோசைகளிலே தாழித்த கொச்சிக்காய் இருக்கும். அந்தத் தோசையைச் சம்பல் இல்லாமல் தின்னலாம். தோசைக்கு எப்பவும் உரலிலே இடித்த தேங்காய்ப்பூ சம்பல்தான் உவப்பாத் தருவா. அந்தச் சம்பலில் இருந்து ஒரு மகா கம கம...அந்தச் சம்பல் நாக்கிலே இலேசாகக் கிள்ளிவிடும் உறைப்புக்காகவே இன்னும் இரண்டு தோசைகள் சாப்பிடலாம் போல தோன்றும். இப்பவும் சொல்வன் அந்த தோசைக்கு நிகரான. தோசை சுட இனி ஒருத்தி பிறக்க மாட்டாள். பிற்காலத்தில், யாழ்ப்பாணத் தேத்தண்ணிக் கடைகள் பலதிலை தோசை சாப்பிட்டிருக்கிறன். அறுவான்கள் கோதம்பமாவைக் கலந்துதான் சுட்டிருப்பாங்கள். உளுந்து மணமே வராது. தோசைகள், கண்ணாடி அலுமாரியிலே அடுக்கப்பட்டிருக்கும். 'மூண்டு தோசை' 'நாலு தோசை' என்று ஓடர் கொடுத்தால், எண்ணி அடுக்கிக் கொண்டு வந்து வைப்பான். எட்டு மணி நேரத்துக்கு முந்திச் சுட்ட தோசைதான் பெரும்பாலும் கிடைக்கும். 'யாழ்ப்பாணத்துத் தேத்தண்ணிக் கடை

படிப்பகம்

www.padippakam.com



களிலே தோசை சாப்பிட்டவனுக்கு ஐயகோ!' என்று இன்றளவும் இரக்கப்படாமலும் இருக்க முடியவில்லை. ஆனால், வண்ணை சிவன்கோயிலுக்கு அருகிலுள்ள தில்லைப்பிள்ளை கடையில் உடன் சுட்ட தோசை கிடைக்கும். தமிழ் நாட்டிலுள்ள பிராமணாள் காப்பி கிளப்பிலே தோசை சாப்பிட்ட மாதிரி இருக்கும். இரசிகமணி கனக செந்திநாதனுடன் சினிமாவுக்குப் போனால், அது தில்லைப்பிள்ளை கடைத் தோசையுடன் நிறைவு பெறும்.

நீர்வைப் பொன்னையனின் அநுபவம் எங்களுக்கு ஒரு படிப்பினை. அண்ணாமலையில் நான் படிச்ச காலம். கல்கத்தா சென்று படிப்பதற்கு என் ஆலோசனையைப் பெற அண்ணாமலைக்கு வந்தார். இந்தியாவில் முதல் அநுபவம். சிதம்பரம் ரயில் நிலையத்தில் இறங்கியதும், ஆளுக்கு நல்ல பசி, முதலில் பசியாறுவோம் என்கிற எண்ணத்தில் அருகிலுள்ள ஹோட்டேலுக்குள் நுழைந்தார். யாழ்ப்பாணப் பழக்கத்தில் ''நாலு தோசை கொண்டு வா!'' என்று ஓடர் செய்தார். பரிசாரகன் ஆளை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு, தாமதமாகி தட்டில் ஒரு தோசையுடன் வந்தான். ''மற்றதோசைகள் கொண்டு வாறேங்க...'' என்றபடி அந்தத் தோசையைப் பரிமாறினான். ''இன்னும் ஒரேயொரு தோசை போதும்'' என்று பொன்னையன் கெஞ்சி மன்றாட நேர்ந்தது. தப்பிச்சேன் பிழைச்சேன் என்று வந்து, இந்த வர்த்தமானத்தை எனக்குச் சொன்னார். Simple படிப்பினை ; தமிழ் நாட்டின் ஒரு தோசை Is equal to பல யாழ்ப்பாணத் தோசைகள். 'கையிலைகாசுவாயிலை தோசை' எண்டது யாழ்ப்பாணத் தேத்தண்ணிக் கடைத் தோசைகளுக்குத் தான் பொருந்தும்.

இடியப்பம் என்றால், அயலிலை இரண்டு மூன்று இடங்களிலை வாங்கலாம். புவனா அக்காவின் இடியப்

www.padippakam.com



யம், நான் நத்துவது. நாவாந்துறை ரயில் தரிப்புக்கு இங்காலை, ரயில் பாதைக்கு மேற்கில், நாவல் மரம் குடை கவித்திருக்கும் வீடுதான் அவவுடையது. இடியப்பத்துக்கு உவப்பாக, இலேசான இஞ்சி மணம் கமழும் அம்மியில் அரைச்ச பச்சடி வைச்சுத் தருவா. நாவல் பழங்கள் பொறுக்கினாலும் பேசமாட்டா. எப்பவும் சிரிச்சாப்போலை வட்ட முகம். அவ தாற இடியப்பத்துள் சம்பலைக் கொஞ்சம் வைச்சு 'பற்றிஸ்' போலை வாயில் போட்டால் ருசிதான். கை கழுவ வேணும் எண்ட பிரச்சனையும் இல்லை. புத்தகக் கட்டைத் தூக்கிக் கொண்டு ஓடலாம். சின்னண்ண னுக்கு உறைப்புப் பிடிக்காது. தேங்காய்த் துருவல் கொஞ்சம் எடுத்து, சீனியோடை கலந்து, இதனை உள்ளீடாக வைச்சுத்தான் இடியப்பம் சாப்பிடுவார். அவருக்குப் பெரிய வாய். ஒரே வாட்டியில் இரண்டு இடியப்பங்களைக்கூட அதக்குவார். புதிதாகப் பெற்றுக் கொண்ட இங்கிலீஸ் ஞானத்தைப் பறைவதற்கு இடி யப்பத்தினை Thunder bread என்று அழைத்ததும் நினைவிருக்கிறது. யாழ்ப்பாணக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கடையப்பமாக நான் நீண்ட காலமாக இடியப்பத்தைத்தரிசித்தது உண்டு. சொதியிலே நனைச்சு இடியப்பத்தின் சிக்கலை நைஸாக எடுப்பதிலே யாழ்ப் பாணத்தார் விண்ணர் என்பதினால் இத் தரிசனமோ? ஐம்பதுகளில் மதறாஸ் மாநிலத்தின் ஹோட்டேல் களிலே இடியப்பம் கிடைப்பதில்லை. மதுரையில் நடை பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது, மதுரை ஒட்டல் ஒன்றில் இடியப்பம் கிடைத்தது. அசனை நடத்தியவர் முன்னர் கொழும்பு செட்டியார் தெருவில் சரஸ்வதி ஒட்டல் நடத்தியவர். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையிலே தங்கியபொழுது சரவணாஸ் உட்படப் பல உணவகங்களிலும் இடியப் பம் தாராளமாக் கிடைத்தது. சிங்களவரும் வடிவா இடியப்பம் அவிப்பினம். நாலைஞ்சு இடியப்பங்களை

ஒரே வெள்ளமாகத் திணிக்கக் கூடியதாக, வெறும் கோதுமை மாவில், குஞ்சு இடியப்பங்கள் அவிக்கிறதிலை அவங்கள் சூரர். அந்த இடியப்பங்களை பருப்பு சொதியுடனும் கட்டா சம்பலுடனும் சாப்பிட்டால் வேறு விதமான Taste. கொழும்பிலிருந்து மட்டக்களப் புக்கு மினி வேனில் போனால், இந்தச் சாப்பாடே தஞ்சம். அவர்களுடைய இடியப்பம் சீனிச்சம்பல் Combination னும் பிழையில்லை. கொழும்பு புஹாரி ஹோட்டலிலை தான் நான் முதன் முதலாக இடியப்ப புரியாணி சாப்பிட்டனான்.

சின்னண்ணன் இனிப்புப் பிரியன். பால் அப்பம் எண்டால் நல்ல விருப்பம். ஐயம்பிள்ளை மாமா வீட் டுக்குப் பின்னால், புட்டுச் சந்தி வருவதற்கிடையில், கலைப்புலவர் நவரத்தினத்தின் வீட்டுக்குக் கிழக்கு விலாவில் அப்பம் சுடுற ஆச்சியின் வீடு, வீட்டின் முன்பக்க வேலியின் ஒரு பகுதி தட்டி. தட்டியை அகற்றி வைச்சால், ஆச்சி அப்பம் சுடுவதை ஒழுங்கை யில் நின்று பார்க்கலாம். மூன்று அடுப்புகளை வைத்துக் கொண்டு, அப்பங்கள் வார்த்து, மூடி, பதமாகச் சுடு பட்ட அப்பங்களை எடுத்து, சுளகிலே சோடியாக அடுக்கும் அழகையும் சுறுசுறுப்பையும் பார்த்துக்கொண் டே இருக்கலாம். அப்பம் வார்த்ததும் தணல் சட்டி யால் மூடுவா. தணல் சட்டியிலே பொச்சு மட்டைக் கங்குகள் கனன்று கொண்டிருக்கும். அப்பம் சுட மேலுக் கும் நெருப்பு கீழுக்கும் நெருப்பு பொச்சு மட்டைப் புகையுடன் கலந்து வரும். அப்ப மணம் வாயை ஊறச் செய்யும். ஒரு அடுப்பைப் பால் அப்பங்கள் சுடுவதுக்கு மட்டுமே பயன்படுத்திடுவா. கிழவி அந்த அப்பக் கடையை ஒரு சமூக சேவையாகவே நடத்தினா. அப்பம் வேணுமெண்டால் முதல் நாளே ஆச்சிக்குச் சொல்லி வைக்க வேணும். சின்னண்ணன் அந்தம்மா வைக் குழையடிச்சு வளைச்சு, வாரத்தில் ஒரு நாளா

www.padippakam.com



வது அப்பத்துக்கு'ஓடர்' கொடுப்பார். ஆச்சியின் அப்பத் துக்காகக் காத்து நிற்க வேணும். அதுவும் ஒரு வில் லங்கம். ஆனாலும், அந்த ஆச்சி சுடும் பால் அப்பத் துக்கு நிகராகாது. இதுவரையிலும் என் நாக்குச் சுவைத் ததில்லை. அதை விண்டு நாவில் வைத்தாற் போதும். நாவில் கரைந்து வாய்க்குள் ஓடும். பாலின் தடிப்பும் சுவையும் அண்ணத்திலும் ஒட்டும். ஒருதிவ்விய வாசினை அந்தப் பிராந்தியத்தில் பரவும். கொழும்பு மூஸ்லிம் சாப்பாட்டுக் கடைகளிலும் 'சுடுசுடு அப்பம் கிடைக்கும். சுஹோர் ஹமீது நாடகங்கள் தயாரிப்பதில் வல்லவர். கொழும்பில் நான் நின்றால் பார்க்க வந்து விடுவார். நாடகங்கள் குறித்து அவருடன் பேசுவது அலாதி இன் பம். இரவுச் சாப்பாட்டுக்கு, கொச்சிக் கடை அந்தோணி யார் கோயிலுக்கு முன்னால், ஜம்பெட்டா வீதியிலுள்ள ஒரு அப்பக் கடைக்கு அழைத்துச் செல்வார். அப்பத்தைப் பார்க்கிலும், அதனுடன் தொட்டுக் கொள்ளக் கிடைக்கும் கறிவகைகள் மிகவும் ருசியாக இருக்கும், அப்பொழுதுகூட, யாழ்ப்பாண அப்ப ஆச்சி யின் நினைவு பளிச்சிடத் தவறுவதில்லை. சிங்களவர் முட்டையப்பப் பிரியர்கள். அதனைத் தேசிய காலை உணவாக, பிரதமர் சேர் ஜோன் தமது கந்தாவளை வாசஸ்தலத்தில் அறிமுகப்படுத்தினார். இந்தச் சிங் களவருடைய முட்டையப்பத்தை நான் முதன் முதலில் பலாங்கொடையில் சுவைத்தேன். இது வேறொரு சுவை. என்னை பலாங்கடைக்கு அழைத்தவர் என் நண்பர் H.Q.M. ஜெயவர்த்தனா. இவர், பின்னாளில் பிரதமராய் வந்த ஸ்ரீமாவோவின் முறை மச்சான்.

யாழ்ப்பாணத்துக் காலை உணவை நினைக்கும் போது, ஆச்சியின் பழைய சோத்துக் குழையலை மறக்க ஏலாது. பள்ளிக்குப் போகும் நாள்களில் எங்களுக்குக் குழையல் கிடைக்காது. ''உந்தப் பழஞ் சோத்தைத் திண்டிட்டுப் போனால், வகுப்பிலை நிறுத்

www.padippakam.com



திக் கொட்டுவான்கள்'' என்கிற விளக்கம் தரப் பட்டு, இத்தடை அமுலாகியது. வெள்ளிக்கிழமை களில் விரதம்...... ஆருதக்கறியுடன் சாப்பாடு ஆம் பிள்ளையளுக்கு இறங்காது வெள்ளியிரவு ஏதாவதுகடை யப்பத்துடன் சமாளிப்பு நடைபெறும், இதனால், பெரும்பாலும், சனிக்கிழமை காலமை குழையல் நடக் கும். சோற்றுப் பானைக்குள், இரவு தண்ணீர் ஊற்றப் படும். இரவு முழுவதும் தண்ணீரில் ஊறிய சோறு ஒரு கணக்கான நொதிப்பு நிலை அடைந்திருக்கும். அதில் ஊறிய தண்ணீரை முற்றாகப் பிழியாமல், பக்குவமாய் வடித்தெடுத்து, ஒரு பெரிய சட்டியிலே போட்டு, மிச்சம் கிடக்கும் எல்லாக் கறிகளையும் கொட்டி, ஆச்சி குழை யலைப் பிசைந்தெடுப்பா. நாங்கள் வடிவான பெரிய பூவரசம் இலைகள் எடுத்துக் கழுவிக் கையிலே வைச் சிருப்பம். ஆச்சியைச் சுற்றி இருந்தால், ஆக்களுக்கு ஏற்ற உருண்டைகளாக்கி எங்கள் இலைகளிலே வைப்பா. ஒரு திரணையை எடுத்து இரண்டு மூன்று தடவை எறிந்து பிடிச்சால், நைஸான பந்து வடிவில் உருண்டை கிடைக்கும். சனிக்கிழமைப் பழஞ்சோற்றுக் குழையல் பந்தியிலே அப்பையா சேர்வது கிடையாது. மிச்சங் கிடப்பதை 'செலுத்தும்' சடங்காகவே அவர் அதை நோக்குவதால், அவர் குழையலை நோக்குவது கிடையாது. ஞாயிறு காலையில், அல்லது பாடசாலை விடுமுறை நாள்களில் அப்பையாவின் கடாட்சம் பெற்று ஒப்பேறும் குழையலையும் சுவைத்திருக்கிறம். அம்மியில் அரைச்சு ஆக்கிய விளைமீன் குழம்பு, கொழும்புத்துறை யிலை வாங்கிய முற்றிய கலவாய்மீன் குழம்பு, பங்கிறைச்சியாகக் கிடைச்ச கிடாய் இறைச்சிக் குழம்பு. இந்த மூன்றில் ஒரு வகைக் குழம்பு முதல் நாள் தாராள மாகச் சமையல் ஆகி இருக்க வேண்டும். மீனுக்கு ஊரெலு மரவள்ளிக்கிழங்கு மசியல் வெள்ளைக் கறி நல்லது. மற்றும்படி கத்தரிக்காய் அல்லது முருங்கைக் காய் வெள்ளைக் கறிகளும் குழையலுக்கு ஏற்றன. ஈரப்

ந—13

படிப்பகம்

www.padippakam.com



பலாக்கறியும் ஆகும். குழையலைச் சாப்பிடும் பொழுது, மிச்சப் பருக்கைகளை ஆச்சி வைச்சுக் கொண்டே இருப்பா. அந்தக் குழையலின் அற்புத சுவையை வர்ணிப்பதற்கு வார்த்தை கிடைக்காமல் தடுமாறிக் கொண்டிருக்கிறன். வீட்டுக்கொரு வீடியோ என்ற சொகுசுடன் நாங்கள் நைஜீரியாவில் வாழ்ந்ததில்லை. வீடியோவில் படம் காட்டும் மேலான தொண்டினை 'பேர்னின் கெபி'யில் நண்பர் ஜகநாதனே மேற்கொண் டிருந்தார். தமிழ்ப் பண்டிகைகளின் விருந்து, தமிழ்ப் படம் பார்ப்பதுடன், அவர் வீட்டில் நடைபெறுவதுதான் வழககம. அன்றிரவு அங்கு எங்களுக்குக் குழையல் கிடைக்கும். அந்தக் குழையலை Handburger என்று செல்லமாகக் குறிப்பிடுவோம்.

என் அடிசிற்கினிய மட்டக்களப்பாள், யாழ்ப்பாண விஜயங்களின்போது, அப்பையாவின் ஆணையில் உரு வாகும் பழஞ்சோற்றுக் குழையல் தின்று பிரமித்திருக் கிறாள். என் மித்தி மகனுக்கு, என் மனைவி தயாரிக் கும் கரையல் என்றால் வேறு சாப்பாடு தேவையில்லை. மட்டக்களப்பில் பழையசோறு 'தண்ணிச்சோறு' என்று பெயர் பெறும். தண்ணிச் சோறுக்குள் தேங்காய்ப் பால், தயிர், சக்கரை, வாழைப்பழம், பேரீச்சம்பழம், (கிடைக்கும் காலங்களில் மாம்பழம்) ஆகியவற்றை இட்டுக் கரைப்பாள். அதனை மித்தி உறிஞ்சிக் குடிப் பது வடிவான காட்சி, 'கண்ணகி அம்மன் கோயில் பானகத்திலும் பார்க்க அம்மாவின் கரையல் 'First Class' என்று மித்தி மகா திருப்தியாச் சொல்லுவான். அப்பையாவின் வாகடத்தைப் பின் பற்றி, என் மனைவி மட்டக்களப்பில் மேற்கொண்ட குழையல் முயற்சிகள் அவ்வளவு வெற்றிதரவில்லை.

சேணியதெருவில் குடும்பம் பெருத்துவிட்டது. கன்னாதிட்டியில் அப்பையா குடியேறினார். புதிதாக

www.padippakam.com



வாங்கப்பட்ட காணியையும் திருத்தி 'எடுக்க வேண்டும். என் படிப்பு வசதிகள் கருதி, நான் தொடர்ந்தும் சேணிய தெருவில் வசித்தேன். சனிக்கிழமை காலமை, கன்னா திட்டிக்குப் போவதற்கு எனக்கு எப்படியும் நல்ல சாட் டொன்று கிடைச்சிடும். கன்னாதிட்டியில் காலைச் சாப்பாட்டுக்கு அவசரம் எதுவும் கிடையாது. அப்பை யாவின் வசதிகளுக்கு ஏற்பத்தான் அம்மா நேரகுசி அமைத்திருந்தா, சனிக்கிழமை அப்பையா முழுகுவார். அதற்கான ஆயத்தம் என்றால், அவருக்குக் கொள்ளை யான வேலைகள் இருக்கும். பெரிய கடையில் மீன் இணங்கா விட்டால், சின்னக்கடைக்கும், பாஷையூருக் கும் போய் வரவும் பஞ்சிப்பட மாட்டார். 'இண்டைக் குத் தம்பியும் வருவானெனை' என்று அப்பையா அடிக் கடி ஞாபகப்படுத்துவாராம். இதனாலும் அன்றைக்கு அம்மா புட்டு அவிப்பா. புட்டுக்கான கோதுமை மாவை அம்மா இரும்புச் சட்டியிலே போட்டு வறுப்பதைப் பாத் திருக்கிறன். மா அடிப்பிடிக்காமல். பதமாக வறுபடு வதற்காக கையுளையும்வரை வறுப்பா. கை ஆடுவது போலவே, அவவுடைய தலையும் ஆடும். வெள்ளை மா ஒரு பவுண் நிறத்துக்கு வரும். பிறகு, மாவிலிருந்து எண்ணெய் பிறப்பது போல ஒரு வாசம் கிளம்பும். அந்த வாசம் அடுக்களையைப் பூரணமாகச் சுவீகரிக்கும் ஒரு கட்டத்திலே, தாச்சியில் வறுபட்ட மாவைச் சுளகிலே கொட்டிப் பரத்தி விடுவா. புட்டின் ருசி மா வறுத்தெடுக் கப்படும் பதத்திலேதான் தங்கியிருக்கிறதாம். பண்டா ரக்குளத்திலே சோதி மாமி புட்டு அவிச்சுக் கடையப்பக் கடை நடத்தினவ. அவ அரிசி மாவிலை குழல் புட்டுத் தான் அவிப்பா. குழலிலை புட்டு அவிச்சால் எண்ணி விக்கிறதும் வசதி. சோதி மாமிக்குப் பிறகு, மாணிக்கம் மச்சாளும் புட்டு அவிச்சு வித்தவ. அவையள் அரிசி மாவிலைதான் அவிப்பினம். அம்மா எப்பொழுதும் நீத்துப் பெட்டியிலைதான் புட்டு அவிப்பா. அந்தப் புட்டை ஆவி பறக்கச் சுளகிலை போட்டுப் பரத்தி விட்

www.padippakam.com



டால் கிளம்பி வரும் ஒரு வாசனை. சும்மா அள்ளித் தின்னலாம் போலை ஒரு ஆசை வரும். பிற்காலத்தில் நான் திருவிளையாடப் புராணம் படிச்சனான். தோடுடைய செவியனும் விடமுண்ட கண்டனுமாகிய சிவ பெருமான் செம்மனச்செல்வி என்கிற கிழவியின் பிட்டிலே மயங்கி, அயர்ந்து, சோம்பல் ஓம்பி, பாண்டிய மன்னனிடம் பிரம்படி பெற்ற கதையை வாசிக்கும் பொழுது, அம்மா நீத்துப்பெட்டியில் அவிக்கும் அந்தப் புட்டு பட்டென்று நினைவுக்கு வரும். சொல்லி வைச்சது போல, சனிக்கிழமை காலையில் நாவாந்துறை இறால்கார மனுஷியும் வருவா. பத்துச் சதம் கொடுத்தால், இரண்டு பெரிய பூவரசம் இலைகளைப் பூட்டாகக் கோர்த்து, பெரிய கூறாக இறாலை வைப்பா. 'இன்னும் போடனெணை' என்று அரிச்சு நாலு இறாலாவது கொசுறாகப் பெறாவிட்டால் அம்மாவுக்குப் பத்தியம் இல்லை. இறாலிலை அம்மா சுடச்சுடப் பால் சொதி வைச்சு இறக்கவும், அப்பையா சாப்பிட வரவும் சரியாக இருக்கும். அந்தச் சொதியுடன் அந்தப் பிட்டைச் சாப்பிட்டால்... அந்தச் சுவையுணர்வு இப்பொழுதும் என் எழுத்து ஓட்டத்தைத் தடுக்கின்றது... அப்பையாவுக்கு நாலைஞ்சு இறாலை கொச்சிக்காய் வெங்காயத்துடன் நல்லெண்ணையில் பொரித்து வைச்சால், பொச்சடிக்கிறது தகரக் கொட்டகைக்கு அங்காலையும் கேக்கும். நல்ல சாப்பாட்டினை சுவைச்சுச் சாப்பிடுவதில் அப்பையா வெட்கப்பட்டது கிடையாது என் மகள் மேகலாவுக்கும் பொச்சடித்துச் சாப்பிடும் பழக்கம் உண்டு. பரம்பரையான பழக்கம். என் பேத்தி தாரணியும் பொச்சடிச்சுத்தான் சாப்பிடுவாள். இதைச் சுட்டிக் ;காட்டினால், அவளுக்கு அழுகைவந்துவிடும். 'அப்பையா கையாளும் ஒரு வாசகம் ''அப்பம் அடுப்படி, கஞ்சி கடப்படி. புட்டுப் பட்டணம்!'' அம்மா இறால் சொதி மட்டுந்தான் நல்லா ஆக்குவா. அம்மா

www.padippakam.com



விரதங்களுடனும், மரக்கறிகளுடனும் அல்லாடிக் கொண் டிருந்தபடியால், மச்சம் மாமிசம் சுவையாகச் சமைக் கிறதை மறந்து போனா என்று நினைக்கிறன்.

அம்மாவின் சமையலுடன் கூடவே, யாழ்ப்பாணத்து மரக்கறிவகைகளும் நினைவுக்கு வருகிறது. முருங் கைக்காய் பிரதான மரக்கறி, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணம் செய்பவர்கள். மறக்காமல் வாழைத்தடல்களிலே செப்பமாக Pack செய்த முருங் கைக்காய்க் கட்டு ஒன்றையும் எடுத்துச் செல்வார்கள். சும்மா சொல்லக்கூடாது யாழ்ப்பாண முருங்கை நல்ல ருசி. நீளமும் நீளந்தான் கழியும் கழிதான். சுவை யும் சுவைதான். இந்தவகை முருங்கையை இலங்கையின் ஏனைய பகுதிகளில் யாழ்ப்பாண முருங்கை என்று சொன்னாலும், யாழ்ப்பாணத்தில் அதனை உலாந்தா முருங்கை என்றே சொல்வார்கள். இந்தப் பெயர் வழங்கும் மான்மியத்தினை எனக்கு விளக்கியவர் மகா வித்துவான் F.X.C நடராஜா ஐயாதான், பிரிட்டிஸாருக்கு முன்பு, யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் கரை யோரப் பகுதிகளை டச்சுக்காரர் ஆண்டார்கள். அவர் களை நாங்கள் உலாந்தர் என்றே அழைத்தோம். அவர்களே முதன் முதலில் இலங்கையில் நில அளவை வேலைகளில் ஈடுபட்டார்கள். இதனாலேதான் இன்றளவும் Surveyor ஐ உலாந்தா என்றழைக்கும் மரபு நிலைத்துள்ளது. இந்த ஒல்லாந்தர் இந்தோனே சியத் தீவுகளிலிருந்து கொண்டு வந்து பயிரிட்டதுதான் உலாந்தா முருங்கை. அதனை யாழ்ப்பாண மண் தத்தெடுத்துக் கொண்டது.

நைஜீரியாவில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தவர்கள் உலாந்தா முருங்கை விதைகளைக் கொண்டு வந்து, அதனை அங்கும் வளர்த்தார்கள். அங்கு என் வீட்டுக்கு முன்னால் வாழ்ந்த கொட்டாவத்தையைச் சேர்ந்த

www.padippakam.com



செல்வராசா வீட்டிலும் ஒரு உலாந்தா முருங்கை நல்ல சேட்டமாக வளர்ந்தது. நைஜீரியர்கள் முருங்கையை Devil Stick என்று சொல்லிச் சாப்பிடமாட்டார்கள். ஆனால்ஒரு மரத்தின் இலைகள் முழுதையும்சூப் காய்ச்சி ஒரே நாளில் குடித்து முடிப்பார்கள். ஆத்திகேட்டுக்கு முருங்கை இலைச் சொதி கை தரும். முருங்கை இலைக் கறிபோட்டு புழுங்கலரிசியிலை ஆச்சி வைக்கிற புளிக் கஞ்சியின் ருசிக்குக் கிட்டக் கிழலையிலும் நிக்காது ஹவுஸாக்காரன் செய்யிற சூப். இல்லை, முருங்கை இலை வறையின்ரை ருசிதான் குறைவோ? மட்டக் களப்பில் 'மணப்பு'ப் போட்டு முருங்கை இலையைக் சுண்டுவார்கள். முருங்கைப்பட்டையை மாமிசத்தை மென்மையாக்கும் வாசனைத் திரவியமாகவும் ஆச்சி பயன்படுத்துவா. இத்தனை பெருமைகளையும் அறிந்து தான் வேதாளம் முருங்கை மரத்திலை துயிலச் சித்தங் கொண்டதோ நானறியேன்.

வெண்டக்காய், கத்திரிக்காய், தக்காளி, பயித்தங் காய், பாவற்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பூசணி, நீத்துப் பூசணி, சுரக்காய், வாழைக்காய், வாழைப்பூ ஆகியன யாழ்ப்பாணச் சமையலுக்கு ஏற்ற நாட்டு மரக் கறிகள். சில வேளைகளில் பலாக்காயும், ஈரப்பலாவும் சமையலுக்கு ஆகும். இலக்கறி வகைக்குExhaustive List ஒன்று தயாரிப்பது கஷ்டம். அகத்தி, தூதுவளை, தவசி முருங்கை, முல்லை, முசுட்டை, திராய், சுண்டி, குறிஞ்சா, பொன்னாங்காணி, வல்லாரை கீரை... கீரை என்றால் முளைக்கீரை, தண்டுக்கீரை, குப்பைக்கீரை, சட்டிக் கீரை என்று... வெங்காயத்தாளை மறந்து போனன். கன்னாதிட்டிக் காணியை வாங்கிய பொழுது எருக்கம் புதர்கள் மண்டிக் கிடந்தன. அதன் கீழ் முள் காடு. அந்தக் காட்டிலிருந்து ஆச்சி ஆறு வகையான கீரை களை இனங்கண்டு ஆக்கித் தந்தவ. இலைக்கறிகளைக் கடைவார்கள், வறை செய்வார்கள், சம்பல் அரைப்

www.padippakam.com



பார்கள்... இவற்றை எல்லாம் விலாவாரியாக விவரிக்கத் துவங்கினால், நனைவிடை தோய்தலுக்குப் பதிலாக, ஒரு Cookery Book எழுதிப்போடுவேனோ என்று பயமா இருக்குது.

'திண்டு கெட்டவன் துலுக்கன்' என்று பதியுதீன் மஹ்மூத் (முன்னாள் கல்வி அமைச்சர்) உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதைக் கேட்டிருக்கிறன். அப்பையாவும் திண்டு கெட்டவர். 'ஊர்வன வற்றிலே வண்டிலையும், பறப்பனவற்றில் பட்டத்தையும் தவிர மற்ற எல்லாம் திண்டிருக்கிறன்' என்று பெருமை பேச அவருக்கு அருசதை உண்டு. கோவா, லீக்ஸ், போஞ்சி, கறட், பீட்ருட், கோகிலாக் கிழங்கு, நோக்குள் ஆகியன அந்தக் காலத்தில் இங்கிலீசு மரக்கறிகள் என்றே அழைக்கப் பட்டன. அந்தக் காலத்தில், பெரிய கடையில் இங்கிலீசு மரக்கறிகளின் விற்பனைக் கென்று நாலைஞ்சு மரக்கறிக்கடைகள் ஒரு வரிசையில் இருந்தன. இந்தக் கடைகளைச் சிங்களவர்களே நடத்தினார்கள். இந்தக் கடைகளில் பறங்கித்தெருவாரும், சுண்டுக்குளியாரும், கொழும்பாரும் மரக்கறிகள் வாங்குவதைக் கண்டிருக்கிறன். அப்பையாவுக்குச் சில சமயம் புளிக்குணம் வந்தால், இங்கிலீசு மரக்கறிகளை அள்ளிக் கொண்டு வந்துவிடுவார். அப்படிக் கொண்டு வந்தால் அப்பையாதான் பாக முறைகளையும் சொல்லுவார். கஸ்தூரியார் வீதி செம்மா தெருவாக விளங்கிய காலத்தில். வண்ணான் குளத்துக்கு முன்னால், பின்னாளில் லேக் வியூ ஹோட்டல் கட்டப்பட்ட இடத்தில் மூன்று நாலு மரக்காலைகள் இருந்தன. சிங்களக் கடைகள். மொறட்டுவ சிங்களவர் அழகான மரத்தளபாடங்கள் செய்து கொண்டிருப்பதைப் பல தடவைகளில் வேடிக்கை பார்த்திருக்கிறன். 'சீலிங்' அடிப்பதற்கான சப்புப் பலகைகளும் அங்கைதான் கிடைக்கும். அங்கு வேலை செய்த அப்புஹாமி பாஸூம் அப்பையாவும்

www.padippakam.com



கூட்டாளிகள், பாஸின் செல்வாக்கிலே தான் அப்பையா இங்கிலிசு மரக்கறிகளில் விழுவார்!

மரவள்ளிக் கிழங்கு, கருணைக்கிழங்கு, தாமரைக் கிழங்கு ஆகியன சாதாரணமாக் கிடைச்ச கிழங்கு வகைகள். மரவள்ளிக் கிழங்கிலே ஊரெளு விளைச்சலுக்குத் தனி நடப்பு இருந்தது. சபை சந்திகளுக்கு ஆக்கும் பொழுது உருளைக்கிழங்கு தவிர்க்கப்பட்டது. அக் காலத்தில் உருளைக்கிழங்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியானது. அதனை மனித எரு பயன்படுத்தி விளைவித்தார்கள் என்ற புரளிக்கதைகளும் உண்டு. ஆனாலும், ஆருதக் கறிகள் ஆக்கும் பொழுது, கறியைப் பெருப்பிப்பதற்கும், சுவையை வேறு படுத்துவதற்கும் உருளைக் கிழங்கு தாராளமாகப் பயன்பட்டது. பிற்காலத்தில், யாழ்ப்பாண மண்ணிலும் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்ட பிறகுதான், சபைக்கு வரும் அந்தஸ்தினைப் பெற்றதுடன், யாழ்ப்பாணக் குஷினியின் தலைமைப் பதவியையும் சுவீகரித்தது. (யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலே இறைச்சியுடன் கலந்து உருளைக்கிழங்கு சமைப்பார்களா, அல்லது கிழங்குடன் கலந்து இறைச்சியை மணப்புப் பொருளாகச் சமைப்பார்களா என்பதை அறிவதற்கு ஒருவிசாரணைக் கமிஷன் நியமித்தால் நல்லது என்று நான் நினைத்ததும் உண்டு.)

மச்சம்-மாமிசம் சுவையாகச் சமைப்பதில் ஆச்சியைத்தான் உலக மகா சமையற்காரி என்று சொல்லுவன். அவ பயின்ற பாக முறைகள் வாகடமாகவும் கைவலியமாகவும் அமையும் என்பதிலே எனக்கு எற்பனும் ஐமிச்சம் இல்லை. அவ உயிருடன் இருந்த பொழுது இவற்றைத் தொகுத்து வெளியிடாதது, யாழ்ப்பாணச் சமையற் கலைக்கு நான் செய்து விட்ட மகாதுரோகம் என்று என் நெஞ்சு இப்ப நோவதுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



அந்தக் காலத்தில், பெரிய கடை மீன் மார்க்கெட் மகா பிரசித்தம். யாழ்ப்பாண மின்சார நிலையத்திற்கு மேற்கில். அதன் ஒரு சுவர் ராணி தியேட்டரைப் பார்த்தாற்போல இருந்தது. அதற்கு விளம்பரம் தேவையில்லை. அசைவ உணவுப் பிரியர்கள் கூட மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டும். தாவரப் பட்சிணிஞக்குக் குமட்டலில் குடல் வெளியேவந்துவிடும். அது ஒரு தனி உலகம். அங்கு மீன் விற்பவர்கள் பல size களிலும் shapeகளிலும் உள்ள பெண்களே. அவர்கள் அந்த உலகின் அல்லிராணிகள். அவர்களுடன் பேரம் பேசி மீன் வாங்குவதற்கு தனித் திறமை வேணும். அப்பையா 'பேக்கர்' தான். அவரை மீன்காரிகளாலே பேய்க்காட்ட முடியாது. இந்த திறமையை அங்கீகரிப்பது போல, எங்கள் பகுதி ஆம்பிள்ளைகள் மீன் கடைக்குப் போகும் பொழுது அப்பையாவுடன் ஒட்டிக் கொள்வார்கள். மீனை நவிச்சுப் பார்க்காமல், செப்பட்டையைத் திறந்து பூவின் நிறத்தைப் பார்க்காமல் மீன் நல்லதா நாறலாஎன்றுசொல்லும்திறமைஅப்பையாவுக்குஇருந்ததாம். யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் விளைமீன், கருங் கண்ணிப் பாரை, கல் திரளி ஆகியன நல்லவகை. கொழும்புத்துறைக் கலவாய், கொடுவா ஆகியன பெரிய மீன்கள். நல்லன, ஒட்டி, ஒரா, வெள்ளொட்டி, வாவல், கயல்ஆகியனவும்பிழையில்லை. கயலும் மணலையும் ஒரே உருவம். செதில் அமைப்பில் வித்தியாசம் காணவேணும். மணலை சீக்கிரம் நாறிப்போகும். கிளக் கண், நகரை, விளை-திரளிப் பொடிகள் பத்தியக் கறிக்கு ஏற்றவை. சுறாக்குட்டியும் ஏற்றது. முள் என்றாலும். நாவாந்துறைக் கொய்ச்சாளை மாங்காய்ச் சொதிக்கு ஏற்றது. சீலா, முரள் ஆகியன துண்டு போடும்- மீன்கள் பாலை ஒரு சீஸனுக்கு ருசியானது. சூடை, சூவாரை, கீளி, காரல் ஆகியன பொடி மீன்கள், சொதிக்கு அல்லது பொரியலுக்குத்தான் ஏற்றவை.

www.padippakam.com



பாரை எண்ட நினைப்பில் கட்டாப்பாரை அல்லது கண்ணாடிப்பாரை வாங்கினால் காசுக்கு மோசம். எறியால், அதக்கண், கெழுத்தி ஆகியன புதினமான உருவங்கொண்ட மீன்கள். எனக்கு விருப்பமில்லை, சுங்கான் ஒன்றுக்குள் மென்மையான சதையைவைச்சது போல சுங்கான்மீன், அரிது, கடற்கரையில் அதனைச் சுட்டுச் சாப்பிட்டிருக்கிறன். பருத்தித்துறைக் கடலிலே கிடைக்கும் நெத்தலி, தீயலுக்கு நல்லது. பெரிய கடைக்கு வருவதில்லை. தேறல் கிடைக்கும். அது அவ்வளவு ருசியில்லை. மயிலிட்டிச் சுறாவுக்குத் தனி மரியாதை உண்டு. திருக்கை மலிவானது. சின்னக் கட்டித் திருக்கை பால் சொதிக்கு ஏற்றது. சுறாவறை நுட்பமாகச் செய்யவேண்டும் (மீன்களைப் பற்றி ஒரு எச்சரிக்கை. மீன்களின் ருசி கடலுக்குக் கடல் மாறுபடும். யாழ்ப்பாண விளை பஹுருசி! ஆனால் மட்டக்களப்பு விளைமீனில் ஐடீன் வாசனை வீசும். மட்டக்கடப்பு வாவியில் கூட்டிலே பிடிக்கும் ஒட்டி மீனின் ருசிக்கு முன்னால், யாழ்ப்பாண ஒட்டி ஓரா நின்று பிடிக்காது. மட்டக்களப்பு மார்க்கட்டில் ஐந்துவகையான நெத்தலி மீன்கள் கிடைக்கும். இவற்றுள் பால் நெத்தலிதான் best)

கடல் உணவிலே, எப்பொழுதும் இறாலுக்கு ஒரு தனியிடம் உண்டு. யாழ்ப்பாணத்திலே ஒரு சில இறால் வகைகளே கிடைக்கும். வெந்தயக் குழம்பு யாழ்ப்பாணக் குஷினியின் அரிய சமையல். இறாலிலே வெந்தயக் குழம்பு ஒரு புதிய பரிமாணம். சொதிக்கும், பொரியலுக்கும், மரக்கறிகளின் 'மணப்பு'க்கும் இறால் யாழ்ப்பாணக் குஷினிகளில் பெரிதும் பயன்படும். இறாலின் வண்ணத்துக்கும் வகைக்கும் ருசிக்கும் மட்டக்களப்பு முதலிடம் பெறும் என்பது என் அபிப்பிராயம். மணல் இறால், வெள்றால், கருவண்டன்றால். மோட்டுறால், மட்றால், கூனி, சிங்கறால் என்று உம்பார வகைகள்

www.padippakam.com



மட்டக்களப்பில் கிடைக்கும். கூனி வலையில் அகப் படாது. கல்லாற்றுப் பகுதியில் சீலையால் வடித்து எடுப் பார்கள். மட்றால் பெரியது. மூன்று நான்கு இறால்கள் ஒரு கிலோ எடைக்குப் போதும். ஒரு காலத்தில் ஒரு காசுக்கு ஒரு இறால் வாங்கியிருக்கிறன். யப்பான் காரன் மட்றாலில் கொண்ட மோகத்தினால் மட்டக் களப்பாரின் சுவையில் மண் விழுந்தது. தங்கப்பாக்கிய ஆச்சி வெள்றாலில் வைக்கும் 'பால் பொரியல்' என்கிற வெள்ளைப் பிரட்டல் கறியின் சுவையும் உலக் மகா சுவைகளிலே இடம் பெறவல்லது. தனியாக் கூட்டு இருக்காது. இறாலுடன் இறுக்கமாக ஒட்டிக் கொள் ளும். அதனுடன் மூன்று கோப்பை சோறு சாப்பிட லாம், சீனன் எத்தனை வகையான sauce சேர்த்தா லும் தோற்றுப் போவான்.

யாழ்ப்பாணத்து அசைவ உணவுக்காரர் நண்டுக்கறி யின் மகாசுவைஞர்கள் என்பதை கொழும்பு- கோட்டை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கடைக்கு மத்தியானச் சாப்பாட்டுக்குப் போனால் மட்டிட்டுக் கொள்ளலாம். சுவைஞர்கள் நண்டுக்கு காலுடன்அல்லா டுவதையும், 'ஐயா வின்ரை காலை உடை' என்று பரிசாரகன் குரல் கொடுப்பதையும்...யாழ்ப்பாணத்திலே கடல் நண்டுதான் கிடைக்கும். அவற்றுள் நீலக்காலி விசேஷம். பூரணை காலத்தை அண்டி நண்டின் சதை கரையும். அதை ஊழல் நண்டு என்று சொல்லுவினம், சிங்களப் பகுதியே இலங்கை என்று மருளும் Sri lanka tourist board பிரசாரகர்கள் நீர்கொழும்பு நண்டுக்குச் குஞ்சங் கட்டி வைத்திருக்கிறார்கள். மட்டக்களப்பிலே கிடைக்கும் mud crab களின் சுவைக்கு முன்னால், ஏனையன முட்டுக்கால் போட வேணும், கூடு கட்டி நண்டு பிடிப்பது ஒரு கலை. மஞ்சந்தொடுவாயிலே, நேரம் போவது தெரியாது, புத்தி மகனுடன் நின்று நண்டு பிடிப்பதைப் பார்த்திருக்கிறன். என்ன இருந்

www.padippakam.com



தாலும் பன்னிச்சங்கேணி நண்டுக்குத் தனிக் கியாதி உண்டு. இரண்டு கிலோ எடையுள்ள கிடாய் நண்டுகள் சர்வ சாதாரணம். நாவற்குடாவிலுள்ள என் மச்சினன் ராசா வீட்டில் சமைக்கும் சினை நண்டுக் கறியின் சுவை யிலே தோய்கின்றேன்...

கணவாய்க்கறி original ஆகவே யாழ்ப்பாணச்சுவை என்பதை அடித்துச் சொல்லுவன் Calamari, cuttle-fish, squid என்று பல வகைகளும் தென்கிழக்காசிய உணவகங்களில் சுவையான Sea food dishes இல் முக் கிய இடம் பெறுகின்றன. மட்டக்களப்பில் மே மாசம் துவங்கும் ஒரு சீஸனில் மட்டும் ஊசிக் கணவாய் கிடைக் கும். சற்றே செந்நிறமானது. மூத்திரக் கணவாய். அது சமைக்க ஒவ்வா. முட்டைக் கணவாய், சாக்குக் கண வாய். குஞ்சுக் கணவாய், ஒட்டுக் கணவாய் எனப் பல வகையான கணவாய்களும் வருடம் பன்னிரண்டு மாதங்களும் கிடைப்பது யாழ்ப்பாணத்திலேதான். பாஷையூர், பண்ணை ஆகிய இடங்களுக்குப் போனால் முட்டைக் கணவாய் சகாய விலையில் கிடைக்கு. இந்த வகைதான் Supreme Taste. வயிறு நிறைய முட்டைகள். முட்டைகள் இரண்டு வகைத்து. குஞ்சு நீர்த்துப் பெட்டி யில் ஒரே அளவான முத்துக்களை அடைத்து வைத்தது போல ஒரு வகை. மற்றவகை இரணை இதர வாழைப் பழத்தை உரித்து அடைச்சு வைச்சது போலை குறுக்குப் பாட்டில் பெரிய துண்டுகளாக வெட்டி, குழம்பு தனியாக இல்லாமல் வறளும்படி, பொரியல் போன்ற பதத் துக்கு ஆச்சி வரட்டி எடுப்பா. குஷினிக்கலைக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட வேண்டும் என்று வகுக்கப்பட்டி ருந்தால், ஆச்சியின் முட்டைக் கணவாய்ப் பிரட்ட லுக்குக் கண்ணை மூடிக் கொண்டு பரிசு வழங்கலாம். சாக்குக் கணவாய் பெரியது. சிறு சிறு துண்டுகளாக வெட்டியாக்குவது பெரிய சபைகளுக்குப் பரிமாற அது தான் கட்டுபடியாகும். ருசி மத்திமம். கணவாயில்

www.padippakam.com



அளவாக மை எடுத்து. கூந்தலும் குஞ்சுக் கணவாய் களும் போட்டு, பச்சை மிளகாய் ஈரவெங்காயம் நிறைய அரிந்து போட்டு ஆக்கப்படும் மைச் சொதியை நான் யாழ்ப்பாணம் தவிர எங்கேயும் கண்டதும் இல்லை; சுவைத்ததும் இல்லை. இடியப்பமும் மைச் சொதியும் சோக்கான Combination. யாழ்ப்பாண மண்ணுக்குத் திரும்பிச் சென்று இந்த ருசியான கணவாய்க் கறிகளை எப்பொழுது சுவைப் பேனோ என்று என் நாக்கு எப்பவும் தவிக்கும்.

அவுஸ்ரேலியாவில் Lamb, Chicken; Chicken, Lamb என்கிற வாய்பாட்டிலே வசதி கருதிச் சமைத்துச் சாப்பிடும் தமிழர்கள்மீது எனக்கு எப்பவும் அநுதாபம் உண்டு. எதை எதையோ சம்பாதிப்பதான நினைப்பில் அவர்கள் எதை எதையோவெல்லாம் இழந்து கொண் டிருக்கிறார்கள். இழப்பவற்றுள் ஒன்று யாழ்ப்பாணச் சமையற்கலையும். Lamb என்பது செம்மறி ஆடு. அப்பையா இறைச்சிக் கடைகளில் இறைச்சி வாங்க மாட்டார். இறைச்சி என்றால் வேள்விக் கிடாயின் பங் கிறைச்சிதான். மகாத்மா காந்தியின் கொள்கைகளுக்கு பண்ணாடைகளாய் விளங்கிய யாழ்ப்பாணக் காந்திய வாதிகளின் பிரசாரத்தினால், குடாநாட்டின் கோயில் கள் பலவற்றிலே வேள்விகள் நிறுத்தப்பட்டன. அப் பையா தளர்ந்து விடவில்லை. செத்த இராமனின் துணையுடனோ, சிப்பித்தறை நாகமுத்துவுடன் கூட்டுச் சேர்ந்தோ, மாதத்துக்கு ஒரு தடவையாவது கிடாய் பங்கு போட்டு, அந்த இறைச்சியை ஆச்சியைக் கொண்டு சமைப்பிச்சு உண்டு மகிழ்ந்தார். இறைச்சிக் கறிக்கு சில விசேட வாசனைத்திரவியங்களை இரகசிய மாக உரலிலே இடிச்செடுப்பா. அந்தக் கறியின் வாசனை ஒரு மைலுக்கு அப்பாலும் மூக்கைத் துளைக் கும்! முத்திய கோழியை, கொச்சிக்காய் தூள் போடா மல் வெள்ளைக் கறி சமைப்பது ஆச்சியின் இன்னொரு

படிப்பகம்

www.padippakam.com



Speciality. அதற்குத் திப்பிலிப் பச்சைக் கொச்சிக்காய் தேடிப்போடுவா. அந்தக் கறிக்குத் தேங்காய்ப்பால் முக்கியம். இளங்கன்றுத் தேங்காயும், முட்டுக்காய்த் தேங்காயும் கறியைப் பழுதாக்கிப் போடுமாம், வீட்டிலே இரண்டு உசரித் தென்னைமரங்கள் இருந்தன. பாளைக்கு ஒன்று அல்லது இரண்டு காய்கள் நான் காய்க்கும், தேங்காய் ஆயிறவங்களை ஆக்கினைப் படுத்தாது, ஆச்சி, அந்தத் தேங்காய்கள் பழுத்துவிழ விட்டுவிடுவா. பழுத்து விழுந்தால் பக்குவப்படுத்தி வைப்பா. ஸ்பெஷல் வெள்ளைக் கறிக்கு மட்டுமே அந்தத் தேங்காய் பயன்படும். 'அந்தத் தேங்காய்ப்பால் சட்டியிலை எண்ணெயாகி, அதிலே இறச்சி பொரியுமெணை' என்று அதன் சூக்குமத்தை விளங்கப்படுத்துவா.

யாழ்ப்பாணத்துக் கலாசாரம் என்று புலம் பெயர்ந்த நாடுகளிலே மேடையேறிப் பேசுபவர்கள், யாழ்ப்பாண உணவுக் கலாசாரத்தை ஏன் மறந்தார் களோ நானறியேன். நா நோகா நாகரிகம் கதைத்து வாழும் அவர்கள் மத்தியிலே, இன்று நான் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள போதிலும், ஈழத்து உணவுகளின் ஓங்கு சுவையை நினைத்துப் பொச்சடிக்க நான் வெட்கப்படவில்லை. இந்தப் பொச்சடிப்பும் இணைந்ததுதான் தமிழீழ நாகரிகம், ★

www.padippakam.com

கோயில் அருகில் குளம்
ஆலம் விழுதுகள் நீரைத் தொட
அழுக்கு கரைய குளிப்பு
குளக்கரையில் படிக்கட்டு
ஓரமாய் குந்தியிருக்க
தென்றல் இலைகளைக் கலைக்க
அலையும் மனம்
நிலையில் வர
அதிலே பிறக்கும்
ஞானம்

# 12. குளம்

ஓடி வரும் நதிக் கரையில் முக்குளித்தல் மகா சுகம். அந்தச் சுகக் கற்பிதத்தில் கிறங்கிக் கண்களை மூடி னேனா? நதி நீராடற் சுகத்திலிருந்து முழிப்பு வந்ததும் சிறாம்பியடிக் கம்மாலையில் மாட்டுக்குக் குறிசுட்டது போலைஎன்னை மல்லாத்திக் கிடத்தி உண்மைகுறி சுடு கிறது. யாழ்ப்பாணத்திலே நதிக் கரையை எங்கே தேடு வேன்? பேருக்குத்தான் தொண்டமான் ஆறு. கீரிமலை யும்கேணியே. ஆனால், எத்தனை சுந்தரமான குளங்கள்? நீச்சலுக்கு நெடுங்குளத்தைப் போல சோக்கான குளம் இந்த லோகத்திலேயே இல்லை எண்டு சொல்லுவன். எத்தனை தடவைகள், நான் பாடசாலை மாணாக்க னாய், அந்தக் குளத்திலே நீச்சலடித்து மகிழ்ந்திருக் கிறேன்? அந்த அயலிலே கள்ள இளநீர் ஆய்ந்து குடித்து மகிழ்ந்திருக்கிறேன்? மகா சுகம்.

www.padippakam.com



நினைவின் இடையில் கெயில் (Keil) சேர் புகுந்து கொண்டார். ஆறாம் வகுப்பில் அவர்தான் சரித்திரம் படிப்பிச்சவர். பறங்கியரான அவருக்குத் தமிழ் தெரியும் எண்டு காட்டிக் கொள்ள நல்ல ஆசை. 'Do you understand?' என்று கேட்காமாட்டார் மனுஷன். 'முழங்கிச்சுதா?' என்று தன் புலமையைப் போட்டுடைத்து வகுப்பைக் குபீர் சிரிப்புக்குள் ஆழ்த்துவார்; மகிழ்வார். 'நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்' என்று பின்னாளில் தமிழாக்கப்பட்ட Our heritage நான் அந்தக் காலத்தில் சரித்திரம் கற்பதற்கான வேதம். கெயில் சேரின் சரித்திர ஞானம் அந்த நூலிலும் விசாலமானது என்பதை இப்பொழுது நிதானிக்க முடிகிறது! உலகின் குறிப்பிடத்தக்க நாகரிகங்கள் நதி ஓரங்களிலேதான் வளர்ந்தன. ஆனால் இலங்கையின் நாகரிகம் குளத் தங்கரையிலேதான் வளர்ந்தன என்று 'முழங்கப்' படுத்தினார்.

பண்டாரக்குளம் மட்டுமா குளம்? இன்னும் பல குளத்தங்கரையிலே, கற்றவையும் அநுபவித்தவையும் வலு சோக்கானவை. மழை காலத்திலே யாழ் நகர சபைக்குள்ளிருக்கும் குளங்கள் சில ஓடும் நதிகளின் கோலம் புனையும். தென்னிலங்கைக் குளங்களின் ஓரம் சத்தைப் பெற்று, யாழ்ப்பாணத்துக்கு நடுவே உள்ள குளம், ஆரிய குளம். அதன் கரையில், பருத்தித்துறை றோட்டுக்கு வழிவிட்டு, அரசமரத்தின் கீழ் குந்தியிருக்கிறது புத்த சிலை. ஒரு காலத்தில், வைகாசிப் பௌர்ணமியில், தமிழ் மக்களும் அந்தப் புத்தருக்குத் தாமரைப் பூக்கள் சாத்திக் கும்பிட்டவை, அது இன-மத சௌஜன்யம் நிலவிய காலம். பெருக்கெடுக்கும் ஆரிய குளம், நாக விகாரைச் சந்தியில் குறுக்கறுத்து, றெயில் பாதைக்குக் கீழால் நுழைந்து, தர்மாஸ்பத்தரியை வலம் வந்து, மணிக்கூட்டு வீதியைக் குறுக்கறுத்து, அதன் விலாவிலே ஓடிப் புல்லுக்குளத்தைச் சந்திக்கும்.

www.padippakam.com



பெருக்கெடுக்கும் புல்லுக்குளம் உதைக்க, யாழ்ப்பாண போலீஸ் ஸ்டேஷனுக்குப் பின்னால் பாய்ந்து, அலுப் பாந்திக்கும் பண்ணைக்கும் இடையில் கடலுடன் கலக்கும். காகிதக் கப்பல்கள் செய்து, ஆரியக்குளச்சந்தியிலே, வாய்க்காலில் விட்டு, அவை கடலை நோக்கிப் போகும் விநோதத்தைப் பார்க்கக் கானெல்லாம் ஓடி, வழியைத் தவற விட்டு, பெரிய கடையெல்லாம் ஏமலாந்து திரிந்து கால்களும் மனமும் சோர, அழுது குளறி, புண்ணிய வாளன் ஒருவரின் தயவால், வீட்டுக்கு வழி கண்டு பிடிச்சதை எப்பவும் மறக்க மாட்டன். 'வெள்ளத்தைப் பார்க்கப் போன பொடிக்கு என்ன ஆச்சுதோ...' என்று அம்மா போட்ட கூச்சலால், நான் திரும்பியதும் வெண்தாடிக் கிழவரின் பொல்லால் முதுகில் வாங்கிக் கட்டிக் கொண்டதுதான் மிச்சம்!

சில மனப் பதிவுகளுக்குக் காரணம் இல்லை. ஆரிய குளம் ஒரு ஊத்தைக் குளம் என்ற படமே என் நெஞ்சில் நிலைத்துள்ளது. ஆனாலும், அதன் அயலிலேதான் நான் அளப்பரிய அநுபவங்களைப் பெற்றவனும். புத்த கோயிலை இடப் பக்கமாக விலக்கி வடக்கு நோக்கி நீளும் தார்வீதி, ஆரிய குளத்தைத் தாண்டியதும் 'கெற்றபோல்' தலையைப் போல, பலாலி றோட்டா கவும் பருத்தித்துறை றோட்டாகவும்கெவர்விடுகின்றது. றோட்டுக் கரையில், குளத்தின் வடக்கு அந்தலையாக, CTB 'டிறைவர்'கள் எல்லாருக்கும் தானே ஆசான் என்று அமைச்சர் முஹம்மது முன்னிலையில் அடித்துச் சொல்ல வல்லவரான 'சண்டியர்' பொன்ராசாவின் வீடு, அதற்கு முன்னால், வீதியின் மறுபக்கத்தில், யூ.டி.சி. தயாளத்தால் கட்டப்பட்ட மலசலகூடம். அதை உபயோகிக்கும் வாடிக்கையாளர் அடிக்கழுவுவதற்கு, குளத்துக்குள் மெதுவாக இறங்கும் கொங்கிறீட் பாதை. வீதியில் மக்கள் போக்குவரத்துப் பற்றிய



படிப்பகம்

www.padippakam.com



சுரணை இல்லாமல். வெட்கத்தைக் குலக்காகக் காட்டி அடிக்கழுவும் பெரிசுகளைப் பார்த்து நான் அரியண்டத்துடன் வெட்கப்பட்டது, இன்றும் நினைவில் உறைக்கிறது. இக்காட்சியாலும் ஊத்தை என்ற படம். ஆரிய குளம் வந்தினால் ஒரு நாத்தமும் வரும். அதனை 'செண்ட்' மணமாக ரஸித்து, குட்செற்றடிச் செல்லன் கரப்புக் கொண்டு குளத்திலே மீன் பிடிப்பான். பின்னர், அவனுக்குப் போட்டியாக ரெண்டு மூண்டு பேர் கரப்புகளுடன் கோதாவில் குதித்தார்கள். பெரும்பாலும் சேத்துக் கெழுத்திதான் கிடைக்கும். இந்த மீன்களை எப்படித்தான் தின்பார்கள் என்று ஓங்காளம் நாக்கு நுனிவரை வர நான் யோசித்த காலமும் உண்டு.

ஆரிய குளம் தாண்டிய பலாலிறோட்டு, இலுப்பையடிச் சந்தியைத் தாண்டும் வரை, மக்கிக் கிடங்கடி என்றே அழைக்கப்படும், மக்கிக் கிடங்கடியை மையமாகக் கொண்டு துளிர்த்த சமுதாய விழிப்புணர்ச்சியினால் நான் அதிகம் பயனடைந்தவன். இதை நன்றிப் பெருக்குடன் நினைவு கூரத் தவறியதிலலை. யாழ்ப்பாணத்துக் கட்டித்த சாதியத்தை அறுக்கும் வீரியத்தில் முதலில் தோன்றிய ஸ்தாபனம் சன்மார்க்க வாலிபர் சங்கம். அநீதிகளை எதிர்த்துப் போராட வேண்டும். போராட்டத்தில் உயிர்ப்பலி புனிதமானது. இவற்றை யாழ்ப்பாண மண்ணில் எண்பிப் பதிலும் இச்சங்கம் முந்தி நின்றது. போராட்டம் என்பது தலைமுறை தலைமுறையாக முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய ஒன்று என்கிற ஞானமும் அவர்களுக்கு இருந்தது போலும். இதனால், சங்கத்தின் 'சிண்' போல மாணவர் தேர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டது. பேச்சிலும் எழுத்திலும் சிறுவர்களுக்குத் தேர்ச்சி அளித்தல் அதன் கொள்கையாக வகுக்கப்பட்டது. அதிலே பெற்ற தேர்ச்சியாலேதான் நான் பேச்சாளனாகவும். எழுத்தாளனாகவும் பெயரெடுத்

www.padippakam.com



தேன் என்பது சத்தியம். இத்துறைகளிலே என் முழு முதற் குரு தம்பையா என வழங்கிய என் பெரியண்ணர் தான். அவர் பிற்காலத்திலே 'கொஸ்தா' வாக வாழ்ந்து தமிழ் ஆற்றலை முடக்கிக் கொண்டது தமிழுக்கு ஏற்பட்ட நட்டமே! கழகத்தின் கையெழுத்துப் பத்திரிகையாக 'ஞானோதயம்' வாராவாரம் சமர்ப் பிக்கப்பட்டது. அண்ணாவே என் பேச்சுக்கலை ஆசான். அதன் விரிவே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே நான் பேச்சுத்துறையில் நாட்டிய சாதனை. 'ஞானோ தயம்' அளித்த பயிற்சியின் செப்பமே இன்று நீங்கள் எஸ். பொ எழுத்துக்களாக வாசிப்பவை. வாலிபர் சங்கம் வாசிப்புப் பழக்கத்தை மலிவிப்பதற்காக ஒரு வாசிகசாலையும் நடத்தியது. பிற்காலத்தில், அதன் அபிவிருத்தி நிதிக்காக ஒரு நாடகமும் நடத்தப்பட்டது. நாடகத்தில் எனக்கு வில்லன் வேஷம். நான் நடித்த முதல் தமிழ் நாடகம் அதுவே. சமூக உணர்வுடன் பல கலைகளைப் பற்றிய தமிழ்ப் பயிற்சியும் ஞானமும் ஆரிய குளத்தின் அயலிலேதான் எனக்கு வாலாயமா யிற்று.

போராட்ட வீரர்களுக்கு உடற்பயிற்சியும் அவசியம் என்கிற அக்கறை வாலிபர் சங்கத்துக்கு இருந்தது. வாசிகசாலை முன்றலில், வடிவான Volley Ball Court ஒன்று போட்டிருந்தார்கள். அதிலை பெரிய அண்ணன் மார்கள் கிரமமாகக்கரப்பந்தாட்டம்விளையாடுவார்கள். மற்றக் காரியங்களிலை ஒத்தாசையாக இருக்கும் அவர் கள், விளையாட்டிலே மட்டும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். துரத்துவார்கள். வளவுகளின் பின் பக்கம், குருணாசாமிக கோயில் முன்றல் என்று அலைக் கலைந்து, ஈற்றிலே சிறாப்பர் காணியை எங்கள் விளை யாட்டு மைதானமாகத் தேர்ந்தெடுத்தோம். அந்தக் காணியைச் சுற்றி ஏழைப்பட்ட அன்றாடங்காய்ச்சிகள் குடியிருந்தவை. உறவினர்கூட 'பள்ளத்துச் சனங்கள்'

www.padippakam.com



என்று ஒருவகை இகழ்ச்சியுடன் குறிப்பிடுவார்கள். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது, யாழ்ப்பாணத்திலே பெரிய அம்மை பரவியது. பள்ளத்து சனங்கள் பலர் செத்தவை, அப்ப ஒவ்வொரு நாளும் வீடெல்லாம் கூட்டிச் சுத்தம் செய்து, மஞ்சள் தெளித்து எல்லா இடங்களையும் வேப்பம் பத்திரங்களாலை சோடிச்சு, வீடுகளில் மச்சம் மாமிசம் எடுக்காமல்... இந்த சுகாதார இயக்கத்திற்கு எங்கடை அயலிலை பேப்பர் செல்லையாவும், விசாலாட்சி மாமியுந்தான் தலைமை தாங்கினவை. இந்தியாவுக்குப் போனவங்கள் கொண்டு வந்து சேர்த்தது எண்டும் கதைச்சவை. மரண பயத்திலை சீவிக்கிறது என்ன எண்டதை அப்பதான் உணர்ந்தனான். சிறாப்பர் காணியை விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு நாங்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இந்தக் காணி ஆரிய குளத்தின் கிழக்குப் பக்கத்தில் இருக்கு. என் மகளின் கல்யாணத்துக்கு அழைப்புக் கொடுக்கப்போன பொழுது, இந்தக் காணியில் என் மச்சான் குணரத்தினம் பெரிய வீடொன்று கட்டுவிச்சுக் கொண்டிருந்தான். அந்தக் காலத்தில் 'சைஸ்' வல்லியரின் வீட்டுப் பின் வேலியில் ஒரு பொட்டு சிறாப்பர் காணிக்கு வழி சமைத்தது. வல்லியரின் மகன் சண்முகமும் என் சின்ன அண்ணரும் (சின்னத்துரை) வலு கூட்டாளியள். இருவரும் ஒரே வகுப்பு. கல்லூரி Teamகளில் விளையாட்டு வீரர்களாக இருக்க வேணும் என்பது இருவரின் இலட்சியமும். அந்தக் காணியில் நாங்கள் கண்வைத்த பொழுது அது பள்ளத்துச்சனங்களின்கக்கூசாகவேபயன் பட்டது. பொடியளின்ரை வேண்டுகோளைச் சனங்கள் சட்டை செய்யவில்லை. நாங்கள் எல்லாரும் காசு போட்டு, நல்லாம்பியரின் உதவியுடன் ஒரு மந்திரவாதியைக் கூட்டியந்தனாங்கள். அவனும் மூலை முடுக்கெல்லாம் மிளகாயும் வேப்பங்குழையும் எரித்து ஏதோவெல்லாம் செய்தான். அவன் காணிக்குச் செய்த செய்

www.padippakam.com



வினைக்கும் பிறகு அதிலை கக்கூசுக்குப் போனால் மலவாசல் எல்லாம் எரிந்து இரத்தப் பேதி எடுக்கும் என்கிற செய்தி அயலெல்லாம் பரவியது. அப்பிடி நடக்கும் எண்டு நான் கண்ணானை நம்பினன். எது எப்படியோ, சிறிது காலத்தில் சிறாப்பர் காணியை எங்களுடைய விளையாட்டு மைதானமாக ஆட்சிப் படுத்திக் கொண்டோம்.

இந்த மைதானத்தில் எத்தனையோ கிறிக்கட் மாட்சுகள் நடந்தன. எல்லாத்துக்கும் எங்கட ரீம் சார்பாக நான்தான் ஸ்கோரர். நீட்டுப் பூவரசங் கம்பில் ஒவ்வொரு ரன்னுக்கு நகக் கிள்ளலால் ஒவ்வொரு அடையாளம் இடுவதுதான் ஸ்கோர் செய்யும் முறை. அதற்காகவே கூரிய நகங்கள் வளர்த்துக் கொண்டேன். ஏனைய கோஷ்டிகளுடன் 'சலேஞ்ச்' செய்வதற்காக ஆரியகுளம் கிறிக்கட் கிளப் உருவாகியது. உதைபந்தாட்டம், ஓட்டப் போட்டிகள் என்று அதன் நடவடிக்கைகள் விரிவடைய, அது 'ஆரியகுளம் ஸ்போட்ஸ் கிளப்' என்று பெயர் மாற்றம் பூண்டது. தலைவர்: சின்னத்துரை. செயலாளர்: சண்முகம். இருவரும் உயிரைக் குடுத்து கிளப்பின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள். மைதானத்திலிருந்து வடக்கு நோக்கி ஒரு குச்சொழுங்கை சென்று, 'மூளியலங்காரி' சின்னத்தம்பி ('நல்ல தங்காள்' நாடகத்தில் இந்த வேஷத்திலே நடித்துக் கியாதி பெற்றதினால் வந்த பட்டம்) வீட்டடியிலை டானாப்பட மடங்கி, மக்கிக்கிடங்கை நோக்கி நீளுகின்றது. சின்னத்தம்பியர் 'சளசண்டியாய்' எல்லாரோடையும் பழகுவார். அவருடைய மகன் நடேசன் (பிற்காலத்தில் 'கெட்டவன் நடேச'னாய் சண்டியன் பெயர் எடுத்தவன்) எங்கள் ரீமில் இருந்தான். அவன் என்னுடைய கூட்டாளியும். அவனுடைய வீட்டுக்குப் பின்பக்கமும் ஒரு படலை. அந்தப் படலையைத் திறந்தால், அத்தியடிப் பிள்ளையார் கோயில் மேற்கு வீதி.

www.padippakam.com



அத்தியடிப் பிள்ளையார் கோயில் வீதியிலும் ஒரு விளையாட்டுக் கழகம் உருவாகியது. அதன் முக்கிய உறுப்பினர்கள் என்.ஓ.பி. பஸ்கம்பனி முதலாளி நாக லிங்கத்தின் மகன்கள். மூத்த மகன் ரட்ணசிங்கந்தான் அக்கழகத்தின் தலைவர். இந்த இரண்டு கோஷ்டி களுக்கும் இடையில் பல்வகைத்தான விளையாட்டுப் போட்டிகளும் நடந்தன. உயரப் பாய்தலில் எதிர் வீரசிங்கம் என்கிற மெல்லிய நெடுவல் சுள்ளிப் பொடி யனை யாராலும் 'பீட்' அடிக்க ஏலாது. இந்த எதிர் வீரசிங்கந்தான் பிற்காலத்தில் உயரப் பாய்தலில் இலங்கை ரெக்கோட் ஏற்படுத்தியதுடன், உலக அரங் கத்திலும் பிறந்த நாட்டுக்குப் புகழ் சம்பாதித்துத் தந்தான்.

எங்கட விளையாட்டுக் கழகத்தின்முன்னணிவீரராக சண்முகம் வளர்ந்தார். உலகளாவிய புகழ் பூக்கா விட்டாலும், ஈழத் தமிழகத்தின் விளையாட்டு வீரர்கள் வரிசையிலே உரியதோர் இடம் பெற்றார். அதி வேகப் பந்து வீச்சாளராகச்சம்பத்திரிசியார்கல்லூரி First Eleven இல்இடம் பெற்றார். பரியோவான் கல்லூரிக்கு எதிரான போட்டியிலே Last Batsman ஆக வந்து, விக்கட்டை இழக்காது நின்று தமது கோஷ்டியின் வெற்றிக்கு வழி வகுத்தார். பின்னர், யாழ் மத்திய கல்லூரியின் கப்ட ணாகவும் உயர்ந்தார். அவருக்கு வாகு பந்து வீசுவதே. துடுப்பெடுத்து ஆடுகையில் பல ஸிக்ஸர்கள் அடித் தார். இதனால் ஸிக்ஸர் சண்முகம் என்ற பட்டம் அவருக்கு நிலைத்தது. அவருடைய தம்பி அம்பல வாணரும் நல்ல கிறிக்கட் ஆட்டக்காராகத் திகழ்ந்தார். உதை பந்தாட்டத்தில் சண்முகம் புகழ்மிக்க கோல் கீப்ப ராகத் திகழ்ந்தார். அவரைப் போன்றே புகழ் பூத்த இன்னொரு கோல் கீப்பர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கனகலிங்கம் என்று ஞாபகம். வாலிபர் சங்கத்தின்

www.padippakam.com



இலட்சியப் பணிக்கு எஸ்.பொ. மட்டுமல்ல, சண்முகமும் ஒரு சாட்சி எண்டதை நினைக்கப் புளுகமாய் இருக்கு.

ஆரியக் குளத்தின் மேற்குப் பக்கத்தில் வேறு கலாதிகள். மக்கிக்கிடங்கடி முகப்பிலிருந்து, அந்தக் காலத்தில், மக்கி ஒழுங்கை ஒன்று நாக்கிளிப் புழுப் போல நெளிந்து சேணிய தெருவை இணைக்கும். இந்த ஒழுங்கையிலைதான் சாயக்கார ஒழுங்கையும் சேரும். மக்கி ஒழுங்கையின் முகப்பிலே ஒரு மதகு. அந்த மதகுக்குக் கீழால்மக்கிக்கிடங்கடிவெள்ளம்பாயும். அந்த மதகோரம் காசிக் கிழவரின் வீடு. வெண்தாடிக் கிழவருக்கு இவர் 'ஒண்ட விட்ட' தம்பி.காசியரின் தாடியில் கறுப்பு மயிர்களும் கலந்து சாம்பல் நிறம் காட்டும். ஒழுங்கைக்கு மறுபக்கம் வாழ்ந்த கனகம்மாவிலை இவருக்கு ஒரே கறள். ஆட்டுக் குழை குத்தும் கம்பியை மதகிலே தீட்டிக் கொண்டு, ஒரே தனகுவாரம், வெண் தாடியர் பரம்பரைக்கு இது ஒரு வியாதி. 'அம்மான்' என்று செருமிக் கொண்டு அந்தப் பக்கமாக 'அந்த மான்' பொன்னர் வந்தால் காசியரின் அசுமாட்டத்தைக் காண ஏலா.

மதகுக்குக் கிழக்கில், தார் றோட்டுக்கு இப்பால் மருத மரங்களுக்கிடையில் ஒரு கொட்டில். சில சதுரத் தூண்களிலே அதன் ஓட்டுக் கூரை நின்றது. சில சமயங்களிலே அந்தக் கொட்டில் ஒரு தற்காலிகச் சந்தையாகவும் பயன்படுத்தப்பட்டது. அந்தத் தூண்களுள் ஒன்றுடன் சாய்ந்தபடி அந்தமான் பொன்னர் நிற்பதும் உண்டு. அவருடைய வீடு எங்கடை வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளி. அவருடையது கல் வீடு. பெரிய வளவும், முன்பக்கம் பூச்செடிகள். குஷினி வாசலில் ஒரு கிளிக்கூடு. அதற்குள் ஒரு பச்சைக் கிளி. அது வடிவாப் பேசும். கோயில் வளவிலை நல்ல கோவைப்பழங்கள் ஆய்ஞ்சு வந்து கிளிக்கு வைச்சிருக்கிறன். அவருடைய

www.padippakam.com



மனைவியைப் 'பாக்கியம் மாமி' எண்டு கூப்பிடுவம். அவ நல்ல சிவப்பியும் வடிவும். அந்தமானுக்கு ஆகிருதியான உடல். தலையிலும் நெஞ்சிலும் நரைகள் தோன்றத் துவங்கினாலும், பரந்து நிமிர்ந்த நெஞ்சு. யாரைக் கண்டாலும் தன் வீரப் பிதாபங்களையும் சொல்லாட்டில் ஒட்டை நாகேசருக்குப் பொச்சம் தீராது. ஆனால் அந்தமானாரைக் கண்டால், கிட்டக் கிழலைக்கும் பதில் சொல்லாமல் நழுவி விடுவார்.

இந்த மரியாதைக்கான காரணத்தை அப்பையாவிடம் கேட்டு அறிஞ்சனான். பொன்னர் இளங்காளையாக இருந்த காலத்தில், அவரை வம்புச் சேட்டைக்கு இழுத்திருக்கினம். வந்த விசரிலை பாளைக் கத்தியை எடுத்து அவங்களைச் சீவியிருக்கிறார். ஒருவன் அந்த இடத்திலேயே குளோஸ். ஆயுள் தண்டனை பெற்று அந்தமான் சென்றார். பதினாலு வருஷம் கழிச்சு நல்ல காசுடன் வந்தார். யோக்கியமாகக் காணி வாங்கி, வீடு கட்டி, பாக்கியம் மாமியைக் கலியாணம் கட்டி வாழ்கிறார். 'அந்தமான்' என்ற பெயர் ஒட்டிக் கொண்டது. அவர் சண்டியன் என்ற பயம் மக்கள் மனசிலை பதிஞ்சு போய்ச்சுது. அவருடன் கனகம்மா சளசண்டியாப் பழகுவா. மதகுக்குத் தெற்கில், மக்கி ஒழுங்கைக்குத் தெற்கில் ஒரு முக்கோணக் காணி. அதிலைதான் கனகம்மா குடியிருந்தவ. அதற்குத் தெற்கில் ஒரு குட்டி முச்சந்தி. ஸ்டான்லி றோட்டிறகு காலைகளுக்குப் பக்கத்தாலை வாற ஒழுங்கை அந்தச் சந்தியைத்தான் தொடுகிறது. அந்த முச்சந்தியில் ஒரு கள்ளுக் கொட்டில். அதிலே கள்ளுக் குடிக்கும் சில வாடிக்கையாளர், பெரிய முச்சந்திக் கடைக்குப் போய் சுத்துப் பத்த வைக்கப் பஞ்சுப்பட்டு, கனகம்மாவிடம் கொள்ளிக் கட்டை கேட்டுப் பத்த வைச்சுக் கொள்ளுறதைப் பாத்திருக்கிறன். கனகம்மாவைப் பற்றி 'கைவலியம்' சின்னப்பரின் மகன்

www.padippakam.com



சுப்பிரமணியம் ஏதோ வெல்லாம் பெரியண்ணரின் செவி களிலே கிசுகிசுத்தான். அதுக்குப் பிறகுதான் ரத்தின மும், இராசரத்தினமும் அவவைப் பாத்துச் சிரிக்கத் துவங்கினவை. எனக்கு அப்ப புதினம் விளங்கேல்லை. எனக்கு குணசிங்கந்தான் புதினத்தைச் சொன்னவன். கனகம்மா கொல்லைக்குப் போய் அடிக்கழுவாட்டிலும், ஒண்டுக்குப் போனால் கழுவுவாவாம். இதன் பொழிப்பு விளங்குவதற்கு முன்னர், கன்னாதிட்டிக் குளக்கரையில் மேயத் துவங்கினன். அப்பையா கன்னாதிட்டியில் குடியேறினதுதான் இதற்குக் காரணம்.

வண்ணைச் சிவனாரின் நெற்றிக் கண் வீச்சுக்கு வழி அமைப்பதுபோல வகிடு எடுத்துக் கிடக்கிறது கன்னா திட்டி வீதி. அந்த மக்கிறோட்டு தார்றோட்டாக்கப் பட்ட பொழுதுதான், அகஸ்தீன் சுவாமியாரின் புத்தகங் களிலை வாசிச்ச றோட் றோவரை முதலிலை பார்த்த னான். றோவர் சல்லிக் கற்களை அமத்துறது சோக்கு. பிறகுதான் தாரை உருக்கி றோட்டிலை வார்ப்பினம். துப்பல் போட்டுத் தார் உருண்டைகள் செய்து உடுப்பு களையும் பழுதாக்கியும் இருக்கிறன். செம்மா தெரு (இக்கால கஸ்தூரியார் வீதி)வுக்குக் கிழக்கில், அப்பை யாவின் காணியைத் தாண்டினால் கன்னாதிட்டிக் குளம். எங்கட வளவுக்குள்ளாலை போகும் வாய்க் கால், பழைய வின்ஸர் தியேட்டருக்கும் பின்னால் சென்று, ஸ்ரான்லி றோட்டைக் குறுக்கறுத்து வண் ணான் குளத்தைத் தொடுக்கும். இது சுமார் இருநூறு யார் நீளம். இதனால், இரண்டையும் ரெட்டைக் குளங் கள் எண்டு நினைச்சுக் கொள்ளுவன். வண்ணான் குளத்துக் காத்திலை ஏத்திய கொடியை, பக்குவமாக, வாய்க்கால் வழியாகக் கொண்டுவந்து, வீட்டின் வேப்ப மரத்திலை கட்டி ராவெல்லாம் பறக்க விட்டிருக் கிறம், இந்தத் திறிக்கீஸுகள் செய்யிறதிலை சின்னண் ணன் வலு விண்ணன்.

www.padippakam.com



Havesக்கும் Have-Nots க்கும் உள்ள ஏற்றத்தாழ்வு கள் பற்றி ஞானமும் எனக்கு கன்னாதிட்டியில் ஏற்பட்டிருக்கலாம். எங்கடை பள்ளத்துக் காணி, இரண்டு கோசு குளத்து மண் எடுத்து நிரப்பியிருக்கிறம், அப்பையாவுடைய இனசனங்கள் (பதினைந்து இருபது முழு ஆண் பிள்ளைகள்) வந்து இந்தப் பணிக்குக் கைகொடுத்தார்கள். வீட்டு 'மேச்ச'லுக்கும் இப்பிடித்தான். பிற்காலத்தில் சிரமதானம் பற்றிப் பேசிக்கொண்டம். வாளைச்சேனையில் அதிபராய் இருக்கக்கை 'கெயர்' வில்ப்கோத்துகலை வைச்சுச் சிரமதானம் நடத்தியிருக்கிறன். மனித கஷ்ட நஷ்டங்களிலே இணைந்து வாழும் இன ஒற்றுமை அற்புதம். அது கடைந்தெடுத்த மானுஷீகம். சம்பளம் இல்லை. உழைப்புத்தானம் செய்யும் உறவினர்கள் விருந்துண்டு களிக்கும் இன்பம். லோகாயுதப் பேராசைக்குள் சிக்குண்ட யாழ்ப்பாணம் இந்த அற்புதப் பண்புகளை எல்லாம் தொலைத்துவிட்டு முட்டுப் பட்டுக் கிடக்கிறது! குளத்தைப் பார்த்தாப் போலை, றோட்டுக்குத் தெற்கில் காளிகோயில். அதன் திருவிழாக் காலம் மகா கோலாகலம். பணம் படைத்தவர்களுடைய டாம்பீக பக்தியில் காளியாச்சி குளிர்ந்து போவாள். தமிழ்நாட்டின் நிலத்துண்டு ஒன்று அதன் அயலிலே பதிக்கப்பட்டது போலவும். 'வடக்கத்'தித் தமிழ் சர்வ சாதாரணம். அங்கொரு காலும் இங்கொரு காலுமாக வாழ்ந்தவர்களும் ஏராளம். நகைக் கடைகள். நகைகளை ஈடு வைக்கும் வட்டிக் கடைகள். கிலுட்டு நகைகளுக்குப் பொன் முலாம் போடும் கடைகள். சுறண்டுபவர்களை நாடி சுறண்டப்படுபவர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள். 'உவங்கள் காப்பொன்னிலும் மாப்பொன் எடுத்துப் போடுவாங்கள்" என்று அப்பையா தன் இயலாமையை மறைத்துக் கறுவிக் கொள்வார், 'யப்பான்' ஆறுமுகம், 'பிறண்டி' வேலுப் பிள்ளை போன்றவர்கள் மேட்டுக் குடியினரின் பெருமைகளையும் பவிசுகளையுப் காளிகோயில் திருவிழாக்

www.padippakam.com



களிலே புகுத்துவதில் முந்தி நின்றார்கள். 'மேட் இன் இண்டியா' எதிலும் சிறந்தது என்ற அகங்காரத்தையும் வளர்த்தார்கள். அளவெட்டி என்றால் லோக்கல். சதிர் காரிகளை விடுங்கள். மேளக் கூட்டமும் இந்தியாவிலி ருந்து வர வேணும். கிருபானந்த வாரியார் பிரசங்கம். 'வல்வெட்டித்துறையை விடுங்கள். வாரியாரை யாழ்ப் பாணத்துக்கு நாங்கள்தான்முதலிலைகொண்டந்தனாங் கள்' என்று 'மைக்' கட்டிப் புழுகினாங்கள். என் பிஞ்சு மனசுக்கு இந்தச் சடைத்த விதேசிய மோகம் எரிச்சிலை ஊட்டியது. 'கிருபானந்த வாரி ஏழைகள் பணத்தை வாரி' என்று ஆத்திரந் தீர அகப்பட்ட மதில்களிலே எழுதினன். அப்பையா எதிலும் யதார்த்தமானவர். 'இந்தியாவிலை இருந்து பெரிய கூட்டங்களைக் கொண்டு வாற சாட்டோடை தங்கத்தையும் கடத்திப் போடுவாங்கள். கோயில் திருவிழாவோடை அவங் களுக்கு ஒரு வருஷத்துக்கான சம்பாத்தியம்' எண்டு சொல்லுவார். அந்தக் காலத்தில் என் நெஞ்சில் ஊறிய நாத்தீகப் பற்றுக்கு கன்னா திட்டி அயலிலே நடந்த இந்தத் தில்லு முல்லுகளும் உதவியிருக்கலாம்.

குளத்தில் நிறையத் தாமரை குருத்துக் கிழங்கு புடுங்க இப்ப எனக்கும் தெரியும். அஞ்சனந் தாழ்வுக் கிழவி ஒருத்தி தினமும் தாமரை இலைகள் ஆய்வாள். அவற்றைச் சாப்பாட்டுக் கடைகளுக்கு விற்பதுதான் அவள் சீவனம். குளம் வற்றிய காலத்தில் முற்றிய தாமரைக் கிழங்கு கிண்டி எடுப்பார்கள். இதிலே அஞ்சனந்தாழ்வாரும் ஈடுபடுவார்கள். அந்தக் காலத்தில் புட்டுச்சந்தி மதகடியிலை 'துட்டுக்கு எட்டு' எண்டது போலை கொள்ளை மலிவு. தாமரைக்கிழங்குக் கறி ஆக்குவதில் ஆச்சி வலு விண்ணி. கண்ட சாதி யளும் கிழங்கு எடுத்ததினால் தண்ணீர் தீட்டுப்பட்டதாக வும் ஒரு ஆவேசம். இதனால், குளத்துத் தண்ணியை மறிச்சு, காளிகோயிலுக்கென்று ஒரு கேணி கட்டி

www.padippakam.com



னவை. வடிவான கேணி. மேட்டுக்குடியார் நீந்தி மகிழ்வார்கள். அந்தக் கேணியில் ஒரு நாள் பிணம் மிதந்தது. மூழ்கிச் செத்துப் போனான் எண்டு கதை. 'ஆரோ கொன்டு போட்டுக் கொண்டு வந்து போட்டிருக்கிறாங்கள்' எண்டது அப்பையாவின் யூகம். அந்த அயலிலை 'தச்ச மயிலன்' தான் சண்டியன். சுள்ளி உடம்பு. சுருள் வாளாலை யாரையும் வெட்டிப் போடுவான். அவன் காளி கோயிலடியிலை நிண்டால் பணக்காரர் பீச்சியடிப்பினம். ஆனால், அவனுக்கு அப்பையாவிலை ஒரு மரியாதை. 'அவன் நல்லவன்; உவங்களுக்கு அவன் தான் சரி' என்பார். நாவற்குழிக்குக் கிட்ட தச்சமயிலனைக் கொண்டு போட்டாங்கள் என்று செய்தி வந்தது. பணக்காரர் பட்டாசு கொழுத்திக் கொண்டாடதுதான் பாக்கி. கேணியில் பிணமாக மிதந்தவன் மயிலனின் கூட்டாளியாம்.

கடத்தலில் ஈடுபடாமலே, அப்பையாவுக்கு வருடா வருடம் 'பவுண்' கிடைச்சதும் புதினந்தான். நகைக்கடை வளவுகளின் வெள்ளம் எங்கடை காணியிலுள்ள வாய்க் காலில் விழுந்து தான் குளத்துக்குப் போகும். அடிபட்டு வரும் மணல் வாய்க்காலின் ஒரு பக்கம் பிட்டி கட்டிக் கிடக்கும். மணலை அரித்துப் பவுண் தூள் பெறும் வித்தையை அறிந்த இரண்டு இந்திய முஸ்லிம்கள் அப்பையாவுக்குப் பழக்கமானார்கள். வருடா வருடம் வளவில் மண் அரிப்பது நடக்கும். ஒருவர் நாகூர் பிச்சை. முஸ்பாத்திக் கதைகள் சொல்லுவார். அப்பையாவுக்குக் குத்தகைப் பணம் போல இரண்டாயிரம் மூவாயிரம் கொடுப்பார்கள். அவர்களுக்கும் நல்ல ஆதாயமாம். அப்பையாவுக்குச் சங்கு மார்க் சாறமும் கிடைக்கும். ஒரு தடவை மண் அரிக்கும் போது நீலக்கல் கிடைச்சது. நாகூர் பிச்சை எடுத்து அப்பையாவுக்கு கொடுத்தவர். முதலிலை அதை வீதுரோடு எண்டு தான் நினைச்சம். நகை

www.padippakam.com



செய்யும் சிங்கள பாஸ்தான் அது நல்ல நீலக்கல் எண்டு சொன்னவர். காசு தந்து வாங்கவும் விரும்பினார். 'பாஸ், நான் காசு தாறன். நீரே இதைப் பதிச்சு நல்ல மோதிரம் ஒண்டு செய்து தாரும்' எண்டு அப்பையா மடக்கிப் போட்டார், அந்தக் கல் மோதிரம் அப்பையாவின் விரலை நீண்ட காலம் அணி செய்தது. அது பரம்பரைச் சொத்தாக இப்ப என் தம்பி சொல் வேந்தனின் விரலிலை இருக்கக்கூடும் என்று நினைக் கிறன்.

இந்தக் காலத்தில் வண்ணான் குளத்தின் வடக்கி லும் மேற்கிலும் குப்பை கொட்டி மேடு படுத்தி, கடை கள் கட்டி அலங்கோலப்படுத்தி விட்டார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. யாழ்ப்பாணத்தின் அசுரத் தனமான காணிப் பசியை வண்ணான்குள அயலிலே தான் பார்க்கலாம். அந்தக் காலத்தில், காலை நேரங் களில், அந்தக் குளத்திலே, ஊரிப்பட்ட சலவைக்காரர் கள் வரிசையாக நின்று, 'உஸ்...உஸ்...' என்கிற ஒலி லயத்துடன் துணி துவைத்துக் கொண்டு நிற்பது கண் கொள்ளாக் காட்சி. உழைப்பினதும் சுறுசுறுப்பினதும் உயிர்ப்பு. சலவை செய்யப்பட்ட துணிகள், கிழக்குக் கரையில், வயல் ஓரமாக, பல நிறங்களிலே உலர விரிக் கப்பட்டிருக்கும். அதற்கு அப்பால், கிழக்கில் நெல் விளை யும் செழிப்பான கழனி. நெல் வளர்ச்சிப் பருவத்தின் அத்தனை வண்ணங்களும், அந்த வயல் வரம்பால் நடந்து அந்தலை அடைந்தால் லெட்சுமி மனுஷியின் குடிசை. 'வண்ணார' நாகலிங்கத்துடன் அவ புரட்சி கரமான இல்லறம் நடத்தும் கோயில்! ஸ்ரான்லி றோட் இரு மருங்கிலும், சிறாம்பியடிச் சந்திவரையிலும், செழுமையான தென்னத் தோப்புகள். யாழ்ப்பாணத் தின் பூர்வீக அழகும், ஆதி செழுமையும் அக்குளத்தின் வடகிழக்கிலே தெறித்துக் கிடந்தன. இன்று காணிப் பசியின் கோரக் காங்கை!

www.padippakam.com



குளத்தின் மேற்குக் கரையில் செம்மா தெருவும் பெரிய கடையை மருவிய கடைகளும். குளக்கரையில் நிற்கும் பாரிய மருத மரங்கள் காலைவேளையில் வீதிக்கு நிழல் கவிக்கும். குளத்தில் அந்தலையாக இருப்பது யோசப் சலூன். அந்த சலூனிலும், அதன் பக்கத்திலுள்ள மருத நிழலிலும், ராஜகோபாலனை ஆசானாய்க் கொண்டு எத்தனை இலக்கியப் படைப்பு களைத் திட்டமிட்டிருக்கிறன்? இவற்றை எல்லாம் யோசப் சலூன் 'சின்ன' முதலாளி டொமினிக் வசதிக் காக மறந்திருக்கலாம். இவையும் இணைந்ததுதான் என் வாழ்க்கை. மறவேன். குறுமுனி ஏ. ஜே. கனக ரத்னா குறும்புக்காரரும், அவர் அந்த சவரச்சாலையைச் சர்வகலாசாலை என்று செல்லமாகக் குறிப்பிடுவார். இதுபற்றி டொமினிக் ஜீவா வாயில் எச்சில் ஒழுகப் பெருமைப்பட்ட காலமும் உண்டு.

வண்ணான்குளம் பெருக்கெடுத்தால், யோசப் சலூனுக்குப் பின்னால் உள்ள வாய்க்கால் வழியாக-அது நீண்டு பெரிய கடையையும் மீன்கடையையும் பிரித்துச் சென்றது—புல்லுக்குளத்தில் கலந்து ஈற்றில் கடலை அடையும். புல்லுக் குளத்தின் தெற்கில் முற்றவெளி. 'முற்றவெளி மைதானம்' மாபெரும் பொதுக் கூட்டங்கள் எத்தனையோ கண்டது. இந்த மைதானத்திலேதான் யாழ். பொது நூல்நிலையம் எழுந்து நின்று, சிங்கள மிலேச்சத் தனத்துக்குச் சோரம் போனது! அந்தக் காலத்தில் அது புல்வெளி, பகலெல்லாம் மாடுகள் மேயும். வீடுகளிலிருந்து மாடுகளைச் சாய்ச்சு முற்ற வெளிக்கு மேய்ச்சலுக்குக் கொண்டு வருவதற்கென்றே 'பையன்கள்' இருந்தார்கள். ஆனாலும், முற்றவெளியில் ஒரு சாணகக் கும்பத்தை காணேலா. தலையில் கடகம் சுமந்து, சாணகம் பொறுக்கி வாழும் ஏழைகளும் இருந்தார்கள். பூவரசம் குழையை விட்டுவைக்காத யாழ்ப்பாணக் கமக்காரன் மாட்டு எரு வாங்க ஏங்கிக்

www.padippakam.com



கிடந்தான். பொதுக்கூட்டங்கள் வார இறுதியிலேயே நடக்கும். முற்றவெளியில் நடந்த எத்தனையோ கூட்டங்களைப் பற்றிய நினைவுகள் என் நெஞ்சிலே கும்மாளம் போடுகின்றன. தமிழ்நாடு கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் மூன்று மணிநேரம் சொல்மழை பொழிந்து புதியதோர் உலகிற்கு அழைத்துச் சென்ற அநுபவத்தை எப்படி மறப்பேன்? பீட்டர்கெனமன், என். எம். பேரேரா, கொல்வின், பிலிப் குணவர்த்தனா, தஹநாயக்கா ஆகிய தென்னிலங்கைத் தலைவர்கள் சமத்துவ சமவுடமை இலங்கையை உருவாக்க எத்தகைய ஆவேசத்துடன் பேசினார்கள்? மந்திரிப் பதவிகளுக்காக, அவர்கள் பேசியவற்றை ஏப்பமிட்டு வாழ்ந்தாலும், அவை என் இளநெஞ்சில் ஏற்படுத்திய கிளர்ச்சிகளை எப்படி மறப்பேன்? சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் மூலம் சமசமாஜ அரசியல் பேசிய துரைராஜசிங்கத்தின் தில்லு முல்லுகளை அம்பலப் படுத்தும் நோட்டீஸ் அச்சிட்டு மேடையிலேயே விநியோகித்தேன். தொழிலாளத் தோழர்கள் என்னை நையப்புடைத்தார்கள். என்னைக் காப்பாற்ற வந்த இராமசாமி ஐயரும், புத்தகக் கடைப் பூபால சிங்கமும் வாங்கிக் கட்டினார்கள். உடனேயே போட்டிக் கூட்டம் ஆஸ்பத்தரிச் சந்தியில் நடந்தது. நான் முக்கிய பேச்சாளன். இதன் தொடர் சங்கிலிச் சம்பவங்களும் பொன் கந்தையா எம்.பி.யாக வருவதற்கு உதவியதை மறப்பேனா? நானும், பின்னாளில் கம்யூனிஸ்ட் தொழிற் சங்கவாதியாகத் திகழ்ந்த குலவீரசிங்கமும் மாணவர் தலைவர்களாக இருந்த காலத்தில், நேதாஜி நினைவுக் கூட்டம் ஒழுங்கு செய்து, பதினாலு பேச்சாளர் மேடையிலே வீற்றிருக்க, எட்டுப்பேர் சபையோராக கலந்துகொண்ட கூட்டத்தைத் தான் மறக்க முடியுமா? ஏழுபேர் காற்று வாங்கிக் கடலை கொறித்துக் கொண்டிருந்தவர்கள். மற்றவர் அப்பையா. எத்தனை மாலைப்பொழுகளில், அந்த முற்றவெளியில்

www.padippakam.com



அமர்ந்து, புல்லுக்குளத்துச் சீதளக்காற்றின் சுகத்தில், வண்ணக் கற்பனைகளிலே தாவித் தனிமையை ரசித்திருக்கிறேன். உறவிலும் இன்பம் உண்டு; தனிமையிலும் இன்பம் உண்டு.

முற்றவெளிக்கு மேற்கில் முனியப்பர் கோயில். அதற்குப் பின்னணிபோல டச்சுக் கோட்டையின் பிரமாண்டம். அந்தக் கோட்டைக்குள் தனிக்கோபுரம் போன்ற கட்டடம் தெரியும். அது என்ன? ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி ஆசியராக நான் இருந்த பொழுது இதற்கான விடை கிடைத்தது.

'உது தூக்கு மேடை. முதலும் கடைசியுமாக ரெண்டு பேரைத் தூக்கிலிட்டார்கள். அதைத் தற்செயலாப் பாத்த பிள்ளைத்தாச்சி ஒருத்தி செத்துப்போனாள் எண்டும் சொல்லுகினம். சேனாதிராஜா கொலை வழக்கில் பண்டாரக் குளத்தடி முத்தனும் எல்லுவனும் குற்றவாளியளாக் காணப்பட்டு, தூக்குத் தண்டனை தீர்க்கப்பட்டார்கள். அவர்கள் இருவரும் குடிமைகள். கமக்காரர் சொன்னதைச் செய்த கருவிகள். கொலைக்குத் துணைபோயிருக்காட்டில், அவங்களுக்கே உயிராபத்து. உப்பிடியெல்லாம் காரணம் காட்டி வெள்ளைக்காரக் கவணர் துரைக்கு கருணை மனு அனுப்பினாங்கள். கவணர் தூக்குத் தண்டனையைக் குறைத்து, ஆயுள் தண்டனையாக்கினார். இந்தக் கட்டளையை மறைச்சு வைச்சு, தூக்குத் தண்டனையை நிறைவேற்றி, அதற்குப் பிறகு தான் கிடைச்சதாக நாடகமாடினாங்களாம். நீதியைச் சாகடிக்கும் சாதிமான்களுடைய அநியாயத்திலிருந்து பஞ்சைகளைக் காப்பாத்துறதுக்கும் இங்கை தூக்கிறதை நிப்பாட்டிப் போட்டினமாம். எல்லுவன் தூக்கிலை சாகேக்கை இருபத்திரெண்டு வயசு. அவர் தான் அப்புவின் மூத்தமகன்?' அப்பையாவின் இந்த விடை,

www.padippakam.com



'பண்டாரக்குளத்தடி முத்தன் கொண்டானே...' என்று வெண்தாடிக் கிழவர் நையாண்டி கொப்பரிக்கப் பாடும் பாடலுக்குப் பொழிப்பாகவும் அமைந்தது!

ஆரியகுளக் கரையில் உள்ளது போல, சிங்களக் கிராமங்களின் குளக்கரைகளிலே அரச மரங்கள் உண்டு. அவற்றின் கீழ் புத்த சிலைகளும் உண்டு. சிங்கள மக்கள் அறியாமையாலும் அகங்காரத்தாலும் இயற்றும் அநியாயங்களைப் பார்க்க ஒண்ணாது இச்சிலைகள் கண் மூடிக் கிடக்கின்றனவா? அவற்றுக்கும், அவற்றை வணங்கும் சிங்கள மக்களுக்கும் ஞானம் பிறக்குமா? ஆனால், யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள்ளிருக்கும் குளத்தங்கரைகளிலே நான் பெற்ற அநுபவங்கள் என் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இன்றளவும் உபகாரமாய் அமைகின்றன என்பதைப் பார் அறியப் பிரசித்தப்படுத்துவேன். எனக்குப் பெருமை. பிறந்த மண்ணின் பெருமை. அதன் ஆராதனையாகவும் நனவிடை தோய்தல் மகா சுகமானது. ★

ந—15

www.padippakam.com

சைவம் பரந்து வர
சைவர் விரிந்து வர
மெய்யிற் பொடி பூசி
மேன்மை அடைந்தவர்கள்
கந்தபுராண
கலாசாரம் ஒன்றேதான்
சொந்தம் என நிமிர்ந்து
சூரன் போர் ஆடியவர்
வேதாந்த ஞானம்
வேரூன்றாப் பூமியென
ஓதாமல் ஓதி
ஒருகால் உயர்ந்தவர்கள்
யாழ்ப்பாணர் என்ற
இறுமாப்புள வாணர்
கூழ்ப்பான முண்ட
குலம்!

# 13. கோயில்

காலநதி ஓடிக் கொண்டிருக்கிறது...அது எத்தனை கழனிகள், குடிசைகள், குளங்கள், கரைகள், படித் துறைகள் ஆகியவற்றைத் தழுவிக் கொண்டும், விலத்திக் கொண்டும் ஓடிக் கொண்டிருக்கிறது?... படித்துறைகளா? யாழ்ப்பாணத்துக் கோயில்களுக்குப் படித்துறைகள் உண்டா?

www.padippakam.com



கணவதி மாமாவின் முற்றத்தில் வளரும் தென்னங்கன்றிலே இலேசாக முதுகு சாய்த்த கோலத்திலே, நிலத்தில் விரித்த பாயிலே, அப்பையா அமர்ந்திருக்கிறார். ஆரச் சோர அமர்ந்து வெத்திலை போடுதல் அவருக்குப் பாந்தம். அவர் எதிலும் அவசரப்படமாட்டார். எதற்கும் நேரம் உண்டு என அவகாசஞ் சுகித்தல் அவர் போக்கு. பாக்கு வெட்டியால் ஒரு பிளவு நுங்குப் பாக்கினைத் தறித்து வாய்க்குள் போட்டுக் குதப்புகிறார். எங்களுக்குக் கழுத்து நோகிறாப் போலயும். பின்னால் வளரும் பனங்கூடலுக்கு மேலாலை, ஓமோம், இரண்டு மூன்று பனையுயரங்களுக்கு மேலாலை எத்தனை ஒளிச் சிதறல்கள்,... வானின் உச்சிக்குப் பறந்து சென்று, அங்கேயே வெடித்து, சிவப்பும்-பச்சையும்-ஊதாவும்-மஞ்சளுமானதீப்பந்தங்களைஏககாலத்தில் பீச்சியடிக்கும் மத்தாப்புகள்! திசை தப்பி வந்தது போல எங்கள் முற்றத்துக்கே வந்து விட்ட பூவிறிசுஒன்று, ஒரேநொடிப் பிலே, ஆயிரம் வெள்ளித் தூள்களை வானிலே தூவி பளிச்சிடும் பளபளப்புக் காட்ட...

''அத்தார், இனிக் கோயிலடிக்குப் போவம்...சந்திராட்டத்து எக்கனம் ஊரிப்பட்ட சனம் வந்திடும்...பொடியளுக்குப் பேந்து...'' என்று கணவதி மாமா, பொடியளின்ரை ஆக்கினை தாங்காமல் அவசரப்படுத்துகிறார். முத்துத்தம்பி குடும்பத்தார் போகும் பொழுதே, சின்ன மாமி, சோதிமாமி, சோதி மாமியின்ரை மூன்று பொட்டையள், செல்லம்மாக்கா எல்லாரும் போயிட்டினம். அவையள் பாய்களும் சுருட்டி எடுத்துக் கொண்டு போனவை. நானும் காங்கேசு மச்சானும் பெரிய எடுப்பிலை ஆம்பிள்ளையளோடை வாறம் எண்டு சொல்லீட்டம். ''இவன் கிட்டிணனும் வாற எண்டு சொன்னவன். அதுதான் பாத்தனான்...'' என்று சொல்லிக் கொண்டு அப்பையா எழுந்திருக்கையில், ''நான் வந்திட்டன் அண்ணை'' என்று குரல் கொடுத்துக்

www.padippakam.com



கொண்டே குஞ்சியும் வந்து சேர்ந்தார். அவசரம் இல்லாத அந்தக் காலத்தில், கோயில் திருவிழா என்றால் குடும்பங்கள் மூன்று நான்கு சேர்ந்து ஒன்றாத் தான் கோயிலுக்குப் போகும். நடுச் சாமத்தையுந் தாண்டித் திருவிழாக்கள் நடக்கும், வீட்டிலிருந்து பாய் கொண்டு போவதும் உண்டு. கோயிலில் புதுப்பாய்கள் வாங்கிப் பாவிப்பதும் உண்டு. குஞ்சு குருமான்கள் பாதித் திருவிழாவிலேயே தூங்கி விடுவார்கள்.

''உது முதல் பாட்டம் வாணங்கள், கோண்டாவில் செல்லத்துரை தத்தியாரின்ரை...பேந்து மேளக்கச்சேரி, அது அளவெட்டியார். அதுக்குப் பிறகுதான் இந்தியா வில் இருந்து வந்த சதிராட்டமாம்...இந்த வெள்ளணத் தோடை போய்க் கோயிலடியிலை என்னத்தை செய் யிறது?...'' என்று சொன்ன அப்பையா, ''எதுக்கும் பொடியளைக் கொண்டு போய் பொம்பிள்ளையளோடை விட்டுறது புத்தி...'' என்று சால்வையை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு எழுந்தார். கோயில் திருவிழாக்களுக்குப் போறது என்றாலும், கல்யாண வீட்டுக்குப் போறது எண்டாலும், அப்பையா கட்டாயம் சால்வை போட்டுக் கொள்வார். அந்தக் காலத்திலை அப்பையா போடுற சால்வைகளில் லாம்மிச்சம் வேரின் வாசனையும் கற்பூர போலைகளின் மணமும் வீசும்.

அந்தத் திருவிழாவுக்கு அம்மா வரேல்லை. அம்மா வும் அப்பையாவும் ஒண்டாத் திருவிழாவுக்குப் போனது எண்டது வலு குறைவு. சின்ன மாமி, மண்டபத்துக்கு வெளியாலை உள்ள வசதியான இடத்திலை பாயை விரிச்சு இடம் பிடிச்சுக் கொண்டா. நான் சின்ன மாமிக் கும் சோதி மாமிக்கும் இடையிலை பூந்து கொண்டன்.

மேளக் கச்சேரி என்று அழைக்கப்படும் நாதஸ்வரக் கச்சேரி துவங்கியது. பிற்காலத்தில், கன்னாதிட்டிக்

www.padippakam.com



காளிகோயிலில் நடைபெற்ற நாதஸ்வரக் கச்சேரிகளை ரசிப்பதற்கென்றே சென்றிருக்கிறன். அதனை ரசிப்பதற்கு ஓரளவு ஞானமும் தேவை என்பதைப் பிறகுதான் தெரிஞ்சு கொண்டன். அந்தக் காலத்திலை அது ஓர் அற்புதமான வித்தை எண்ட நினைவு. பூவரசம் இலையிலை நானும் காங்கேசு மச்சானும் செய்யிற குழலிலை திறமான கச்சேரி நடத்திப் போடுவம் என்று கூடத் தோன்றியது. சின்ன மனங்களின் பெரிய நம்பிக்கைகள். அண்டைக்கு எல்லா இடத்திலையும் சதுராட்டத்தைப் பற்றித்தான் பேச்சு. கோப்பாய்ப் பக்கம் இருந்துகூட மாட்டு வண்டில் கட்டிக் கொண்டு வந்தவையள் எண்டால் பாத்துக் கொள்ளுங்கோவன்.

அசுக்கிடாமல் கடலைக் கொட்டை கொறிச்சு, மெல்லமாப் படுப்பம் எண்டு நினைச்சிருப்பன் போலை ஒரு ஞாபகம். 'டக்' கென்று ஒரு பரபரப்பு. திருவிழா உபயகாரர் விசிறி மடிப்புச் சால்வைகளாலே சனங்களை விலத்திக் கொண்டிருந்தார்கள். இடையிடை நின்றவையளையும், தூணோடை சாய்ஞ்சுநிண்டவையளையும் இருக்கச் சொல்லியும், வெளியாலை போகச் சொல்லியும்...'சதுராட்டம் துவங்கப் போகுது' என்று எல்லாப் பகுதியிலும் பரபரப்பு...அப்பதான் ஒரு விஷயத்தை வடிவாக் கண்டனான். பெரிய பூவொன்று, இருபத்தைஞ்சு அல்லது ஐம்பது தாமரைப் பூக்களை ஒண்டா வைச்சுக் கட்டினதுபோலவும் பூப் போலவே தோன்றிய பெரிய பூங்கொத்து ஒன்று, அந்தரத்திலே தொங்கிக் கொண்டிருந்தது. அதை ஏன் இவ்வளவு நேரமும் கவனிக்காமல் இருந்தனான் எண்டதுகூடப் புதினமா இருந்தது. 'இந்தப் பூ என்ன?' எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்க, அந்தப் பூவின் கீழ், ஒரு பெண் ஆடாமல் அசையாமல் சபையோரைப் பார்த்து வணங்கிய நிலை

www.padippakam.com



யில் நின்றாள். ஐயோ, என்ன வடிவு! அப்படி ஒரு சிவப்பி. எத்தனையோ, கண்ணைப் பறிக்கும் நகைகள். சேலையில் இழையோடப்பட்டிருந்த ஜரிகைகள் கூட அசல் பவுணைப் போல, 'டால்' வீசின. திடீரென்று ஒரு வெடிச்சத்தம். மெல்லிய புகைப்படம் அந்தப் பூவைச் சூழ்ந்தது. மறுகணம் அந்தப் பூ பிய்ந்து இதழ் இதழாக.... கொஞ்ச நேரம் அந்த சதுர்க்காரியின் மீது பூ மழை பெய்து கொண்டே இருந்தது. சொர்க்கலோகமோ, அல்லது இந்திர லோகமோ, அங்கை இப்பிடித்தானாம்! அங்கையெல்லாம் இப்படிப் பூ மழை தான் பெய்யுமாம்!

இந்தச்சம்பவத்தை நினைக்கும்பொழுது, நனவிடை தோயாது கனவிடை தோய்வது சுகமாக இருப்பதாகவுந் தோன்றுது. பூ மழையிலே தோய்ந்து, பண்டாரக் குளத்துப் பிள்ளையார் கோயிலிலே அந்தச் சதுர்க்காரி ஆடிய அந்த சதிர்தான், என் கனவுலகக் காட்சிகளை வனைந்தெடுக்க உதவிய வஸ்தாக அமைந்தது என்பதை இப்பொழுது நிதானிக்க முடிகிறது. கனவுலகங்களின் நுழைவாயில் போலவும் இந்தச் சம்பவம் ஆழப் பதிந்துள்ளது. மேனகா, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை போன்ற தேவலோகத்துக் கன்னியர் பற்றிய கதைகளை வாசித்த பொழுதும்...கே.எல்.வி. வசந்தா நடித்த 'பூலோகரம்பை' படம் பார்த்த பொழுதும்,... 'சும்பா குசேலா' சினிமாவிலே குசேலசர் பி. யூ. சின்னப்பாவாக மாறி, 'மாலை சூட வந்தேன் மல்லிகா...' என்று பாடிக்கொண்டே டி. ஆர். இராஜகுமாரி மீது மையல் கொண்ட பொழுதும்...சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் '...நந்தகோபாலனோடு நான் ஆடுவேன்' என்ற பாடலுக்கு வைஜந்திமாலா அபிநயம் பிடித்த பொழுதும்... பின்னாளில் நான் பார்த்து ரசித்த எத்தனையோ நாடக கச்சேரிகளின் போதும் நீருக்குள் அமுக்கி வைத்து விடப் பட்ட ஒல்லித்

www.padippakam.com



தேங்காயைப் போல...நான் பண்டாரக் குளத்துப் பிள்ளையார் கோயிலிலை பார்த்த, அந்தப் பெயர் தெரியாத, முகந் தெரியாத, அந்த சதிர்க்காரி யினுடைய ஆட்டத்துக் கிட்டவும் நிக்க முடியாது என்கிற ஓர் எண்ணம் எதனால் என் மனத்திலே நிலை கொண்டிருக்கிறது?...அன்றைக்கு ஆடியவள்பெண்ணா? இல்லை, தேவதைதான்! தேவதைகளும், பேய்களும் மனித உருவிலே பூலோகத்தில் நடமாடுமாம்...அவர் களுடைய பாதங்கள் நிலத்தில் படியாதாம். எனக்குத் தெரிஞ்சவையளுள் அடிக்கடி பேய்களையும் முனிகளை யும் பார்த்தவர் ஓட்டை நாகேசர்தான்...ஒரு தடவை யாவது நான் பிள்ளையார் கோயில் முன்றலில் தேவ கன்னி ஒருத்தி நடனமாடுவதைக் கண்டு களிச்சனான் என்கிற கனவிலிருந்து நான் விழித்தெழவிரும்பவில்லை.

வாணவேடிக்கை, நாதஸ்வரக் கச்சேரி, தீப்பந்தங் கள் பிடித்தல், வாகனம் ஏறிச் சாமி புறவீதி சுற்றுதல், கடலை கொறித்தல், கோயில் வீதியின் ஒரு ஓரத்திலே ஆக்களுடைய கால் மிதிபடாமல் நித்திரை கொள்ளுதல், பிற்காலத்தில், இளமைத் துடிப்புகள் நெஞ்சிலே குதியாட்டமிட்ட காலத்தில், தெரியாத்தனமாகப் பட்டதுபோன்ற அபிநயத்துடன் துள்ளித் திரியும் சிட்டு களுடன் மோதி உரசல் இன்பம் பெறுதல்...இவற்றின் கூட்டு மொத்தமே யாழ்ப்பாணக் கோயில்களின் திரு விழாக்கள் என்பதைத்தான் இப்பொழுது நினவுகளுக்குக் கொண்டுவர முடிகிறது. இருந்தாலும், பெருந்தெருவில் அமர்ந்தோ, பாடல் பெற்றோ, பெரிய கனதனவான் களுடைய முகாமை பெற்றோ விளங்காமல், பண்டாரக் குளத்தையும், வெள்ளம் வந்தால் குடிசைகள் தண்ணீ ரிலே மூழ்கிப் போகும் பள்ளத்துச் சனங்களையும், மேட்டிலே காடாகிக் கிடந்த பனங் கூடல்களையும் பரி வாரமாகக் கொண்ட பண்டாரக் குளத்துப் பிள்ளை

www.padippakam.com



யாருக்கே இப்படித் திருவிழாக்கள் கொண்டாடப் பட்டது என்றால், அந்தக் காலத்திலே யாழ்ப்பாணத்துக் கோயில்களிலே திருவிழாக்கள் எவ்வளவு கோலாகல மாகக் கொண்டாடப்பட்டன என்பது உங்கள் கற்பனைக்கே...

நல்லூர்க் கந்தனின் உதய காலப்பூசைமணியோசை கேட்டு எழுந்திருப்பதை அப்பையா கடைசி வரையிலும் வாலாயப்படுத்தினார். அப்பவும் அப்படித்தான். விடியச் சாமத்திலே எழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டாத்தான் அவர்களுக்குப் பத்தியம். யாழ்ப்பாண மக்களுடைய உழைப்பின் இரகசியம் இந்த விடியற் சாமத் திருப்பள்ளி எழுச்சியிலேதான் தங்கியிருக்கிறதோ என்கிற ஐமிச்சம் எனக்கு இன்றளவும் உண்டு. நல்லூர்க் கந்தனின் உதயகால மணியோசை பண்டாரக் குளத்து அயலில் மட்டுமல்ல, சேணிய தெருவிலும், கன்னா திட்டியிலும் துல்லியமாகக் கேட்கும். விடிய வெள் ளெணை எழுந்திருக்கிறதிலை நான் எப்பவும் அப்பை யாவின் வாரிசு. போத்துக்கேயர் யாழ்ப்பாண இராஜ்யத் தைப் பிடிப்பதற்கு முன்பிருந்தே நல்லூர்க் கந்தசுவாமி கோயில், ஒரு ராஜதானியின் தலைமைக் கோயிலாகத் தலை நிமிர்ந்து நின்றதாம். போத்துக்கேயரின் திமிர்த்த கத்தோலிக்க வெறியினாலேகூட, இந்த நிமிர்வினை உடைக்க முடியவில்லையாம். இன்றைக்கும் யாழ்ப் பாண மாநகரத்தின் திருப்பள்ளி எழுச்சி அதன் மணி யோசையுடன் இணைந்துள்ளது.

நல்லூர்க் கந்தனின் சுற்று வட்டாரத்திலேதான் எத்தனை கோயில்கள்? தென் மேற்கில் கைலாய பிள்ளையார் கோயில், கல்லெறி தூரத்தில் சிவன் கோயில், அதற்கு மேற்கில் வீரகாளியம்மன் கோயில், வட கிழக்கில் சட்ட நாதர் கோயில், வடக்கில் கொன்றலடி வைரவர் கோயில், இடை

www.padippakam.com



யில் பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில். இத்தனை கோயில்களும் புடை சூழ நல்லூர்க் கந்தன் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறான். புகழிலும், விழாக்களை நடத்தும் பிரமாண்டத்திலும் ஏனையன நல்லூர்க் கந்தனுக்கு முன்னால் நின்று பிடிக்க ஏலாது எண்டது உண்மை. இருபத்தைந்து நாள்கள் தொடர்ந்த திருவிழாக்கள். இவற்றுள் சில திருவிழாக்கள் விசேஷ கூட்டத்தைக் கவரும். மஞ்சம், கார்த்திகை, சப்பிரம், தேர், தீர்த்தம் ஆகியன பேராதரவு பெற்றன. இறுதியில் பூங்காவனம். பூங்கா வனம் அன்று கந்தன் வள்ளியை மணம் புரிவதும், கோபங் கொள்ளும் தெய்வானை கோயிலை அடைத்து வைப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் பென்னம்பெரிய நாடகம் போன்று நிகழ்த்தப்படும்.

நல்லூர்க் கந்தனின் உற்சவ காலமாகிய இருபத் தைந்து நாள்களும் யாழ்ப்பாணச் சைவர்களுள் பாதிப் பேர்களாவது விரதம் அனுஷ்டிப்பர். அம்மாவுந்தான். ஆனால், அப்பையா மட்டும் மசியமாட்டார். அம்மா வின் அகோர விரதத்துக்கு இடைஞ்சலும் செய்ய மாட்டார். தன்னுடைய விருப்பு-வெறுப்புகளை மற்றவர் கள்மீது, தன்னுடைய பிள்ளைகள் மீதுகூடத் திணிக் காத ஒரு நாகரிகத்தினை அவர் இறுதிவரை கடைப் பிடித்து வந்தார்.

இன்றைக்கு 'ஜனநாயகம்' என்ற சொல் எப்படி எல்லாம் பிசக்குப்படுகின்றது? தங்களுடைய சுய நலங் களை, பயங்களை, இயலாமைகளை மூடி மறைப்பதற்குக் கூட ஜனநாயகம் என்கிற சிங்காரச் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். நியாயத்தையும் தர்மத்தையும் தலைகளின் எண்ணிக்கையை வைத்துத் தீர்மானித்துவிடலாமா? அப்பையா ஜனநாயகத்தினை மிக எளிமையாக விளங்கிக் கொண்டார். 'மற்றவர்

www.padippakam.com



களுடைய மனத்தைப் புண்படுத்தாத வகையிலே, நான் நினைத்ததைச் செய்யலாம்'. மற்றவர்களுடைய மனத்தைத் துன்புறுத்தாது இருத்தல் என்பதற்குத்தான் அழுத்தம்.

நல்லூர்க் கந்தனின் கீர்த்தி அளவுக்கு, அந்த கோயிலின் ராஜகோபுரம்உயர்ந்ததாக இல்லை என்கிற குறை எனக்கு எப்பவும் உண்டு. இராமேஸ்வரம், சிதம் பரம், சுசீந்திரம், தஞ்சை, மதுரை, திருச்சி, திருவரங் கம், காஞ்சி ஆகிய பல ஸ்தலங்களிலுமுள்ள வானுயர்ந்த கோபுரங்களை எல்லாம் பார்த்திருக்கிறன். அந்தக்கோபு ரங்களின் பிரமாண்டங்களுக்கு முன்னால்...சுசீந்திரத் திலுள்ள அன்னசாலை மண்டபத்தைப் பார்த்துப் பிரமித்துப் போனன். ஆயிரம் விளக்குகளை ஏந்தி நிற்கும் ஆயிரம் பாவைகள். அவை அமைந்துள்ள பீடங் களிலே வத்ஸாய கலைக்குச் சிற்ப விளக்கங்கள்...பிரக தீஸ்வர ஆலய கோபுரத்தின் நிர்மாண நுட்பம்... அடுக்கிக் கொண்டே போகலாம். ஒரு நடவை, இரவு வேளையில், இராமேஸ்வரத்திலிருந்து 'கள்ளத்தோணி' யில் கச்சச்தீவுக்குச் செல்ல நேர்ந்தது. இராமேஸ் வரத்தின் கோபுர தீபம், எத்தனை எத்தனை மைல் களுக்கு அப்பாலும் ஒளிகாட்டிற்று ! இன்னொருதடவை சுந்தரபாண்டியன் பட்டணத்திலிருந்து தொண்டி நோக்கிப் பஸ்ஸில் பிரயாணஞ்செய்தேன். திரு வாடானைக் கோயிலின் கோபுரங்கள், எத்தனை மைல் களுக்கு அப்பாலும் சுழன்று சுழன்று ரம்மியமான Land Mark ஆகத் தோன்றியது...ஒரு பிரமாண்ட கோபுரம் நல்லூர்க் கந்தனுக்கு வாய்க்காதா என்கிற ஆதங்கம் என் அடி மனத்தில் உறைந்துள்ளது.

இருந்தாலும், திருவிழாக் காலத்திலே அந்த அயல் முழுவதும் ஒரு சைவத் திருக்கோலம் திருத்தமாகப் படிந்துவிடும் செம்மையை எவ்வளவு அநுபவித்தாலும் தகும்...இந்தியத் திருத்தலங்கள் பலவற்றிலே 'பஜனை

www.padippakam.com



செய்யலாமா?'' என்று தூண்டில் போடும் 'டாப்பர்' களையும், தசை வியாபாரக் கூத்திகளையும் பார்க்கலாம். ஏன் இந்தியாவுக்கு? கதிர்காமக் கந்தனைச் சிங்களப் பேரினவாதம் தத்தெடுத்துக்கொண்ட பிறகு... என் ஒன்று விட்ட சகோதரன் நடராஜா கிரிந்த ஓயா அபிவிருத்தித் திட்டத்திலே ஓர் உலார்ந்தாவாகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். அவன் களியாட்டங்களை நாடிச் செல்லும்இடம் கதிர்காமமாம். காதல்-கவராடல்-கள்ளுண்ணல்—பொய் மொழிதல் ஆகிய அனைத்துப் பாவங்களும் புனித மாணிக்கக் கங்கையின் அக்கரையில், புனித கதிர்காமப் பிரதேசத்தில் புழுத்துப் பெருகிக் கிடப்பதை ஒருமணிநேரத்தில்காட்டிமுடித்தான்...வெண் தாடிக் கிழவர் ஆண்டு தோறும் கதிர்காம யாத்திரை சென்று வந்தவர். ஒரு குறிப்பிட்ட நாளிலே முழுகி, வேட்டி-சால்வை-அடப்பைப்பை ஆகியனவற்றுக்குக் காவி காய்ச்சுவார். அன்றிலிருந்து விரதம். ஒரே நேர மரக்கறி உணவு. மது-புகைத்தல்-வெற்றிலை போடுதல் ஆகிய அனைத்தையும் துறந்து விடுவார். நெஞ்சிலே ருத்ராட்ச மாலை தவழும். இதழ்கள் சதா கந்தன் பெருமையையே உச்சரித்துக் கொண்டிருக்கும். சினத்தைத் துறந்து விடுவார். அவரைத் தவக்கோலம் போர்த்திக் கொள்ளும். தாத்தாவிடம் பக்தியால் ஏற்படும் அபூர்வ Metamorphosis ஐப் பார்க்க ஆனந்தமாக இருக்கும். கதிர் காமம் சென்று வந்து, உறவினர்களுக்கு கதிர் காமக் கந்தனின் கருணையைப் பங்களிப்புச் செய்து, கங்கையின் புனித நீர் படிந்துள்ளத்தைத் தோய்ந்து நீக்கி, அடம்பன் பூசை செய்து, தான் இதுவரை காலமும் கந்தனின் சேவிப்பிலே துறந்த அத்தனை பண்டங்களையும் பானங்களையும் படைத்த பின்னரே, பழைய வெண்தாடிக் கிழவர் மீண்டும் பிறப்பார். அவர் கதிர்காமம் சென்று திரும்பியதாகத்தோன்றாது. கைலயங்கிரியைத் தரிசித்து

www.padippakam.com



மீண்டவர் போலவே தோன்றினார், என் மனைவி ஈஸ்பரத்தின் நச்சரிப்புகளிலிருந்து விடுபடும் உபாயமாகவுமே நான் கதிர்காம யாத்திரை களை மேற்கொண்டவன். நடராஜா மூலம் கதிர்காமத்தின் அபூர்வ 'புதின'த்தினை அறிந்த பின்னர், கதிர்காமத் திசையிலே தலை வைத்துப் படுப்பதைக்கூட மறந்து விட்டேன்...ஆனால், திருவிழா காலங்களிலே நல்லூர்க் கந்தனின் அயலிலே இன்றளவும் சைவத் திருக்கோலம் கவிதல் என் அநுபவம், மனசுக்கு முழு அமைதி தரும் அப்படி ஒரு Serenity!

திருவிழாக் காலத்தில், ஆனைப்பந்தியிலிருந்து, கந்தர் மடத்திலிருந்து, முடமாவடியிலிருந்து, கல்வியங் காட்டிலிருந்து நாயன்மார் கட்டிலிருந்து, கைலாய பிள்ளையார் கோயிலடியிலிருந்து... நல்லூர்க் கந்தசாமி கோயில் பிரகாரம் துவங்கிவிட்டது போல பக்தர்களுடைய நடமாட்டம் இருக்கும். சேணியதெருவுக்கு அண்மையில் இருந்தது ஆனைப் பந்திதான். ஆனைப்பந்தியைப் போலவே ஏனைய முக் கிய இடங்களிலும் தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்படும். றோட்டுக்கும் நிழல் தரும் வகையிலே, அதற்கு மேலால் கொட்டில் கட்டி வேய்வார்கள். றோட்டின் ஓரமாக தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்படும். தண்ணீர்ப் பந்த லுக்குக் கிடுகுத் தட்டியால் இலேசான மறைப்பு. அத் தட்டியிலே மூக்குப்பேணிகளைக் கவிழ்த்து வைப்பதற்கு கொம்புகள் இருக்கும். ஒவ்வொரு பந்தலிலும் இருபது முப்பது பேணிகள் இருக்கும். பெரிய பெரிய கிடாரங் களிலும் அண்டாக்களிலும் பக்தர்களின் தாக சாந்திக் காகச் சக்கரைத் தண்ணி, மோர்த் தண்ணி, ஊறு காய்த் தண்ணி ஆகியன வைக்கப்பட்டிருக்கும். கேட்கும் பானத்தை அள்ளி வழங்குவதற்கு, விபூதிப் பூக்சு களுடனும் சந்தனப் பொட்டுகளுடனும் உதவியாளர்கள் காத்து நின்றார்கள். யாருக்கும், எதுவும் இலவசம்.

www.padippakam.com



சுவை ரஸனைகள் வேறுபட்டன. எனக்கு எப்பவும் ஊறுகாய்த் தண்ணிதான் பிடிக்கும். தண்ணீர்ப் பந்தல் அமைந்துள்ள றோட்டுப் பகுதி முழுவதும் அடிக்கடி தண்ணீரால் கழுவப்பட்டு, எப்பொழுதும் குளுகுளுவாக இருக்கும். தினமும் எத்தனை மூட்டை சக்கரை, எத்தனை ஜாடி ஊறுகாய், எத்தனை பானை தயிர், எத்தனை மூட்டை எலுமிச்சங்காய்கள் ஒவ்வொரு தண்ணீர் பந்தலுக்கும் தேவை என்று நினைத்து நான் அதிசயிப்பேன். யாழ்ப்பாணக் கலாசாரத்தின் தனித்துவத்துக்கு பனைமரம் எவ்வளவு உதவியதோ, அந்த அளவுக்கு மூக்குப்பேணிகளும் பங்களிப்புச் செய்தன என்பதை இப்பொழுது நிதானிக்க முடிகிறது.

அந்தக் காலத்தில் வீடுகள் தோறும்; தேநீர்க் கடைகள் தோறும், விருந்துகள் தோறும் மூக்குப் பேணிகள் சர்வ வியாபகமாக இருந்தன. பித்தளை மூக்குப் பேணிகளை விற்பதற்கு நல்லூர்க் கந்தசாமி கோயிலடியில் வெங்கலக் கடைகள் இருந்தன. ஒவ்வொரு கோசும் அம்மா ஒரு மூக்குப் பேணி எண்டாலும் வாங்கிப் போடுவா. மினுக்கி எடுத்தால் பளபளப்பாக இருக்கும். கொஞ்சக் காலத்தில் உள்ளே பூசியிருக்கும் ஈயம் தேய்ஞ்சு போகும். அப்ப அதிலை ஏதாவது குடிச்சால் செழும்பு மணக்கும். ஈயம் பூசினால், மறுபடியும் சோக்கா வந்திடும். தண்ணீர்ப் பந்தல்களிலே பித்தளை மூக்குப்பேணிகள் இருக்காது. திருவிழாக் கூட்டத்திலை கள்ளப்படைகள் அடிச்சுக் கொண்டு போனாலும் போயிடும். திருட்டு எண்ணத்தை ஊக்குவித்தல் அடாதுஎன்பது போல, தகரமூக்குப்பேணிகளே பாவனையில் இருந்தன. செம்மா தெருவில், ஒடுக்கமான ஒரு சின்னக் கடைக்குள், ஒரு சோனகக் கிழவன் தகரத்திலே மூக்குப்பேணிகள் செய்துகொண்டிருப்பார். பேணியிலே மூக்கை வைச்சு ஒட்டுறது, பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கும். எத்தனையோ

www.padippakam.com



தடவைகள் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருக்கிறன். பாத்திரத்திலே வாய் வைச்சுக் குடிக்கக்கூடாது, அண்ணாக்காகக் குடிக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்கும், பயிற்சியிலே கொண்டு வருவதற்கு இணக்கப்பட்டது தான் மூக்குப்பேணி. இந்தத் தகர மூக்குப் பேணிகள் கோப்பி மண்டியாலும், தேயிலைக் கறையாலும் சீக்கிரமே கறுத்துக் கறல் பிடிச்சிடும். இந்தக் கறல் பிடிச்ச மூக்குப் பேணிகளிலை குடிக்கிறது எனக்கு அரியண்டம். கிளாசிலே குடிக்கவேணும் எண்டால், மூன்று கடைகளே பெரிய கடை வட்டாரத்தில் இருந்தன. இரண்டு முஸ்லிம் ஓட்டல்கள்; மற்றது சிற்றி பேக்கரி. மூக்குப் பேணிகள் யாழ்ப்பான நாகரிகத்திலே செலுத்திய செல்வாக்கினை உய்த்துணர்ந்த இன்னொருவர், இப்பொழுது மெல்பேனில் வாழும் என் நண்பர் காசிநாதர். அவர் வீட்டிலே ஒரு பித்தளை மூக்குப்பேணி கண்டனான் ''பொன்ஸ், இது ஒரு மக்கான பாரம்பரியச் சொத்து... இது இல்லாவிட்டால், அந்தக் காலத்திலை, நாங்கள் எப்பிடிக் கோப்பி குடிச்சனாங்கள் எண்டதை என்ரை மகன் எப்படி அறிவான்?'' என்று காசியர் கேட்டதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

நல்லூர்க் கந்தனுக்கு நேர்த்திக் கடன் வைச்சு, தொலை தூரத்திலிருந்து 'பிரதட்டை' செய்துகொண்டு வருவார்கள். தார் உருகும் வீதியில், கொளுத்தும் வெயிலில், பக்தர்கள் பிரதட்டை செய்து வருவது உருக்கமான காட்சி. தங்களை ஒறுத்து, உடலை வருத்தி, கந்தனின் கருணையைச் சம்பாதிக்கும் முறை இது. பிரதட்டை செய்பவர்களுக்கு உற்சாகம் கொடுப்பதற்காக உறவினர்களும் நண்பர்களும் பிரதட்டை பண்ணுபவருக்குப் பின்னால், கந்தன் புகழ் பாடிக் கொண்டும், அரோகரா கோஷம் எழுப்பிக் கொண்டும்

www.padippakam.com



வருவார்கள். இந்தக் கோஷ்டிகளுக்குத் தண்ணீர்ப் பந்தல்கள் மகா வரப்பிரசாதமாகும்.

திருவிழாக் காலத்தில் நல்லூர் வீதியில் ஏராளமான கடைகள். சகல விதமான சாமான்களும் வாங்கலாம். பெண்கள் தாங்கள் விரும்பும் பொருள்களைத் தெரிந்து வாங்குவதற்கும் திருவிழாக் காலம் உதவும். பூங்காவனமன்று அல்லது மறுநாள் சாமான்களைச் சற்று மலிவான விலைக்கு வாங்கலாம் என்பதை அநுபவஸ்தர்கள் அறிவார்கள். 'கீ' குடுத்தால் ஓடும் வாகனங்கள், அசையும் பொம்மைகள், சுழலும் குஞ்சங்கள் ஆகிய யப்பான் சாமான்களும் கொள்ளையாக் கிடைக்கும். யப்பான் சாமான் என்றாலே, இரண்டு மூன்று நாள்களிலே உடைந்துவிடும் தரக்குறைவான பொருள்கள் என்ற அர்த்தமே யாழ்ப்பாணத்தில் வழங்கி வந்தது. காலம் எப்படித் தலைகீழாகிவிட்டது? இன்று 'Made in Japan' என்பது ஒரு பொருளின் தரத்துக்கான உத்தரவாதம் என்றல்லவா மாறிவிட்டது?

கந்தனின் புகழை நினைக்கும் பொழுது, இடையிலை குரும்பசிட்டியின் ஞாபகம் வருகிறது. பலாலி றோட்டில், வசவிளான் சந்திக்கு வருவதற்கு முன்னாடி நாச்சிமார் கோயிலடியில் இறங்கி, மேற்கிலுள்ள புகையிலைத் தோட்டங்களை விலத்திக் கொண்டு, மக்கி றோட்டில் ஏறி நடந்தால் குரும்பசிட்டி. யாழ்ப்பான கலாசாரத் தூதுவனாக வெளிவந்து கொண்டிருந்த 'ஈழகேசரி' பத்திரிகையை நடத்திய பொன்னையா பிறந்த ஊர். இரசிகமணி கனக செந்திநாதனின் நட்புக் கிட்டிய பிறகு, யாழ்ப்பாண விஜயத்தில் குரும்பசிட்டி செல்வதும் முக்கிய அம்ஸமாக அமையலாயிற்று. இரசிகமணி நடமாடும் வாசிகசாலை, அயலிலே நாடகக் கலைஞர் ஏ.ரி. பொன்னுந்துரையின் வீடு. அதற்குக் கிட்ட கவிஞர் கந்தவனம் வாழ்ந்தார். பொன்னையா

www.padippakam.com



துவக்கிய இலக்கியப் புரவலர் மரபின் கடைசிக் கொழுந்தாக சபாரத்தினம் வாழ்ந்தார். அங்கு சென்றால், இலக்கிய ரஸனையில் நேரம் எண்புரவிகள் பூட்டிப் பறந்து கொண்டிருக்கும். இரசிகமணியின் உற்சாகத்தினால் அவர், சு. வே., இ. நாகராஜன், குறமகள், நான் ஆகிய ஐவரும் இணைந்து 'மத்தாப்பு' என்ற நாவலை எழுதினோம். பின்னர் இ. நாகராஜனுடன் நானும் அவரும் சேர்ந்து 'மணிமகுடம்' என்கிற சரித்திர நாவலை நவரசங்களும் பொருந்துமாறு எழுதினோம். இரசிகமணி பழைமையிலே காலூன்றி, புத்திலக்கிய முயற்சிகளைச் சுவைத்தவர். அவருடைய நட்பினால், பழைமையின் ஆரோக்கியமான வளர்ச்சிதான் புதியது என்கிற ஞானம் பெற்றேன். அவரே என்னை தமிழ்முனி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஒரு தடவை, இரசிகமணி முன்னிலையில், பண்டிதமணி எனக்குச் செய்த ஞானோபதேசம் இன்றும் நல்லா நினைவிருக்கு. ''சைவமும் தமிழும் என்று சொல்வதற்குக் காரணம் உண்டு. தமிழர் பண்பாட்டினைச் செம்மையுறச் செய்தது சைவ சித்தாந்தம். வேதாந்தம் தமிழுக்கு அந்நியமானது. எனவே, தமிழ் அதனை நிராகரிக்கும். யாழ்ப்பாண கலாசாரம் தனித்துவமானது. அதற்குக் காரணம் யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரமாக வீறு கொண்டிருப்பதுதான்...'' சி. க. வின் தத்துவத்தை முழுமையாக விளங்கிக் கொண்டேன் என்று நான் பொய் சொல்லவில்லை. நல்லூர்க் கந்தனின் ஒங்கு புகழுக்கும், யாழ்ப்பாண கலாசாரத்துக்கும் ஒரு தொடுசல் இருப்பதை என்னால் உணரமுடிகிறது. இதனை உணராது கூழ்ப்பானைக்குள் விழுந்த பல்லிகள், எத்தனை உலகப் பண்பாட்டு மாநாடுகள் நடத்தினாலும் நமது தனித்துவப் பண்பாட்டு வேர்களின் உண்மைத் தன்மைகளை இனங்காணுதல் பீத்தல்

www.padippakam.com



தனமான முயற்சிகள் என்பதின் சாங்கங்களையும் என்னால் இனங்காண முடிகிறது!

கந்தபுரான கலாசாரத்துக்கு அப்பாலான கலாசாரங்களும் ஈழத்தமிழருடைய நம்பிக்கைகளிலே சுவறியுள்ளன என்பதும் மெய். சேணிய தெருவுக்கு வந்த பின்னர் என் சிந்தையைக் கவர்ந்தவர் அயலிலே எழுந்தருளியிருக்கும் வெங்கடேஸ்வரப் பெருமாள். சேணிய தெருவிலே, அக்காலத்தில் செறிந்து வாழ்ந்தவர்கள் சேணியர்கள். இவர்கள் நெசவாளர். ஆந்திராவிலிருந்து குடியேறியவர்கள். அஞ்சரிசிப் பஞ்ச காலத்திலை இங்கு வந்து குடியேறினவர்கள் என்று அம்மா சொன்னவ. அவர்கள் வீட்டிலே தெலுங்கு மொழி பேசினார்கள். அந்தக் காலத்தில் இருபது முப்பது தெலுங்குச் சொற்களை அறிந்து வைச்சுத் தூள் கிளப்பினேன். ஆந்திரர்கள் தங்களுடைய கலாசார விழுமியங்களைப் பேணுவதற்காகத் திருப்பதியானை மனசிலேநிறுத்தி இதனை நிர்மாணித்தார்களாம். புரட்டாசி மாதத்தில், சனிக்கிழமை தோறும் யாழ் குடாநாடே பெருமாள் கோயிலை நோக்கிப் படையெடுக்கும். புட்டுச்சந்திக்கு வடக்கே, நாவலர் வீதி குறுக்கறுப்பது வரையிலும் மணிக்கூட்டுத் தெருவிலுள்ள ஒவ்வொரு படலைக்கு முன்னாலும் எள்ளெண்ணெய்ச் சட்டி விற்பனை நடக்கும். குஞ்சுச் சட்டிகளும், முட்டிகளும். இவற்றின் சைஸுகளுக்கு ஏற்ற எள் கட்டிய முடிச்சுகள். அந்த முடிச்சுகள் வாசியாக எரிவதற்கான எண்ணெய். புரட்டாசி முடிஞ்சதும் பெருமாள் கோயிலிலே பொறிக்கி எடுக்கப்படும் இந்தச் சட்டிபானைகள் குட்டான் சோறு — கறி விளையாட்டுக்குச் சோக்கான சாமான்கள். புரட்டாசிச் சனியின் போது கந்தனுக்கும், அவன் அப்பன் வண்ணைச் சிவனுக்கும் இல்லாத மதிப்பு எப்படி இந்தப்



படிப்பகம்

www.padippakam.com



பெருமாளுக்கு வந்தது என்பது எனக்கு நீண்ட கால மாகப் புரியவில்லை. வழக்கம் போல, அப்பையா பேய்க்கர்தான் இதற்கும் விளக்கம் தந்தவர். சனீஸ் வரன் தன் ஆட்சி உச்சம் பெறும் காலத்தில் யாரையும் பிடிச்சு அலைக் கழிச்சுப் போடுவான் என்பது ஐதீகம். தேவர்களும் இதற்கு விதிவிலக்கில்லை. ஒரு தடவை சிவனைப் பிடிப்பதற்காக சனீஸ்வரன் துரத்தினானாம். அப்ப சிவன் ஓடிப்போய் நீருக்கடியில் ஒளிந்து கொண் டாராம். திக்கு முக்காடும் தமது மூச்சினைப் பிடித்துக் கொண்டு, பாற்கடலிற் பள்ளிகொள்ளும் விஷ்ணுவைப் பார்த்து, ''சனீஸ்வரன் வாற சிலமன் தெரியுதா?'' என்று பரிதாபமாகக் கேட்டாராம். ''உம்மை அவன் பிடித்த படியாத்தானே நீர் நீருக்குள் கிடந்து முக்கித் தவிக்கிறீர்?'' என்று சிரித்தபடி விஷ்ணு விளக்கினா ராம். இந்தக் கதைகளை எல்லாம் அப்பையா பக்கத்தில் நின்று பார்த்தது போலை சொல்லுவார். சனீஸ்வரன் பார்வைபடாத ஒரேயொரு தெய்வம் விஷ்ணுதானாம். அம்மா புரட்டாசிச் சனிவிரதம் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிப்பா. விரதம் இருந்து சமைத்த பதார்த்தங் களின் ஒரு பகுதி இலையில் எடுத்து முற்றத்தில் வைக்கப்படும். அதனைக்காகம்வந்து சாப்பிட்டாத்தான் விரதக்காரர் சாப்பிடலாம். காகம் சனீஸ்வரனுடைய வாகனமாம். ஒரு தடவை அம்மா முற்றத்திலே வைத்த விரதச் சாப்பாட்டைக் காகங்கள் எட்டியும் பார்க் கேல்லை. ஆனால், அப்பையா கோடி நாவல் மாத்துக் கீழை சமைச்ச கணவாய்க் கறியோடு வைச்ச சாப் பாட்டைக் காகங்கள் விழுந்தடிச்சுக் கொண்டு சாப் பிட்டன. ''இந்தக் காகங்களுங்குக்கூட மரக்கறிச் சாப்பாடு அவ்வளவு இறங்கிறதில்லை...'' எண்டு பகிடி பண்ணினவர். பாவம். அம்மாவுக்கு அழுகையும் வந்திட்டுது. பக்கத்து வீட்டு மனுஷி வந்து, தண்ணீர் தெளிச்சு, ஏதோ பரிகாரம் எல்லாம் செய்த பிறகு, ஒரு

படிப்பகம்

www.padippakam.com



மணி நேரம் கழிச்சு ஒரு நொண்டிக் காகம் வந்து, ஒரு கவளம் கொறிச்சு அம்மாவை காப்பாற்றியது. அப்பையா உள்ளத்தால் வைதீகர். அவருடைய பேச்சும் போக்கும் அசல் நாத்தீகர் போலவும் இருக்கும். ஆனால், அம்மா செத்த பிறகு இந்தப் புரட்டாசிச் சனி விரதங்களையும் அப்பையா பக்தி சிரத்தையுடன் பிடிச்சவர். கிருஷ்ண லீலா சம்பந்தப் பட்ட விழாக்களும் பெருமாள் கோயிலிலைதான் நடக்கும். பெருமாள் கோயில் முன்றலில் ஒரு பெரிய புங்கை மரம் நின்றது. குக்கல் வரும் பிள்ளைகளுக்கு, புலித்தோலும் புங்கங்காயும் கட்டினால் குக்கல் மாறி விடும் என்கிற ஐதீகமும் யாழ்ப்பாணத்தில் நிலவியது.

நான் வைசாக பௌர்ணமியை அண்டிப் பிறந்தவன். அப்பையாவின் இரண்டு அக்கைமார் வன்னியான்களுக்கு வாழ்க்கைப்பட்டு வாழ்ந்தவை மூத்தவ வண்டிலாச்சி. அவவின்ரை அவருக்கு வண்டில் மாடுகள் இருந்தன. மற்றைய அக்கையின் புருஷன்தான் நன்னிமாமா. அவருக்கு மந்திரம் தெரியுமெண்டு எங்கடை சனங்களுக்கு அவரிலை பயமும். 'சமணச் செட்டிச்சிக்குக் கோயில் கட்டி வழிபடுவது முறையோ?' என்று ஆறுமுக நாவலர் தூள் கிளப்பியிருக்கிறார். அப்பையா நாவலர் பிரசாரத்தால் ஞானம் பெறாத பாமரன். பற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கலிலே அவருக்கு மகா ஈடுபாடு. நானும் இரண்டு மூன்று தரம் அந்தப் பொங்கலுக்குப் போயிருக்கிறன். அது சோக்கான முஸ்பாத்தி. முள்ளியவளையிலைதான் வண்டிலாச்சி ஆக்கள் இருந்தவை. வீடு றோட்டோரம். 98 ஆம் கட்டையோ, 99 ஆம் கட்டையோ என்று சொல்லி பஸ்ஸிலிருந்து இறங்கினால் பக்கத்திலை வீடு. வீட்டிலிருந்து பொங்கல் நடக்கிற இடத்துக்கு வண்டிலாச்சியின் வண்டிலிலைதான் போவம். பெண்பிள்ளையளையும் பிள்ளையளையுந்தான் வண்டிலை ஏத்துவினம்.

www.padippakam.com



ஆம்பிளையள் நடப்பினம். வழியிலை வண்டில் சக்கரம் மணலிலை புதைஞ்சு போகும் எண்டதும் நினைவு. பொங்கல் முடிஞ்சு முள்ளியவளை வந்தாத் தான் நல்ல முசுப்பாத்தி. அங்கை கிணத்திலை தண்ணீர் அள்ளுறதுக்கு வாளியில்லை. நத்தை ஓடு வடிவத்தில் பட்டை. அதாலை அள்ளுறது வில்லங்கம். அப்பையா கூட கஷ்டப்படுவார். தண்ணீர் ஊற்றிலை வாங்கின றால் என்று சொல்லி வண்டிலாச்சி ஆக்கின வெந்தயக் குழம்பை நான் இன்னமும் மறக்கேல்லை. ஒரு தடவை வேலாண்டிமாமாவும் அப்பையாவும் வேட்டைக்குப் போய் காட்டுக்கோழி சுட்டுக் கொண்டு வந்தவை. அவுஸ்ரேலியாவில் Farm கோழியள் சாப்பிட்டு நாக்கு மரச்சுப்போச்சுது. கோழி இறைச்சி யின் Original taste என்பது காட்டுக்கோழிதான் எண்டு அடிச்சுச் சொல்லுவன்.

முருகண்டியானும் பற்றாப்பளை அம்மனும் செய்த கடாட்சத்தாலைதான் நான் தனக்குக் கொள்ளி வைக்கும் மகனாகப் பிறந்தனான் எண்டு அப்பையா வாய் நிறையச் சொல்லுவார். நான் பிறந்த கதையைப் பெத்தாச்சிதான் வடிவாச் சொன்னவ. அம்மா என்னை நிறைமாசப் பிள்ளைத்தாச்சியாம். அப்பிடி இருந்தும் அப்பையா பற்றாப்பளைக்குப் பொங்கலுக்குப் போன வராம். பொழுது படுற நேரமாம். அம்மாவுக்குச் சரியா வயிற்று நோவாம். 'இவனையும் காணேல்லை' என்று பெத்தாச்சி ஒரே புறுபுறுப்பு. சிரசுதயம் ஆகவும், 'இந்தா, சண்முகன் வந்திட்டான்' என்று அப்பு குரல் கொடுத்தவராம். 'அவனைக் காலாற விடாமல், உலக் கையை எடுத்துக் கூரைக்கு மேலாலை எறியச் சொல்லப்பா!' என்று பெத்தாச்சி கத்தினாவாம். அப்பையா முகம் எல்லாம் பல்லாக, அந்தப் பணியை வலு புளுகத்துடன் செய்தவராம். அந்தக் காலத்தில், ஆண் குழந்தை பிறந்தால், அப்பன் கூரைக்கு மேலாலை

www.padippakam.com



உலக்கை எறிவது வழக்கம். சகல சம்பிரதாயங்கள் என் பிறப்பிலே அநுஷ்டிக்கப்பட்டமைஎனக்கும் பெருமையே.

அப்பையாவுக்கு எப்பவும் இஷ்ட தெய்வம் பிள்ளை யார்தான். விசேடமாக முருகண்டிப் பிள்ளையார். எனக்குப் பால் பருக்குவதற்கு (முதன் முதலில் குழந்தைக்குச் சோறு ஊட்டும் சடங்குக்குப் பால் பருக் குதல் என்று பெயர்) முருகண்டிக்குத்தான் கொண்டு போனவராம். என் தம்பி சிவஞானத்துக்கும் பால் பருக் குதல் முருகண்டியிலைதான் நடந்தது.அதைப் போன்ற ஒரு Carbon பிரதிச் சடங்கும் எனக்கும் நடந்திருக்கும் என்று விளங்கிக் கொண்டேன். அவரை வணங்காது திமிர்த்தனமாகக் கடந்து செல்பவர்களை முருகண்டி யான் எப்படி எல்லாம் தண்டித்திருக்கிறான் என்று அப்பையா கதை கதையாகச் சொல்லுவார். கொழும்பு-யாழ்ப்பாணம் வீதியில், நடுக் காட்டில், முருகண்டியாள் எழுத்தருளியிருக்கிறார். இனம்-மதம்-மொழி-ஜாதி என்கிற எந்தப் பெருமையும்பாராட்டாமல் யாருடைய வாகனமாக இருந்தாலும் தரித்து, முருகண் டியானுக்கு மரியாதை செலுத்திய பிறகே பயணத்தைத் தொடர்தல் வழக்கம். வாகனங்களின் விபத்தற்ற-விக் கினமற்ற பயணத்துக்கு அவர் உத்தரவாதம் என்பது நம்பிக்கை.

அப்பையா சில சமயங்களிலே மன நிம்மதியை இழந்து விடுவார். அப்ப, யாருடனும் பேசமாட்டார். ஓர் ஒடுக்க நிலை. திடீரென்று அவர் காணாமற் போய் விடுவார். கவலைப்படத் தேவையில்லை. வீட்டிலிருந்து நேராக முருகண்டிக்கு நடப்பார். இடையில் தரிப்பு இல்லை. வாகனம் ஏறமாட்டார். நடந்து போய் முரு கண்டிக் கோயிலுக்குத் தெற்கிலுள்ள மடத்தில் படுத்துக் கொள்வார். அந்தப் படுக்கைதான் அவர் தவம். அந்த தனிமையில் அவர் மன ஆறுதல் பெறுவார். மனத்

www.padippakam.com



தெளிவு பிறந்ததும், பஸ்ஸேறி வீட்டுக்கு வந்து விடுவார். எதற்காக இந்த யாத்திரையை மேற்கொண்டார் என்பது யாருக்கும் தெரியாது. ஏன் இப்படி நடந்து கொள்ளுகின்றார் என்பதை அவர் கடைசி வரையிலும் யாருக்கும் சொன்னதில்லை. அவருக்கும் முருகண்டியானுக்கும் இடையிலிருந்த பக்தி உறவை என்னால் விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை. இத்தனைக்கும் முருண்டியான் ஒரு குடிசைவாசி!

இறுதியில், முன்னியப்பரைப் பற்றியும் குறிப்பிட வேணும். நீண்ட காலமாக மூன்று நான்கு வெளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். யாழ். நூல் நிலையம் இல்லை, சுப்ரமணியம் பூங்கா யாரோ நாட்டிய ஓர் ஆலமரம் மட்டுமே. ஸ்ரேடியம், செல்வநாயகம் ஸ்தூபி என்ற தடபுடல்கள் இல்லை. யாழ். கோட்டடியிலிருந்து பார்த்தால் கோட்டை முன்னியப்பர் தெரிவார். தன் கட்சியே ஜெயிக்க வேண்டும் என்று வாதியும் பிரதிவாதியும் நேர்த்திக்கடன் வைப்பார்கள். எப்பொழுதும் முன்னியப்பர் சார்பாகவே தீர்ப்புக் கிடைக்கும். யாழ் நகர எல்லைக்குள் இறைச்சி தின்னும் கடவுளாகவும் அவர் இருத்தல் இன்னொரு அதிஷ்டம், கிடாய் வெட்டி ஆட்டிறைச்சிக் கறியுடன் அன்னதானம் வழங்கப்படும். ஒரு தடவை வழக்கு வியாச்சியத்திலே சின்னமாமாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பாயிற்று. அவர் முன்னியப்பர் முன்றலிலே கொடுத்த அன்னதானத்துக்குப் பெரிய ஒரு கிடாய் வெட்டப்பட்டது. அந்த அன்னதானத்துக்காக அவர் வாங்கிய பெரிய பந்திப்பாய் நீண்ட காலமாக வீட்டில் இருந்தது. என் நண்பன் இ. நாகராஜன் நீண்ட காலமாக முன்னியப்ப கோயிலின் ஆஸ்தான கவிஞராக விளங்கினார் என்பதும் நினைவுக்கு வருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கோயில்கள் குறித்துச் சிற்பச் சிறப்புகள், கட்டடக்கலை நுட்பங்கள், கோபுர அமைப்பின் கம்பீரியம்-ஸ்தல புராண மகிமைகள் என்று பீத்துவதற்குப் பெரிதாக இல்லாத போதிலும், இந்தக் கோயில்கள் ஈழமண்ணிலே பிறந்தவனுக்கு எஃகு அனைய நம்பிக்கையையும், இமயம் நிகர்த்த மன உறுதியையும் அளிக்க உதவின என்பதை, முருகண்டியான் மீது ஆணை, நான் மெய்யாகவே நம்புகிறேன். □

படிப்பகம்

பனைகளில் ஏறி பக்குவமாக
அணைத்துப் பிடித்து அறுக்கும் போது
இணையிதற் கில்லை என்றிட பதனீர்
தரையில் இறங்கும்

தனை ஈந்து பயன் தரும்
பனை அதன் விளைவிலே
வினைகள் வித்தாகும் -அதை
கறந்திடும் ஏழையின்
கால்களின் பலத்திலே
பணங்களைப் பெருக்கி
வளமுடன் வாழ்ந்தோம்

# 14. கரை

காலநதி தீரத்திலே நிற்கும் பொழுது சட்டென்று புதுமைப் பித்தனின் நினைவு வருகுது. ஆற்றிலே மிதந்து வந்த சுவடியிலே காணப்பட்டதான கதை ஒன்று சொல்லி மயங்கினார் அல்லவா?... காலநதி யிலை பனை ஓலைத் துணுக்குகள் மிதந்து வருகின்றன. எடுத்துப் பார்க்கிறன்.

www.padippakam.com



பழைய பனையோலை விசிறியிலே பிய்ஞ்சு வந்த துண்டு!

''மச்சான், உனக்கு ஒரு கதை தெரியுமே?'' என்று பாக்கியம் (பாக்கியம் சகோதரர்களில் சி.எஸ்) வந்தாறு மூலையிலை நடந்த ஆசிரியருக்கான சேவைக்கால முகாம் ஒன்றின்போது கேட்டார். தெரியாது என்பது போல, சகாக்கள் அவரைப் பார்த்தம். ''கொழும்பிலை இருக்கேக்க மச்சான், நானும் ஒரு யாழ்ப்பாண அண்ணரும் பக்கத்துப் பக்கத்து அறைகளிலே குடியிருந்தம். நல்ல கோடை காலம். தாங்க ஏலாத வியர்வையும் புளுக்கமும்! இரண்டு பேரும் அலைஞ்சு திரிஞ்சு Pettah விலுள்ள ஒரு கடையிலை, ஆளுக்கொரு பனையோலை விசிறி வாங்கிக் கொண்டு வந்தம். நல்ல விசிறிகள். விசுக்கினால் காத்து பிழையில்லாமல் வரும். கொஞ்சக் காலத்தில் என்ர விசிறி கிழிஞ்சு போச்சுது. 'அண்ணை, இன்னொருக்காப் போய் விசிறி வாங்கி வரவேணும்' என்று என் கிழிஞ்ச விசிறியை எடுத்துக் காட்டினன். உடனை அவர் தன்ர விசிறியைக் கொண்டு வந்து காட்டினார். புத்தம் புதிசாய் இருந்தது. ''ஐஸே, உமக்கு விசிறி பாவிக்கத் தெரியாது. விசிறியைப் பிடிச்சு, கண்கடை தெரியாமல், விசுக்கித் தள்ளியிருக்கிறீர். அது கிழிஞ்சு போச்சு. விசிறியை முகத்துக்கு முன்னாலை பிடிச்சுக் கொண்டு, தலையை இப்பிடி இப்பிடி ஆட்ட வேணும். அப்ப விசிறி கிழியாது. நாலைஞ்சு வருஷத்துக்கு நிண்டு பிடிக்கும்' என்று...''பாக்கியம் கதையை முடிப்பதற்கு முன்னர், அவர் தலையை ஆட்டிய வேகத்தைப் பார்த்து எல்லோரும் கெக்கெட்டமிட்டுச் சிரித்தோம்.

''யாழ்ப்பாணத்தான் கசவாரம்; படு வகிலி... சாப்பிட்ட கையை நக்கிச் சூப்பிப் போட்டுத்தான் கழுவுவான்... தானும் தன் குடும்பமும் என வாழும் சுயநலக்

www.padippakam.com



காரன்...'' என்கிற பொதுவான அபிப்பிராயம் நிலவு வதற்குக் காரணம் என்ன? 'யாழ்ப்பாணி வலு கெட்டிக் காரன். பஞ்சிப்படாமல் பாடுபடுவான். விசுவாசமான அரசாங்க ஊழியன்' என்று தலை நடவிப் புகழ்பவர்கள் கூட, 'ஆனால், அவனோடை கவனமாய்ப் பழக வேணும். சரியான நேரத்திலை காலை வாரிப் போடுவான்...' என்று குரல் தாழ்த்தி எச்சரிப் பார்கள். எதனால்? இலங்கை அரசியலில் யாழ்ப் பாணத்தவருடைய தலை உருளுவது போல, யாரு டைய தலையும் உருளுவதில்லை. அன்றும் இன்றும்.

யாழ்ப்பாணம் என்னை நெருக்குவதான அவதி. 1949 ஆம் ஆண்டு தொடக்கம், அந்த மண்ணிலுள்ள பந்தங்களை அறுத்தெறிய ஓடுகிறேனா? நாத்திகத்தை யும் கம்யூனிஸ புரட்சியையும் தத்தெடுத்த கண்களுக்கு... சீதனத்துக்காக ஆண்கள் நாம்பன் மாடுகளாக விலை போகும் அநியாயத்திலிருந்து, மானுடத்தைக் கொச் சைப்படுத்தவிழைந்ததடித்தஜாதியத்தின் அக்கிரமத்திலி ருந்து, தன் தோளை மட்டும் காப்பாற்ற நட்பையும் நாட்டையும் காட்டிக் கொடுக்கும் அதர்மத்திலிருந்து 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மண மில்லை' என்று சாதிக்கும் அயோக்கியத்தனத்தி லிருந்து, தனித்துவத்தை வனைந்தெடுக்கும் தவ யாத் திரையை ஏற்று ஓடிக்கொண்டிருப்பதாக நம்புகிறேன். 'ஒரு இலட்சம் 'சொலிட்' 'கேசு'டன் சீமைப் படிப்பும்' என்று பெரிய மாமா, யாழ்ப்பாணக் கல்யாண சந்தை யிலே எனக்கு விலை குறித்தார். கொண்டதே கோல மும் தவமே... மட்டக்களப்புப் பாயிலே ஈஸ்பரத்துடன் குந்த... 'பேய்க்கரின் மகன் பாயிலை ஒட்டீட்டான். இனி, அவர் தன்ரை குமர் குஞ்சுகளோடை கிணத்திலை குதிக்கட்டும்' என்று உறவினர் சாபமிட்டுச் சந்நத மாடிய பொழுது, அப்பையா சிரிச்சவராம். யாருக்கும் தெரியாமல் மட்டக்களப்பு வந்தார். விருந்துண்டு,

www.padippakam.com



மனசார்ந்த ஆசிகள். ''...மேனே, நீதான் என்ரை மூத்த மருமகள்...யாழ்ப்பாணம் வந்து உன்ரை உரித்தை நிலை நாட்ட வேணும்...நீ இந்த லீவுக்கு அவனையும் கூட்டிக்கொண்டு வா...'' என்றார். வஞ்சக மறியா அவரும் சூழ்ச்சி செய்யிறாரா? என் அவளை யாழ்ப்பாணத்தாளாக்கும் முயற்சியா?

அப்பையா வாழ்ந்தது உசுக்குட்டி உலகம். கூழ்ப் பானையிலை விழுந்தபுத்திசாலிகள் உண்டு. பேய்க்கராக வாழ்வதில் அப்பையா பரம திருப்திப்பட்டவர். கருங் காலி நிறம். கரடு முரடுத் தோற்றம். உள்ளே? விளாம் பழம். பால் பல்லு விழாதவர்கள்கூட அவருக்கு ஐயாவும் அப்புந்தான். மரியாதைக்காகச் சால்வையை எடுத்து எடுத்து கை உழைஞ்சு போகும் என்று சால்வையை மறந்தவர். ஆனால், மரியாதையை Demand செய்தால் மசிய மாட்டார். அவர் ஒரு Paradox. யாழ்ப்பாணத்துவ மும் அப்படித்தான், (அடிக்குப் பயந்து, முதுகிலை குதிக் கால் பட ஓடினவன், திரும்பி நின்று முப்படைகளை எதிர்த்து நின்று போராடும் சூரனும்! இப்பொழுது நிதானிக்க முடிகிறது! யாழ்ப்பாணத்திலிருந்து விலகி விலகி ஓட யாழ்ப்பாணத் தவனமே நெஞ்சமெல்லாம் விரி கிறது. அப்பையா மகா வித்தைக்காரன். தான் விளை வதற்கான வித்தை ஊன்றிய பொழுதே, எண்ணுள் யாழ்ப்பாணத்துவம் விகசிக்க எவ்வாறு வசதி செய்தார்?

என் அவளுடைய கன்னி யாழ்ப்பாணப் பயணம், ஆனையிறவுப் பாலந் தாண்டி, யாழ்குடா நாட்டுக்குள் நுழைகிறது. விடியல். மார்கழிக் குளிர். தெங்குக் குமரிகள் அளகபாரம் உலர்த்தும் கோலம். வானமகள் சுமங்கலிப் புனைவுக்கு அடுக்குப் பாக்கிறாள். என் இவள் என்ன கனவு காண்கிறாள்? இதழ்களில் முறுவல்

www.padippakam.com



புரளக் கண் மூடிக் கிடக்கிறாள். 'இஞ்சேர்! யாழ்ப் பாணம் வரப்போகுது, முகத்தைக் கழுவி, தலையைச் சீவுமன்...' சட்டென்று எழுந்து விட்டாள். குழந்தை யின் மருட்சியை அப்பியவாறு, யன்னல் ஊடாக, பார்வையால் துழாவுகிறாள். ''யாழ்ப்பாணம் வரப் போகுதோ...யாழ்ப்பாணத்திலை தென்னைமரங்களும் இருக்கோ?'' பனைமரங்கள் மட்டுமே நிரம்பி வழியும் ஒரு யாழ்ப்பாணத்தையே அவள் கற்பனை செய்திருக் கிறாள். பனைப் பகுதியில், செழிப்பான தென்னந் தோட்டங்கள் இருப்பது அவள் கற்பனையில் சிக்க வில்லை.

யாழ்ப்பாணத்தைப் பனங் காடாகச் சித்திரித்தல் மரபாக நிலைத்துவிட்டது. Broken Palmerah என்ற புத்தகத்திலும் பனைமரம் வடிவான அட்டைப்படமாக இருக்கு. அதன் ஆசிரியர்களுள் ஒருவரான டாக்டர் ராஜனி திரணகம நூலுக்கு Dedicatee ஆனமை இன்றைய யாழ்ப்பாணத்தின் கொடுமை... இன்றை களைத் தவிர்ப்பதற்காகவும் நேற்றைகளிலே தாவுவது மனித இயற்கை... சன்மார்க்க வாலிபர் சங்கத்தின் ஆதரவில் இயங்கிய மாணவர் தேர்ச்சிக் கழகத்தின் மூலந்தான் நான் பேச்சாளனாகவும், எழுத்தாளனா கவும் பயிற்சி பெற்றேன் என்பதை எவ்வளவு தரம் சொன்னாலும் எனக்கு அலுக்காது. நான் பங்குபற்றிய முதலாவது விவாதப் போட்டியும் அங்குதான் அரங் கேறியது. 'பொருள்' தென்னையிலும் பார்க்கப் பனை பயனுள்ளது. நான் தென்னையின் கட்சி. என் கட்சிக்குச் சாதக சான்றுகள் அதிகம் என்று நான் கெட்டியாகவே நம்பினேன்... என் கட்சி தோற்றது, யாழ்ப்பாணத்தின் தனித்துவ நாகரிகத்துக்கும் வளத் துக்கும் தனித்துவத்துக்கும் பங்களிப்புச் செய்யும் பனையின்புகழை அவர்கள்எடுத்துச்சொல்லியபாங்கம்... யாழ்ப்பாணம் பனங்காடுகளாக விளங்குவதுதான்

www.padippakam.com



அதன் ஓர்மத்தின் ரிஷிமூலமாக இருக்குமோ என்று எண்ணவுந் தோன்றுகிறது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்திலே, யாழ்ப்பாணப் பகுதிதான் அவர்களுக்கு அதிக வருவாய்தந்த வளமான பகுதியாக விளங்கியதாக அவர்களுடைய குறிப்புகள் பறைகின்றன. பனையை அவர்கள் First -Class Timber ஆக இனங்கண்டு, அதனை ஏற்றுமதி செய்து பணஞ் சம்பாதித்தார்கள். கன்னாதிட்டி வீட்டைக் கட்டும் பொழுது கந்தர் மடத்திலை, பனைமரங்கள் சிலவற்றை அப்பையா வாங்கினார். தச்சு ஆசாரி கொடுத்த அளவுகளின் பிரகாரம் அவற்றைத் தறிப்பித்து, அவற்றை இரண்டாகவும், நான்காகவும் பிளந்து பெரிய மாட்டு வண்டில்கள் மூலம், வளவின் வாய்க்காலோரம் போடுவித்தார். பிறகு எனக்கு நல்ல வேடிக்கை. வேலை செய்த தச்சர்களிடம் எத்தனை வகையான வாள்கள், உளிகள், வாச்சிகள், அடிமட்டங்கள் எல்லாம் இருந்தன. அவற்றிலிருந்து அவர்கள் வளைகளையும், கைமரங்களையும், சலகைகளையும் உருவாக்க, வெட்டியும் செதுக்கியும் அவர்கள் செய்த வித்தைகளை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பன். வேலை முடியும் மாலை வேளை, திருவிழாக் கோலம் புனையும். அயலிலுள்ள கிழவிகளும், சிறுமிகளும் கடகங்களுடன் வந்து விடுவினம். செதுக்கிக் குவிக்கப்பட்டிருக்கும் சோத்திகள். சிராய்கள், பட்டைகள், வெட்டியும் அறுத்தும் கழிக்கப்பட்ட துண்டுகள் ஆகியவற்றால் கடகங்களை நிரப்புவார்கள். இதெல்லாம் எவ்வளவு சோக்கான விறகு என்பதை யாழ்ப்பாணப் பெண்குலம் அறியும். அந்தக் காலத்தில் எல்லா வீடுகளிலும் விறகு அடுப்புத்தான்!

கலட்டிகளையும் வானம் பார்த்த செம்மண் தரைகளையும் கழனிகளாக்கியது கமக்காரனின் அயராத

www.padippakam.com



உழைப்பு. அப்புவைப் போன்ற பாட்டாளிகள் அவற்றுக்கு நீர் இறைப்பதற்கு ஆழ்கிணறுகளையே நம்பியிருந்தார்கள். அது 'பம்செட்'டுகள்பற்றிக் கனவுகூடக் காணாத காலம். துலா மிதிச்சுத் தண்ணீர் இறைக்க வேணும். பட்டையைத் தண்ணிக்குள் தாழ்க்கும் போது துலாவின் முன்பக்கம் பாரம் வேணும், தண்ணியை அள்ளும் பொழுது பின்பக்கம் பாரம் வேணும். துலா மிதிப்பவன் துலாவின் முன்னுக்கும் பின்னுக்கும் ஓடித் திரிய வேணும். துலாவின் பின்பக்கம் ஏணி வடிவில் சலாகைகள் இறுக்கி இருப்பினம். நினைத்த இடத்தில் எம்பி ஏறுவதற்குத் தோதாக ஆடுகாலில் மொத்தக் கயிறு இருக்கும். அதிகாலையில் துலாமிதிக்கிறது வடிவான காட்சி. ஆனால், கஷ்டமான வேலை. கிட்ணுக் குஞ்சி நல்லாத் துலா மிதிப்பாராம். பரமேஸ்வராக் கல்லூரியில என்கூடப் படித்த எத்தனையோ பேர்-செ. கணேசலிங்கன் கூட-காலையில் தோட்டத்துக்கு நீர் இறைச்ச பின் களைத்துச் சோர வருவார்கள். துலா செய்வதற்கு ஏற்ற மரம் பனை, எவ்வளவு நீளமான துலாவும் செய்யலாம். தென்னை மரத் துலா சீக்கிரம் உளுத்துப் போகும். யாழ் குடா நாட்டை வளப்படுத்தியதில் பனந்துலாக்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

மா, பலா, வாழை, தெங்கு ஆகிய மரங்களுக்கில்லாத ஒரு தனிச்சிறப்புப் பனைக்கு உண்டு. பனையை ஆண்-பெண் என்று பிரிக்கலாம். இதை அறிஞ்சதும் எனக்குப் பெரும் புதினமாப் போச்சுது. கோயில் வளவுக்குள், இக்கிரிப் பற்றைகள் கால்களைக் கிழிச்சதையும் பாராட்டாமல், ஆண்பனை-பெண்பனைக் கணக்கெடுத்ததும் ஞாபகம் உண்டு. ஆண் பனைக்கும் பாளை உண்டு. ஆனால், காய்க்காது. மரவரி முறையை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதற்கு பிலாக் கொட்டைத் தம்பையரும், பேப்பர் செல்லையரும்

www.padippakam.com



வலுவாகப் பாடுபட்டவையாம். 'கள்ளு போதை வஸ்து அல்ல; அது நல்ல உணவு. பனங்கட்டி சீனியைப் பார்க்கிலும் சுகாதாரத்துக்குத் திறமானது' என்று பல நியாயங்களை முன் வைச்சார்களாம், இது ஒரு புறம் இருக்க. புனித கற்பகத் தருவின் மானத்தினை எளிய மரமேறியள் வட்டுக்கை வைச்சுக் கெடுக்கிறான்கள் என்றும், பெண் பனைகளிலிருந்து கிடைக்கும் எத்தனையோ விளை பொருள்கள் அவற்றிலிருந்து கள்ளிறக்குவதினால் இல்லாமற் போய் விடும் என்றும், குடிமைச் சுகம் அநுபவித்த மேட்டுக் குடியினர் எதிர்த்தவையாம். மணியகாரரும் விதானைமாரும் இவையளுக்கு Support ஆ.ம் பிலாக்கொட்டையர் எதுக்கும். மசியாத விண்ணனாம். 'தென்னைக்குப் போலவே பெண் பனைக்கு பத்து ரூபா 'லைசென்ஸ்' காசு வசூலிக்கலாம். ஆண் பனைக்கு இரண்டரை ரூபா வசூலிக்கலாம்..' என்றுஅவர்சுட்டிக்காட்டினவராம். காசுக்குவழி சொன்னால் இங்கிலீசுக்காரனுக்குக் கசக்குமோ? பெண் ஒரு பனையின் மானம் பவுணுக்கு ஈடு வைக்கப்படுவது. பிழையில்லாத பிசினஸ் என்று மணியக்காரர்களும் ஒத்துக் கொண்டவையாம். ஆண்பனையிலை கள்ளிறக்கிறது பெரிய புதினம். கீழ் மட்டைகளைப் பிரித்து, வழுவெடுத்து, வட்டுக்கிட்ட சிட்டிகட்டி மேடையாக்கி, வடக்கயிறில் நாரி சாய்த்து, பலன்ஸ் எடுத்து, பாளையைப் பதப்படுத்தி, அந்தரத்தில் முட்டி கவிழ்த்து காய்ந்து விழும் ஆண் பனைப் பாளைகளிலிருந்து கள் கருப்பணி-பனங்கட்டி என்ற வகைகளிலே காசு சம்பாதித்து யாழ்ப்பாணச் செழுமைக்குப் பங்களிப்புச் செய்யும்' அந்த மரமேறியைப் பற்றி ஒரு பாட்டெழுத யாழ்ப்பாணக் கவிஞருக்கு மனசு வராதா?

இலங்கைக் கலை உலகில் 'சானா' ஒரு சகாப்தம், 'கீரிமலையிலை நல்லாத் தோய்ஞ்ச பிறகு, வயித்தை ஒரு கிள்ளுக் கிள்ளும் அப்ப கூவிலுக்குப் போய்,

www.padippakam.com



உடனிறக்கின பனங்கள்ளு அடிக்க வேணும். அநுபவிச்ச வனுக்குத்தான் அதுகின்ரை சுகம் தெரியும்' என்று வலு முஸ்பாத்தியாய்ச் சொல்லுவார். பனை சீஸனிலை, கொழும்புக் கந்தோர்களிலை, 'அங்கை கொடியேறிற் றாம்; நீங்கள் உங்கை பைல் கட்டுகளோடை மாரடிக் கிறியள்' என்று கேட்பது வழக்கம். பனங்கள்ளு ருசிப் பதற்கென்றே, லீவு எடுத்து யாழ்ப்பாணம் சென்ற மண்ணின் 'சற்புத்திரர்' பலரை எனக்குத் தெரியும். பனங்கள்ளிலை எனக்கு எப்பவும் 'கெடு' இல்லை. ஒரு கிளாஸில், கல்லோயாச் சாராயத்தில் இரண்டு ட்றாமை ஒரே தடவையில் வார்த்து, எதையும் Mix பண்ணாமல் On the rock ஆக அடிக்கிற பேர்வழி என்று ஒரு காலத் தில் எனக்கு மகா கியாதி இருந்தது. 'அவரின்ரை B.A. பட்டமலைக் கழகப் பட்ட மல்ல. அந்த B.A. Bottle of arrack அல்லோ' என்று எஸ் டி. சிவநாயகத்தின் காலத்துச் சுதந்திரன் குயுக்தித் தனமாக என்னைக் கிண்டல் அடிக்கிற அளவுக்கு நான் பெருங்குடி மகனாய் வாழ்ந்தது ஒன்றும் பரம ரகசிய மல்ல. ஆனால் 'கொடி ஏறிய' காலத்தில் யாழ்ப்பாணம் வந்தால், சில தேவைகளைக் கருதி. பனங்கள்ளுப் பாராயணத்தில் ஈடுபட்டதும் உண்டு.

பராசக்தி அக்கா கலட்டிப் பக்கம் புலம் பெயர்ந்து வாழ்ந்தா என்று கேள்வி. பேந்து நான் காணேல்லை. யூனிவேர்சிட்டி— கொக்குவில் டெக்னிக்கல் கலேஜ் ஆகியவற்றின் மாணவ திலகங்கள் கலட்டிப் பகுதியைப் பிசக்காத அந்தக் காலத்தில், செல்லனின் கொட்டில் வசதியானது. செல்லனின் பெண்டில் அள்ளிச் சொருகிய கொண்டையுடனும். துள்ளி எகிறும் தன பாரங்களை அமுக்கிக் கட்டிய குறுக்குக் கட்டுடனும், கற்றுக் குட்டிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலே கவனம். 'தம்பிமாரே, உங்காலை குடிகாரர் இருக்கிற இடம். இஞ்சாலை வந்து இருங்கோ. ஆக்கள் காணமாட்டினம்'

www.padippakam.com



என்று விறாந்தையில் இருக்கச் சொல்லுவா. வீதியோர மாகத் தாழ்வாரம் இறக்கியதுதான் கொட்டில். எனவே, விறாந்தை மறைவு. யோக்கியக் குடிகாரருக்கு கிளாஸி லைதான் அவ கள்ளுத் தருவா. வடிவான சிரிப்பு. ஆனால் அந்தக் கொட்டிலின் கவர்ச்சி அங்கு விற்கப் படும் ருசியான 'ரேஸ்டுகள்' தான், அங்கை கிடைக்கும் 'ரேஸ்டு'களைச் சுவைக்காதவைதான் 'கள்ளுக்குப் புருஷன் கதை' என்று சொல்லுவினம். நண்டு, கணவாய், குடல் கறி, வறுத்த இரத்தம் என்று பலதும். எல்லாவற்றி லும் காரம் தூக்கலாக இருக்கும். உறைப்பு உறையும் நாக்கில் கள்ளின் இனிப்புப்படச் சுகமாக இருக்கும். அவற்றுடன் சேர்த்து இரண்டு போத்தல் ஏற்றிக் கொண்டால், மத்தியானம் சாப்பாடு வேண்டாம். 'யாழ்ப்பாணக் கதைகள்' மூலம் ஈழத்து இலக்கிய உலகில் இடம் சம்பாதித்த கே. வி. நடராஜன் கலட்டி அநுபவங்களை என்னுடன் பகிர்ந்திருக்கிறார். பனங் கள்ளின் பரமார்த்த உபாசகர்களுக்கு ஒரு சிதம்பர இரகசியத்தை இந்த இடத்திலை சொல்ல வேணும். ஒரே பெண்பனையிலிருந்து உடனிறக்கிய கள்ளுக்கு ஒரு தனி ருசி உண்டு. அப்பையா செத்த பிறகு, பண்டாரக் குளத்தடியிலிருக்கும் காங்கேசு மச்சான் வீட்டுக்குப் போயிருந்தன். அயல் வளவில் தங்கராசா இறக்கித் தந்தவன். அதோடை, மன்னாரிலிருந்து வந்த சுட்ட கருவாடும் ஒரு பச்சை மிளகாயும் இருந்தால் போதும். தங்கராசா இறக்கித் தந்த அந்தக் கள்ளைக் குடிச்ச பிறகுதான் 'சோமபானம்' என்பதின் அர்த்தப் பொலிவே என் பிடிமானத்துக்குள் சிக்குப்பட்டது. இது நடந்து இருபது வருஷம் இருக்கும். பிறகு, அந்தச் சோம பானத்தைச் சுவைக்கும் பாக்கியமே எனக்குக் கிட்டவில்லை.

சுண்ணாம்பு தடவிய முட்டிகளிலே இறக்கப் படுவது 'கருப்பணி'. இது போதை தராது. மதுவல்ல.

ந—17

www.padippakam.com



தாகத்துக்கு ஆரும் குடிக்கலாம். நான் உசுக் குட்டிப் பையனாக இருந்த பொழுது, அம்மாவின் Body Guard ஆக நடராசாப் பரியாரியாரிடம் போனது ஞாபகம். அப்ப அவ சிவஞானத்தைப் பிள்ளைத்தாச்சி. பஸ் வருமெண்டு முத்திரைச் சந்தையடியிலை காத்திருந்தம். வந்தஇரண்டு பஸ்கள் எங்களை ஏத்தாமல்யாழ்ப்பாணம் போயிற்று. சரியெண்டு நடக்கத் துவங்கினம். நல்ல வெய்யில். தாகம் எடுத்தது. கறள் பிடிச்ச மூக்குப் பேணிகள்அலங்கரிக்க, 'இலையான்'கள் மொய்க்க, ஊத்தை வழியும் யாழ்ப்பாணத் தேத்தண்ணிக் கடைகளிலை, சாகும் வரையிலும் அம்மா பச்சைத் தண்ணிகூடக் குடிச்சது கிடையாது. அவ சரியான றாங்கிக்காரியும். வீரகாளி அம்மன் கோயிலைத் தாண்டியிருப்பம். அப்ப ஒரு ஆள் கருப்பணி இறக்கிக் கொண்டு வந்தான். முன்பின் தெரியாத ஆள். அம்மா வில்லங்கத்தை விளக்கப்படுத்தினா. எங்கள் மீது இரக்கப்பட்ட அந்த ஆள் அந்த இடத்திலை புதுப் புளா கோலி, கருப்பணி வடிச்சுத் தந்தவன். சோதி மாமி வீட்டிலை ஆய்ஞ்சு வந்த வெள்ளைக் கொழும்பான் மாங்காயிலும் இரண்டுதுண்டு வெட்டி, கருப்பணியோட குடிச்சவ. அம்மா எந்தச் சந்தர்ப்பத்திலும் மதுவைத் தொட்டது கிடையாது. இதனாற் போலும், இந்தச் சம்பவம் என் மனசில் ஆழமாகப் பதிஞ்சுள்ளது.

நான் சாப்பிட்ட உணவு முழுவதையும் பூச்சி தின்றதோ, நான் மெலிஞ்சு போனன். உடம்புக்கு நல்லது என்று, மக்கிக்கிடங்கடி நல்லாம்பியைக்கொண்டு நீரா இறக்குடிச்சுத் தந்தவ. வெறும் வயித்திலை நீரா குடிச்சால் உடம்புக்கு நல்லதாம். இரும்புத் தூள்களை ஒரு பொட்டலமாகக் கட்டிப்போட்டு...ஏதோவெல்லாம் சொன்னவர்கள். இப்ப மறந்து போச்சு.

www.padippakam.com



நான் பட்டப்படிப்புப் படிச்சுக் கொண்டிருந்த காலத்திலைதான் பனங்கட்டி காய்ச்சுறதைக் கண்ணாலை கண்டனான். அப்ப, உடுப்பிட்டிப் பகுதியிலை, பனை மரங்களில் பொல்லாத கருங்குளவிகள் கூடு கட்டி இருந்தனவாம். கருங்குளவிகள் கொட்டி இரண்டு பேர் செத்துப் போனவை என்றும் பரபரப்பு. உடுப்பிட்டிக்குக் கிட்டத்தான் கே.வி. நடராஜனின் சொந்த ஊரான வல்வெட்டி. அங்கையும், பனங்கட்டி காய்ச்சுவினம். குஞ்சுப் பனங்கட்டி, குட்டான் பனங்கட்டி என்று பிள்ளைத் தாச்சிகளுக்கான பென்னம் பெரிய பனங்கட்டிகள்வரை...இவற்றுக்கு வெவ்வேறுபாகமுறைகளும் இருந்தனவாம். ஓர் இரவு. வாலிபத்தின் சதை முறுக்கு. வல்வெட்டியைச் சுற்றி, கம்பி வேலி ஒன்றுக்குள் புகுந்து, எலி ஆமணக்கும் நாயுருவிகளும் கால்களை இடற, திசை தெரியாத பனங் கூடலில் லூத்துவைச் சந்திச்சனான். என் வாழ்க்கையில் நடந்த முதலாவது களவியல் கூத்து! லூத்து விபசாரி அல்ல. சேவைக்குப் பணம் பெற மறுத்து விட்டாள். அடுத்த நாள், காலையில் லூத்து வீட்டுக்குப் போனன், அவளுடைய கணவன் தீட்டுத் தடியில் பாளைக் கத்தி தீட்டிய வண்ணம், யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். ' 'உண்மைதான். காலம் அப்பிடியாப் போச்சு...எங்கடையதுகள் கொழும்பிலை வேலை பாக்குதுகள். அவங்கடையதுகள் பனை ஏறுதுகள்..." எனக்கு இந்தத் தத்துவத்தின் உள் பொருள் விளங்கக் கன காலமாச்சுது. வேலிக்கு மேலால் லூத்துவின் முகம்! இரவுக் களியின் மயக்கம் விழியோரம் தொங்க, லூத்து என்னைப் பார்த்துச் சிரிச்சாள். அன்றிரவும். பிறகு வல்வெட்டிக்குப் போகக் கிடைக்கேல்லை. சென்னை வாழ்க்கையின் பரபரப்பில் அவளை மறந்து போனன்.

www.padippakam.com



பனங்காடுகளிலே எத்தனையோ லூத்துகளும் நான்களும் சோரம் போய்க் கொண்டிருக்கலாம். ஆனாலும், யாழ்ப்பாணத்தின் மானத்தைக் காப்பாற்ற வேலிகள் போதுமானவை. நகர்ப் பகுதிகளில் பனைப் பக்கமிருந்து வரும் தென்னோலைக் கிடுகு வேலிகள். வல்வெட்டி போன்ற இடங்களில் பனையோலை வேலி தான். தென்னோலை வேலிகளால் பாய்வது லேசு. பொட்டு வைப்பதும் லேசு. காவலுக்கு வல்லவன் பனை யோலை வேலி. பனையோலைகளுக்கு கூரை வேய்தல், வேலியடைப்புப் போன்றவற்றுக்கு அப்பாலும் பயன்கள் இருந்தன. இடைஞ்சல் வந்து, 'வீட்டுக்குத் தூரம்' அனுட்டிக்கும் பெண்களுக்கு பனையோலை மகா ஆறுதல். பாய் அல்லது பெட்டி இழைத்தல், அவர் களை பிராக்குக் காட்டி வைச்சிருக்கும். முத்தல் ஓலைகளை தும்புபோல கிழித்து மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்துவார்கள். குருத்தோலைகளிலே யாழ்ப் பாணப் பெண்ணினம் கலைவண்ணமும் கைவண்ணமும் நாட்டின. எத்தனை வகையான கொட்டப் பெட்டிகளும் சிம்பைகளும் செய்தார்கள்? கந்தசாமி கோயிலிலை வாங்கின கொட்டைப் பெட்டியைப் பெரிய பொக்கி ஷம் போலக் கொஞ்சக் காலம் கொண்டு திரிஞ்சனான். ஆச்சி எப்பவும் சிம்பைதான் பாவிச்சவ. சிம்பையை இடுப்பிலை வசதியாகச் சொருகி வைக்கலாம். பெட்டி களிலேதான் எத்தனை வகைகள்? குஞ்சுப் பெட்டி, அடுக்குப் பெட்டி, மூடற்பெட்டி...சாமான்கள் Pack செய்வதற்கு உமல்களும் வசதியானவை. பெரிய கடை மீன்சந்தைக்கு முன்னால், ஒரு காலத்தில், ஒருசேத்துக்கு விற்கப்பட்ட கறி உமல் துவக்கம், பல அளவுகளிலும் உமல்கள் கிடைத்தன. சில உமல்கள் கெட்டியாக இழைக்கப்பட்டிருக்கும்... மகன் அநுர குஞ்சாக இருந்த பொழுது, யாழ்ப்பாணத்து இதர வாழைப் பழங்கள் என்றால் உயிர். அப்பையாவுக்குப் பேரனிலை நல்ல

www.padippakam.com



பாந்தம். அவனுக்கென்று இந்தப் பழங்களை வாங்கி, நசியாமல் கொள்ளாமல் மட்டக்களப்புக்குக் கொண்டு போறதுக்கு பெரிய உமல்களிலே 'பேக்' செய்து தருவார். பிலாஸ்டிக் Containers ஸின் உபயோகத் தினால், சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகின்றது என்று மேற்குலகிலே 'பச்சைச் சமாதானவாதிகள்' சன்னதமாடுகிறார்கள். பனையோலைச் சாமான்கள் பிஞ்சு போனால் அடுப்புப் பத்த வைக்கவும் உதவும். நிலத்திலே உக்கினால் நல்ல உரம். பெரிய பெட்டிகள், கடகங்கள் என அழைக்கப்பட்டன. அப்புக் குட்டி மேசனின் முட்டாள் கொண்டு வாற கடகம், எருக்கடகம் எல்லாம் முரட்டுப் பாவிப்புக்கு ஏற்றவை. மரக்கறிக் கடகம், மாம்பழக் கடகம் ஆகியன விசால மானவை. மீன்காரிகளும் வியாபாரத்துக்குக் கடகங்கள் தான் பாவிப்பினம். ஆனால் மீன்பிடிகாரருக்கு வசதி யாக இருப்பவை பறிகள். பாய்கள் எத்தனையோ சைஸ்களிலும் வகைகளிலும் இணக்கப்பட்டன. குழந்தைகளை வளத்தாட்டுவதற்குத் தடுக்கு. தனி ஆள் இருந்து சாப்பிடவும் தடுக்கு ஏற்றது. படுப்பதற்குப் பாய்கள் பயன்படும். பண்டங்களை வெயிலில் காய தைப்பதற்குப் பழம் பாய்கள் பயன்பட்டன. பனாட்டுக் காய வைக்கப் புதுப்பாய்கள் பயன்படுத்தப்பட்டன. பந்திப் பாய்கள் பெரியன. ஒரே சமயத்தில் நூறு பேருக்கு மேல் சோறு பரிமாறத் தக்க பெரிய பந்திப் பாய் ஒன்று வீட்டிலை இருந்தது. அதனைக் கழுவிக் காயவைச்சுச் சுருட்டிப் பறணிலை வைக்கிறது பெரிய பாடு. அயலிலே விசேஷங்கள் நடந்தால் அந்தப் பாய்க்கு சரியான 'டிமாண்ட்'! Steamer ஆகப் பயன் படுவதுக்கு நீத்துப் பெட்டிகள் செய்யப்பட்டன. குழல் பிட்டிலும் பார்க்க, அம்மா அவிக்கிற நீத்துப்பெட்டிப் புட்டு ருசியானது. குரக்கன் புட்டு, ஒடியற் புட்டு ஆகியன அவிப்பதற்கு நீத்துப் பெட்டிதான் வசதி

www.padippakam.com



யானது. கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளுவதற்கு பனையோலைப் பட்டைகள் பயன்பட்டன. சின்னப் பட்டைகள் நத்தை ஓட்டின் வடிவமைப்பில் இருந்தன. கிணறு இறைப்பதற்கான பட்டைகள் ஐந்து மூலைகள் கொண்டனவாக இழைக்கப்பட்டன. தகர வாளிகள் இந்தப் பட்டைகளைப் போல நிண்டு பிடிக்கா. பனை ஈக்கிலின் உபயோகம் கொஞ்சமோ? யாழ்ப்பாணச் சுளகுகள் 'ஓல் சிலோன்' புகழ் பெற்றவை. கிடுகுக் கூரை என்றாலும், வேய்வதற்குப் பனம் ஈக்கில் தேவை. மட்டக்களப்பிலை கூரை வேய் வதற்கு வாட்டிய தென்னங்குருத்துத்தான்பாவிப்பினம். பனையோலையிலைதான் எனக்கு ஏடு துவக்கப்பட்டது. ஏடு எழுதுவதற்கு சார்போலைகளே சரியான பதம். பண்டைய பனுவல்கள் பனையோலை ஏடுகள் மூலமே நமக்குக் கிடைத்தன. என்ரை மனுஷியின் தந்தை வன்னியசிங்கம் பிரசித்தி பெற்ற மாட்டு வைத்தியர். அவர் சிக்கலான மருத்துவ விஷயங்களை ஏட்டு வாகடத்தைப் பிரித்து ஆராய்வது வடிவான காட்சி. அவர் செத்த பிறகு அவர் உபயோகித்த மாட்டு வாகடத்தை அச்சுப் பதிவாக வெளியிட நினைச்சிருந் தன். அவருடைய கருமங்களைப் பார்ப்பதிலே நான் ஓடியாடித் திரிஞ்சன். அப்ப, உள்ளாளும் கள்ளாளுமாப் பழகின ஆரோ அந்த வாகடங்களை அடிச்சுக் கொண்டு போயிட்டான்.

மட்டைகளின் பயன் கொஞ்சமோ? அரைச் சுவருக்கு மேலாலை, பனைமட்டை வரிச்சுப் பிடிச்சால், வீட்டுக்கு எவ்வளவு காற்றோட்டம்? இந்தக் காற்றோட்டத்தை இரசிகமணி கனக செந்திநாதனின் தனிப்பட்ட நூல் நிலையத்தில் அநுபவித்தேன். Air Conditioning தோத்துப்போகும். அம்மாவின்ரை அந்தக் காலத்துக் குஷினிக்குத் தனியாக புகைபோக்கி தேவைப்படாத

www.padippakam.com



இர்கசியமும் இந்த பனைமட்டை வரிச்சிலைதான் தங்கியிருந்தது. மட்டையின் உள்பக்கமாக உள்ள நார்ரைத் தனியா உரிச்செடுக்கலாம். பாளைகளை வரிந்து, குட்டி, பதப்படுத்தி, அரிந்து கள்ளிறக்கப்படும். பாளைகளைச் செப்பமாக வரிவதத்கு பனை நார்களே பயன்படும். இந்த நார்களை முறுக்கிச் செய்யப்படும் கயிறு, தும்புக் கயிறிலும் பார்க்கப் பலமுள்ளது. நூறு பசுக்கள் ஏறிய நாம்பனாலும் அறுக்க ஏலாது.

கோடையிலே இளநீர் குடிப்பதிலுள்ள இன்பத்தைப் பலரும் அறிவார்கள். தாவணி அணியாது, குரும்பைக் கொங்கைகளைக் காட்சியாக்கி, செவ்விளநீர் குலைகளுடன் நிற்கும் பெண்களை அச்சிட்டு, 'A taste of paradise' என்று உல்லாசப் பயணிகளைக் கவர இலங்கை அரசாங்கம் படாதபாடு படுகின்றது. அந்த விளம்பரச் சுவரொட்டி பார்ப்பவர்கள் சுவர்க்கத்தின் சுவையை எங்கே நாடுவார்களோ நான் அறியேன். 'தர்மிஷ்ட' தர்மத்தில் எதையும் விற்கலாம்; எதையும் அழிக்கலாம். கஜானா ரொம்ப வேணும். பதமான நுங்கினைக் குடித்தவர்கள், இளநீரின் ருசியைப் பற்றி அலட்ட மாட்டினம். நுங்கின் மூழ்ப் பக்கத்தை சீவினால், பெரும்பாலும் மூன்று கண்கள் தெரியும். நுங்கின் கண்ணை உதட்டிலே வைத்துக் கொண்டு, ஆள்காட்டி விரலால் விண்டால், குளிர்ந்த அமுதநீர் புசுக் கென்று அண்ணத்திலே அடிக்கும். நுங்கின் சதை நாக்கிலை நிக்காமல், வாய்க்குள் ஓடப் பார்க்கும். இந்தக் காலத்து நோடாலங்கள் Jelly பற்றிச் சொல்லுவினம். நுங்குக்கு நிகரான Jelly செய்யிறதுக்கு இது வரையிலும் ஒரு 'கோக்கி' பிறக்கேல்லை. நுங்கின் முழுத்துவ ருசி, அந்தப் பருவத்திலை வெட்டுறதிலை தான் இருக்கு. கொஞ்சம் முத்தினால் 'சீக்காய்'.

www.padippakam.com



சீக்காய் இனிப்பையும் ருசியையும் பெருமளவில் இழந்து விடும். நுங்கு சாப்பிட்ட கோம்பைகளைச் சீவி, அப்பையா ஆடுகளுக்கு வைப்பார். அவர் வளர்த்த ஆடுகள் அதை விரும்பி உண்டன.

வார்த்தைப் பிரயோகத்தில் ஒரு அவதானம் தேவை. 'பனங்காய்' நுங்கு என அழைக்கப்படும். பனம் பழந் தான் 'பனங்காய்' என அழைக்கப்படும். பனங்காய் நல்ல உணவு. ஆனால் அதைச் சாப்பிடுவதற்கு ஒரு முறை இருக்கு. நைஜீரியாவில் கிடைக்கும் மாம்பழங் கள் தும்புவகை. மாம்பழத்தைத் தோலுடன் கசக்கிய பிறகு, தோலிலே ஒரு துவாரம் செய்து, அதன் மூலம் மாங்காய்க் களியைக் குடிக்க வேணும். அந்த மாம்பழங் களிலும் பார்க்க யாழ்ப்பாணப் பனங்காய் எவ்வளவோ ருசியானது என்று நான் சொல்லுவன். முதலிலை பனங்காயை பதமான தணலிலை சுடவேண்டும். அந்தச் சூட்டிலை உள்பகுதி புழுங்க வேண்டும். வெளித் தோலை நன்றாக உரித்தெறிந்த பின்பு, பழப்புளித் தண்ணீரில் சிறிது ஊற விடவேண்டும். பிறகு பழப் புளித் தண்ணீர் சுவறப் பிசைஞ்சு, களியை மட்டும் சாப்பிட வேணும். ஒரு வெள்ளைக்கார நீதிபதி தன் Butlerஐக் கொண்டு பனங்காயைவெட்டிவிச்சு கறண்டி, முள்ளுக்கறண்டி சகிதம் சாப்பிட்டு, ஒரு நாள் முழுக்கக் கக்கூசுக்கை அடைஞ்சு கிடந்த கதையைச் சொல்லிப் பொரிச்சமீன செல்லையா சிரிச்சவர். யாழ்ப்பாணத்து மனுஷிகள் அயலில் வாழ்ந்த பனமரங்கள் எல்லாவற்றின தும் Resumeஐயும் தளதண்ணிப் பாடமாக அறிஞ்சு வைத்திருந்தனர்.

பனங்களியை அரிசிமாவும் சீனியும், கலந்து, பனங் காய்ப் பணியாரம் சுடலாம். அதுவும் கலாதியான

www.padippakam.com



பலகாரம். யாழ்ப்பாணத்தில் சோட்டைக்காகப் பனங் காய்ப் பணியாரம் சுட்டுத் தின்பார்கள். அம்மாவை எல் லாரும் அரியண்டப்படுத்தினால் சுட்டுத் தருவா. பனங் காய் சீஸனில், களுவாஞ்சிக்குடிச் சந்தியில், ஈக்கில் கோர்வையாகப் பனங்காய்ப் பணியாரம் விற்கப்படும். யாழ்ப்பாணத்தவர் யாவார நுட்பம் அதிகம் தெரிஞ் சவை. அங்கு ஏராளமாகப் பனங்காய்க்களி கிடைக்கும். பனாட்டுச் செய்வதுதான் புத்தி. பதமான முறையில், பனங்களியைத் தட்டுத்தட்டாகப் பாய்களிலேகாய வைத் தெடுத்தால் பனாட்டு. அதற்குத் தனிச் சுவையுண்டு. மண் விழாவண்ணம் காய வைச்சு எடுப்பது முக்கியம். பனாட்டை யாழ்ப்பாணம் கண்டுபிடித்த Chocolate என்றால் சரியாப் பொருந்தும். அது தடுக்குகளாக மடிக் கப்பட்டு, குடா நாட்டுக்கு வெளியேயும் விற்பனைக் காக அனுப்பப்படுகின்றது. சிங்களப் பகுதிகளிலும் அதுக்கு நல்ல மானம். மட்டக்களப்புப் பகுதியில் 'தண்ணிச்சோத்து'க் கரையலுக்கு பனாட்டு நல்ல உவப்பு. பாணிப் பனாட்டு விசேட தயாரிப்பு. மண்பானைகளிலே பனாட்டினைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டு, வேறு சரக்கு வகைகளும் சேர்த்துப் பாணிப் பனாட்டுப் பதனிடப்படும். அது செய்ய ஆச்சிக்கு நல்லாத் தெரியும். ஆச்சிக்குப் பிறகு, எங்கடை குடும் பத்திலை ஆருக்கும் பாணிப் பனாட்டுச் செய்யத் தெரி யாது.

பனங்கொட்டைகளை வைத்துக் கிழங்குப் பாத்தி போடுவார்கள். அப்பு போடுற பனங் கிழங்குப் பாத்தி கள் சரியான பெரிசு. பார்த்து மலைச்சிருக்கிறன். என்னைத் திருப்திப்படுத்திறதுக்காக அப்பையா எந்தக் குசும்பு வேலையும் செய்வார். அப்பு இல்லாத சமய மாகப் பார்த்து, பாத்தியை இலேசாகக் கிளறி, பூரான் கொட்டைகளை எடுப்பார். அந்தக் கொட்டைகளை,

www.padippakam.com



உரலிலை வைச்சு, கொடுவாக் கத்தியால் இரண்டாக வெட்டினால் பூரான் கிடைக்கும். பிற்காலத்தில், கொழும்பில், குருணாகலைப் பகுதியிலிருந்து வரும் தேங்காய்ப் பூரான்கள் திண்டிருக்கிறன். ஆனால், பனம் பூரானின் சுவையே அலாதி; தனி மகா மென்மை. அப்புவின் உலகம் அஸ்தமித்த பின்னர், மல்லிகைப் பூவின் மென்மையிலே தோய்ந்த அந்தப் பூரான்களைச் சுவைக்கும் வாய்ப்பே எனக்கு இல்லாது போயிற்று.

கிழங்குகள் முற்றி விளைந்ததும் பாத்திகள் பிரிக்கப் படும். ஊமல் கொட்டைகள் தனியாகக் குவிக்கப்படும். சிறுவர்கள் கிரிக்கட் விளையாடுவதற்கு ஊமல்கொட்டை களைத்தான் பந்துகளாகப் பயன்படுத்துவார்கள். நானும் விளையாடி இருக்கிறன். கன்னியாகுமரியில் பனங்கொட்டைகளிலே செய்த பொம்மைகள் வாங்கி யிருக்கிறன். நிலக்கரிக்குப் பதிலாகச் சிரட்டைக் கரியைப் பயன்படுத்துவார்கள். ஊமல் கொட்டைகளிலிருந்து கரி செய்வார்கள். இஸ்திரிப் பெட்டிகள், கம்மாளர் உலைகள் ஆகியன இந்த ஊமல் கரியைச் சிரட்டைக் கரியைப் போன்று யாழ்ப்பாணத்திற் பயன்படுத்தினர். பனையின் உச்ச விளைச்சல் பனங்கிழங்குகள். மட்டக் களப்பிலும் சரி, நைஜீரியாவிலுஞ் சரி, பனங்கிழங்கை அவித்துச் சாப்பிடுவார்கள். துறைநீலாவணைக்குச் சென்று திரும்புபவர்கள், அவிச்ச பனங் கிழங்குக் கட்டு களைக் களுவாஞ்சிக்குடியில் வாங்கி வருவார்கள். என் மனுஷிக்கு அதிலை அப்பிடி ஒரு Craze. அப்பையா பனங்கிழங்கைச் சுட்டுத்தான் தின்னுவார். தோலை உரிக்காமல், பதமான தணலிலை புதைத்து அதைச் சுட வேணும். பனங்கிழங்கைப் பதத்துக்குச் சுட்டெடுப் பதுக்கு ஒரு பயிற்சி தேவை. அவிச்ச கிழங்குக்கும் சுட்ட

www.padippakam.com



கிழங்குக்கும் உப்பும் மிளகுந்தான் ஏற்ற உவப்பு. அவித்த கிழங்கைப் பிளந்து காய விடுவார்கள். அவ் வாறு காய்ந்த கிழங்கு புழுக்கொடியல் எனப்படும். புழுக்கொடியல் 'பக்கற்' செய்யப்பட்டு, தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் கிடைக்கின்றது. புழுக் கொடியலுக்குத் தேங்காய்ச் சொட்டு நல்ல உவப்பு! விசாலாட்சி மாமி வீட்டிலை, அவிச்சகிழங்கைப் பிளந்து, நாரிலை கோத்து, நீண்ட கொடியைப் போல கட்டிக் காய விடுவார்கள். அதே காலத்தில் மோர் மிளகாயும் காயப்போடுவா. முழுசாக் காயாமல், இலேசான ஈரத் தன்மை உள்ள புழுக்கொடியலை, மோர் மிளகாயுடன் சாப்பிட்டால் அதன் ருசியே தனி, அந்தக் காலங்களில் வேறு உணவே வேண்டாம் என்பது போல, அவற்றைக் களவெடுத்துத் திண்டு கொண்டே திரிவன். எங்களைப் 'பனங் கொட்டைகள்' என்று சிங்களவர் பகிடி பண்ணி னாலும், புழுக்கொடியலை அவர்கள் சுவைத்துச் சாப் பிடுவார்கள்.

பச்சைப் பனங்கிழங்கைப் பிளந்து காய வைத்தால் ஒடியல். சின்னமாமி கிழங்கைச் சீவித்தான் ஒடியலாகக் காய வைப்பா. அப்பையா பண்டாரக்குளத்துக்குப் போனால், சின்னமாமியை வளைச்சு, ஒடியல் சீவல் ஒரு உமலிலை கொண்டு வந்து சேர்த்துப்போடுவார்... ஒடியலை உரலிலே இடித்து, தும்பு நீக்கி, அரிதட்டிலே அரித்தால் பட்டுப்போன்ற ஒடியல்மா கிடைக்கும். அந்த மாவிலே கூழ் காய்ச்சும் அற்புதத்தினை யாழ்ப்பாணத் தான் சாதித்தான். உலக உணவு வகைக்கு யாழ்ப் பாணம் செய்துள்ள அருட்கொடை பனங்கூழ் என்று அடித்துச் சொல்லுவன்.

ஆச்சி எப்பவும் இளம் பசிக்காரி. சாப்பாட்டில் வலு நோனா. புளிக் கஞ்சி, அரைச்ச கூட்டுக் கஞ்சி,

www.padippakam.com



ஐஞ்சிழைக் கஞ்சி என்று கஞ்சி வகைகள் பல. அரிசி மாவிலும், குரக்கன் மாவிலும் சின்னக் கூழ் காய்ச்சுவா. கிடைக்காத ஆடிப்பிறப்பு லீவை வைச்சு, பனங்கட்டிக் கூழ் பற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் சிறுவர்களுக்குப் பாட்டெழுதிப் போக்குக்காட்ட, பனங்கட்டிக் கூழுக்கு ஆச்சியை நச்சரிச்சதும் ஞாபகம். அவ காய்ச்சித் தந்தவ. அதற்குப் பிறகு பனங்கட்டிக் கூழ் என்ற பேச்சு வந்தால், எடுப்பன் ஓட்டம்! ஆச்சி குரக்கன் மாவிலும், ஒடியல் மாவிலும், நீத்துப் பெட்டிப் பிட்டு அவிப்பா. நாவாந்துறை நகர மீன் வைச்சு, அவ அவிக்கிற பிரால் ஒடியல் பிட்டு, சுடச் சுடச் சாப்பிட ருசியா இருக்கும்.

ஆனால், யாழ்ப்பாணத்தின் தேசிய உணவு ஒடியல் கூழ்தான். அப்பையாவின் மோதாவில், வீட்டிலே பெரிய கூழ் விழாக்கள் நடக்கும். கூழ் காய்ச்சுவதற்கென்றே பெரிய அண்டாக்கள் வீட்டில் இருந்தன. பெருங்கூழ் காய்ச்சுறதெண்டால் அப்பையாவுக்குப் பெரியவேலை. வெள்றால், சின்னறால், நீலாக்காலி நண்டு, சதைப்பிடிப்பான கலவாய் அல்லது பெரும் விளை, பெருமுள்ளுள்ள பொடி மீன்...எந்தக் கடலின் எந்த வகை மீன் கூழுக்கு ருசியானதென்று அப்பையாவுக்குத்தான் தெரியும். துப்புறதுக்கும் மீன் தலைகள் நல்ல பருக்கையாம். பிராலுக்கு ஏற்ப நல்ல மரக்கறிகளும் தேவை. பயத்தங்காய் முக்கியம். பிஞ்சு நல்லம். ஓரங்குலத் துண்டுகளாக ஒடிச்சுப் போடலாம். முற்றல் காயை உடைச்சுப் பருப்புகளை மட்டும் போடவேணும். நல்லா அவியக்கூடிய மாப்பிடிப்புள்ள மரவள்ளிக் கிழங்கும் முக்கியம். அளளான துண்டுகளாகக் கொத்திப் போடவேணும். ஒரு துண்டு வரிக்கன் பலாக்காய் நல்லது. தடலையும் மூழையும் நீக்கிக் கொத்திட்டுப் போடலாம். காரமும்,

படிப்பகம்

www.padippakam.com



புளியும் சுள்ளிட வேணும். கூழின் சுவைக்கு பருக்கை களின் Richness உதவும். தண்ணியாகவும் இருக்கக் கூடாது. கட்டிபடவும் கூடாது. மாவை உலையில் வார்க்கும் பொழுது யாரும் கதைக்கக்கூடாது என்பது ஐதீகம். ஒவ்வொரு வாய்க்கும் பருக்கைகள் கடிபட வேணும். பெரும் முள்ளுகளையும், நண்டுக் கோது களையும் துப்பிக் குடிக்க வேணும். கோப்பையில் ஊற்றி, கறண்டியால் அள்ளிக் குடிச்சால், கூழ் அலம்பப்பட்டுத் தண்ணியாய்ப் போயிடும். அதுக்காகத்தான் பலாவிலை யிலைகோலிக் கூழ் குடிக்கும் பழக்கம்வந்தது. அப்பையா வின் போஷகத்தில் காய்ச்சப்படும் கூழின் வாசமே தனி. அந்த வாசமே, ‘இதுதான் யாழ்ப்பாணத்தின் தேசிய உணவு’ என்று கட்டியம் கூறும். International food connoisseur என்ற கோதாவில், நான்கு கண்டங் களிலை பரிமாறப்படுகிற அத்தனை தேசிய உணவு களையும் சுவைத்துப் பார்த்துவிட்டேன். ஆனால், எங் கடை கூழுக்கு இணையான ஒரு உணவு வகையைத் தயாரிக்க, இன்னொரு ‘கோக்கி’ பல நூற்றாண்டுகள் கழித்தும் பிறப்பானோ என்பது ஐமிச்சமே. பிற்காலத் தில், சாந்தா செல்லத்துரைக்காகவும், தமிழரசார் ‘சமபந்தி’ என்று சில கூத்துகள் ஆடினவை. அவர் களுக்கும் எத்தனையோ தசாப்தங்களுக்கு முன்னர், அப்பையாவின் கூழின் சுவை ‘சமபந்தி’யை மிகவும் இயல்பாகச் செயற்படுத்தியது.

மட்டக்களப்பிலே, கூழின் பெருமையையும் புகழை யும் என்ரை மனுஷி நாட்டினவ. ‘‘ரீச்சர், எங்களிலும் பார்க்க நீங்கள் வடிவாக் கூழ் காய்ச்சுறியள்’’ என்று யாழ்ப்பாண ரீச்சர்மார் பலரும். நாவிழந்து, என் மனுஷி யைப் புகழ்வதைக் காதாரக் கேட்டிருக்கிறன். ஒரு சம யம் என் மூத்த இரண்டு மகன்களும் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வீட்டுக்கு

www.padippakam.com



லீவில் வந்தால், அவங்கடை வாய்க்கு ருசியாகச் சமைக்க வேணும் என்று இவ துடிப்பா. காலை உண வின் போது, ''நாம இண்டக்கி மத்தியானம் புறியாணி அல்லது நுடுள்ஸ் செய்யலாம் எண்டு இரிக்கன். உங்க அப்பா கூழ் காய்ச்சவாம்...'' என்று இவ சொன்னா. பட்டென்று மூத்தவன் பதில் சொன்னான். ''கூழ் குடிக்க ஆசையா இருக்குஅம்மா...அப்பா முகத்துவாரத் துக்குப் போய் மீன் வாங்கி வரட்டும்.'' அன்று நான் அப்பையாவாகவும் இவ ஆச்சியாகவும் செயற்பட்டுக் கூழ் காய்ச்சினம். அப்பையாவின் கூழுக்கு இணை இவள் காய்ச்சும் கூழ்! நான் யாழ்ப்பாணக் கலா சாரத்திலிருந்து விலகி ஓடிக் கொண்டிருந்தேனா? அப்பையா சாதித்த மாயம் என்ன? அப்பையாவின் அன்பாலும் தயவாலும் என் மனுஷி தன் குஷினியில் ஒரு யாழ்ப்பாணத்தைப் படைக்கப் பழகிக் கொண்டா. இதன் மூலம், தன் பேரப்பிள்ளைகளிலும் யாழ்ப்பாணம் வாழ்வதை அப்பையா உறுதி செய்து கொண்டாரா? புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் ஈழவர், தமது பிள்ளைகளுக்குத் தமது கலாசாரத்தை ஊட்டுவதற்குப் பேய்க் கூத்துக்கள் ஆடுகினம். அவர்களுடைய அல் லலைத் தீர்க்க இரண்டு சுலபமான வழிகள். ஒன்று; வீட்டு மொழியாகத் தமிழைக் கண்டிப்பாகப் பயிலுதல். இரண்டு; ஒடியல் கூழை நமது தேசிய உணவாக நேசித்து, அதன் சுவையிலே அவர்களைச் சுவறச் செய்தல்.

புலம் பெயர்ந்து வாழும் நிர்ப்பந்தத்திலும் நான் நனவிடை தோய்கின்றேன். அதனால் மகத்தான சுக மும் ஞானமும் பொசியுது. ஒவ்வொரு தேசிய இனத் துக்கும் தனித்துவம் உண்டு. அத் தனித்துவம் நமது பிறப்புரிமை. 'சுயாதீனத்திற்கான உரிமை' என்பது இந்த வாஸ்தவத்தை நிலைநாட்டுவதற்கான கோஷ மும் கருவியும். இந்த எளிய உண்மையை ஏன் பல

படிப்பகம்

www.padippakam.com



'பெரியவர்கள்' உணரவும் அங்கீகரிக்கவும் தவறுகிறார்கள்? தர்மமும் சத்தியமும் அரசியல் வாதிகளின் தற்பற்றிலும் ஆணவத்திலும் பார்க்க மேலானவை. இந்த மா அறத்தினை நிலைநாட்டும் குருநிலம் யாழ்ப்பாணம். இந்தச் சமரிலே, தர்மத்தின் பக்கலில் 6671236 பனைமரங்களும் இணைந்துள்ளன. இந்த மகத்தான பலம் புலருக்குப் புரிவதில்லை. என்னையும், என் வேர்களையும், அதன் வேரடி மண்களையும், உனது பரமார்த்த உபாசகர்களாக மாற்றிய கற்பகத் தருவே! உன் ஆராதனை எனக்குத் தெய்வாஞ்சலியும். நீயும் சேர்ந்தது தான் என் தனித்துவத்தின் மகத்துவம்.

●

www.padippakam.com

## எஸ். பொ. நூல்கள்

| | | |
|---|---|---|
| தீ | — | நாவல் |
| சடங்கு | — | நாவல் |
| வீ | — | சிறுகதைகள் |
| அப்பையா | — | காவியம் |
| வலை | — | நாடகம் |
| காந்திதரிசனம் | — | மொழிபெயர்ப்பு |
| எஸ், பொ. அறிக்கை | | |

## எஸ்.பொ, தொகைகள்

| | | |
|---|---|---|
| காந்தீயக் கதைகள் | — | சிறுகதைகள் |
| சதுரங்கம் | — | சிறுகதைகள் |
| காப்பியச் சொற்பொழிவுகள் | | |

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# எஸ். பொ. வின் பரிசோதனைகள்



கூட்டு முயற்சிகளான இலக்கியங்கள் தோன்ற வேண்டுமென்னும் ஆர்வத்துடன் எஸ். பொன்னுத்துரை உழைத்து வருகின்றார். எஸ். பொ. வுக்கு எதையும் புதிது புதிதாகச் செய்து பார்த்து, அதன் வெற்றி தோல்விகளின் மீது மீண்டும் முன்னேற வேண்டும் என்கிற ஆர்வம் மிகுதியாகவுண்டு. அவரது எண்ணத்தில் பல பரிசோதனைக் களங்கள் மலர்ந்தன. முதன் முதலில், ஐந்து எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதிய மத்தாப்பு என்னுங் குறுநாவல் வீரகேசரியில் பிரசுரமாயிற்று.

நவரசங்களையும் சித்திரிக்கும் ஒரு நாவல் கூட்டு முயற்சியாகத் தோன்றவேண்டுமென்று எஸ்.பொ. விரும்பினார்... **மணிமகுடம்** என்னும் நாவல் தோன்றியது. அதுவும் வீரகேசரியிற் பிரசுரமாயிற்று.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்னுஞ் சூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு, ஒரு சுவையான பரிசோதனைக் களத்தை எஸ் பொ. ஏற்படுத்தினார். மேற்படி சூத்திரத்தின் மூச்சினை ஐந்து இலக்கிய உருவங்களிலும் ஐந்து பார்வைகளிலும் அணுகுதலே இப் பரிசோதனைக் களத்தின் நோக்கமாகும்.

இந்த முயற்சியில், மரபு என்னும் உருவகக் கதையை இளம்பிறை எம். ஏ. ரஹ்மானும் **வேலி** என்னுஞ் சிறுகதையை வி.எம். இஸ்மாயிலும் கடுதாசிக் கூட்டம் என்னும் ஓரங்க நாடகத்தை ஆர். பாலகிருஷ்ணனும் வழி என்னுங் கவிதையை நீலாவணனும் வீடு என்னுங் குறுநாவலை எஸ். பொ. வும் எழுதினார்கள்... இவ் விரிந்த பரிசோதனைக்கு தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் களம் அமைத்துக் கொடுத்ததைப் பாராட்டலாம்.

**-இரசிகமணி கனக செந்திநாதன்**
'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'

WRAPPER PRINTED AT AR prints 375/8, ARCOT ROAD, KODAMBAKKAM, MADRAS-600 024. INDIA

படிப்பகம்